# குள்ளன்

நோபல் பரிசு பெற்ற
நாவலாசிரியர் நாவல்

## பேர் லாகர் குவிஸ்டு

தமிழில்

## தி.ஜானகிராமன்



# குள்ளன்

நோபல் பரிசு பெற்ற நாவலாசிரியர் நாவல்

**பேர் லாகர் குவிஸ்டு**

எழுதிய

சுவிடன் நாவல்

தமிழாக்கம்

**தி. ஜானகிராமன்**

பதிப்பாசிரியர்

**புலவர் கோ. தேவராசன்,** எம்.ஏ., பி.எட்.,


ஐந்திணைப் பதிப்பகம்

பதிப்பகம்

☎: 28549410
26183968

**ஐந்திணைப் பதிப்பகம்**

அஞ்சல் பெட்டி எண்: 2989,
279, பாரதி சாலை மாடியில்,
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail: ainthinaikathiresan17@yahoo.co.in

# பதிப்புரை

## புலவர் கோ. தேவராசன், எம்.ஏ., பி.எட்.

பேர் லாகர் குவிஸ்டு உலக இலக்கிய மேதைகளில் ஒருவர். தலை சிறந்த நாடக ஆசிரியர். நாவல் கலையிலும் வல்லவர். அவர் எழுதிய "அன்பு வழி" என்னும் நாவல் அவருக்கு உலகப் புகழைப் பெற்றுத் தந்தது. அவரது உன்னதமான இலக்கியப் பணியின் பொருட்டு 1951 இல் அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. அவருடைய மற்றொரு உன்னதமான படைப்பாகக் கருதப்படுவது. ''குள்ளன்'' என்னும் நாவலாகும். உலகப் புகழ் பெற்ற நாவல்களுள் இதுவும் ஒன்று.

**வாழ்க்கை**

பேர் லாகர் குவிஸ்டு 1891 ஆம் ஆண்டு சுவீடன் நாட்டைச் சேர்ந்த வாக்ஸ் ஜோ என்னுமிடத்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் இரயில் நிறுவனத்தின் ஊழியர் ஆவார். இவர் பல்கலைக் கழகப் படிப்பை இடையில் நிறுத்திவிட்டு இலக்கியப் பணியில் ஈடுபட்டார். டென்மார்க், பிரான்சு, இத்தாலி ஆகிய நாடுகளில் பல ஆண்டுகள் வசித்தார். பின்னர் தாயகம் திரும்பி, இலக்கியப் பணியில் முழுமூச்சுடன் ஈடுபட்டார்.

இவர் பல நாடகங்களும், கவிதைகளும் நாவல்களும், சிறுகதைகளும், கட்டுரைகளும் எழுதிச் சுவீடன் நாட்டு இலக்கியத்தை வளப்படுத்தினார். மாபெரும் மேதையாகத் திகழ்ந்தார். இவர் எழுதிய நாவல்களில் ஒவ்வொரு வாக்கியமும், ஆழமும், பொருட் சிறப்பும் கொண்டவை. அவை உணர்ச்சியைத் தூண்டும் ஆற்றல் வாய்ந்தவை. இவர் மத சம்பிரதாயங்களில் நம்பிக்கையற்றவர். புரட்சி மனப்பான்மை கொண்டவர்.

**படைப்புகள்**

பேர் லாகர் குவிஸ்டின் முதல் நூல் "சொற்கலையும் படக்கலையும்" என்பது. இந்நூல் 1913 இல் வெளிவந்தது. முதல் நூலே அவரை உலகறியச் செய்தது. 1918 இல் "கடுமையான நேரம்" என்னும் நாடகமும், 1919 இல் "சொர்க்கத்தின் இரகசியம்" என்னும் நாடகமும் 1928 இல் "மீண்டும் வாழ்ந்தவன்" என்னும் நாடகமும், 1932 இல் "மன்னன்" என்னும் நாடகமும் வெளிவந்தது. இந்நாடகங்கள்

அனைத்தும் மேடையில் நடிக்கப் பெற்றவை. நூல்களாகவும் வெளியிடப்பட்டவை.

1934 இல் "தூக்குக்காரன்" என்னும் புகழ் பெற்ற நாடகத்தை எழுதினார். இந்நாடகந்தான் பேர்லாகர் குவிஸ்டை புகழின் உச்சியில் ஏற்றி வைத்தது. 1938 இல் "ஆன்மா அற்ற மனிதன்" என்னும் நாடகத்தை எழுதினார். இந்நாடகங்களும் மேடையில் அரங்கேற்றப்பட்டவை. மக்களின் ஆதரவையும் பாராட்டையும் பெற்றவை. இவை நூல்களாகவும் பின்னர் வெளிவந்தன.

·பேர் லாகர் குவிஸ்டு திறமை மிகுந்த நாவலாசிரியர், பெருங்கவிஞர். இவர் நாடகம் எழுதத் தொடங்கு முன் கவிதை இயற்றுவதிலும், நாவல் எழுதுவதிலுமே தன் கவனத்தைச் செலுத்தினார். அவரது நாவல்களில் ஒப்புயர்வற்றது. "பாரபாஸ்" என்னும் நாவல். இந்நாவல் 1950 இல் எழுதப்பட்டது. இந்நாவலுக்குத்தான் 1951 ஆம் ஆண்டில் நோபல் பரிசு வழங்கப்பட்டது. இந்நாவல் "அன்பு வழி" என்ற பெயரில் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது.

பேர் லாகர் குவிஸ்டின் மற்றொரு உன்னதமான படைப்பாகக் கருதப்படுவது "குள்ளன்" என்னும் பெயரில் வெளிவந்த நாவலாகும். உலகப் புகழ் பெற்ற நாவல்களுள் இதுவும் ஒன்று.

பேர் லாகர் குவிஸ்டு ஸ்வீடிஸ் அகாதமியின் பெருமை வாய்ந்த உறுப்பினராக 1940 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப் பட்டார். உலக இலக்கிய மேதைகளுள் ஒருவரான பேர் லாகர் குவிஸ்டு 1974 ஆம் ஆண்டு மறைவுற்றார்.

நாவலின் கதைச் சுருக்கம் பின்வருமாறு,

உலகப் புகழ் பெற்ற உன்னதமான நாவல்களுள் "குள்ளன்" என்கிற நாவலும் ஒன்று. இது ஒரு வித்தியாசமான படைப்பு. கதையும் புதுமை. கதையை நடத்திச் செல்லும் முறையும் புதுமை.

இயற்கையால் வஞ்சிக்கப்பட்டுப் பிறந்த ஒரு குள்ளனின் மனக்குமுறல் இந்நாவலில் அற்புதமாகச் சித்தரிக்கப் பட்டுள்ளது. இந்நாவலில் வரும் குள்ளனின் பெயர் பிக்கோலைன் என்பது. கதை முழுமையும் அவனது கூற்றாகவே நடத்திச் செல்லப்படுகிறது. இது இந்நாவலின் தனிச் சிறப்பாகும்.

குள்ளர்களுக்குத் தாய்நாடு கிடையாது. பெயர் சொல்லக் கூடிய பெற்றோர்களும் கிடையாது. முகம் தெரியாத மனிதர்களுக்குப் பிறந்தவர்கள். இவர்கள் பிறந்தவுடனே விற்கப்பட்டு விடுவார்கள். நாவலில் வரும் குள்ளனின் தாயும் ஓர் இளவரசனுக்கு அவனை விற்றாள். இருபது பணம் வாங்கிக் கொண்டு அவனை விற்று, அந்தப் பணத்தில் மூன்று முழத் துண்டும் ஆட்டு மந்தைக்கு ஒரு காவல் நாயும் வாங்கிக் கொண்டாள்.

பிக்கோலைன் இரண்டடி இரண்டு அங்குலம் உயரமே உடையவன். கட்டான உடல் அமைப்புக் கொண்டவன். தலை மட்டும் சற்றுப் பருமன். செம்பட்டைமுடி முகத்தில் கோடுகள். அதில் ஏராளமான சுருக்கங்கள். பிக்கோலைன் பார்ப்பதற்கு அழகாகவும் இருக்கமாட்டான்.

பொதுவாகக் குள்ளர்கள் அனைவரும் கோமாளிகளாய் இருப்பார்கள். கீச். கீச். என்று பேசுவார்கள். ஆனால் பிக்கோலைன் வித்தியாசமானவன். அவன் குரல் கனமாகவும் ஆழம் நிறைந்ததாயும் இருக்கும். தன்மானம் உடையவன். அவனை எவராவது மரியாதைக் குறைவாக நடத்தினால் சகிக்க மாட்டான். வாளை உருவவும் தயங்க மாட்டான்.

குள்ளனின் எசமானன் ஓர் இளவரசன். திறமையும் வலிமையும் மிக்கவன். அரசியல் சதுரங்கத்தில் வல்லவன். அவன் அன்பிற்குப் பாத்திரமானவன் பிக்கோலைன். இளவரசனின் பணியாள் அவன். அவர் இட்ட கட்டளைகள் எதுவாயினும் நிறைவேற்றுவான். அரசியல் இரகசியங்களைப் பாதுகாப்பான். அரசருக்கும் சரி, விருந்தினர்களுக்கும் சரி... போதை நிறைந்த மதுவை, ஊற்றி ஊற்றிக் கொடுப்பது அவனது பிரதான வேலை.

குள்ளன் இல்லாமல் இளவரசர் இருக்கவே முடியாது. எப்படிப்பட்ட இளவரசனும் தன் குள்ளனுக்குப் பெரியவராக இருக்க முடியாது. பிக்கோலைன் திறமை வாய்ந்தவன். இளவரசர் வாயைத் திறக்கும் முன்பே அவர் மனத்தில் படிந்த எண்ணவோட்டங்களை அறிந்து கொள்ளக் கூடிய ஆற்றல் வாய்ந்தவன். அவன் இளவரசருடைய அங்கம் போன்றவன். அரண்மனையில் அவனுக்குத் தெரியாத இரகசியம் எதுவுமே இருக்க முடியாது.

பிக்கோலைன் கற்றவன். சிந்தனையாளன். நல்லது கெட்டது எல்லாம் நன்கு உணர்ந்தவன். போலித்தனமான வாழ்க்கை முறைகளைக் கண்டு நகைப்பவன். முற்றாக வெறுப்பான்.

அரண்மனையில் பெரிய மனிதர்களிடையே நடைபெறும் ஒழுக்கக் கேடுகள், காமக் களியாட்டங்கள், சதிகள் - சூழ்ச்சிகள் எல்லாம் நன்கு அறிந்தவன். அவைகள் நடப்பதற்கு அவன் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டான். அப்பொழுதெல்லாம் அதிகாரவர்க்கத்தின் கீழ்த்தரமான செயல்களைக் கண்டு பிக்கோலைன் மனம் குமுறுவான்.

இந்நாவலில் போர் வருகிறது. போரினால் ஏற்படும் துன்பங்கள் சித்தரிக்கப்படுகின்றன. போருக்குப் பின்னர் சமாதான உடன் படிக்கைகள், அதனையொட்டி நடைபெறும் விருந்துகள் - கேளிக்கைகள், சதிகள் - சூழ்ச்சிகள் - நயவஞ்சகங்கள் எல்லாம் இந்நாவலில் விரிவாகப் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன.

போரினால் மக்கள் படும் துன்பங்கள் உருக்கமானவை. நெஞ்சை நெகிழ்விப்பவை. கண்களைக் குளமாக்கும் நிகழ்வுகள் எண்ணற்றவை. ஊர் எரிக்கப்படுகின்றது. உடைமைகள் சூறையாடப்படுகின்றன. கொள்ளை அடிக்கப்படுகின்றன. அகதிகள் முகாம்கள் உருவாகின்றன. அசுத்தமான வாழ்க்கை முறையினால் கொள்ளை நோய் பரவுகிறது. மாண்டு மடியும் மக்களின் பிணக் குவியல்கள் கோரமாகக் காட்சியளிக்கின்றன.

போர் மனித குலத்திற்கு எதிரானது என்ற கருத்தை பேர் லாகர் குவிஸ்டு அழுத்தமாக மனத்தில் பதியவைக்கின்றார்.

அரச வர்க்கம் - அதிகார வர்க்கம் செய்யும் தவறுகளுக்கெல்லாம் இறுதியில் ஒரு அப்பாவி பலிவாங்கப்படுவான். இது வெகு காலமாக இருந்து வரும் நடைமுறைச் சட்டமாகும். இந்நாவலில் குள்ளன் பிக்கோலைன் பழிவாங்கப்படுகிறான். சிறையில் அடைக்கப்படுகிறான். கையில் விலங்கிடப் படுகிறான். சித்திரவதை செய்யப்படுகிறான். ஆனால் அவனை ஆட்டிப் படைத்த அதிகார வர்க்கம் எப்பொழுதும் போல் சுகமாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறது. இந்நிலையிலும் பிக்கோலைன் அரசியல்

இரகசியங் களைப் பாதுகாத்துக் கொண்டு தான் வருகிறான். மனசாட்சிக்கு மதிப்பளித்து அமைதி காக்கின்றான். சிறைக் கம்பிகள் வழியாக வெளியுலகத்தைப் பார்த்த வண்ணம் இருக்கிறான். அவன் இன்னும் நம்பிக்கையை இழக்கவில்லை. இளவரசர் எப்படியும் தன்னைக் காப்பாற்றுவார் என்று இன்னமும் திடமாக நம்புகிறான். இவை தான் இந்நாவலின் சுருக்கம்...

உலகப் புகழ் பெற்ற இந்நாவலைத் தமிழ் நாட்டின் புகழ்மிக்க எழுத்தாளர் தி. ஜானகிராமன் தமிழாக்கம் செய்துள்ளார். அவரது மொழி பெயர்ப்பு அருமைப்பாடு உடையது. ஆற்றல் மிக்கது. வேகம் நிறைந்தது. கலை நுட்பங்கள் செறிந்தது. படிக்கப் படிக்கத் தெவிட்டா இன்பம் நல்க வல்லது.

திரு. தி. ஜானகிராமன் புகழ் பெற்ற எழுத்தாளர். நாவல், சிறுகதை, நாடகம், மொழி பெயர்ப்பு, பயண நூல்கள் எனப் பல்துறைகளிலும் சிறந்து விளங்கியவர். தஞ்சாவூர் மண்ணின் மணம் அவருடைய உரைநடையில் கமழும். இது அவருக்கேயுரிய தனிச்சிறப்பாகும்.

திரு. ஜானகிராமன் தஞ்சை மாவட்டம் தேவங்குடி என்ற ஊரில் 28.6.1921 இல் பிறந்தார். தந்தையார் தியாகராச சுவாமிகள். தாயார் நாகலட்சுமி அம்மையார் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற பின்னர் ஆசிரியர் பயிற்சி பெற்றார். 1943 முதல் 1954 வரை ஆசிரியராகப் பணியாற்றினார். 1954 முதல் 1968 வரை சென்னை வானொலி நிலையத்திலும், 1968 முதல் 1979 வரை தில்லி வானொலி நிலையத்திலும் பணியாற்றினார். கணையாழி என்ற இலக்கிய இதழிலும் மதிப்புறு ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். இவர் தமிழ், தெலுங்கு, வடமொழியெனும் மும்மொழியிலும் வல்லவர். முறையாக இசை பயின்றவர். தலை சிறந்த சிறுகதை எழுத்தாளரான கு.பா. இராசகோபாலனின் மனங்கவர்ந்த சீடர். அவருடைய வறுமைக் காலங்களில் உதவியவர். உயிர் துறந்த போது உடனிருந்தவர்.

திரு. ஜானகிராமன் தமிழ் இலக்கிய வளத்திற்கு ஆற்றிய பணிகள் மிகப்பல. விட்டுச் சென்ற படைப்புகள் பின்வருமாறு :

நாவல்கள் 9, குறுநாவல்கள் 2, நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகள். மேடை நாடகங்கள் 3, பயண நூல்கள் 3, மொழி

பெயர்ப்பும் அறிவியல் நூல்களும் 10, நோபல் பரிசு பெற்ற கிரேசியாவின் அன்னை. அவருடைய மற்றொரு குறுநாவல் காதல் கதை, ஸ்வீடிஸ் நாட்டைச் சேர்ந்தவரும், நோபல் பரிசு பெற்றவருமான பேர் லாகர் குவிஸ்டுவின் குள்ளன், மெல்வில் என்பாரின் மோபிடிக் ஆகிய நாவல்களையும் அருமையாகத் தமிழாக்கம் செய்துள்ளார். திரு. ஜானகிராமன் "நாலு வேலி நிலம்" என்ற நாடகம் 1959 இல் திரைப்படமாகவும் வெளிவந்துள்ளது. இவருடைய "மோகமுள்", "மரப்பசு" இரண்டும் ஆங்கில மொழியிலும், மலையாள மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. சிறுகதைகள். உருசிய, ஆங்கில, இந்தி, கன்னட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

திரு. ஜானகிராமனின் மோகமுள், அம்மா வந்தாள், உயிர்த்தேன் எனும் மூன்று நாவல்களையும், சிறந்த படைப்புகள் என்று அறிஞர்கள் பலரும் பாராட்டுவர். அவருடைய நாவல்கள் ஆண் பெண் உறவு நிலைகளை உளவியல் அடிப்படையில் விரிவாக ஆய்வு செய்வன. இவர் 1979 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாதமி விருதைப் பெற்றவர். சக்தி வைத்தியம் என்ற சிறுகதைத் தொகுப்பிற்காக அப்பரிசு அவருக்கு வழங்கப்பட்டது.

தலைசிறந்த இலக்கியப் படைப்பாளியான திரு. ஜானகிராமன் 18.11.82 இல் வியாழன் பிற்பகல் 1 மணி அளவில் மறைவுற்றார். அவர் நாவல் கலையில் உயர் சாதனைகளை நிகழ்த்தியவர். தமிழ்ச் சிறுகதை வளத்திற்கு அவர் ஆற்றிய பணி மகத்தானது.

ஐந்திணைப் பதிப்பக உரிமையாளர் குழ. கதிரேசன் அவர்கள் குழந்தை இலக்கிய உலகில் தனிச் சிறப்புப் பெற்று விளங்குபவர். அவருடைய சிறுவர் இலக்கிய நூல்கள் பல பதிப்புகள் கண்டவை. பதிப்புத் துறையில் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். நோபல் பரிசு பெற்ற நாவல்களையும், உலகப் புகழ் பெற்ற நாவல்களையும் தமிழுக்கு வழங்கும் அரிய முயற்சியில் ஈடுபட்டுள்ளார். தற்போது பேர் லாகர் குவிஸ்டு எழுதிய "குள்ளன்" என்னும் புகழ் பெற்ற நாவலை செம்பதிப்பாக, வண்ணப்பதிப்பாக வெளியிட்டுள்ளார். அவருக்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

அன்பன்
**கோ. தேவராசன்**

# குள்ளன்

இரண்டடி இரண்டு அங்குல உயரம்தான் நான். நல்ல அமைப்பும் சீரும் கொண்ட உடல். தலை மட்டும் சற்று பெரியது. மற்றவர்களைப்போல என் தலைமயிர் கருப்பு அல்ல. சற்று செந்நிறம். கட்டையாக விறைப்பாக இருக்கும். நெற்றியிலிருந்து பின்னால் இழுத்து வாரியிருப்பேன். நெற்றி அகலம் தான். ஆனால் உயரம் அல்ல. முகத்தில் தாடி கிடையாது. மற்றபடி எல்லா மனிதர்களையும் போலத்தான். புருவங்கள் இரண்டும் கூடுகின்றன. தேக பலம் அசாத்தியம். அதுவும் யாராவது என் வழிக்கு வந்து விட்டால் அந்த பலம் வளர்ந்து விடும். ஜஹோஷ பாட்டுக்கும் எனக்கும் ஒரு குத்துச் சண்டை ஏற்பாடு செய்த பொழுது அவனை மல்லாக்க வீழ்த்தி குரல்வளையைப் பிடித்துவிட்டேன். அதிலிருந்து ஆஸ்தானத்தில் குள்ளன் நான் ஒருவன்தான்.

குள்ளர்களில் பெரும்பாலோர் கோமாளிகள். எஜமானர்களையும் விருந்தினர்களையும் சிரிக்க வைக்க அவர்கள் வேடிக்கையாகப் பேச வேண்டும், குறும்புகள் செய்யவேண்டும். இப்படி எல்லாம் செய்து என் கௌரவத்தைக் குறைத்துக் கொண்டதில்லை நான். அப்படிச் செய்யவேண்டுமென்று யாரும் சொன்னதும் கிடையாது. கோமாளியாக என்னைப் பயன்படுத்துவதற்கே என் தோற்றம் இடம் கொடுப்பதில்லை. நகைப்புக்கிடமான குறும்புகளுக்கு என் முகத்தோற்றம் ஒத்ததாக இல்லை. நான் சிரிப்பதும் இல்லை. நான் கோமாளி அல்ல. நான் குள்ளன். வெறும் குள்ளன்தான். வேறு ஒன்றுமே இல்லை.

எனக்கு வாய்த்துடுக்கு அதிகம். இதனால் என்னைச் சுற்றியுள்ளவர்களுக்கு சில சமயம் சந்தோஷமாக இருக்கலாம். ஆனால் இதற்கும் கோமாளியாக இருப்பதற்கும் எத்தனையோ தூரம்!

மற்ற மனிதர்களைப் போலவே என் முகமும் இருப்பதாகச் சொன்னேன். இது அவ்வளவு சரியல்ல. என் முகத்தில் கோடுகள் அதிகம். ஏகப்பட்ட சுருக்கங்கள். இதை ஒரு குறையாகவே நான் எண்ணவில்லை. நான் பிறந்தது அப்படி. பிறர் அப்படி இல்லை என்றால் நான் என்ன செய்ய முடியும்? என்னுடைய உண்மைத் தோற்றத்தை அழகோ, விகாரமோ படுத்தாமல் அது எடுத்துக் காண்பிக்கிறது. அப்படி இருக்க வேண்டுமென்று யாரும் எதிர்பார்க்காமல் இருக்கலாம். எனக்கு என்னவோ அப்படி இருக்கத்தான் ஆசை.

இந்த சுருக்கங்களால் எனக்கு என்னவோ வயதாகிவிட்ட மாதிரி தோன்றுகிறது. உண்மையில் எனக்கு வயது அதிகம் இல்லை. ஆனால் இந்த குள்ளர்களாகிய நாங்கள் இப்பொழுது உலகத்தை நிறைத்திருக்கும் மக்களைவிட மிகவும் புராதனமான இனத்திலிருந்து தோன்றியவர்கள் என்றும், அதனால்தான் பிறந்த மாத்திரத்திலேயே விருத்தர்களாகக் காட்சியளிக்கிறோம் என்றும் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இது உண்மையோ என்னவோ, எனக்குத் தெரியாது. உண்மையாக இருந்தால் நாங்கள் தான் முதல் ஜீவர்கள். இப்பொழுதுள்ள இனத்திலிருந்து வேறுபட்ட இனத்தில் பிறந்ததைப் பற்றியோ அது என் உடம்பில் தெரிவதைப் பற்றியோ நான் ஒன்றும் குறைப்படவில்லை.

என்னைப் பற்றிய வரையில் மற்றவர்களுடைய முகங்கள் எல்லாம் முற்றிலும் **பாவம்** அற்ற கட்டைகளாக இருக்கின்றன என்றுதான் சொல்லுவேன்.

என் எஜமானர்கள் என்னிடம் மிகவும் பிரியமாக இருக்கிறார்கள். அதுவும் என் இளவரசருக்கு என் மேல் அபாரமான அன்பு. அவர் மிகவும் பெரியவர். சக்தி வாய்ந்தவர். பெரிய பெரிய திட்டங்கள் எல்லாம் போடுவார். அவற்றைச் செயலாக்கவும் தெரியும் அவருக்கு. காரிய வீரர். அதே சமயம் நல்ல படிப்பாளி கூட. எல்லாவற்றிற்கும் அவருக்கு நேரமிருக்கிறது. இந்த ஆகாசத்தின் கீழும் மண்ணின் மீதும் உள்ள எல்லாவித விஷயங்களைப் பற்றியும் பேச விருப்பம் அவருக்கு. பேசும் பொழுது தன்னுடைய உண்மையான நோக்கங்களை வேறு எதையாவது பற்றிப் பேசி மறைத்துக் கொண்டே பேசுவார்.

இந்த மாதிரி ஒருவர் பல விஷயங்களைத் தலையில் போட்டுக் கொள்வது அநாவசியம் என்று தோன்றலாம். (அதாவது அவ்வளவையும் பற்றி அவருக்கு உண்மையிலேயே அக்கறை உண்டு என்று நினைத்துக் கொண்டால்) ஆனால் என்ன செய்கிறது? இளவரசர் என்ற முறையில் எல்லாவற்றையும் புரிந்து கொள்ள கடமைப்பட்டிருக்கிறார் அவர். எதையும் புரிந்து கொண்டு அறவே சந்தேகமின்றி சமாளிக்க முடியும் என்ற ஒரு எண்ணம் பிறர் மனதில் ஏற்படும் படியாகத்தான் அவர் நடந்து கொள்கிறார். அல்லது அப்படி ஒரு விருப்பம் இருப்பதாகவாவது தோன்றும்படி நடந்து கொள்வார். யாரையும் பிரமிக்கச் செய்யும் கவர்ச்சியுள்ள மனிதர் என்பதில் சந்தேகமே இல்லை. அவ்வளவு கவர்ச்சியுள்ளவர் இவர் ஒருவர்தான் என்று எனது அபிப்ராயம். என்னுடைய அலட்சியத்திற்கு ஆளாகாதவரும் இவர்தான்.

அவரை நம்ப முடியாது. நம்பிக்கைத் துரோகம் செய்வதில் நிபுணர்.

என் எஜமானரோடு எனக்கு நல்ல பழக்கம். ஆனால் அவரை உள்ளும் புறமும் தெரிந்து கொண்டு விட்டதாக நான் சொல்லிக் கொள்ளவில்லை. அவருடைய இயல்பே மிகவும் சிக்கலானது. எளிதில் புரிந்து கொள்ள முடியாதது. மறைவான புதிர்கள் நிறைந்தவர் என்று சொல்வது தவறு. அப்படி எல்லாம் இல்லவே இல்லை அவர். ஆனால் எப்படியோ அவரைப் புரிந்து கொள்வது சிரமமாக இருக்கிறது. நானே அவரை சரியாகப் புரிந்து

கொள்ளவில்லை. ஏன் இப்படி நாயைப் போல இவ்வளவு விசுவாசத்துடன் அவர் பின்னால் ஓடுகிறேன் என்றும் எனக்குப் புரியவில்லை. அதே போல அவரும் என்னைப் புரிந்து கொள்ளவில்லை.

மற்றவர்களைக் கவர்வது போல் என்னைக் கவரவில்லை அவர். ஆனால் இவ்வளவு கவர்ச்சியுள்ள ஒரு எஜமானருக்கு ஏவல் செய்ய எனக்கு ஆசைதான். அவர் பெரியவர் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் எப்பேர்ப்பட்டவரும் தன் குள்ளனுக்குப் பெரியவராக இருக்க முடியாது.

நிழலைப் போல எக்காலமும் அவரை நான் பின்பற்றுகிறேன்.

இளவரசி தியடோரா என்னை நம்பி இருக்கிறாள். என் இதயத்தில் அவளுடைய இரகசியத்தைச் சுமந்து கொண்டிருக்கிறேன் நான். அதைப் பற்றி ஒரு வார்த்தை கூட மூச்சுவிட்டதில்லை நான். என்னைச் சித்திரவதை செய்யட்டுமே, சொல்லிவிடுவேனா? மாட்டேன். ஏன் மாட்டேன் என்று எனக்குத் தெரியவில்லை. அவளை நான் வெறுக்கிறேன். அவள் செத்து நரகத்தின் நெருப்பில் கால் அகல விழுந்து அவளுடைய நாற்றம் பிடித்த வயிற்றைத் தீயின் நாக்குகள் நக்குவதைப் பார்க்க வேண்டுமென்று ரொம்பவும் எனக்கு ஆசை. காமத்தில் புரளுகிற அவள் வாழ்க்கையை நான் வெறுக்கிறேன். காதலர்களுக்கு என் மூலம் அவள் கொடுத்து அனுப்பும் காமமயமான கடிதங்களை நான் வெறுக்கிறேன். அந்தக் காதல் சொற்கள் என் இதயத்தில் எரிகின்றன. ஆனால் நான் ஒன்றையும் காட்டிக் கொடுப்பதில்லை. அவளுக்காக ஒவ்வொரு கணமும் நான் மரணத்தோடு விளையாடிக் கொண்டிருக்கிறேன்.

தன் அறைக்கு என்னை அழைத்து நான் சொல்ல வேண்டிய செய்திகளை என் காதோடு காதாகச் சொல்லுவாள் அவள். என்னுடைய சட்டைக்குள் காதல் கடிதங்களை மறைத்து வைப்பாள். அப்பொழுதெல்லாம் என் உடல் நடுங்கும். ரத்தம் தலைக்கு வந்து விடும். ஆனால், அவள் எதையாவது கவனிக்கிறாளா? என் உயிர் அவளுக்காக அந்தரத்தில் தொங்குகிறது என்று சற்றாவது நினைத்துப் பார்க்கிறாளா! சும்மா புன்சிரிப்பு சிரிப்பாள். கண்டுபிடிக்க முடியாத, வேறு எதிலோ கவனமாக இருப்பது போன்ற புன்னகை. அவளுடைய இரகசிய வாழ்க்கையில் எனக்குள்ள இந்தப் பங்கை ஒரு பொருட்டாக அவள் மதிக்கவில்லை. ஆனால் என் மீது நம்பிக்கை அவளுக்கு.

அவளுடைய காதலர்கள் எல்லோரையும் நான் வெறுக்கிறேன். அவர்கள் ஒவ்வொருவர் மீதும் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து என் கத்தியால் கிழித்து ரத்தம் பெருகப் பார்க்கவேண்டுமென்பது என் ஆசை. எல்லோரையும் விட இந்த டான்ரிகார்டோவைக் கண்டால் தான் எனக்கு அசாத்திய வெறுப்பு. வெகுகாலமாக அவளுக்கும் அவனுக்கும் தொடர்பு உண்டு. அவனை விட்டுவிடும் எண்ணமே அவளுக்கு இல்லை போலிருக்கிறது. மிகவும் வெறுக்கத்தக்கவன் அவன் என்றுதான் என் அபிப்ராயம்.

சிலசமயம் காலையில் படுக்கையை விட்டு எழும் முன்னமே என்னை அறைக்குள் வரச் சொல்லுவாள் அவள். வெட்கமின்றி எல்லாவற்றையும் என் கண் முன்னால் காண்பிப்பாள். இளமை அவளிடம் விடைபெற்றுக் கொண்டு விட்டது, நகைகளோடு விளையாடிக் கொண்டு பக்கத்தில் நிற்கும் தோழியின் கையிலுள்ள பெட்டியிலிருந்து நகைகளை ஒவ்வொன்றாக எடுத்து அவள் பார்க்கும் பொழுது அவள் மார்பு சரிந்து சுருங்கியிருப்பது தெரியும். இவளைக் கண்டு எப்படி இவர்களுக்கு காதல் ஏற்படுகிறது என்றே எனக்குப் புரியவில்லை. ஒரு ஆண்மகன் விரும்புகிற எதுவும் அவளிடம் இல்லை. ஒரு காலத்தில் அவள் பெரிய அழகியாக இருந்திருக்க வேண்டும் என்று மட்டும் தெரிகிறது.

இன்று என்ன நகை போட்டுக் கொள்ளலாம் என்று அவள் என்னைக் கேட்கிறாள். அப்படிக் கேட்பதில் அவளுக்கு ஒரு ஆசை. கேட்கும் பொழுது அவளுடைய மெல்லிய விரல்களிடையே அந்த நகை நழுவிவிழும். கனத்த அந்த பட்டுப் போர்வைக்குள் உடல் நீண்டு சோம்பல் முறித்துக் கொள்ளும், விபசாரி. ஒரு பெரிய இளவரசனின் படுக்கையில் கிடக்கும் விபசாரி. அவளுக்கு வாழ்க்கை முழுதும் காதல்தான். நகைகளைப் போலவே விரல் வழியாக அந்தக் காதல் நழுவிவிடும். சூன்யமாக அதைப் பார்த்துப் புன்னகை பூத்துப் படுத்திருக்கிறாள் அவள்.

இந்த மாதிரி நேரங்களில் அடிக்கடி அவளுக்கு வருத்தம் வருவது உண்டு. அல்லது வருத்தப்படுகிற மாதிரி பாவனையாவது செய்வாள். மிக மிக ஆசையாக ஒரு தங்கச் சங்கிலியை கழுத்தில் போட்டுக் கொண்டு மார்பகத்தில் அதன் பெரிய ரத்தினக்கல் தவழ்ந்து மின்னுவதைப் பார்த்துக் கொண்டே இருப்பாள். இந்தச் சங்கிலியை நான் போட்டுக் கொள்ளலாமா என்று என்னைப் பார்த்துக் கேட்பாள். படுக்கையைச் சுற்றி பரவியுள்ள வாசனை தாளாமல் என் வயிறு குமட்டுகிறது. அவளை வெறுக்கிறேன் நான். நரகத்தின் தீயில் அவள் எரிய வேண்டுமென்று என் ஆசை. ஆனால் இந்த நகைதான் உங்களுக்கு மிகவும் அழகாக இருக்கிறது என்று பதில் சொல்லுவேன். அவளும் என்னை நன்றியுடன் ஒரு பார்வை பார்ப்பாள் - நான் ஏதோ அவள் துயரத்தில் பங்கு கொண்டு ஆறுதல் அளித்துவிட்டது போல.

சில சமயங்களில் "நீ ஒருவன் தான் நண்பன் எனக்கு" என்று சொல்லுவாள் அவள். ஒரு தடவை "நீ என்னைக் காதலிக்கிறாயா?" என்று கூடக் கேட்டாள்.

## 2

இளவரசரின் நிலை என்ன? அவர் சந்தேகமே படவில்லையா? பட்டுக் கொண்டுதான்....

அவளுடைய இரகசிய வாழ்க்கையைப் பற்றி அவருக்கு அக்கறையே கிடையாது. ஆனால் அவர் என்ன நினைக்கிறார் என்று யாருக்குத் தெரியும்?

பகல் பொழுதில் அவளோடு தாம்பத்தியம் நடத்துவார் அவர். அவரைப் பார்த்தால் பகலே வடிவெடுத்தாற்போல தோன்றும். பகலின் ஒளி முழுவதையும் அவருடைய மேனியில் பார்க்கலாம். இப்பேர்ப்பட்ட மனிதரை எனக்கு புரிந்து கொள்ள முடியவில்லை என்பது எனக்கு வேடிக்கையாகத் தான் இருக்கிறது. இவரா! ஒருவேளை நான் அவரது குள்ளனாக இருப்பதால்தான் புரியவில்லையோ என்னவோ? ஆனால் அவர் கூடத்தான் என்னை புரிந்து கொள்ளவில்லை. நான் அவரைப் புரிந்து கொண்டதைவிட இளவரசியை நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறேன். இதில் விசேஷமாக ஒன்றுமில்லை. நான் தான் இளவரசியை வெறுக்கிறேனே. நாம் யாரையாவது வெறுக்காவிட்டால் அவரைப் புரிந்து கொள்வது சிரமம். ஏனென்றால் நம்மிடம் சாதனங்கள் ஒன்றும் இருப்பதில்லை. அவர்களுடைய உள்ளத்தை ஊடுருவிப் பார்த்துத் தெரிந்து கொள்ளும்படியாக நமக்கு எந்த கருவியும் இல்லாமல் போய் விடுகிறது.

இளவரசிக்கும் அவருக்கும் என்ன உறவு? அவரும் அவளுடைய காதலர்தானா? ஒருக்கால் அவர் ஒருவர் தான் அவளுக்கு உண்மையான காதலரோ? அவள் வேறு இடங்களில் செய்வதை எல்லாம் கண்டு சற்றுக்கூட அசையாமல் நிச்சிந்தையாக இருப்பது இதனால் தானோ? எனக்குக் கோபம் வருகிறது. அவருக்கு வரவில்லையே.

அசைக்க முடியாத இந்த ஆளைத்தான் நான் புரிந்து கொள்ளவில்லை. எல்லா விதத்திலும் என்னை விட அவர் உயர்ந்தவர் என்பதே என்னை ஓயாமல் துன்பப்படுத்துகிறது. அதனால் ஏற்படும் வேதனையை என்னால் உதறித் தள்ள முடியவில்லை. என்னைப் போல அவரும் இருக்க வேண்டுமென்று எனக்கு ஆசை.

ஆஸ்தானம் கலகலவென்று இருக்கிறது. வினோதப் பிரகிருதிகளெல்லாம் அங்கு நிறைந்திருக்கிறார்கள். தலையைக் கையில் தாங்கிக்கொண்டு வாழ்க்கையின் பொருளைக் கண்டுபிடிக்க முயலும் அறிஞர்கள் வயதாகி பஞ்சடைந்த தங்கள் கண்களால் விண்மீன்களின் போக்கைத் தொடர்ந்து பார்க்க முடியும் என்றும், மனிதனுடைய விதியே இந்த நட்சத்திரங்களில் பிரதிபலிக்கப்படுகிறது என்றும் நம்புகிற வானியல் பண்டிதர்கள் ஒருபுறம். தூக்குமேடைக்கு லாயக்கானவர்கள் ஒருபுறம். ஆஸ்தானத்திலுள்ள பெண்மணிகளுடன் தாங்கள் செய்த போதை நிறைந்த செய்யுட்களை வாசித்துக் காட்டும் சாகஸிகள் ஒருபுறம், இவர்கள் மறுநாள் காலையில் சாக்கடையில் ரத்தம் கக்கியவாறு குப்புற விழுந்து கிடப்பார்கள். (இப்படிக் கிடக்கும்பொழுதுதான் ஒருவன் முதுகில் குத்திக் கொல்லப்பட்டான். கவலியர் முரசெல்லிக்கு எதிராக ஒரு நையாண்டிப் பாட்டு எழுதியதற்காக இன்னொருவன் நன்றாகப் புடைக்கப்பட்டான்.) வரம்பில்லாமல் வாழும் கலைஞர்கள் ஒருபுறம். பக்தி விக்ரகங்களை மாதா கோவில்களுக்கு செய்து கொடுக்கும் வேலை இவர்களுக்கு. புதிய மாதா கோயிலின் மணி மண்டபத்தைக் கட்டுவதற்காக வந்த சிற்பிகளும் பிளான் எழுதுபவர்களும் ஒருபக்கம். இன்னும் எத்தனையோ பேர் கனவு காண்பவர்களிலிருந்து

வைத்தியர்கள் வரையில் எத்தனையோ பேர். இந்த நாடோடிகள் வந்து போய்க்கொண்டே இருப்பார்கள். சிலர் என்னமோ இங்கேயே பிறந்து வளர்ந்த மாதிரி நீண்டகாலம் தங்குகிறார்கள். எல்லோருமே இளவரசரின் விருந்தோம்பும் பண்பை துஷ்பிரயோகம் செய்கிறவர்கள்.

இவர் உபயோகமில்லாத இந்த ஆட்களை எதற்காக வைத்துச் சோறு போடுகிறார் என்றே எனக்குப் புரியவில்லை. இதைவிடப் புரியாதது அவர்களோடு உட்கார்ந்து அவர்களுடைய பிதற்றல்களையெல்லாம் காது கொடுத்துக் கேட்கிறாரே அதுதான். யாராவது கவிகள் அதுவும் எப்பொழுதாவது தாங்கள் எழுதிய பாட்டுகளைச் சொல்லும் பொழுது ஒருவர் கேட்கலாம். இந்தக் கவிகளெல்லாம் ஆஸ்தானத்தில் வளர்கின்ற கோமாளிகளைப் போல மனித ஆத்மாவின் தூய்மையைப் பற்றியும் பெரிய சம்பவங்களையும் வீரச் செயல்களையும் போற்றிப் பாடுவார்கள். இதைப் பற்றி எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை. அதுவும் இந்தப் பாட்டுகள் அவரை முகஸ்துதி செய்தால் வரவேற்க வேண்டிய விஷயம்தான். மனிதர்களுக்கு முகஸ்துதி தேவை. இல்லாவிட்டால் பிறந்த நோக்கமே நிறைவேறவில்லை என்றுதான் அவர்கள் நினைப்பார்கள். தங்கள் கண்ணில் தாங்களே மட்டமாகி விட்டதாக அவர்களுக்குத் தோன்றும். பழைய காலத்திலும் இந்தக் காலத்திலும், அழகான உன்னதமான எத்தனையோ பொருட்கள் இருக்கின்றன. அப்படி அவைகள் இருக்கக் கரணம் அவற்றிற்கு அளிக்கப்பட்ட புகழ்ச்சிதான். எல்லாவற்றிற்கும் மேலாக இந்தக் கவிகள் காதலின் புகழைப் பாடுகிறார்கள். இது மிகவும் அவசியம். இந்த உலகத்தில் இன்னொன்றாக பரிணமிக்கக் கூடிய தேவை காதல் மாதிரி வேறு எதற்குமே இல்லை. பெண்மணிகள் ஏக்கம் நிறைந்து மார்பு விம்ம பெருமூச் செறிகிறார்கள். ஆண்கள் கனவு காண்பது போல சூன்யத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு பெண்களின் இந்த அவஸ்தையின் காரணம் தெரியும். தங்கள் அழகான கவிதையே காரணம் என்று அவர்களுக்கு ஒரு உணர்ச்சி ஏற்படுகிறது. மக்களுக்கு மத சம்பந்தமான படங்கள் வரைய கலைஞர்கள் இருக்க வேண்டுமென்பதும் எனக்குப் புரிகிறது. ஏனெனில் தங்களைப் போல வறுமையும் அழுக்குமில்லாத ஒன்றைத்தானே மக்கள் தொழ வேண்டும்? உயிரைத் தியாகஞ் செய்தவர்களின் உருவங்களை, அழகாக மண்வாடையே இல்லாமல் இந்தக் கலைஞர்கள் வரைகிறார்கள். உயிரைத் தியாகம் செய்த இந்த மகான்களுக்கு உயர்ந்த ஆடைகளும், தலையைச் சுற்றி ஒரு தங்க ஜோதியும் வரைகிறார்கள். தாங்கள் செத்துப்போன பிறகு மக்கள் இப்படி தங்களையும் கௌரவிப்பார்கள் என்ற எண்ணம் இந்தக் கலைஞர்களுக்கு. இந்தப் படங்கள் பாமர மக்களுக்கு என்ன காட்டுகின்றன? அவர்களுடைய பிரபு சிலுவையில் அறையப்பட்டார். "இந்த பூமியில் ஏதோ அவர் நல்லது செய்ய நினைத்த பொழுதுதான் இது நிகழ்ந்தது. ஆக இந்த மண்ணில் எந்தவித நம்பிக்கைக்கும் இடமில்லை" என்று மக்களுக்கு உரைக்கின்றன இந்தப் படங்கள். இத்தகைய எளிய தொழிலாளிகள் ஒரு இளவரசருக்கு மிகமிக அவசியம். ஆனால் அரண்மனையில் அவர்களுக்கு என்ன வேலை என்றுதான் புரியவில்லை. கோயிலை மக்களுக்கு நிறுவிக் கொடுக்கிறவர்கள் இவர்கள். கோயில் அழகாக

அலங்கரிக்கப்பட்ட சித்திரவதை அறை. அமைதி காண அங்கு போகலாம். அங்குதான் அவர்களுடைய ஆண்டவன் சிலுவையில் எக்காலும் தொங்கிக் கொண்டிருக்கிறார். இதுவும் எனக்குப் புரிகிறது. நானே கிறிஸ்தவன்தான். எனக்கும் ஞானஸ்நானம் கிடைத்தது. செல்லுபடியான ஞானஸ்நானம் தான். ஆனால் நடந்தது என்னவோ வேடிக்கையாக நடந்தது. கொன்ஸாகா கோமானுக்கும், டோனா எலினாவுக்கும் திருமணம் நடந்தபொழுது, என்னை அவர்களுடைய முதல் குழந்தை என்று சொல்லி அரண்மனை ஆலயத்திற்குள் தூக்கிச் சென்றார்கள். கல்யாணத்தன்றே மணமகள் பெற்றெடுத்த குழந்தை என்று சொல்லி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தினார்கள். இதை ஒரு பெரிய ஹாஸ்யமாக பலர் சொல்ல நான் கேட்டு இருக்கிறேன். நல்ல ஹாஸ்யம் என்றுதான் எனக்கும் ஞாபகம். இந்த சம்பவம் நடக்கும் பொழுது எனக்கு 18 வயது. இந்தக் கல்யாணத்திற்காக இளவரசர் என்னை இரவல் கொடுத்திருந்தார்.

எல்லாம் சரி. ஆனால் வாழ்க்கையின் அர்த்தத்தைப் பற்றிப் பேசுகிறவர்களை யார் கேட்டுக் கொண்டிருக்க முடியும்? வாழ்க்கை, சாவு, வாழ்க்கையின் நிரந்தரமான பிரச்னைகள், பண்பு, கௌரவம் இவை பற்றிய சிக்கலான விளக்கங்கள் - இந்த விஷயங்களைப் பற்றித் தத்துவ ஞானிகள் பேசுவதை எவனாவது கேட்க முடியுமோ? இதே போல ஜோஸ்யர்களின் ஆடம்பரப் பேச்சுகளை பயபக்தியுடன் கேட்கிறார்கள். இந்த ஜோஸ்யர்கள் மத துரோகிகள். ஆனால் எதற்கு துரோகம் செய்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அதைப்பற்றி எனக்கு கவலையில்லை. அவர்கள் கோமாளிகள். இது அவர்களுக்கே தெரியவில்லை. பிறருக்கும் தெரியவில்லை. யாரும் அவர்களைக் கண்டு நகைப்பது கிடையாது. அவர்களுடைய கற்பனைகள் யாருக்கும் மகிழ்ச்சி அளிப்பதில்லை. ஆஸ்தானத்திற்கு அவர்கள் அழைக்கப்பட்ட காரணம் என்ன என்று யாருக்குமே தெரியாது. ஆனால் இளவரசர் என்ன செய்கிறார் தெரியுமா? அவர்கள் பேசும் ஒவ்வொரு பேச்சும் அர்த்தபுஷ்டி நிறைந்தது போல ஆழ்ந்து கவனிக்கிறார். தாடியைத் தடவிக் கொள்கிறார். அப்பொழுதெல்லாம் நான் பக்கத்தில் நின்று வெள்ளி மதுக்கிண்ணங்களில் மதுவை நிரப்பிக்கொண்டே இருப்பேன். இவர்கள் பேசும்பொழுது சூழ்நிலை கலகலவென்றே இராது. ஆனால் மதுவை கிண்ணத்தில் ஊற்றுவதற்காக அவர்கள் என்னை தங்கள் முழங்கால் மீது தூக்கி வைத்து எனக்கு உதவும் பொழுது கொல்லென்று ஒரு சிரிப்பு எழும். சிரிப்பு ஒலி கேட்கிற நேரம் இது ஒன்றுதான்.

நட்சத்திரங்களைப் பற்றி யாருக்கு என்ன தெரியும்? அந்த இரகசியத்தை யார் அறிய முடியும்? இந்த மனிதர்களால் அறிய முடியுமா? பிரபஞ்சத்தோடு உறவாடலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள். அறிவு நிறைந்தாற் போன்ற பதில்கள் கிடைக்கும் பொழுது மகிழ்ச்சியடைகிறார்கள். நட்சத்திரப் படங்களைப் பரப்பி வைத்துக் கொண்டு ஏதோ புஸ்தகம் படிப்பது போல ஆகாசத்தைப் படிக்கிறார்கள். இந்தப் புத்தகங்களை எழுதியவர்கள் மனிதர்கள்தான். நட்சத்திரங்கள் மட்டும் தங்கள் சொந்த இருள் வழியில் போய்க்கொண்டே இருக்கின்றன. இந்தப் படங்களைப் பற்றி அவைகளுக்கு என்ன தெரியப் போகிறது?

நான் கூட இரவு எனும் புத்தகத்தைப் படித்தேன். ஆனால் ஒரு அர்த்தமும் எனக்குப் புரியவில்லை. அர்த்தம் புரிந்து கொள்ளவும் முடியாது என்று என் அறிவு சொல்கிறது.

இரவு வேளைகளில் கோபுரத்தில் உட்கார்ந்து (மேல கோபுரத்தில்) குழாய்களையும் கால் வட்டங்களையும் வைத்துக்கொண்டு பிரபஞ்சத்தோடு உறவாடுவதாக அவர்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். கோபுரத்திற்கு எதிரேயுள்ள இன்னொரு கோபுரத்தில் நான் உட்கார்ந்திருக்கிறேன். இதில் தான் குள்ளர்களின் பழைய அறை இருக்கிறது. ஜகோஷபாட்டின் மென்னியைத் திருகின நாள் முதல் நான் இங்குதான் தனியாக வசிக்கிறேன். என் இனத்தவர்களுக்கேற்ற தாழ்ந்த கூரை, கோடு போன்ற ஜன்னல்கள். ஒரு காலத்தில் எத்தனையோ குள்ளர்கள் அங்கு வசித்து வந்தனர். பற்பல தூர தேசங்களிலிருந்தெல்லாம், மூர்களின் நாட்டிலிருந்து கூட சேர்க்கப்பட்ட குள்ளர்கள். அரசர்களும் போப் ஆண்டவர்களும் அவரின் துணைவர்களும் அளித்த பரிசாக வந்தவர்கள். சிலசமயம் நாங்கள் நாணயங்களாகவும் பண்டமாற்றுக்கு ஏற்ற உயர்ந்த பொருட்களாகவும் வழங்கப்படுவது உண்டு. குள்ளர்களாகிய எங்களுக்கு தாய்நாடு, பெற்றோர்கள் என்று ஒன்றும் கிடையாது. முகந்தெரியாத மனிதர்களுக்குப் பிறப்போம். எந்த இடத்திலும், இரகசியமாக, ஏழைகள் வயிற்றிலும் பரம மோசமான மனிதர்களிடத்திலும் பிறப்போம். எப்படியாவது இனம் அறுந்து போகாமல், அற்றுப் போகாமல் தொடர்ந்து நீடிக்க வேண்டியது. அவ்வளவுதான். இந்தப் பெற்றோர்கள் குள்ள இனப் பிராணி ஒன்றை படைத்து விட்டதாகத் தெரிந்தகணமே வல்லமையுள்ள இளவரசர்களுக்கு எங்களை விற்று விடுவார்கள். உடற் கோணல்களால் அவர்களுக்கு மகிழ்வூட்டி ஆஸ்தான கோமாளிகளாக விளங்கவேண்டும் நாங்கள். என் அம்மாவும் இப்படித்தான் என்னை விற்றாள். நான் பிறந்ததும் அருவருப்போடு முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டாள். புராதனமான இனத்தைச் சேர்ந்தவன் நான் என்று அவளுக்குத் தெரியவில்லை. இருபது பணம் வாங்கிக் கொண்டு என்னை விற்று, அந்தப் பணத்திற்கு மூன்று முழத் துண்டும் ஆட்டு மந்தைக்கு ஒரு காவல் நாயும் வாங்கிக் கொண்டாள்.

குள்ளர்களின் ஜன்னலில் உட்கார்ந்து நானும் இரவு வானத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கிறேன். எதிர்த்த கோபுரத்திலுள்ளதுபோல எனக்கு குழாய்களோ, தூரதரிசனிகளோ இல்லை. என்னுடைய பார்வையே மிகவும் ஆழ்ந்தது. இரவின் புத்தகத்தை நானும் படிக்க முடியும்.

இந்த கலைஞர்கள், படிப்பாளிகள், தத்துவவாதிகள், வானியல் அறிஞர்கள் இத்தனை பேரையும் எதற்குக் கூட்டி வைத்துக் கொண்டிருக்கிறார் இளவரசர்? தன்னுடைய ஆஸ்தானம் புகழ்பெற்று கௌரவமும் பெரும் பிரக்யாதியும் நிறைந்து விளங்க வேண்டுமென்று ஆசை. மனித வர்க்கம் முழுவதும் எதைப் பெற வேண்டுமென்று துடிக்கிறதோ அதுதான் அவருடைய லட்சியமும்.

இதெல்லாம் எனக்குப் புரிகிறது. எனக்கு சம்மதம் தான்.

# 3

தளபதி புக்கரோஸா ஊருக்கு வந்திருக்கிறார். பரிவாரங்களுடன் பலாஸ்ஸோ கிரால்டி என்ற மாளிகையில் தங்கி இருக்கிறார். அந்தக் குடும்பம் அஞ்ஞாதவாசம் செய்தது முதல் அங்கு யாருமே குடி இல்லை. புக்கரோஸா இளவரசர் மாளிகைக்கு விஜயம் செய்து வெகு நேரம் தங்கியிருந்தார். வேறு யாரும் அப்பொழுது அனுமதிக்கப்படவில்லை.

அவர் பெரிய புகழ்பெற்ற தளபதி.

மணி மண்டப வேலை ஆரம்பமாகி விட்டது. எவ்வளவு தூரம் வேலை நடந்திருக்கிறது என்று பார்க்க நாங்கள் எல்லோரும் போனோம். பெரிய மாதாக் கோவிலின் மண்டபத்தை விட இன்னும் அதிக உயரமாக இருக்கும் இந்த மணிகோபுரம். மணிகள் அடிக்கும்போது வான்வெளி முழுவதும் எதிரொலிக்கும். எவ்வளவு அழகிய எண்ணம்! எண்ணங்களெல்லாம் இப்படித்தான் இருக்க வேண்டும். இத்தாலியிலுள்ள மணிமண்டபங்கள் எல்லாவற்றிலுமே இதுதான் உயர்ந்து நிற்கப் போகிறதாம்!

இந்தக் கட்டட வேலையில் இளவரசர் மிகவும் முனைப்பாக இருக்கிறார். பிளான்களை உடனுக்குடனே ஆராய்ந்தார் அவர். மண்டபத்தின் அடிக்கட்டடத்தில் கிறிஸ்துவின் வாழ்க்கையிலிருந்து பல சிற்பங்களை சுவர் மீது செதுக்கும் திட்டங்களைப் பார்த்து சொக்கிப் போய்விட்டார் அவர். ஆனால் இந்தக் கட்டத்தைக் கடந்து அந்த வேலை முன்னேறவில்லை.

கட்டடமே முடியாது போனாலும் போகலாம். என் எஜமானரின் பல திருப்பணிகள் முடிகிற வழக்கம் இல்லை. அரைகுறையாக, ஒரு மகத்தான சிந்தனையின் பாழ்த்த சின்னத்தைப் போல அழகாக அநேக முயற்சிகள் நிற்கின்றன. ஆனால் இந்தப் பாழ்கள் தானே படைத்தவருக்கு ஞாபகச் சின்னம். நானும் அவர் பெரியவர் என்பதை மறுத்திருக்கிறேனோ! அவர் தெருவில் நடந்து போகும் பொழுது அவர்கூட நடந்து செல்லத் தடையே சொல்லுவதில்லை. எல்லோரும் அவரையே பார்க்கிறார்கள். என்னை யாரும் திரும்பிப் பார்ப்பதில்லை. எதற்காகப் பார்க்க வேண்டும்? மிகவும் மரியாதையாக, தங்களை விட உயர்ந்த ஒரு மனிதராகக் காண்பது போல வணங்குகிறார்கள் எல்லோரும். ஆனால் இதற்குக் காரணம் எல்லோருமே பல்லிளிக்கும் கோழைகள். அவர் நினைப்பது போல அவரிடம் பக்தியோ, அன்போ கிடையாது. நான் தனியாக நடந்து போனால் என்னை உடனே பார்க்கிறார்கள். நையாண்டி செய்கிறார்கள். "இதாண்டா அவருடைய குள்ளன். இவனை உதைத்தால் அவரையே உதைத்தாற் போல" என்று கூச்சலிடுவார்கள். ஆனால் உதைக்கத் துணிவு கிடையாது. செத்த எலிகளையும், நாற்றம் எடுத்த கூளங்களையும் என் மீது எறிவார்கள். சீற்றம் தாங்காமல் நான் வாளை உருவும்போது கடகடவென்று சிரிப்பார்கள். "எவ்வளவு பெரிய வீரர்டா நம் எஜமானர்!" என்று கத்துவார்கள். எனக்கு

தற்காப்பு செய்து கொள்ள முடிவதில்லை. இரு கட்சிகளும் ஒரேவித ஆயுதங்களை வைத்துக் கொண்டால் தானே முடியும். என்னுடைய ஆடையில் அழுக்கும் கரையும் வழிய ஓட்டம் பிடிப்பேன்.

ஒரு குள்ளனுக்கு தன் எஜமானனைவிட எத்தனையோ விஷயங்கள் தெரியும்.

உண்மையில் என் இளவரசருக்காக எல்லாவற்றையும் நான் பொறுத்துக் கொள்ளத் தயார். இதெல்லாம் நான் அவருடைய ஒரு அங்கம் என்பதையும் அவருடைய கம்பீர தோற்றத்தின் பிரதிநிதி என்றும் தெரிவிக்கிறது இல்லையா? ஒன்றும் அறியாத பாமர மக்கள் கூட்டம் கூட எஜமானனின் குள்ளனே உண்மையான எஜமானன் என்று புரிந்துகொண்டிருக்கிறது. அரண்மனை, கோபுரங்கள், கொத்தளங்கள், ஆடம்பரம் நிறைந்த ஆஸ்தானம், நாற்சந்தியில் தலைகளை உருட்டி விடும் அரசாங்கக் கொலையாளி, அளவற்ற செல்வமுடைய கஜானா, பஞ்சகாலத்தில் பசித்தவர்களுக்கு உணவு வழங்கும் அரண்மனை அதிகாரி இவர்கள் எல்லோரையும் இளவரசர் என்றே நினைப்பது போல என்னையும் எஜமானன் என்றே நினைக்கின்றனர். எந்த சக்தியின் பிரதிநிதியாக நான் நிற்கிறேனோ அந்த சக்தியைப் பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் நான் வெறுக்கப்படுகிறேன் என்று நினைக்கும் பொழுதே எனக்கு ஒரு திருப்தி உண்டாகிறது.

இளவரசரைப் போலவே நானும் உடுத்திக் கொள்கிறேன். அதே மாதிரியான தையல். அதே துணிகள். அவர் ஏதாவது ஒரு உடை செட்டுக்கு ஆர்டர் கொடுக்கும் பொழுது மிஞ்சிய துண்டுகள் எல்லாம் எனக்குத்தான். அவரைப் போலவே நானும் ஒரு உடைவாளைப் பக்கத்தில் தொங்கவிட்டுக் கொண்டிருக்கிறேன். ஆனால் அது குட்டை. நான் நடக்கிற தோரணையையும் யாராவது கவனித்தால் அதே கம்பீரம் என்னிடம் இருப்பதையும் காணத் தவற மாட்டார்கள்.

இப்படியாக நானும் இளவரசர் போலவே ஆகிவிட்டேன். கொஞ்சம் சிறிய அளவு; அவ்வளவுதான். மேல கோபுரத்தில் நட்சத்திரங்களைப் பார்க்கிறார்களே, அந்தக் கண்ணாடி வழியாக யாராவது பார்த்தால் நானே இளவரசர் என்று நினைத்தாலும் நினைத்துவிடுவார்கள்.

## 4

குள்ளர்களுக்கும் குழந்தைகளுக்கும் எத்தனையோ வேற்றுமை இருக்கிறது. இருவரும் ஒரே அளவாக இருப்பதால் ஒரே மாதிரியாகவும் இருப்பார்கள், ஒருவருக்கொருவர் ஒத்துப் போவார்கள் என்று நினைக்கிறார்கள். குள்ளர்களைக் குழந்தைகளோடு விளையாடுமாறு நிர்பந்திக்கிறார்கள். குழந்தைக்கு நேர் எதிரானவன் குள்ளன்; பிறக்கும்பொழுதே வயதாகிப் பிறக்கிறான் அவன் என்பதையெல்லாம் மறந்து விடுகிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில் குள்ளக் குழந்தைகள் விளையாடுவதில்லை. எதற்காக விளையாட வேண்டும்? மூப்பும், சுருக்கமும்

விழுந்த அந்த முகங்களோடு விளையாடினால் எப்படி இருக்கும்? இந்த மாதிரி குள்ளர்களைப் பயன்படுத்துவதே சித்திரவதைக்கு சமம். ஆனால் மனித வர்க்கத்திற்கு எங்களைப் பற்றி ஒன்றுமே தெரிவதில்லை.

ஏஞ்சலிகாவோடு விளையாடு என்று என் எஜமானர்கள் என்னைக் கட்டாயப்படுத்தவே இல்லை. அவளேதான் அப்படிச் செய்திருக்கிறாள். ஆத்திரத்தினாலோ, வெறுப்பினாலோ செய்தாள் என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் அந்தக் காலத்தில், இன்று திரும்பிப் பார்க்கும் பொழுது அவள் மிகவும் சிறியவளாக இருந்த காலத்தை எண்ணிப் பார்க்கும் பொழுது, மிகவும் திட்டம் போட்டு விஷமம் செய்து என்னை அவமானப் படுத்தினதாகத் தான் எனக்குத் தோன்றுகிறது. "இதன் கண் எவ்வளவு நீலம், எவ்வளவு வட்டமான வாய்! எத்தனை அழகாக செதுக்கினாற்போல் இருக்கிறது" என்று எல்லோருமே அந்தக் குழந்தையைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள். ஆனால் இந்த ஆஸ்தானத்தில் என்னைத் தவிர வேறு யாரும் அவள் கையில் இத்தனை அவஸ்தைப்பட்டது இல்லை. தவழ்கிற பருவத்திலேயே ஒவ்வொரு நாள் காலையிலும் கையில் பூனைக் குட்டியை இடுக்கிக் கொண்டு குள்ளர்களின் அறைக்குள் தளர்நடை போட்டுக்கொண்டே வருவாள். "எங்களோடு விளையாடுவியா பிக்கோலைன்?" என்று என்னைக் கேட்பாள். "எனக்கு முடியாது. வேலை நிறைய இருக்கிறது. விளையாடத்தான் என் போதெல்லாம் இருப்பதாக எண்ணம் போல் இருக்கிறது" என்று நான் பதில் சொல்லுவேன். "பின்னே நீ என்ன செய்யப் போறியாம்?" என்று துடுக்காக மறுகேள்வி வரும். "அதெல்லாம் குழந்தைங்களிட்ட சொல்லிண்டிருக்க முடியுமா?" என்று நான் மறுகேள்வி கேட்பேன். "நீ வெளியிலாவது போவியா இல்லையா? இங்கேயே படுக்கையிலேயே படுத்திருக்கப் போவதில்லையே. நான் படுக்கையிலிருந்து எழுந்து ரொம்ப நேரமாச்சு" என்பாள். நான் அவளோடு வெளியில் போய்த்தான் ஆக வேண்டும். மறுக்க முடியாது. எஜமானர்களிடம் பயம்தான். உள்ளுக்குள் மட்டும் கோபம் பொங்கிக்கொண்டு வரும். நான் என்னமோ அவள் விளையாட்டுத் தோழனைப் போல என் கையைப் பிடித்துக் கொள்வாள் அவள். அவளுக்கு எப்பொழுதுமே என் கையைப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும். பச் பச் என்று ஒட்டிக்கொள்ளும் குழந்தைகளின் உள்ளங்கைகளைக் கண்டாலே எனக்கு எரிச்சல் வரும். கையை ஆத்திரத்தில் மூடிக் கொள்வேன். ஆனால் மூடிய கையைப் பிடித்துக் கொண்டு சளசளவென்று பேசிக் கொண்டு என்னை எங்கு பார்த்தாலும் அழைத்துப் போவாள் அவள். அவளுடைய பொம்மைகள் வைத்திருக்கும் அறைக்குப் போய் அவற்றிற்கு சாப்பாடு போட்டு சட்டை போடுவோம். நாய் கொட்டகைக்கு வெளியே புதிதாகப் பிறந்த நாய்க்குட்டிகள் பாதி கண்ணை மூடிக்கொண்டு காலை அகட்டி படுத்துக் கிடக்கும். அவற்றைப் போய்ப் பார்க்க வேண்டும். ரோஜாத் தோட்டத்திற்குப் போய் பூனைக்குட்டியுடன் விளையாட வேண்டும். அவளுக்கு எத்தனையோ விதப் பிராணிகள் மீது ஆசை, அதாவது அவற்றின் குட்டிகளின்மீது. சின்னதாக எதைப் பார்த்தாலும் அவளுக்கு ஆசைதான். எனக்கு அலுப்பு பிடுங்கிக் கொண்டு வரும். யுகம்

ஆனாலும் அவள் உட்கார்ந்து பூனைக்குட்டியோடு விளையாடிக் கொண்டே இருப்பாள். நானும் சேர்ந்து கொள்ள வேண்டுமாம். எதைப் பார்த்தாலும் குழந்தை மாதிரி ஆசைப்படுகிற குழந்தை என்று நினைத்துக் கொண்டிருக்கிறாள். எனக்கு ஒன்றிலும் ஆசை கிடையாது.

சில சமயம் அவளுக்கே புத்தி வந்து விட்டாற்போல இருக்கும். நான் அலுத்துக் கொள்வதைப் பார்த்து, என் கிழ முகத்தைப் பார்த்து "உனக்கு ஏன் விளையாடப் பிடிக்கிறதே இல்லை?" என்று ஆச்சரியமாகக் கேட்பாள்.

நான் பதில் சொல்லாமல் உட்கார்ந்திருப்பேன். என் உதடுகள் அழுத்தமாக மூடியிருக்கும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் அனுபவம் என் உணர்ச்சியற்ற கண்களின் ஆழத்தில் நிறைந்திருக்கும். அதைப் பார்த்ததும் ஒரு கூச்சம் அவள் குழந்தைக் கண்களில் நிழல் வேய்ந்து அவள் வாயையும் சிறிது நேரம் மூடிவிடும்.

விளையாட்டு என்பது என்ன? அர்த்தமில்லாத பிதற்றல். பாசாங்கு. பொருட்களில், யாரும் உண்மையாக, உள்ளதை உள்ளவாறு பார்க்காமல் ஏதோ பாசாங்கு செய்கிறது தான். ஜோஸியர்கள் கிரக நட்சத்திரங்களோடு விளையாடுகிறார்கள். இளவரசர் கட்டடங்களோடும், ஆலயங்களோடும், சிலுவைக் காட்சிகளோடும் விமான மண்டப கீழ்தளத்தோடும் விளையாடுகிறார். ஏஞ்சலிகா பொம்மைகளோடு விளையாடுகிறாள். எல்லோருக்குமே விளையாட்டுத் தான். ஏதாவது ஒரு பாசாங்கு செய்து கொண்டு தான் இருக்கிறார்கள். எனக்கு தான் இந்தப் பாசாங்கு பிடிக்கவில்லை.

ஒருநாள் இந்த நாசமாய்ப் போன பூனைக்குட்டியை பக்கத்தில் போட்டுக் கொண்டு படுக்கையில் தூங்கிக் கொண்டிருந்தாள் அவள். நான் மெதுவாக உள்ளே சென்று கத்தியினால் அதன் கழுத்தை அறுத்து அரண்மனை ஜன்னலுக்குக் கீழ் உள்ள சாணிக் குழியில் தூக்கி எறிந்து விட்டேன். எனக்கு இருந்த கோபத்தில் என்ன செய்கிறேன் என்றே தெரியவில்லை. அதாவது மிகவும் நன்றாகவே தெரிந்திருந்தது. ரோஜா தோட்டத்தில் விளையாடும் பொழுதெல்லாம் என் மனதில் உருவாகிக் கொண்டிருந்த திட்டத்தை அப்பொழுது நிறைவேற்றிவிட்டேன். பூனைக்குட்டி போய்விட்டதைக் கண்டு ஒரேயடியாகத் துக்கத்தில் ஆழ்ந்து விட்டாள் அவள். சமாதானமே செய்ய முடியவில்லை. அது இறந்து போயிருக்க வேண்டுமென்று எல்லோருமே சொன்னதும் பெயர் தெரியாத காய்ச்சல் ஒன்று அவளைப் பிடித்துக் கொண்டது. வெகுநாள் வரை அவளுக்கு உடம்பு சரியில்லை. எனக்கும் அப்பாடா என்று இருந்தது. உடம்பு குணமானதும் தன் அருமைச் செல்வத்தின் விதியைப் பற்றி அவள் புலம்பின புலம்பலை எல்லாம் கேட்கவேண்டியதாயிற்று. நம்ப முடியாத செய்தியாக இருக்கிறதே என்று அரற்றிக் கொண்டே இருந்தாள். பூனை மறைந்தது எப்படி என்று யாரும் கவலைப்படவே இல்லை. ஆனால் பெண்ணின் கழுத்தில் காணப்பட்ட சில இரத்தத் துளிகளைப் பார்த்து ஆஸ்தானம் முழுவதுமே கலங்கி விட்டது. அங்கு இரத்தம் வரக்காரணம் யாருக்கும் தெரியவில்லை. ஏதோ கெட்ட

சகுனம் என்றுதான் எல்லோரும் பயப்பட்டார்கள். சகுனம் என்று எதைச் சொன்னாலும் உடனே அவர்களுக்கு அசாத்திய சிரத்தை வந்து விடும்.

உண்மையில் குழந்தைப் பருவம் முழுவதும் அவள் என்னை அமைதியாக விட்டு வைக்கவே இல்லை. விளையாட்டுகள் என்னவோ வயதுக்கேற்ப மாறிக் கொண்டிருந்தன. ஒரு கண நேரமும் என்னை விடமாட்டாள் அவள். தன் இரகசியங்களை எல்லாம் என்னிடம் சொல்லவேண்டுமென்று ஆசை அவளுக்கு. ஆனால் இவள் இரகசியங்களை யார் கேட்டார்கள்? பூனைக்குட்டிகள், நாய்க்குட்டிகள், வாத்துக் குஞ்சுகள் முதலிய பிராணிகள் மீதுள்ள ஆசை மாதிரிதான் என் மீதுள்ள ஆசையுமோ என்று சில சமயம் நான் நினைப்பது உண்டு. இல்லாவிட்டால் வயதானவர்களோடு பழகுவதில் அவளுக்கு சந்தோஷமில்லையோ என்னவோ? குழந்தை உள்ளத்தில், ஏதாவது அஞ்சும்படியாக அவர்களைக் கண்ட மாத்திரத்திலேயே அவள் நடுங்குகிறாளோ என்னவோ? ஆனால் அதற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? அவள் இப்படித் தனிமையில் திரிவதற்கு நானா காரணம்? ஒரு நிமிஷங்கூட என்னை விடமாட்டாள். குழந்தைப் பருவம் கழிந்தபிறகுகூட இந்த வழக்கம் நிற்கவில்லை. அவளுக்கு விவரம் தெரிந்ததுமே அவளைப்பற்றிக் கவலைப்படுவதையே விட்டு விட்டாள் தாயார்க்காரி. அவளும் எல்லோரையும் போல பாசாங்கு செய்தாள். தகப்பனாருக்கோ தலைக்கு மேல் வேலை. இந்தக் குழந்தையின்மீது அவர் சிரத்தை கொள்ளாததற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். ஆனால் அதைப் பற்றி நான் ஒன்றும் அபிப்ராயம் சொல்ல மாட்டேன்.

பத்து பன்னிரண்டு வயதுக்குப் பிறகுதான் அவளுக்கு பேசாமல் இருக்கவும் தன்னை அடக்கிக் கொள்ளவும் வழக்கம் வந்தது. என்னையும் ஒரு பாடாக விட்டாள். அதிலிருந்து எனக்கும் அமைதி கிடைத்து விட்டது. நல்லவேளையாக என் வழிக்கு வருவதில்லை அவள். ஆனால் சமயங்களில் அவளுக்காக எவ்வளவெல்லாம் சகித்துக் கொள்ளவேண்டியிருந்தது என்பதை எண்ணும்போது ஒரேயடியாகப் புகைந்து கொண்டுதான் வருகிறது.

இப்பொழுது அவள் வளர்ந்து வருகிறாள். வயது பதினைந்து. சீக்கிரம் அவள் வளர்ந்த மங்கையாகி விடுவாள். ஆனால் குழந்தைத்தனம் இன்னும் போகவில்லை. பெரிய இடத்துப் பெண்ணாக அவள் நடந்து கொள்ளவில்லை. அவள் தகப்பன் யாரென்று ஊகிப்பது முடியாத காரியம். இளவரசராக இருக்கலாம். அல்லது வேறு யாராவது திராபையாகவும் இருக்கலாம். அப்படி இருந்தால் இளவரசியாக அவளைப் பாவிப்பதுகூட அனாவசியமாகத்தான் தோன்றும். அவள் அழகி என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால் பாதி திறந்த வாயும், ஒன்றும் புரியாதது போல் விழிக்கிற நீலப் பெரும் கண்களுமாக குழந்தைத் தனம் நிறைந்துள்ள இந்த முகத்தில் எந்த அழகும் எனக்குத் தென்படவில்லை.

# 5

**கா**தல் என்பது அழியக் கூடியது. அழிந்தவுடன் மட்கிப் போய் புதிய காதலுக்கு மண்ணாக ஆகிறது. இந்தப் புதிய காதலில் மாய்ந்த காதல் தன் இரகசிய வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்துகிறது. ஆக காதலுக்கு சாவே கிடையாது.

நான் அறிந்த வரையில் இளவரசியின் அனுபவம் இதுதான். அவளுடைய சந்தோஷம் முழுவதும் இந்த ஆதாரத்தின் மீதுதான் நிற்கிறது. அவள் சந்தோஷமாக இருக்கிறாள் என்பதைப் பற்றி சந்தேகமே கிடையாது. தன்னைச் சுற்றியும் தனக்கே சொந்தமான வழியில் இந்த ஆனந்தத்தைப் பரப்பிக் கொண்டும் இருக்கிறாள். தற்சமயம் டான்ரிகார்டோ மிகவும் சந்தோஷமாக இருக்கிறான்.

இளவரசர் கூட இன்னும் உயிருடன் தான் இருக்கிறார். அதாவது அவள் இதயத்தில் அவர் ஒரு காலத்தில் எழுப்பிய உணர்ச்சியின் ஞாபகம் இன்னும் உயிரோடு இருக்கிறது. அவளுடைய காதல் இன்னும் உயிரோடு இருப்பதாகவே அவர் பாவனை செய்கிறார். தங்கள் இருவரின் காதலும் உயிரோடு இருப்பதாக இருவருமே பாவனை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஒரு தடவை தன்னைக் காண்பித்து கொடுத்த காரணத்திற்காக, காதலன் ஒருவனை இளவரசி சித்திரவதை செய்ய உத்தரவு கொடுத்தாள். இளவரசருக்கு சந்தேகமே ஏற்படவில்லை. செய்யாத ஒரு குற்றத்தைச் செய்ததாக காட்டி அவனை தண்டிக்குமாறு இளவரசரை தூண்டினாள் அவள். எனக்கு ஒருவனுக்குத் தான் உண்மை என்னவென்று தெரியும். சித்திரவதையை நானும் கண்ணால் பார்த்துக்கொண்டு நின்றேன் - அவன் எப்படி எல்லாவற்றையும் சகித்துக் கொண்டான் என்பதை அவளிடம் தெரிவிப்பதற்காக. அந்த ஆளிடம் எந்தவித பௌருஷமோ, வீரமோ இல்லை. ஏதோ சராசரி, அவ்வளவுதான்.

அவன்தான் இந்தப் பெண்ணின் தகப்பனோ என்னவோ? எனக்கு எப்படி தெரியும்?

இளவரசராகக்கூட இருக்கலாம். இளவரசி குழைந்து குழைந்து அவரோடு இழைந்தாள். அப்பொழுது அவர்களுடைய காதல் இரண்டாம் தடவையாக மலர்ந்தது. ஒவ்வொரு இரவும் அவரை அணைத்துக் கொள்வாள் இவள். இறந்துபோன காதலனுக்காக ஏங்கி விம்மிக் கொண்டிருந்த தன் மார்பை இளவரசருக்குத் தந்தாள் அவள். இளவரசரை அவள் கொஞ்சுவதைப் பார்த்தால் சித்திரவதை செய்யவேண்டியது உன்னைத்தான் என்று அவள் நினைப்பதுபோல் இருந்தது. அவரும் மோகம் நிறைந்த முதல் இரவில் மயங்கி இருந்ததுபோல பரவசமாக அந்தக் கொஞ்சல்களுக்குப் பதில் கொடுத்தார். இப்படியாக, மாய்ந்த காதல் உயிரோடு இருக்கும் காதல் தன் இரகசிய வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்திற்று.

ஒவ்வொரு சனிக்கிழமை காலையிலும் இளவரசியின் பாப அறிக்கையைக் கேட்க மதகுரு வருகிறார். அதற்குள் அவள் எழுந்து உடுத்திக்கொண்டு சிலுவைக்கு முன் இரண்டு மணிநேரம் மண்டியிட்டுத் தொழுது விட்டு பாபங்களை ஒப்புக்கொள்ளத் தயாராக இருப்பாள்.

அவளுக்கு ஒப்புக் கொள்ள ஒன்றும் கிடையாது. இதனால் அவள் பொய் சொல்கிறாள் என்றோ, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதாகவோ நினைத்துக் கொள்ளக் கூடாது. எப்பொழுதுமே தன் இதயம் முழுவதையும் திறந்து தாராளமாகப் பேசுவதுதான் அவள் வழக்கம். பாபம் என்னவென்று அவளுக்குத் தெரியாது. தான் தவறாக எதுவும் செய்ததாகவும் அவள் நினைப்பதில்லை. ஒரே ஒரு தடவை தலைவாரும் பொழுது சரியாக வாரவில்லை என்பதற்காக வேலைக்காரியிடம் சற்றுக் கடுமையாகவே நடந்து கொண்டு விட்டாள். அந்த ஒரு சமயம்தான் தவறு செய்ததாக அவளுடைய எண்ணம். அவள் மையால் எழுதப்படாத ஒரு பக்கம் போன்றவள். மாசுபடாத கன்னியென்றே அவளைக் கண்டு புன்னகை பூக்கிறார் மதகுரு.

பிரார்த்தனைக்கும், சிலுவை உலகத்தில் மூழ்கியதற்கும் பிறகு அவள் கண்கள் திறந்த மனத்துடன் மின்னுகின்றன. அவளுடைய பொம்மைச் சிலுவையில் இருக்கிற, சித்திரவதைக்கு ஆளான மனிதனும் அவளுக்காக துன்பப்பட்டு விட்டான். ஆகையால் எல்லாக் குற்றமும், குற்றத்தின் நினைவு கூட அவள் ஆத்மாவிலிருந்து கழுவப்பட்டு விட்டது. ஒரு தனி பலமும் புத்துயிரும் தன்னுள் எழுவது அவளுக்கே தெரிகிறது. அதே சமயம் கனவு காண்பது போன்ற பக்தியும் ஆத்ம தரிசனமும் அவள் முகத்தில் தென்படுகின்றன. பௌடர் பூசாத அந்த கம்பீர முகத்திற்கும் அவள் அணிந்துள்ள எளிய கருப்பு கவுனுக்கும் முகத்தின் இந்த பக்தித் தோற்றத்திற்கும் மிகவும் பொருந்தியிருக்கிறது.

இதற்குப் பின், உட்கார்ந்து தன் காதலனுக்கு கடிதம் எழுதுகிறாள் அவள். தன்னுடைய உணர்ச்சிகளை எல்லாம் அதில் சொல்லுகிறாள். சகோதர பாவம் நிறைந்த அன்பு வடியும் கடிதம் இது. காதல், சந்திக்கிற இடம், இதெல்லாம் பற்றி ஒன்றுமே அதில் இராது. இந்த மாதிரியான மனநிலைகளில் விளையாட்டு என்ற பேச்செல்லாம் அவளிடம் மூச்சுப்பறியக் கூடாது. கடிதத்தை எடுத்துக் கொண்டு நான் காதலனிடம் போகவேண்டும்.

ஆழ்ந்த மதப்பற்றுள்ளவள் அவள் என்பதைப்பற்றி சந்தேகமே இருக்க முடியாது. மதம் அவளுக்கு அத்தியாவசியமான தேவை. முற்றிலும் உண்மையான ஒரு பொருள். அதை நன்றாக உபயோகப் படுத்துகிறாள் அவள். இதயத்தின், ஆத்மாவின் ஒரு பகுதி அது.

இளவரசரும் மதப்பற்றுள்ளவர் தானா? இதை அவ்வளவு எளிதில் சொல்ல முடியாது. தனக்கே உரிய வழியில் அவருக்கு மதப்பற்று உண்டு. அவருக்கு எதுதான் கிடையாது? எல்லாமே அவருடைய கையெட்டில்தான் இருக்கிறது. ஆனால் இது மதப்பற்று என்று சொல்ல முடியுமா? மதம் இருப்பதாக நினைக்க விரும்புகிறார் அவர். அதைப்பற்றி கேட்க விரும்புகிறார்.

மதக் கருத்துக்களைப் பற்றி சொல்வன்மையும், பாண்டித்யமும் உள்ளவர்கள் கூறுவதைக் கேட்க விரும்புகிறார் அவர். ஆனால் அவருக்குப் பிடிக்காத பொருள் எது? பெரிய பெரிய கலைஞர்கள் தீட்டிய மத ஓவியங்கள், சிற்பங்கள், அழகிய கோயில்கள் (அதுவும் அவர் கட்டியவை) எல்லாம் அவருக்குப் பிடிக்கும். இதுதான் மதப்பற்றா என்று கேட்டால், எனக்குத் தெரியாது. இருக்கலாம். ஆனால் இளவரசர் என்ற முறையில் இளவரசியைப் போலவே அவரும் உண்மையான மதப்பற்றுள்ளவர் என்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன். மக்களின் மதப் பசியைத் திருப்தி செய்ய வேண்டுமென்று அவர் புரிந்து கொண்டிருக்கிறார். அத்தகைய காரியங்களில் ஈடுபட்டவருக்கு அவர் மாளிகையில் எப்பொழுதும் வரவேற்பு உண்டு. மதகுருக்களும் ஆன்மீகத் துறையில் ஈடுபட்டவர்களும் எத்தனையோ பேர் இங்கு வருகிறார்கள். ஆனால் இளவரசியைப் போல, சிந்தனையிலும் தியான அளவிலும் அவருக்கு மத உணர்ச்சி உண்டா? இது வேறு விஷயம். இதைப்பற்றி அபிப்ராயம் சொல்ல எனக்கு இஷ்டமில்லை.

மீண்டும் சொல்கிறேன். இளவரசி மிக மிக ஆழ்ந்த மதப்பற்று கொண்டவர்.

இருவருமே தத்தம் சொந்த வழியில் மத ஆசை கொண்டவர்கள்தான்.

மதம் என்பது என்ன? இந்த விஷயத்தைப் பற்றி நான் ஏராளமாகப் பிரயோசனமில்லாமல் சிந்தித்திருக்கிறேன்.

லெண்ட் திருவிழாவின் பொழுது ஒரு வருஷம் என்னை பெரிய மத குருவைப்போல நடிக்குமாறு நிர்பந்தம் செய்தார்கள். மாண்ட்டுவா ஆஸ்தானத்தைச் சேர்ந்த பல குள்ளர்களைத் திருவிழாவிற்காகத் தருவித்திருந்தார் இளவரசர். அவர்களுக்கெல்லாம் அப்பச் சடங்கு செய்யுமாறு எனக்கு உத்தரவு வந்தது. நாங்கள் எல்லோரும் அரண்மனை ஹால் ஒன்றில் ஒதுக்குப்புறமாகத் தயார் செய்யப்பட்டிருந்த ஒரு குட்டி மண்டபத்தில் கூடினோம். எங்களைச் சுற்றி சிரிப்பை அடக்கிக்கொண்டு விருந்தினர்கள் அமர்ந்திருந்தார்கள். வீரர்கள், பிரபுக்கள், ஆடம்பரப் பிரியர்கள் இப்படி எத்தனையோ பேர். சிலுவையை நான் உயர்த்தியதும் குள்ளர்கள் எல்லோரும் மண்டியிட்டனர். கண்கள் மின்ன கம்பீரமாக நான் சொன்னேன்: "உங்களுடைய ரட்சகன் இதோ இருக்கிறான். குள்ளர்களாகிய உங்கள் இரட்சகனும் ஒரு குள்ளன். பாண்டியஸ் பைலேட்டிடம் மிகவும் துன்பப் பட்டான் அவன். எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ சிறிய பொம்மைச் சிலுவையில் அவன் அறையப்பட்டான்" என்று சொல்லிக் கொண்டே நான் மதுக்கிண்ணத்தை எடுத்து குள்ளர்களிடம் நீட்டினேன். "அந்த குள்ளனின் உதிரம் இது. இதில் எல்லா அநீதிகளும் கழுவப்பட்டு விடும். மாசு படிந்த ஆத்மாக்களெல்லாம் பனிபோல் வெண்மை பெற்றுவிடும்". பின்பு அப்பத்தை எடுத்து அவர்கள் முன் நீட்டி, புனிதச் சடங்குகளை விளக்கியவாறே அப்பத்தை தின்று மதுவை அருந்தினேன். "உங்களைப் போலவே குரூரமான அவன் உடலை நான் தின்னுகிறேன். எட்டிக்காய்போல அது கசக்கிறது. ஏனெனில் வெறுப்பு நிறைந்தது அது. நீங்களும் அதைப் பகிர்ந்து

கொள்ளுங்கள். நான் அவன் உதிரத்தை அருந்துகிறேன். அணைக்க வொண்ணாத் தீயாக அது எரிகிறது. என் இரத்தத்தையே குடிப்பதுபோல் இருக்கிறது."

"குள்ளர்களின் இரட்சகனே, உலகம் முழுவதையும் உன் தீ எரிக்கட்டும்" என்று சொல்லியவாறே, இந்த கம்பீரமான சடங்கை முகம் இருள, வியப்புடன் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் மீது மதுக்கிண்ணத்தைத் தூக்கி எறிந்தேன்.

மதவிரோதமாக நான் பேசவில்லை. பேசுகிறவர்கள் அவர்கள்தான். நான் இல்லை. ஆனால் இளவரசர் பல நாள் என்னைச் சிறையில் போட்டுவிட்டார். வேடிக்கைக்காக அவர்கள் ஏதோ ஏற்பாடு செய்தார்கள். ஆனால் அதை நான் கெடுத்து விட்டேனாம். விருந்தினர்கள் கலங்கி அரண்டு விட்டார்களாம். எனக்கு ஏற்ற சிறிய விலங்குகள் அரண்மனையில் இல்லை. பிரத்யேகமாகச் செய்ய வேண்டியிருந்தது. பண்ணுவது சிரமம். இவ்வளவு குறுகிய கால தண்டனைக்கு ஏன் இந்த சிரமம் என்று கொல்லன் சொன்னானாம். ஆனால் இன்னொரு தடவைக்காவது உபயோகப்படுமா, இல்லையா, என்று சொல்லி விலங்கை செய்யச் சொல்லிவிட்டார் இளவரசர். ஆனால் தண்டனைக் காலம் முடிவதற்கு முன்னே விடுதலை கிடைத்துவிட்டது. விருந்தினர்களைத் திருப்திப்படுத்தவே அவர் என்னைத் தண்டித்தார் என்று நினைக்கிறேன். ஏனெனில் அவர்கள் ஊருக்குக் கிளம்பியதுமே நான் வெளியே வந்துவிட்டேன். ஆனால் அதற்குப் பின்பு வெகுநாள் வரையில் இளவரசர் என்னைச் சந்தேகக் கண்களுடன் பார்த்து வந்தார். என்னோடு தனியாக இருப்பதையே அவர் விரும்பவில்லை. பயப்பட்டாற்போல் இருக்கிறது.

குள்ளர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. கோழிகள் பயந்து ஓடுவதுபோல் அங்குமிங்கும் ஓடினார்கள். கீச் கீச்சென்று கத்திக்கொண்டு ஓடினார்கள். இந்த அசட்டுக் குரல் அவர்களுக்கு எப்படி வந்தது என்று எனக்குப் புரியவில்லை. என் குரல் கனமும் ஆழமும் நிறைந்தது. ஆனால் அவர்கள் நசுங்கி ஆத்மாவின் ஆழம் வரையில் காயடிக்கப்பட்டவர்கள். பெரும்பாலோர் கோமாளிகள். தங்கள் உடலைப் பற்றியே அபத்த ஹாஸ்யங்கள் செய்து இனத்தையே இழிவுபடுத்துகிறவர்கள்.

இந்தக் குள்ளர்களெல்லாம் அருவருக்கத்தக்க ஜாதி. அவர்களைப் பார்க்க விருப்பமில்லாமலேயே இங்குள்ள குள்ளர்களையெல்லாம் ஒவ்வொருவராக இளவரசியிடம் சொல்லி விற்கச் சொல்லி விட்டேன். இப்பொழுது ஆஸ்தானத்தில் நான் ஒருவன்தான். இரவு வேளைகளில் குள்ளர்களின் காலியான அறையில் நான் தனியாக உட்கார்ந்து சுகமாக சிந்தனையில் ஈடுபட்டிருக்கிறேன். ஜகோஷெபாட்டும் தொலைந்துவிட்டான். நசுங்கிப் போன அவன் கிழவி முகமும், கீச்சுக் குரலும் தொலைந்து விட்டன. தனிமை எனக்கு இன்பம் ஊட்டுகிறது. இந்த மாதிரி என் சொந்த இனத்தையே நான் வெறுப்பது விதியின் விளையாட்டுத்தான். எனக்கே என்னைக் கண்டால் பிடிக்கவில்லை.

# 6

இந்த சம்பவத்திற்குப் பிறகு இளவரசி என்னோடு பழகிய விதமே சற்று வினோதமாக இருந்தது. விடுதலையான அன்று என்னை கூப்பிட்டனுப்பினாள். படுக்கை அறைக்குப் போனதும் மௌனமாக என்னைத் துளைத்து விடுகிறார்போல ஊடுருவிப் பார்த்தாள். வசவு அதிகமாகக் கிடைக்கும், தண்டனை அதிகமாகும் என்று நான் பயந்தேன். ஆனால் என்னுடைய அப்பச் சடங்கு பிரமாதமாக இருந்தது என்றும், பயங்கரமான இருண்ட அதன் போக்கு அவள் இதயத்தில் எதையோ தட்டி எழுப்பிவிட்டதென்றும் சொன்னாள் அவள். "என் இதயத்தின் ஆழங்களையெல்லாம் நீ எப்படி தொட்டுப் பேசினாய்?" என்று கேட்டாள்.

எனக்குப் புரியவில்லை. படுக்கையில் படுத்தவாறே என்னைக் கடந்து நோக்கிக் கொண்டிருந்த அவளைக் கிண்டல் செய்யவேண்டுமெனத் தோன்றிற்று. சிலுவையில் அறையப்பட்டுத் தொங்கினால், சித்திரவதைக்கு ஆளாகி செத்தால் எப்படி இருக்கும் என்று கேட்டாள் அவள். "கிறிஸ்து என்னை வெறுக்கத்தான் வேண்டும். எனக்காக அவர் துன்பப்படும் பொழுது அவர் மனதில் வெறுப்புதான் நிறைந்திருக்க வேண்டும்" என்று மேலும் சொன்னாள் அவள்.

நான் பதில் சொல்லவில்லை. அவளும் பிறகு பேசவில்லை. கனவு காணும் கண்களோடு சூன்யத்தை வெறித்துப் பார்த்துப் படுத்திருந்தாள். பின்பு தன் அழகிய கையால் என்னைப் போகச் சொல்லி, தான் எழுந்திருக்கப் போவதால் சிவப்பு கவுனைக் கொண்டு வருமாறு வேலைக்காரியிடம் சொன்னாள். அவளை அந்த சமயத்தில் ஆட்டி வைத்தது எது என்று இப்பொழுதும் எனக்குத் தெரியவில்லை.

சில சமயம் மக்கள் என்னை கண்டு பயப்படுகிறார்கள். உண்மையில் தங்களைக் கண்டே தான் அவர்கள் நடுங்குகிறார்கள். அவர்கள் நினைப்பது போல நான் பயமுறுத்தவில்லை. அவர்களுக்குள்ளேயே இருக்கிற குள்ளன், குரங்கு மூஞ்சி படைத்த மனிதனைப் போன்ற ஜீவன்தான், அவர்களுடைய ஆத்மாவின் ஆழத்திலிருந்து எட்டிப் பார்த்து பயமுறுத்துகிறது. இப்படி இரண்டாவது ஜீவன் ஒன்று தங்களுக்குள் இருப்பது தெரியாததால் அவர்கள் அஞ்சுகிறார்கள். உள்ளேயிருந்து எது மேல்பரப்பிற்கு வந்தாலும் அவர்களுக்கு பயம். ஆத்மாவின் சாக்கடையிலிருந்து எதுவும் வெளிவருவதை அவர்கள் விரும்பவில்லை. அவர்களுடைய உண்மையான வாழ்க்கையின் பகுதி என்று அவர்கள் ஒப்புக்கொள்ள விரும்பவில்லை. மேல்பரப்பில் ஒன்றும் தெரியாதவரையில் அவர்களுக்குப் பயமே கிடையாது. நிமிர்ந்து அலட்சியமாக சூன்யமான, வழவழவென்ற முகங்களுடன் நடமாடுவார்கள். ஆனால் உள்ளுக்குள்ளே ஒன்று இருப்பதையே அவர்கள் அறியாமல் புறக்கணித்து விடுவார்கள். அவர்கள் வாழ்வது பலதரப்பட்ட வாழ்க்கை. மர்மமும், முரணும் நிறைந்த வாழ்க்கை.

அவர்களும் குரூபிகள் தான். வெளியில் தெரியவில்லை. நான் தான் குள்ள வாழ்க்கை வாழ்கிறேன். எப்பொழுதும் நான் நான்தான். நான் வாழ்வது ஒரே வாழ்வுதான். எனக்குள் வேறு ஜீவன் கிடையாது. உள்ளே இருக்கும் எல்லாவற்றையும் நான் ஒப்புக் கொள்கிறேன். என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஒன்றுமே எட்டிப்பார்ப்பது இல்லை. மர்மங்கள் ஒன்றும் கிடையாது. மற்றவர்களைப் பயமுறுத்துகிற முரணான, அறியாத, மர்மமான விஷயங்களைக் கண்டு நான் அஞ்சவில்லை. அப்படி ஏதாவது எனக்கு இருந்தால் தானே!

பயம் என்பது என்ன? இரவு வேளைகளில் நான் தனியே என் அறையில் படுத்திருக்கும்போது மரண வெளுப்பும், நீலம் பாய்ந்த கழுத்தும், பிளந்த வாயுமாக என் படுக்கைக்கு அருகில் ஜெகோஷபாட்டின் ஆவி நெருங்கி வருகிறதே, அச்சமயம் என்னுள் ஏற்படும் உணர்ச்சிதான் பயம்.

எனக்கு பச்சாதாபமோ, வேதனையோ, கலவரமோ கிடையாது, அவனைப் பார்க்கும்பொழுது அவன் செத்து விட்டான். அதிலிருந்து நான் தன்னந்தனியாக இருக்கிறேன் என்ற எண்ணம் மட்டும்தான் எனக்கு எழுகிறது.

தனியாக இருக்கத்தான் எனக்கு ஆசை. வேறு ஒருவரும் இருக்கக்கூடாது. இது அவனுடைய ஆவி. அவன் மென்னியைத் திருகி அவனைக் கொன்று போட்டதிலிருந்து நான் தனியாகத்தான் இருக்கிறேன்.

இதில் பயப்பட என்ன இருக்கிறது?

## 7

ஆஸ்தானத்திற்கு உயரமாக ஒரு மனிதர் வந்திருக்கிறார். மிகமிக மரியாதையாக பக்தியாகக்கூட, இளவரசர் அவருக்கு உபசாரம் செய்கிறார். அழைக்கப்பட்டு வந்தாராம் அவர். இளவரசர் அவர் வருகைக்காக வெகு நாளாகக் காத்திருந்தாராம். கடைசியாக இந்த பாக்கியம் கிடைத்ததில் அவருக்குப் பெரிய ஆனந்தம். தனக்கு சமமானவர் என்றே அவருடன் பழகுகிறார்.

யாருக்கும் இது நகைப்புக்கிடமாகப் படவில்லை. வந்தவர் உண்மையிலேயே பெரியவர் என்றும், இளவரசருக்கு சமமானவர் என்றும் சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் அவர் ஆடை மிகமிக எளியது. அவர் யார்? ஏன் இவ்வளவு கவனிக்கத்தக்கவராக இருக்கிறார் என்று அறிய நான் முயலவில்லை. நாளடைவில் முயலத்தான் போகிறேன். அவர் நீண்டகாலம் இங்கு தங்கப் போகிறாராம்.

அவரிடம் ஏதோ கவர்ச்சிகரமான ஒன்று இருக்கிறது. கம்பீரமான தோற்றம். உயர்ந்த நெற்றி. சிந்தனையில் ஆழ்ந்த முகம். சற்றே நரைத்த தாடி, அழகையும் பெருந்தன்மையையும் அளிக்கிறது. எல்லோரிடத்திலும்

இல்லாத, எல்லாம் ஒத்த ஏதோ ஒன்று அவரிடம் இருக்கிறது. அமைதியும் கம்பீரமும் அவரிடம் நிறைந்து காணப்படுகிறது.

என்ன விகாரம் அவரிடம் இருக்கிறது? எனக்கே தெரியவில்லையே.

அவர் இளவரசரோடுதான் சாப்பிடுகிறார். பல விஷயங்களைப் பற்றி இருவரும் பேசுகிறார்கள். அவர் மிகவும் படிப்பாளி என்று தெரிகிறது. அவருக்கு தெரியாததோ சிரத்தையில்லாததோ ஒன்றுமில்லை என்று தோன்றுகிறது. எல்லாவற்றையும் விளக்க முயல்கிறார் அவர். மற்றவர்களைப்போல தன் விளக்கங்களே சரி என்று அவர் சொல்வதில்லை. நீண்ட நேரம் ஏதாவது ஒரு பிரச்னையைப் பற்றி அலசிப் பேசிவிட்டு மௌனமாக சிந்தனையில் ஆழ்ந்த வண்ணம் சற்று இருந்துவிட்டு ஒருக்கால் இப்படி இல்லையோ என்னவோ என்று சொல்லுவார். இதிலிருந்து என்ன புரிந்து கொள்வது என்று தெரியவில்லை. இதுவும் ஒருவகை அறிவாக இருக்கலாம். அல்லது அவருக்கு நிச்சயமாக ஒன்றுமே தெரியாமலும் இருக்கலாம். அப்படி இருந்தால் அத்தனை நேரம் அவர் பேசினதும் அர்த்தமற்றதாக இருந்திருக்க வேண்டும். மனித சிந்தனையோடு எனக்குள்ள அனுபவத்தில் பார்க்கும்பொழுது இதுதான் உண்மையாக இருக்குமோ என்று தோன்றுகிறது. இதனாலேயே சிலருக்கு அடக்கம் ஏற்படுகிறது. இதைப் பலர் புரிந்து கொள்வது இல்லை. இவர் புரிந்து கொண்டிருக்கலாம்.

ஆனால் இளவரசர் இதையெல்லாம் கவனிப்பதில்லை. அறிவும் போதமும் குமிழிடும் தெளிந்த ஊற்றின்முன் அமர்ந்திருப்பது போல அவர் சொல்வதைக் கவனித்துக் கேட்கிறார். அடக்கமுள்ள ஒரு மாணவன் ஆசிரியரிடம் நடந்துகொள்வது போல நடந்து கொள்கிறார். ஆனால் இயற்கையான இளவரச கம்பீரம் அவரை விட்டு நழுவுவதில்லை. 'மகாகுரு' என்று அவரை சில சமயம் அழைக்கிறார் இளவரசர். இந்த விநயத்திற்கெல்லாம் என்ன காரணம் என்று அப்பொழுது நான் சிந்திப்பேன். காரணமில்லாமல் என் எஜமானர் எதுவும் செய்வதில்லை. பொதுவாக அந்த மனிதர் இந்த அடக்கமான விளிப்பைக் காதில் போட்டுக் கொள்ள மாட்டார். அவர் எல்லாம் தெரியுமென்று சொல்லிக் கொள்வதில்லை. ஆனால் சிலசமயம் மிகமிகத் தீர்மானமாகப் பேசுவார். தெளிவாக, நம்பிக்கையின் உறுதியோடு அபிப்ராயங்களைச் சொல்லுவார். கூர்ந்த ஊடுருவும் புத்தி சக்தியுடன் காரணங்களை விளக்குவார். எப்பொழுதுமே அவர் தயங்குவதில்லை.

அவர் குரல் மிகவும் அமைதியும், அசாதாரணமான தெளிவும் கொண்டது. அவருக்கு என்பால் நட்பும் சிரத்தையும் உண்டென்று தெரிகிறது. ஏனென்று தெரியவில்லை. சிலசமயம் அவரைப் பார்க்கும் பொழுது இளவரசரின் நினைவு எனக்கு வருவதும் ஏன் என்று தெரியவில்லை.

நம்பிக்கைத் துரோகம் செய்யமாட்டார் அவர்.

இந்தப் புதிய மனிதர் சாந்தா குரோசியில் உள்ள பிரான்ஸிஸ்கன் மடத்தில் போஜன மண்டபச் சுவர் மீது சித்திரங்கள் எழுதத் தயார் செய்து கொண்டிருக்கிறார். இவ்வளவு தானா! புனித ஓவியங்களையும் அதைப்

போன்ற மற்ற பொருட்களையும் தயார் செய்கிறவர் தானா இவரும்! இங்குள்ள எல்லாரையும் போலத்தானா! அவரிடம் உள்ள அதிசயம் இதுதானா!

ஆனால் மற்ற எளிய கலைத் தொழிலாளர்களைப் போல இவரும் ஒருவர் என்று சொல்ல முடியாது. அவர்களை விட இவர் உயர்ந்தவர் என்றும் சொல்ல முடியாது. அவர்களைவிட இவர் விஷயம் தெரிந்தவர் என்று ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இல்லாவிட்டால் மற்றவர்கள் சொல்வதையும் விட்டு விட்டு இவர் சொன்னதை கேட்டுக் கொண்டிருப்பாரா இளவரசர்? ஆனால் இராப்பகலாக ஏதோ சன்னதம் வந்தவரிடம் கேட்பது போல் கேட்பதும், சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடுவதும் தான் எனக்குப் புரியவில்லை. என்னதான் இருந்தாலும் இந்த மனிதன் கலையைத் தொழிலாகக் கொண்டவர், அவ்வளவு தானே.

அவர் கைத்திறனைப் பற்றியும் எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் தன் கற்பனையே தனக்கு எட்டா காரியங்களில் தன்னை ஈடுபடுத்தி விடுவதாக அவர் ஒப்புக்கொள்கிறார். இவ்வளவு திறமையும் மேதையும் இருந்தும் இடம் தெரியாமல் மாறி மாறி நின்று பகற்கனவு காண்பவர் என்றே தோன்றுகிறது. அவர் சிருஷ்டிப்பதாக பாவனை செய்யும் உலகம் வெறும் கானல் நீராக இருக்குமோ என்னவோ?

ஆனால் வேடிக்கை என்னவென்றால் அவரைப் பற்றித் தீர்மானமாக ஒரு அபிப்ராயமும் நான் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. பொதுவாக, நான் பார்க்கும் எவரையும் பற்றி எனக்குத் தெளிவான அபிப்ராயங்கள் உண்டு. அவருடைய வெளித் தோற்றத்தைப் போல, பண்பும் சாதாரண மனிதர்களைவிட உயர்ந்தே இருக்கவேண்டும். ஆனால் அவருடைய மேன்மையின் இரகசியம் என்னவென்று தெரியவில்லை. அவர் உண்மையிலேயே உயர்ந்தவர்தானா என்றுகூடத் தெரியவில்லை. நான் பார்த்த பலரைப் போலதான் அவரும் இருக்க வேண்டும்.

எது எப்படியிருந்தாலும், இளவரசர் அவரைப் பற்றி மிகையான எண்ணம் கொண்டிருக்கிறார் என்று நிச்சயமாகத் தோன்றுகிறது.

அவர் பெயர் பர்னார்டோ. மிக மிக சாதாரணமான பெயர்தான்.

## 8

இளவரசிக்கு இந்தப் புது மனிதரிடம் பிரமை இல்லை. அவரும் வயசானவர்தானே. அவரும் இளவரசரும் பேசிக் கொள்வதும் எனக்குப் புரியவில்லை. வெகுநேரம் அவர்கள் சர்ச்சை செய்யும்போது அவள் சிறிதும் கலந்து கொள்ளாமல் மௌனமாக உட்கார்ந்திருப்பாள். இந்த அதிசய மனிதர் சொல்வது அவள் காதில் விழுகிறதா என்பதே சந்தேகம்.

ஆனால் அவருக்கு இளவரசியிடம் அக்கறை அதிகம் என்றுதான் தோன்றுகிறது. மற்றவர்கள் பாராமல் இருக்கும்போது இரகசியமாக அவளை

உற்று கவனித்துக் கொண்டிருக்கிறார். நான் கவனித்திருக்கிறேன். மிகவும் ஆழ்ந்த, சிந்தனை படர்ந்த முகத்துடன் அவள் முகத்தை ஆராய்ந்து கொண்டே இருக்கிறார், எதையோ அங்கு தேடுவதுபோல. அவரைக் கவரும்படியாக அவளிடம் என்ன இருக்கிறதோ?

அவள் முகம் அவ்வளவு சுவாரஸ்யமான முகம் இல்லை. விபசாரி என்று எளிதில் சொல்லலாம். ஆனால் வஞ்சகமான, மிருதுவான புறத்தோற்றம் அதை மறைக்கிறது. அதனாலேயே உண்மையைத் தெரிந்து கொள்ள வெகுநேரமாகிறது. அதன்பின்பு அந்தக் காமக்களை கூத்தாடும் முகத்தில் ஆராய்ந்து தேட என்ன இருக்கிறதோ? என்னதான் கவர்ச்சியிருக்க முடியும் அதில்!

ஆனால் இவர்தான் எதைப் பார்த்தாலும் மயங்குகிறாரே. கீழே கிடந்த ஒரு கல்லை எடுத்து திருப்பித் திருப்பிப் பார்த்து ஆராய்ந்து ஏதோ ரத்தினத்தைப் போல பையில் போட்டுக் கொள்வார். அவரைக் கவராதது ஒன்றும் கிடையாது. ஒருவேளை பைத்தியமோ என்னவோ?

பொறாமைப்பட வேண்டிய பைத்தியம்தான். ஒரு கூழாங்கல்லை இவ்வளவு பெரியதாக மதிக்கிறவருக்கு போன இடங்களெல்லாம் புதையலாகத்தான் தோன்றும்.

அவருக்கு விஷயங்கள் தெரிந்து கொள்ளும் ஆசை எவ்வளவு என்று நம்மால் கற்பனை செய்யவே முடியாது. பார்க்கிற ஒவ்வொன்றின் காரணங்களை அறிய அவர் போகாத இடம் இல்லை. வேலைக்காரர்களை, வேலை செய்யும் விதம், கருவிகள் இவற்றைப் பற்றிக் கேட்டு அப்படி இல்லை, இப்படி இல்லை என்று சொல்லி திருத்துவார். ஊருக்கு வெளியே சுற்றிவிட்டு திரும்பும்போது கொத்துக் கொத்தாக பூ கொண்டு வருவார். பின்பு உட்கார்ந்து அக்கக்காக கிழித்து உட்புறங்களை ஆராய்வார், ஏதோ அசாதாரண வஸ்துவை ஆராய்வதுபோல. பட்சிகள் பறப்பதை மணிக் கணக்காகப் பார்த்துக் கொண்டிருப்பார். அரண்மனை வாசலுக்கு வெளியே தண்டிக்கப்பட்ட கொலையாளிகள், கள்வர்களின் தலைகள் சூலத்தில் செருகி இருக்கும். அவற்றை ஏதோ புதிர் போலப் பார்ப்பார். சித்திரம் கூட வரைந்து கொள்வார். சில நாட்களுக்கு முன் ஊருக்கு வெளியே பிரான்சிஸ்கோ தூக்கிலிடப்பட்ட பொழுது நன்றாகப் பார்ப்பதற்காக கூட்டத்தின் முன்னால் குழந்தைகளிடையே நின்று கொண்டார். இரவில் எழுந்து நின்று நட்சத்திரங்களை வெறித்துப் பார்ப்பார். இந்த மாதிரி ஒருவருக்கு எதைக் கண்டாலும் அக்கறை ஏற்படுமா என்ன?

இப்படி கண்டதில் தலையிடுவதைப் பற்றி நான் லட்சியம் செய்வது இல்லை. ஆனால் என்னை மட்டும் மறுபடியும் தொடட்டும். என் கத்தி அவரை ருசி பார்த்து விடும். இதைப்பற்றி எனக்குத் தீர்மானமாகவே இருக்கிறது. என்ன வந்தாலும் சரி.

இன்றிரவு நான் மதுவை ஊற்றும் பொழுது அவர் என் கையைப் பற்றி சற்றுப் பார்க்கிறேனே என்றார். கோபத்தில் நறுக்கென்று இழுத்துக்

கொண்டேன். ஆனால் இளவரசர் புன்னகை பூத்து காண்பிக்குமாறு உத்தர விட்டார். வேறு வழியில்லை. நன்றாக அதைப் பார்த்து வெட்கமில்லாமல் அதிகப் பிரசங்கித்தனமாக விரல் மூட்டுகள், சுருக்கங்கள் எல்லாவற்றையும் பார்த்து விட்டு, என் புஜத்தைப் பார்க்க சட்டைக் கையைக் கூட மேலே உயர்த்த ஆரம்பித்து விட்டார். கோபத்தில் சீறிக் கொண்டிருந்த நான் மறுபடியும் இழுத்துக்கொண்டேன். கனல் கக்கும் கண்களுடன் நான் நிற்பதைப் பார்த்து அவர்கள் இருவருக்கும் சிரிப்பாக இருந்தது.

மறுபடியும் என்னைத் தொடட்டும் ரத்தம் தான், எனக்கு யார் தொட்டாலும் பிடிக்காது. என் உடலுக்கு யாரும் தீமை இழைப்பதை என்னால் பொறுக்க முடியாது.

இந்த அதிசய மனிதர் மனித உடலின் உட்புறம் எப்படி இருக்கிறது என்பதை அறுத்துத் தெரிந்து கொள்ள பிரான்ஸிஸ்கோவின் உடலைத் தன்னிடம் கொடுக்குமாறு கேட்டாராம். அப்படி ஒரு வதந்தி. உண்மையாக இருக்க முடியாது. நம்ப முடியாத செய்தி. மக்களுக்கு எச்சரிக்கையாகவும், குற்றவாளிக்கு இழிவாகவும் தொங்க வேண்டிய உடலை யாரும் அவ்விடத்தை விட்டு நீக்க மாட்டார்கள். தண்டனையின் வாசகமே அதுதான். காக்கைகள் மற்ற சவங்களைக் கொத்துவது போல் இந்த சவத்தையும் கொத்தட்டுமே. இந்த பிரான்ஸிஸ்கோவோடு வாழும் துர்பாக்கியம் எனக்கு இருந்தது. இத்தனை கடும் தண்டனைக்கு அவன் உரியவன்தான். பல தடவை என்னைத் தெருவில் போகும் பொழுது கிண்டல் பண்ணியிருக்கிறான். அதனால் அவனை தூக்கு மரத்திலிருந்து நீக்கிவிட்டால், தண்டனையின் கடுமை சற்று குறைந்துவிடுமே!

இன்று சாயங்காலம் தான் கேள்விப்பட்டேன் நான். இப்பொழுது இரவு. சவம் இன்னும் அங்கு தொங்குகிறதா என்று பார்க்க முடியவில்லை.

வதந்தி உண்மையாக இராது. இதற்கெல்லாம் இளவரசர் சம்மதிக்கமாட்டார்.

உண்மை தான். இந்த ராஸ்கலை தூக்கு மரத்தில் காணோம். எங்கு அவன் சவம் இருக்கிறது என்பதையும் கண்டுபிடித்து விட்டேன். நம்முடைய அதிசய மகரிஷி, தன் பாழாய்ப் போன ஆராய்ச்சியைச் செய்யும்போது போய்ப் பார்த்து விட்டேன்.

அறையில் ஏதோ நடந்து கொண்டிருக்கிறது என்று தெரிந்தது. ஏனெனில் எப்பொழுதும் மூடியிருக்கிற ஒரு கதவு திறந்து கிடந்தது. நேற்று அப்படி இருந்தது. இன்றும் அதே மாதிரி இருக்கவே அந்த இருண்ட நீண்ட நடைவழியாக சென்றேன். மறுபடியும் ஒரு கதவு. அதுவும் திறந்திருந்தது. சந்தடி செய்யாமல் உள்ளே போனேன். தெற்குச் சுவரில் உள்ள ஒரு துவாரத்தின் வழியாக வெளிச்சம் வந்தது. அந்த வெளிச்சத்தில் பிரான்ஸிஸ்கோவின் அறுத்த உடலையும், அதன் மீது அதிசய மனிதர் குனிந்து, நிமிர்ந்து பார்ப்பதையும் கண்டேன். குடல்கள், ஹிருதயம். நுரையீரல் எல்லாம் திறந்து கிடந்தன. இந்த மாதிரி அருவருப்பை நான்

பார்த்ததே கிடையாது. அதுவும் மனித உடலின் உட்பக்கத்தைப் போல அருவருக்கத்தக்கதை நான் பார்க்க முடியாது. ஆனால் அவர் அசாத்திய சிரத்தையுடன் பார்த்துக் கொண்டிருந்தார். ஒரு மெல்லிய கத்தியால் இருதயத்தைச் சுற்றி நறுக்கிக் கொண்டிருந்தார். அவர் இருந்த மும்முரத்தில் நான் வந்தது கூடத் தெரியவில்லை. இந்தக் குமட்டல் எடுக்கும் வேலையைத் தவிர வேறு பிரச்னையே இல்லை அவருக்கு. கடைசியில் தலையை நிமிர்த்திய பொழுது கண்களில் திருப்தி ஒளிர்ந்தது. ஏதோ திருவிழா பார்ப்பது போல முகத்தில் ஒரு பெரிய மகிழ்ச்சி. என்னால் முடிந்த மட்டும் அவரைப் பார்த்தேன். பார்க்கவும் முடிந்தது. நான் நின்றிருந்த இடம் நல்ல இருட்டு. ஏதோ கடவுளைத் தனிமையில் கண்டு பேசும் மகான் போல அவர் அப்படியே மெய்மறந்து நின்று கொண்டிருந்தார். உண்மையிலேயே இந்தத் தோற்றத்தைப் பார்க்க சகிக்க முடியவில்லை.

## 9

இன்றிரவு நடுநிசிக்குப் பிறகு விடியும் வரையில் இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். மெய்மறந்து பேசினார்கள். இயற்கையின் வற்றாத பெருமையையும், வளத்தையும் பற்றிப் பேசினார்கள். இயற்கை ஒரு பெரிய அதிசயம். தொடர்ச்சி அறாத ஒரு மாயாஜாலம். பூமியின் தோலுக்குக் கீழ் ஊற்றுநீர் ஓடுவது போல உடல் முழுவதிலும் நாளங்கள் இரத்தத்தைக் கொண்டு செல்கின்றன. கடல் அலைகள் விம்மி மூச்சு விடுவது போல நுரையீரல் மூச்சு விடுகிறது. பூமியின் தசையான மண்ணை மலைகளை தாங்கி நிற்பது போல எலும்புக்கூடு உடலுக்கு ஆதாரமாக நிற்கிறது. பூமிக்குள் எரியும் தீ ஆத்மாவின் தீயைப் போல. இரண்டும் சூரியனிடத்திலிருந்து வந்தது தான். காலம் தோன்றிய நாள் முதல் சூரிய பகவானைத் தொழுது வருகிறார்கள். ஆத்மாக்களின் பிறப்பிடம் அது. உயிர்களின் பிறப்பிடம். பிரபஞ்சத்திலுள்ள கோளங்களை தன் ஒளியால் பிரகாசப்படுத்துகிறது. பிரபஞ்சத்தின் எண்ணற்ற கோளங்களில் நம்முடைய உலகமும் ஒன்று தான்... இப்படி பேச்சு நடந்து கொண்டிருந்தது.

இரண்டு பேரும் சன்னதம் வந்ததுபோல் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சொல்வதை மறுக்க முடியாமல் நான் கேட்டுக் கொண்டேயிருக்க வேண்டியிருந்தது. வரவர இந்த அதிசய மனிதர் ஒரு பயித்தியம் என்ற ஒரு எண்ணம் என்னுள் திடப்பட்டுக் கொண்டு வருகிறது. இளவரசரையும் அவர் பயித்தியமாக்கிக் கொண்டு வருகிறார். என் எஜமானர் இவ்வளவு பலஹீனமாக அவர் இழுத்த இழுப்புக்கெல்லாம் போவார் என்று நம்பவே முடியவில்லை.

இந்த அபத்தக் கற்பனைகளை யார் நம்புவார்கள்? எல்லாம் தொடர்ச்சி கொண்டது. தெய்வீகமான ஒருமைப்பாடு கொண்டது - என்பதை எல்லாம் யார் நம்புவார்கள்? அழகான அர்த்தமில்லாத வார்த்தை இது. இயற்கையின் மாயாஜாலமாம்! எனக்கு பிரான்ஸிஸ்கோவின் திறந்து போட்ட சடலம் ஞாபகம் வந்தது. கிட்டத்தட்ட வாந்தியே எடுத்து விடுவேன்போல் இருந்தது.

இயற்கையின் விந்தையான வளங்களைக் காண்பது எவ்வளவு பெரிய ஆனந்தம் என்று அவர்கள் வியந்தார்கள். இன்னும் எவ்வளவோ ஆராய்ச்சி செய்ய வேண்டும். இயற்கையின் இரகசியச் சக்திகளை அறிந்து உபயோகிக்கத் தெரிந்து கொண்டால் மனிதனின் சக்தியும் செல்வமும் எவ்வளவு பெருகும்! பூதங்கள் அவன் எண்ணத்திற்குப் பணியும். நெருப்பு அடிமை செய்யும். பூமி நூறு மடங்காகப் பலனளிக்கும். அப்படிச் செய்யும் வழிகளை மனிதன் கண்டுபிடித்து விடுவான். நதிகள் விலங்கிட்ட அடிமைகளாகப் பணிபுரியும். பிரபஞ்ச வெளியில் விந்தையாக விண்மீனைப் போல் மிதந்து செல்லும். இந்த வையத்தின் கடல்கள் கப்பல்களைச் சுமக்கும். காற்றுக் கூடப் பணிந்து விடும். ஏனெனில் ஒருநாள் புட்களைப் போல பறக்கக் கற்பான் மனிதன். மனித சிந்தனைக்கு அப்பாற்பட்ட இலட்சியங்களை நோக்கி இந்த விமானத்தில் விரைந்து செல்வான் இந்த மனிதன்.

ஆஹா! வாழ்க்கை அறபுதமானது. மனித வாழ்க்கையின் பெருமை அளப்பரியது.

அவர்களுடைய குதூகலத்திற்கு அளவே இல்லை. விளையாட்டுச் சாமான்களைப் பற்றிக் கனவு காணும் குழந்தைகளைப் போல பேசிக் கொண்டே இருந்தார்கள். ஏகப்பட்ட விளையாட்டுச் சாமான்களை வைத்துக் கொண்டு செய்வது அறியாமல் தவிக்கும் குழந்தைகளைப் போல தவித்தார்கள். என் முகச் சதை ஒன்று கூட கோணாமல் நான் அவர்களைப் பார்த்தேன். குள்ளர்கள் குழந்தைகள் அல்ல. விளையாட மாட்டார்கள். சளசளவென்று பேசிக் கொண்டே மதுக்கிண்ணத்தை அவர்கள் காலியாக்க ஆக்க நான் நிரப்பிக் கொண்டே இருந்தேன்.

வாழ்க்கையின் பெருமையைப் பற்றி இவர்கள் என்ன கண்டார்கள்! வாழ்க்கை பெரியது என்றுதான் இவர்களுக்கு எப்படித் தெரியும்? ஏதோ ஒரு சொற்றொடர்; அதைச் சொலவதில் அவர்களுக்கு ஓர் ஆனந்தம். உலகம் சிறியது அற்பமானது. முக்கியமற்றது. விரல் நகத்தால் புழுவைப் போல சொடுக்கிவிடலாம். அந்த மாதிரி சொடுக்கப்படுவதை அதுவே ஆட்சேபிக்காது. இந்த மாதிரி முடிவதைப் பற்றி அதற்குத் திருப்தியாகத்தான் இருக்கும்; இப்படி இருக்க வேண்டுமென்று அது கவலைப்படுவானேன்? எதையும் சட்டை செய்யாமல் இருக்கக் கூடாதா அது?

இயற்கையின் இதயத்தைப் பார்ப்பதாம்! அங்கு என்ன இன்பம் இருக்கிறதோ! அந்த மாதிரி அவர்கள் செய்து பார்த்தால் தெரியும். கிலி பிடித்து ஓடுவார்கள். எல்லாவற்றையும் போல அதுவும் தங்கள் நலத்திற்காக, சந்தோஷத்திற்காக, தங்கள் வாழ்க்கை பெருமையும், வியப்பும் கொண்டு விளங்குவதற்காக ஏற்பட்டது என்று நினைக்கிறார்கள். இவர்களுடைய ஆசைகளை எல்லாம் யார் சட்டை செய்கிறார்கள்?

இயற்கை என்ற புத்தகம் தன்முன் திறந்து கிடப்பதாகவும் அதை ஆதியோடந்தம் படிக்க முடியும் என்றும் அதன் எழுதாத வெறும் பக்கங்களையும் கண்டு படிக்க முடியும் என்றும் நினைக்கிறார்களே.

பிடிவாதம் பிடித்த பைத்தியக்காரர்கள்! இந்த எல்லாம் தெரிந்த பாவனைக்கு எல்லையே கிடையாதா?

இயற்கை தன் வயிற்றில் என்னென்ன சுமக்கிறது என்று யாருக்கு தெரியும், யார் ஊகிக்க முடியும்? தன் கருவில் தரித்திருப்பது என்னவென்று ஒரு தாய் அறிய முடியுமோ? பேசாமல் காத்திருக்க வேண்டியதுதான். கடைசியில் ஒரு நாள் அவள் பெற்றெடுத்ததையும் நாம் பார்க்கிறோம்.

இந்த அதிசய மனிதர் தன்னம்பிக்கை இல்லாதவர் என்றுதானே சொன்னேன்? தப்பு. அவரைப் போல அகம்பாவம் பிடித்த ஆளை நான் பார்த்ததே கிடையாது. மூச்சு, உடம்பு எங்கு பார்த்தாலும் அகம்பாவம். மகா அதிகப்பிரசங்கி. தனக்கு சொந்தமில்லாத எதன் மீதும் அவர் மனம் ஆட்சி செலுத்தத் தயங்காது.

எனக்கு இது தெரியாது, அது தெரியாது, இயன்ற வரையில் அறிய முயற்சி செய்கிறேன் என்று சொல்வதெல்லாம் வெளிக்குத்தான். ஆனால் உள்ளுக்குள் எல்லாம் தெரிந்ததாகத்தான் எண்ணம். காரணம் தெரியுமா? சின்ன விஷயங்களைப் பற்றித்தான் இந்த அடக்கமெல்லாம். பெரிய விஷயங்களெல்லாம் அவருக்குத் தெரியும். வேடிக்கையாக இல்லை.

மனிதனுக்கு நேர்கிற எல்லாவற்றிற்கும் அர்த்தம் உண்டு. ஆனால் வாழ்க்கைக்கு அர்த்தம் ஏது? அர்த்தமிருந்தால் அது இருக்கவே இருக்காது. இதுதான் என்னுடைய நம்பிக்கை.

## 10

**வெட்கம்!** அவமானம்! அன்று ஏற்பட்ட அவமானம் போல எதையுமே நான் பார்த்ததில்லை. நினைத்துப் பார்க்கவே இஷ்டமில்லை தான். இருந்தாலும் நடந்ததை சொல்லித் தொலைக்கிறேன்.

ஒருநாள் சாண்டா குரோஸி மடத்துப் போஜனசாலையில் வேலை செய்து கொண்டிருந்த பர்னார்டோவிடம் போகுமாறு எனக்கு உத்தரவிட்டார் இளவரசர். பர்னார்டோ என்னைக் கூப்பிட்டாராம். நான் போனேன். நான் என்ன இவருக்கு வேலையாளா? எரிச்சலாகத்தான் இருந்தது. என்ன செய்கிறது. போனேன்; மிகவும் சுமுகமாகவே வரவேற்றார். குள்ளர்களிடம் தனக்கு மிகவும் அக்கறை உண்டு என்று சொன்னார். பிரான்ஸிஸ்கோவின் குடல் முதல் விண்மீன்கள் முதல் தெரிந்து கொள்ள ஆசைப்படும் இவருக்கு எதில்தான் அக்கறை இல்லை? ஆனால் என்னைப் பற்றி ஒன்றும் இவர் தெரிந்து கொள்ள முடியாது. உபசாரமாக “என்னென்னவோ பேசிவிட்டேன். உன் படம் ஒன்று வரைய வேண்டுமே” என்றார் அவர். முதலில் என்னைப்போல் எழுத வேண்டுமென்று ஆசைப்படுகிறார் என்று நினைத்தேன். இளவரசர் சொன்னாரோ என்னவோ? எனக்கும் சற்று உச்சி குளிர்ந்தது. இருந்தாலும் வேண்டாம் என்று சொல்லி வைத்தேன். அவர் காரணம் கேட்டதற்கு என் முகத்தை நானே வைத்துக் கொள்ள

ஆசைப்படுகிறேன் என்றேன். வேடிக்கையாக இருக்கிறதே என்று புன்முறுவல் பூத்து நான் சொல்வதிலும் ஏதோ இருப்பதாக ஒப்புக் கொண்டார். ஆனால் படம் வரையாமல் இருந்தால் கூட ஒவ்வொருவர் முகமும் எல்லோர் சொத்தாகவும் ஆகி விடுகிறது. அதைப் பார்ப்பவர்கள் எல்லோருக்குமே அது சொந்தம். ஆனால் இப்பொழுதோ என் ஆகிருதியை எடுத்துக் காட்டும் படியான சித்திரம் வரையப் போகிறாராம் இவர். அவர் வரைவதற்காக என் உடைகளையும் நான் கழற்ற வேண்டும். கோபத்தாலோ, அல்லது பயத்தாலோ என் உடல் சிவந்து நடுங்கிற்று. எது மிஞ்சிற்று என்று தெரியவில்லை.

என் படபடப்பைப் பார்த்து "குள்ளனாக இருப்பதிலோ அதைக் காண்பிப்பதிலோ இழிவு ஒன்றுமில்லை" என்றார் அவர். இயற்கையிடம் அவருக்கு எப்பொழுதுமே மரியாதை உண்டாம். அசாதாரணமாக ஏதாவது ஒன்றை இயற்கை சில சமயம் படைத்தால் கூட அதன் முன்பும் மரியாதையுடன் பணிவாராம் அவர். "எந்த ஒருவனுக்கும் தான்கூட சொந்தமில்லை. அப்படியிருக்கும் பொழுது இன்னொருவனிடம் தன்னைக் காண்பித்துக் கொள்வதில் இழிவாக என்ன இருக்கிறது?" என்றார் அவர்.

"எனக்கு நான் சொந்தம். உமக்கு நீர் சொந்தமில்லாமல் இருக்கலாம். ஆனால் எனக்கு என்மீது உடமை உண்டு" என்று கோபம் தாங்காமல் கூச்சல் போட்டேன்.

மிகவும் அமைதியாக என் கூச்சலைக்கேட்டுக் கொண்டே நின்றார் அவர். அதற்குக் காரணம் தெரிந்து கொள்வது போலப் பார்க்கவும் பார்த்தார். என் கலவரம் இன்னும் அதிகமாயிற்று. பின்பு நான் ஆரம்பித்தாக வேண்டும் என்று என் அருகில் வந்தார். "என் உடம்பை யாரும் தொடக்கூடாது" என்று தொண்டை கிழியக் கத்தினேன். ஆனால் அவர் லட்சியம் பண்ணவே இல்லை. நான் உடைகளைத் தானாகவே கழற்ற மாட்டேன் என்று தெரிந்ததும் தானே கழற்ற ஆரம்பித்தார். நான் திமிறிக் கொண்டு உறையிலிருந்து கத்தியை எடுத்தேன். சிறிது வியந்தார்போல என்னைப் பார்த்து விட்டு அதை என் கையிலிருந்து பிடுங்கி, "நீ ரொம்ப ஆபத்தான ஆளாக இருப்பாய் போலிருக்கிறதே" என்று தூரத்தில் வைத்தார். பிறகு நிதானமாக என் உடைகளை கழற்றி என் உடலைத் திறந்து போட்டார். வெட்கம் கெட்டவன். மூர்க்கமாக எதிர்த்தேன். உயிருக்கு போராடுவது போல் போராடினேன். பயனில்லை. அவன் என்னை விட பலசாலி. உடுப்பைக் கழற்றி அறைக்கு மத்தியிலிருந்த ஓர் பரண் மீது வைத்தான்.

தற்காப்பின்றி வெறும் உடலுடன் செயலற்று சீறிக் கொண்டே நின்றேன். சற்று எட்ட நின்று அசையாமல், என்னை உற்றுப் பார்த்தான் அவன். என் வெட்கத்தை உணர்ச்சியற்ற, இரக்கமற்ற கண்களுடன் பார்த்தான். இந்த மாதிரி இன்னொருவர் பார்க்க நிற்பது பெரிய அவமானம். இப்பொழுது நினைத்தாலும் வெட்கம் என்னைக் குன்றச் செய்கிறது. இப்பொழுது கூட காகிதத்தின் மீது அந்த வெள்ளி முனை கொண்ட எழுதுகோல் நகரும் ஓசை கேட்கிறது. இதே எழுதுகோலால்தான் அரண்மனை வாசலுக்கு வெளியே சூலத்தில் பூட்டிய தலைகளை வரைந்தானோ என்னவோ? வைத்த கண்

எடுக்காமல் என்னைப் பார்த்துக் கொண்டே நின்றான். கத்திமுனை போன்ற அந்த பார்வை என்னை ஊடுருவித் துளைத்தது.

வேறு எந்தக் கணத்திலும் மனித வர்க்கத்தை நான் அவ்வளவு வெறுத்ததே இல்லை. வெறுப்பு முண்டி மூர்ச்சை போட்டு விடும் போல் இருந்தது. கண்முன் எல்லாம் இருண்டது. இத்தகைய மனிதர்களை விட இழிவானது ஒன்று இருக்க முடியுமா?

எதிரே இருந்த சுவரில் அவனுடைய மகத்தான வேலைப்பாடு என்று சொல்லப்படும் ஓவியம் தெரிந்தது. அப்பொழுது அது முற்றுப் பெறவில்லை. கிறிஸ்துவும் சீடர்களும் சாப்பிட்ட கடைசி உணவின் சித்திரம். சீடர்கள் எல்லோரையும் விட தாங்கள் பெரியவர்கள் என்ற தோரணையில், தலையைச் சுற்றி ஒளி வட்டம் பொலியும் ஆசிரியனைப் பார்த்துக் கொண்டே கம்பீரமாக உட்கார்ந்திருந்தார்கள். இன்னும் சிறிது நேரத்தில் ஓரத்தில் முடங்கி உட்கார்ந்திருந்த ஜுடாஸ் அவனைக் காட்டிக் கொடுத்து விடுவான் என்று நினைக்கும்பொழுது எனக்கு சந்தோஷமாக இருந்தது. இங்கு வெட்கத்தில் நான் குன்றி நிற்கும் பொழுது அவருக்கு பூஜை, கௌரவம் எல்லாம் நடக்கிறது. ஆனால் அவருக்கு அவமானம் வர எத்தனை நேரமாகும். இன்னும் சற்றுப் போனால் இவர்கள் எல்லோரையும் விட்டு விட்டு, காட்டிக்கொடுக்கப்பட்டு, தனியாக சிலுவையில் தொங்கப் போகிறார். இப்படியே, என்னைப் போலவே, ஆடையின்றி எல்லோரும் சிரிக்க அவமானப்படப் போகிறார். என் மாதிரி அவரும் தான் படட்டுமே. அன்பு, அன்பு என்று அன்பே சூழ்ந்து அன்பையே உண்டு வளர்ந்து விட்டார் அவர். நான் வெறுப்பை உண்டு வளர்ந்தவன். பிறந்தது முதல் அப்படியே வளர்ந்து விட்டேன். இனிய தாய்ப்பால் உண்டு வளரவில்லை.

எனக்கிருந்த கோபத்தில் வெளியே போகும் பொழுது கதவைப் படாரென்று சாத்தினேன். பர்னார்டோ தன் அரிய ஓவியத்தின் முன் சிந்தனையில் ஆழ்ந்து நின்றிருந்தான். என்னை மறந்தே போய் விட்டான்.

சாண்டா குரோஸியில் நடந்ததை நினைத்துப் பார்க்க எனக்கு இஷ்டமில்லை. ஆனால் மறக்க விரும்பினாலும் மறக்க முடியவில்லை. ஆடைகளை மீண்டும் அணியும் பொழுது கீழே இறைந்து கிடந்த சில படங்களை நான் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அபூர்வமான பிராணிகளின் படங்கள். நான் பார்க்காத, இருக்கவே முடியாத பல பிராணிகளின் படங்கள். மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும் இடைப்பட்ட பிராணிகள். வௌவால் இறக்கை கொண்ட பெண்கள். உடும்பு முகமும், தவளை உடலும், காலும் கொண்ட ஆண்கள், பருந்து முகமும் பரப்பிய நகங்களுமான சில பிராணிகள் அங்குமிங்கும் பறந்து கொண்டிருந்தன. ஆணுமற்ற, பெண்ணுமற்ற பிராணிகள் ஒரு புறம். கடல் பூதங்களைப் போன்ற இந்த இராட்சஸப் பிராணிகள் இன்னும் என் கண்ணைவிட்டு அகலவில்லை. மகானுபாவன் இதை எல்லாம் எப்படித்தான் கற்பனை செய்தானோ? இந்தப் பேய்களை எதற்காகப் படைத்தான்? இல்லாத இந்தப் பிராணிகளைப்

படைக்க ஏதோ ஒரு நோக்கம் இருக்கத்தான் வேண்டும். இந்த இராட்சஸப் பூதங்கள் அவனுக்குத் தேவையோ என்னவோ? எனக்குப் புரியவில்லை.

இத்தகைய ஜீவன்களைப் படைக்கிறவன், இந்தப் பயங்கரக் கோரங்களில் திளைப்பவன் எப்படி இருக்க வேண்டும்?

கர்வம் நிறைந்த அவன் முகம் சூக்ஷமமும், பெருமிதமும் நிறைந்திருக்கிறது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அவனா இந்த குரூபங்களை சிருஷ்டித்தான்! சிந்தனைக்கு நல்ல உணவு. அவன் படைத்த இந்த கோரங்கள் அவனுள்ளேயும் இருக்க வேண்டும்.

என் படத்தை எழுதும்போது அவன் தோற்றமே மாறிவிட்டது. ஆளே வேறு ஆள் மாதிரி இருந்தது. கூரிய பயங்கரக் கண்கள். உணர்ச்சியற்ற இயற்கைக்கு மாறான தோற்றம். ஏதோ கொடுமையான ஒன்றாக மாறிவிட்டது. பேயைப்போல் காட்சியளித்தான் அவன்.

தான் எப்படி பிறர் கண்ணுக்குத் தோன்ற வேண்டுமென்று அவன் நினைக்கிறானோ அப்படி இல்லை அவன்.

இப்பேர்ப்பட்ட ஆளா அந்த அழகிய தூய்மையான கிருஸ்துவின் ஓவியத்தை சிருஷ்டித்தான்! நம்பவே முடியவில்லை.

## 11

இன்று மாலை ஏஞ்சலிகா, ஹாலின் வழியாகப் போனாள். இளவரசர் அவளை அழைத்து சற்று உட்காரும்படி சொன்னார். அவளுக்கு இஷ்டமில்லை. ஆனால் அதைக் காண்பித்துக் கொள்ளவும் துணிவில்லை. ஆஸ்தானக் கூட்டம் அவளுக்குப் பிடிப்பதுமில்லை. அவள் ஆஸ்தான வாழ்க்கைக்கோ இளவரசி என்று காண்பித்துக் கொள்ளவோ ஏற்றவளல்ல. ஆனால் அவள் இளவரசர் பெண்தானா என்பதே யாருக்கு நிச்சயமாகத் தெரியும்? கீழ்ப்பட்ட எவனுக்காவது பிறந்திருக்கலாம். பர்னார்டோவுக்கு இதெல்லாம் தெரியாது. கீழே பார்த்துக் கொண்டு, உதடுகள் அசட்டுத்தனமாக பிரிய அவள் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துக் கொண்டே இருந்தான், ஏதோ அதிசயப் பொருளைப் போல. அவருக்குத்தான் அதிசயம் இல்லாத பொருளே கிடையாதே. என்னைப் போன்ற இயற்கையின் சேஷ்டை முதல் கீழே கிடக்கிற கூழாங்கல் வரையில் எல்லாம் அதிசயம். அவளும் பேசாமல் முள்மேல் உட்கார்ந்திருப்பது போல் உட்கார்ந்திருந்தாள். சம்பாஷணை திடீரென்று நின்றது என்னவோ போல் இருந்தது.

அவனைப் பாதித்தது என்னவென்று தெரியவில்லை. ஒரு சமயம், அவள் அழகாக இல்லையே என்று வருத்தப்பட்டானோ என்னவோ. அவன் ரஸிகன். அழகு எவ்வளவு முக்கியம் என்று தெரிந்தவன். அதனால்தான் அவன் பார்வையில் இத்தனை தன்மையும், குழைவும் படர்ந்து உருகுகிறதோ என்னவோ, எனக்குத் தெரியவில்லை. அதைப் பற்றி நான் கவலைப் படவுமில்லை.

பெண்ணுக்கு சீக்கிரம் எழுந்து போக வேண்டும் போல் இருந்தது. தேவைக்கு மேல் எந்த இடத்திலும் அவளுக்கு இருப்புக் கொள்ளாது. நான் போகலாமா என்று இளவரசரைப் பார்த்துக் கேட்டாள். அவர் அனுமதித்தவுடன் சங்கோசத்துடன் பரபரவென்று எழுந்தாள். அவள் நடப்பது, போவது எல்லாம் இன்னும் குழந்தை மாதிரிதான் இருக்கும். இவ்வளவு நயமில்லாமல் அவள் இருப்பதும் ஒரு வேடிக்கைதான்.

வழக்கம் போல சாதாரணமாக எளிய உடை அணிந்திருந்தாள் அவள். தன் உடையைப் பற்றி அவள் கவலைப்படுவதில்லை. யார்தான் கவலைப் படுகிறார்கள்?

மகாமேதை பர்னார்டோவுக்கு தன் வேலையில் மன அமைதி ஏற்படவில்லை. எல்லாம் அரைகுறையாக விட்டு விடுகிறார். கிறிஸ்துவின் கடைசிச் சாப்பாட்டை அவர் எப்படியாவது முடித்துத் தானே ஆக வேண்டும்? ஆனால் முடிப்பது என்பது அவரால் ஆகாது. அலுத்துப் போய் விடுமோ என்னவோ. இப்பொழுது இளவரசியின் சித்திரம் ஒன்றை ஆரம்பித்திருக்கிறார்.

அவளுக்கு இதில் விருப்பமில்லை என்று நினைக்கிறேன். ஆனால் இளவரசரின் விருப்பம் அது. அவளை நன்றாக நான் புரிந்து கொள்ள முடியும். நாம் கண்ணாடி முன் நிற்கிறோம். ஆனால் அதை விட்டு வரும் பொழுது நம்முடைய நிழல் அங்கேயே இருக்க வேண்டுமென்று நாம் விரும்புவதில்லை. யாராவது அதை எடுத்துக் கொண்டு விட்டால் என்ன செய்கிறது? என்னைப் போலவே தான் அவளுக்கும் படத்தில் மாட்டிக் கொள்ள இஷ்டமில்லை போலிருக்கிறது.

யாருக்கும் தானே சொந்தமில்லையாம். எவ்வளவு கேவலமான, எண்ணம். நம்முடைய எல்லாம் பிறருடையதா? நம்முடைய முகம் நம்முடைய தில்லையா? பார்க்கிறவர்கள் எல்லாருக்குமா அது சொந்தம்? இந்த எண்ணம் எனக்கு மிகவும் வெறுக்கத் தக்கதாயிருக்கிறது.

எனக்குச் சொந்தமானதை நான்தான், நானேதான் வைத்துக் கொள்வேன். யாரும் அதைக் கைப்பற்றவோ, இஷ்டப்படி இழிவுபடுத்தவோ முடியாது. என்னுடைய மரணத்துக்குப் பிறகும் இப்படியேதான் இருக்கப் போகிறேன். என்னுடைய குடலை யாரும் பார்க்க முடியாது. பிரான்ஸிஸ்கோ போன்ற போக்கிரியின் உடலைப் போல அது அவ்வளவு மோசமாக இல்லாவிட்டாலும் பிறர் என் உடலைப் பார்க்க நான் விரும்பவில்லை.

பர்னார்டோவின் ஆவலும் அவன் கண்ட விஷயங்களில் தலையிடுவதும் எனக்கு அருவருப்பை அளிக்கின்றன. உபயோகமில்லாத ஆவல். என் படம் அவரிடம் இருப்பதே எனக்கு சகிக்க முடியவில்லை. நானே என் மீதுள்ள உரிமையை இழந்து விட்டேன் போல் தோன்றுகிறது. சாண்டா குரோஸியில் அவன் தீட்டிய பூதங்களைப் போல நானும் ஒரு பூதமா என்ன?

இளவரசியையும் எழுதட்டுமே. நான் சகித்துக் கொண்டது போல அவளும் சகித்துக் கொள்ளட்டுமே. வெட்கமில்லாத அவனுடைய பார்வைக்கு, அவளும் தான் இலக்காகட்டுமே.

ஆனால் இந்த விபசாரியால் அவளுக்கு என்ன லாபம்? எல்லோரையும் விட சற்று அதிகமாகவே தெரிந்த எனக்குக் கூட அவள் சுவராஸ்யமான பிரகிருதியாகப் படவில்லை.

சரி... அவன் எழுதப் போகிற படத்தைப் பார்ப்போமே... மனித இயல்பை மதிப்புப் போடுகிற சக்தி கிடையாது அவனுக்கு.

பர்னார்டோவை நினைத்தால் எனக்கு ஆச்சரியமாகத் தான் இருக்கிறது. இரவு முழுவதும் அதையே நினைத்துக் கொண்டு நான் படுத்திருந்தேன்.

நேற்றிரவு இருவரும் வழக்கம்போல பெரிய விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் பர்னார்டோவின் முகம் என்னவோ போல் இருந்தது. துன்ப எண்ணங்கள் அழுத்த, தன் பெரிய தாடியைத் தடவிக் கொண்டு கவலையில் ஆழ்ந்திருந்தான். பேசும்போது மட்டும் உற்சாகமும் ஆர்வமும் துடிப்பது போல் இருந்து. ஆனால் இது வெளியில் தெரியவில்லை. நீறுபூத்திருந்தது போல் தோன்றிற்று. அவருடைய உண்மை சொரூபமே காணவில்லை. வேறு யாரைப் போலவோ இருந்தது.

அவன் சொன்னான், "கடைசியில் மனித சிந்தனை சாதிப்பது மிக மிகக் குறைவு. அதன் இறக்கைகள் பலம் கொண்டவைதாம். ஆனால் அவற்றை நமக்கு அளித்த விதியைப் போல பலம் உள்ளவை அல்ல. தான் விரும்பியதற்கு அப்பால் நம்மைப் போக விடாது அது. நம் வாழ்க்கைப் பிரயாணமானது முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டது. இந்தக் குறுகிய கால அலைச்சலில் நமக்கு இன்பமும், நம்பிக்கையும் உண்டாகின்றன. ஆனால் பருந்துக்காரர், கையிலுள்ள சங்கிலியால் பருந்தை இழுத்துக் கொள்வது போல நாமும் இழுத்துக் கொள்ளப்படுகிறோம். நாம் எப்பொழுது சுதந்திரமடைவோம்? இந்தச் சங்கிலி என்று அறுபட்டு பறந்து வான் வெளியில் சுயேச்சையாகப் பறக்கும் அது?

"பறக்குமா? பறக்காதா? வாழ்க்கையின் இரகசியமே இந்த பந்தம் தானா? இது மாறிவிட்டால் நாமும் மனிதர்களாக இருக்க மாட்டோம். நம்முடைய விதியே மாறி விடும்.

"ஆனாலும் எப்பொழுதுமே நாம் ஆகாச வெளியின் மயக்கில் கட்டுண்டு கிடக்கிறோம். அதற்கே உரியவர்களாக நம்மை நினைத்துக் கொண்டு விடுகிறோம். ஏதோ சத்தியம் போல அது தன்னைத் தானே நமக்கு முன் காண்பித்துக் கொள்கிறது.

"நாம் அடைய முடியாத இந்த எல்லையற்ற வான்வெளி எதற்காக? நம்மையும், நம் வாழ்வையும் சுற்றியுள்ள இந்த எல்லையில்லாத பரப்பின் அர்த்தம் என்ன? இதற்கிடையேயுள்ள நாம் ஏன் கையாலாகாத கைதிகளாக இருக்கிறோம்? ஏன் வாழ்க்கை தனக்குள் தானே சிறைப்பட்டுக் கிடக்கிறது? இந்த எல்லையில்லாத பரப்பினால் நமக்கு இன்பம் உண்டா? இல்லை என்றே தோன்றுகிறது. இன்பத்தை விட துன்பமே அதிகம்.

“சத்தியத்தைத் தேடுகிறோம் என்பதற்காக நமக்கு சுகம் கிடைக்கிறதா? எனக்குத் தெரியாது. நான் தேடத்தான் தேடுகிறேன். என் வாழ்வு முழுவதும் ஓயாமல் தேடிக் கொண்டிருக்கிறேன். சில சமயம் நான் அதைக் கண்டு விட்டேன் போல் தோன்றுகிறது. அதன் தூய வானத்தை நான் ஏதோ பார்த்தாற்போல் இருக்கிறது. ஆனால் அதனுடைய எல்லையில்லாத ஒளி என் கண்ணை இன்னும் நிரப்பவில்லை. நிரப்பினால் தான் நமக்கு எதுவும் நன்றாகப் புரியும். நாம் அதற்கு கொடுத்து வைக்கவில்லை. ஆகவே என் முயற்சிகளெல்லாம் வீண்தான். நான் தொட்டதெல்லாம் சிறிதளவு உண்மையாகவும் அரை குறையாகவுமே இருக்கின்றன. என்னுடைய சிருஷ்டிகளை நினைக்கும்பொழுதே எனக்குத் துன்பம் உண்டாகிறது. மற்றவர்களுக்கும் அப்படித்தான் உண்டாகும் - ஏதோ முண்டத்தைப் பார்ப்பது போல. நான் படைத்ததெல்லாம் பூர்ணத்துவமோ முடிவோ பெறாதவை. நான் விட்டுவிட்டுப் போவதும் அப்படித்தான் இருக்கும்.

“இதில் அபூர்வமாக என்ன இருக்கிறது? மனித வர்க்கத்தின் விதி இது. அதிலிருந்து மனித முயற்சிகளோ, சாதனைகளோ தப்ப முடியாது. சாதிக்க முடியாதவற்றை சாதிக்க முயலும் ஒரு முயற்சிதான் வாழ்க்கை. அடைய முடியாததை அடைய முயலுவது தான் மனிதப் பண்பாடு. இந்த அடைய முடியாத ஒன்று நம்முடைய சக்திக்கெல்லாம் அப்பாற்பட்டது.

‘‘பரப்ப முடியாத சிறகுகள் இருந்து என்ன பயன்? வெறும் சுமை. நம்மை அழுத்தும் சுமை. நாம் அதை இழுத்துக் கொண்டு கடைசியில் வெறுக்கத் தொடங்குகிறோம்.

“பருந்துக்காரன் தன் கொடூர விளையாட்டிலேயே அலுத்துப் போய் நம் தலை மீது சல்லாவைப் போடும் போது நமக்கும் விமோசனம் வருகிறது.”

பர்னார்டோ பேசும் பொழுது துன்பம் படர்ந்திருந்தது. வாயின் அருகில் கோடுகள் தோன்றின. கண்களில் ஒரு பயங்கரமான பிரகாசம். நான் திகைத்து விட்டேன். இதே ஆள் தானே மனிதனின் எல்லையில்லாத பெருமையைக் கண்டு பரவசமாக நின்றான்! மனிதனின் சக்தி எல்லையில்லாதது என்று கோஷமிட்டவன் இவன்தானே. ஆனால் இப்பொழுது?

எனக்கு அவனைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒன்றுமே புரியவில்லை எனக்கு.

இளவரசர் தன் மகாகுருவின் சொற்களில் மயங்கி உட்கார்ந்திருந்தார். அவருக்கும் அதே அபிப்ராயம் போல் தான் இருக்கிறது. இளவரசர் நல்ல சீடர் என்று ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

இந்த முரணான கருத்துக்களை எப்படி பிணைக்கிறது? ஒன்றுக்கொன்று சம்பந்தமே இல்லாத முரணான கருத்துக்களை ஒரே மூச்சில் எப்படி நம்புகிறார்கள் இவர்கள்? என்றும் மாறாத, ஒரே மாதிரியாக இருக்கிற எனக்கு சற்று கூடப் புரியவில்லை இது.

இரவெல்லாம் படுத்து இவற்றைப் புரிந்து கொள்ள நான் செய்த சிந்தனை எல்லாம் பலனளிக்கவில்லை.

ஒரு நிமிஷம் மனிதனாகப் பிறந்ததைப் பற்றி ஒரே எக்களிப்பு. மறு நிமிஷம் அர்த்தமற்றது என்ற நிராசை. இதெல்லாம் என்ன?

## 12

இளவரசியின் படமும் பாதியில் நின்று விட்டது. அவனுக்கு முடிக்க முடியவில்லையாம். அவன் ஊடுருவ முடியாத, விளக்க முடியாத ஏதோ ஒன்று அவளைச் சுற்றி கவசமிட்டிருக்கிறதாம். ஆக இதுவும் கிறிஸ்துவின் கடைசி விருந்தைப் போல முற்றுப் பெறாமல் நிற்கிறது.

இளவரசரின் அறையில் ஒரு தடவை அதைப் பார்த்தேன். அதில் ஒன்றும் தப்பாகத் தெரியவில்லை. மிகவும் உயர்ந்த சித்திரம். அவளை அப்படியே தத்ரூபமாக, ஒரு நடு வயது விபசாரியைப் போலவே வரைந்திருக்கிறான். அவளே அச்சாக இருக்கிறது படம். காமம் சுமந்த முகம். அடர்த்தியான இமை மயிர்கள். போதை கொண்ட புன்சிரிப்பு. எல்லாம் அப்படியே இருக்கின்றன. அவளுடைய ஆத்மாவையே சித்திரத்தில் வடித்து விட்டான். அவள் பண்புகளை எல்லாம் தேவதையைப் போல வெளிப்படுத்தி விட்டான்.

அவனுக்கும் மனித இயல்பைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் இருப்பது போல்தான் தோன்றுகிறது.

ஆனால் படத்தில் ஏதோ குறை இருப்பதாக அவன் எண்ணம். எது அவளுடைய சாரமோ அது இல்லையாம். அந்த சாரம் என்னவென்று எனக்குப் புரியவில்லை.

ஆனால் அவன் சொல்லுவது போல அடைய முடியாத ஒரு லட்சியத்தை நோக்கிய முயற்சி தான் எல்லாம். மனிதப் பண்பாடே வெறும் முயற்சிதான். எல்லாமே பயனற்றது.

உண்மைதான். பயன் இல்லா விட்டால் வாழ்க்கை எப்படி இருக்கும்? பயனற்ற தன்மை தான் வாழ்க்கையின் ஆதாரம். வேறு எந்த நிலையான அஸ்திவாரத்தில் அது அமைய முடியும்? ஒரு மகத்தான கருத்தை இன்னொரு கருத்து குலைத்து நாளடைவில் அழித்து விட முடியும். இந்தப் பயனற்ற தன்மை என்பது அழிவில்லாதது, அசைக்க முடியாதது, அடைய முடியாதது. அது உண்மையான அஸ்திவாரமாக இருப்பதால் தான் மனிதன் அதைத் தேர்ந்து எடுக்கிறான். இதைப் புரிந்து கொள்ள இவ்வளவு சிந்தனை தேவையாக இருக்கிறது பாருங்களேன்.

ஆனால் எனக்கென்னவோ இவ்வளவு சிரமமில்லாமல் சுயமாகவே பளிச்சென்று தெரிந்து விட்டது. அப்படித் தெரிந்து கொள்வது என் இயல்பு.

# 13

இங்கு என்னமோ நடந்து கொண்டிருக்கிறது. சூழ்நிலை அமைதியாக இல்லை. ஒன்றும் நிகழாவிட்டாலும் ஏதோ நிகழப் போவதாக மட்டும் தெரிகிறது. மேலுக்கு எல்லாம் அமைதியாகத்தான் தோன்றுகிறது, வழக்கத்தை விட அரண்மனையில் அதிக அமைதி காணப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இந்தக் காலத்தில் விருந்தினர்களும், களியாட்டங்களும் நிறைந்திருப்பது வழக்கம். அதெல்லாம் இப்பொழுது இல்லை. ஆனால் இந்த வழக்கத்திற்கு விரோதமான அமைதியே ஏதாவது நேருமோ என்ற உணர்ச்சியை உண்டாக்குகிறது. நானும் சதாசர்வமும் விழிப்புடன் தான் இருக்கிறேன். ஆனால் விசேஷமாக ஒன்றையும் காணோம். எனக்கு மட்டும் சந்தேகம் போகவில்லை. பொறுமையைக் கடைப்பிடித்தால் நிச்சயமாகத் தெரியும்.

தளபதி பொக்கராஸோ போய் விட்டான். கரால்டி மாளிகை மீண்டும் காலியாகத்தான் இருக்கிறது. அவன் எங்கு போனான் என்று யாருக்கும் தெரியாது. பூமி அவனை விழுங்கி விட்டதா? இளவரசரோடு ஏதாவது தகராறா? பண்பாடு இல்லாத இந்த முரடனுடன் இளவரசர் தாராளமாகப் பழகியது ஏன்? பலருக்கு வேடிக்கையாகத் தோன்றுகிறது. ஆனால் எனக்கு அந்த அபிப்ராயம் கிடையாது. பொக்கராஸோ பண்பாடில்லாதவன் தான். இளவரசர் பண்பாட்டிலேயே ஊறியவர். ஆனாலும் அவர் உடம்பிலும் படை வீரன் இரத்தம் ஓடுகிறது என்பதை பலர் மறந்து விட்டார்கள் போலிருக்கிறது. சில தலைமுறைகளுக்கு முன்னால் வரை பட்டாளத்து வீரர்களாக இருந்தவர்கள் அவர்கள்.

இருவரும் ஒருவருக்கொருவர் எளிதில் புரிந்து கொண்டு விடுவார்கள்.

சூழ்நிலை சரியாக இல்லை. இந்த மாதிரி விஷயங்களில் என்னுடைய ஹேஷ்யம் தவறுவது கிடையாது. இங்கு என்னமோ நடக்கத்தான் போகிறது.

இளவரசருக்கு இப்பொழுது ஓய்வே இல்லை. யார் யாரோ வருகிறார்கள். இரகசியமாகப் பேசுகிறார்கள். என்னவென்று தெரியவில்லை. சில சமயம் இரவுவேளைகளில் பிரபுக்கள் அரண்மனைக்கு வருகிறார்கள். கவர்னர்கள், மந்திராலோசகர்கள், சேனைத் தலைவர்கள் புராதன மக்களின் தலைவர்கள் இத்தனை பேர் வரும் பொழுது அரண்மனை எப்படி அமைதியாக இருக்கும்?

பர்னார்டோ கவலைப்படுவதாகத் தெரியவில்லை. மகா குருவின் முக்கியத்துவம் இப்பொழுது குறைந்திருக்கிறது. முற்றிலும் வேறு வகையான மனிதர்கள் இப்பொழுது நடமாடுகிறார்கள்.

பர்னார்டோ இப்படியானதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. அரண்மனையில் இத்தனை நாளாக அவருக்கு சற்று அதிகமாகவே இடம் கொடுத்து விட்டார்கள்.

நான் நினைத்தது சரிதான். ஜோஸியர்களைக் கூப்பிட்டு இளவரசர் அடிக்கடி யோசனை கேட்கிறார். ஆஸ்தான ஜோஸியரோடு இன்னும் பல ஜோஸ்யர்கள் வருகிறார்கள். மெடீஸியின் தூதரோடும், வெனீஷிய கடைக்காரர்களின் குடியரசோடும் மதத் தலைவரோடும் பல தடவை பேச்சுகள் நடத்தினார். இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?

போருக்கு திட்டம் போடுகிறார்கள் என்று தோன்றுகிறது. கிரக நட்சத்திரங்கள் அதற்கு சரியாக இருக்கின்றனவா என்று பார்க்கத்தான் ஜோஸியர்கள் வந்திருக்கிறார்கள். அறிவுள்ள அரசன் யாரும் இந்த அடிப்படையான எச்சரிக்கையைக் கையாளுவது நியாயம் தானே. பர்னார்டோ மோகத்தில் இதுவரை இளவரசர் இவர்களைக் கவனிக்கவில்லை. அவனுக்குக் கூட நட்சத்திரங்களின் சக்தியில் நம்பிக்கை உண்டு. ஆனால் அவன் கொண்டுள்ள அபிப்ராயங்கள் வேறாம். மதத்துரோகம் என்று கருதும் படியான புதிய கருத்துகளாம். ஆனால் இளவரசருக்குப் பழைய பத்தாம்பசலிகளே தேவலை என்று ஆகிவிட்டது. இப்போது ஜோஸ்யர்களின் பழைய முக்கியத்துவம் மீண்டு விட்டது. பிற அரசாங்கங்களின் ஆதரவும் நல்லெண்ணமும் கிடைக்குமா என்பதை உறுதி செய்து கொள்ள அந்த அந்த நாட்டு தூதர்களோடு பேச்சு நடந்திருக்கிறது.

கடவுள் இந்தத் திட்டங்களைப் பற்றி என்ன நினைக்கிறாரோ? அவருடைய அருளில்லாமல் எந்த மனித திட்டம் வெற்றி பெறும்? அவருக்கும் இது சம்மதமாக இருக்குமென்றே நம்புகிறேன். போர் மூளும் நாளை எதிர்நோக்கித் துடித்துக் கொண்டிருக்கிறேன்.

யுத்தம் தான் வரப் போகிறது. காற்றை முகர்ந்து பார்த்தாலே தெரிகிறது. இந்த ரகஸ்யம், பரபரப்புள்ள முகங்கள் எல்லாவற்றிலும் இவை தெரிகிறது. மனிதர்கள் ஏதாவது செய்து கொண்டுதான் இருக்க வேண்டும். உண்மையில் எல்லோரும் யுத்தத்தை விரும்புகிறார்கள். ஒரு பெரிய விடுதலையாக யுத்தத்தைக் கருதுகிறார்கள் என்றுதான் இதற்கு அர்த்தம். வாழ்க்கை ஏதோ சிக்கலாக இருக்கிறது என்றும் அந்தச் சிக்கல்களை இது சுலபமாகத் தீர்த்து விடுகிறது என்றும் இதற்கு அர்த்தம். ஆனால் வாழ்க்கையில் சிறிது கூட சிக்கல் கிடையாது. மிகமிக எளியது அது. ஆனால் அது ஒருவருக்கும் புரியவில்லை. அதைச் சும்மா விடுகிற வரை அது ஒன்றும் செய்யாது. ஆனால் அப்படி யார் விட்டு வைக்கிறார்கள்.

இளவரசர் தன் சோர்விலிருந்து விடுபட்டு விட்டார். சிறிய தாடியும் வெளுத்த கன்னங்களும் கொண்ட அவர் முகத்தில் இப்பொழுது சக்தி ததும்புகிறது. கழுகைப் போல கண்ணில் ஜாக்கிரதை தெரிகிறது. தன் குலப் பகைவர்களை ஒழிக்க கங்கணம் கட்டிக்கொண்டு விட்டார் அவர்.

சேனைத் தலைவன் பின்தொடர அவசர அவசரமாக வாசல்படியில் அவர் ஏறி வருவதைப் பார்த்தேன். ஏதோ இராணுவ மேற்பார்வை செய்துவிட்டு வருவதாகத் தோன்றிற்று. ஹாலுக்குள் வந்ததும் மேல் அங்கியைக் கழற்றி வேலைக்காரனிடம் வீசி எறிந்து விட்டு நீல உடுப்பில் நின்றார். வலுவும் வசமும் கொண்ட அவர் உடல் கத்தியைப் போல

மின்னிற்று. அலட்சியமாக ஒரு புன்னகை; வற்றாத ஒரு சக்தி அவர் உடலிலிருந்து நாலு பக்கமும் கதிர் ஒளி வீசுவது போல வீசிற்று. ஒவ்வொரு அங்குலமும் கர்மவீரர் போல் காட்சியளித்தார் அவர்.

எப்பொழுதுமே அவர் கர்மவீரர்தான். அதுவும் எனக்கு வெகு நாளாகத் தெரியும்.

இந்த நேரம் யுத்தத்திற்கு மிகவும் ஏற்றதென்றும் இதைப்போல வேறு நேரம் கிடைக்காதென்றும் ஜோஸியர்கள் சொல்லியிருக்கிறார்கள். இளவரசரின் ஜாதகத்தைப் பார்த்து அவர் சிம்ம லக்னத்தில் பிறந்திருப்பதாகக் கண்டு பிடித்தார்களாம். இது ஒன்றும் புதிய சேதியில்லை. அவர் பிறந்ததிலிருந்தே எல்லோருக்கும் தெரிந்ததுதான். பரிவாரங்கள் அதைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி கொண்டார்கள். இளவரசருக்கு நல்ல யோகத்தை காண்பிக்கிறதாம் இது. சில ஜனங்கள் மட்டும் கவலைப்பட்டார்கள். இளவரசருக்கு சிம்மம் என்றே அதனால் ஒரு பெயர் உண்டு. செவ்வாய் இப்பொழுது சிம்மத்தை அடுத்திருக்கிறனாம். சீக்கிரம் யுத்தாதிபதியான அவன் இளவரசரின் சொந்த கிரஹத்திற்கு வரப் போகிறான். ஜாதகத்தில் மற்ற அம்சங்களும் விசேஷ அனுகூலத்தைக் காண்பிப்பதால் யுத்தம் வெற்றிகரமாக முடிவடையும். இந்த க்ஷணத்தை யாராவது விட்டால் அதைப்போல மன்னிக்க முடியாத காரியம் இருக்கவே முடியாதாம்.

இந்த ஜோஸியங்களைக் கண்டு நான் வியக்கவில்லை. ஏனெனில் இளவரசரின் விருப்பத்திற்குத் தக்கவாறு சொல்லப்படுகிறவை இவை. அதுவும் அவருடைய தகப்பனார் ராஜவம்சத்திற்கு ஏதோ பெரிய துரதிருஷ்டம் காத்திருக்கிறது என்று சொன்ன ஜோஸியனை நையப் புடைத்த நாள் முதல் வேறு தினுசாக எப்படிச் சொல்லுவார்கள். ராஜவம்சத்தின் ஸ்தாபகர் பலரைக் கொன்று இரத்தம் படிந்த கையோடு அரியணை ஏறும் சமயத்தில், தீயும் இரத்தமும் வாலாகக் கொண்ட தீய நட்சத்திரம் ஒன்று வானில் தெரிந்ததாம். ஜோஸியம் என்னவோ பலிக்கவில்லை.

எனக்கு வியப்பு இல்லை. ஜோஸியர்களைக் கண்டு சந்தோஷம்கூட எனக்கு இப்பொழுது வருவதில்லை. எங்கள் சாஸ்திரத்தில் உண்மையாக திறமை கொண்டவர்கள் அவர்கள். ஏதோ கொஞ்சமாவது பயனுள்ளவர்களாக இருக்கிறார்கள். இளவரசர், சைனியங்கள், மக்கள் எல்லோரும் எங்கள் திட்டத்திற்கு இது நல்லவேளை என்று நம்புவது முக்கியமில்லையா? கிரகங்கள் இப்பொழுது பேசிவிட்டன. எல்லோருக்குமே திருப்தி.

- கிரஹங்கள், நட்சத்திரங்கள் இந்த ஜோலிக்கெல்லாம் நான் போவதில்லை.

## 14

பர்னார்டோ மீண்டும் ஒருமுறை என்னை வியப்பில் ஆழ்த்தி விட்டார். நேற்றிரவு இளவரசரும் அவரும் இரகசியமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். வழக்கம் போல இரவு வெகுநேரம் வரையில் பேசினார்கள். மகா குருவின்

முக்கியத்துவம் மங்கவில்லை என்றும் சிந்தனையாளர் என்ற முறையில் இன்றைய உலகத்திலிருந்து ஒதுங்கி விடவில்லை என்றும்தான் இது நிரூபிக்கிறது. நான் நினைத்ததுதான் தப்பாகி விட்டது போலிருக்கிறது.

மனிதர்களை அப்படியே எடை போடும் திறமையுள்ள நான் இப்படித் தவறுகள் செய்ய நேர்ந்தால் சகிக்க முடியாத வேதனை உண்டாகிறது.

மதுப் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு உள்ளே போனபோது ஏதோ ஒரு மர்மமான சித்திரத்தை இருவரும் குனிந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். முதலில் எனக்குப் புரியவில்லை. ஆனால் பின்பு கவனித்த பொழுது எங்கும் பிணக்காடாக அடிக்கக் கூடிய யுத்த இயந்திரங்கள் என்று தெரிந்தன. நீண்ட கத்திகள் பொருத்திய யுத்த இரதங்கள். அவை போகும் பொழுதே சுற்றிலும் மனித அவயவங்கள் அறுபட்டுக் கிடக்கும். இதைப் போல இன்னும் எத்தனையோ இயந்திரங்கள். இவற்றிலுள்ள போர் வீரர்களை வெளியே இருந்து யாரும் தாக்க முடியாது. எப்பேர்ப்பட்ட யூகத்தையும் இந்த வண்டிகள் உடைத்து எரியுமாம். அதன்பின்பு காலாட்படை தொடர்ந்து தன் வேலையை முடிக்குமாம். இன்னும் எத்தனையோ கொலைக் கருவிகள் நெருப்பையும், கற்களையும், குண்டுகளையும் கக்கும் இயந்திரங்கள். தலைவேறு கால் வேறாக வீரர்களை சின்னா பின்னமாக்கும் இயந்திரங்கள். இவையெல்லாம் தத்ரூபமாக வரையப் பட்டிருந்தன. இவை செய்யக்கூடிய நாசத்தையும் நஷ்டத்தையும் பற்றி மகாகுரு நிதானமாகச் சொல்லிக் கொண்டிருந்தார். தானே கண்டுபிடித்த இந்த இயந்திரங்கள் செயல்படுவதை கண்ணாரக் காண அவர் ஆசைப்படுவது போல் தோன்றிற்று.

மற்ற வேலைகளோடு வேலையாக - இயற்கை ஆராய்ச்சி, கூழாங்கல் ஆராய்ச்சி, பூக்களைப் பற்றிய சோதனை, பிரான்ஸிஸ்கோவின் உடலை நறுக்கியது, சாண்டாகுரோஸியின் சித்திரங்கள். இந்த வேலைகளோடு வேலையாக இந்த வேலையையும் செய்திருக்கிறார் பர்னார்டோ.

தன்னுடைய ஆச்சரியமான இயந்திரங்கள் ஏன் அவரைக் கவரக்கூடாது. வாழ்க்கையில் எத்தனையோ அவரைக் கவருகின்றன. அதுவும் அவருடைய சொந்தக் கண்டுபிடிப்புகளான இயந்திரங்கள் அவரைக் கவருவதில் என்ன தப்பு?

கண்ட மாத்திரத்தில் ஒரு பெரும் சைன்யத்தையே தாறுமாறாக ஓடச் செய்யும் இந்த யுக்திகளைப் பார்த்து இளவரசர் என்னவோ அவ்வளவாக அக்கறை காட்டவில்லை. இதைவிட சாதாரணப் போர் முறைகளையே விரும்பினார் அவர். என் கற்பனை குறைவாகவே இருக்கலாம். ஆனால் பழைய முறைகளே அதிகப் பலன் தரும் என்றார் அவர். மிக மிகப் பயங்கரமானவைகள் வருங்காலத்திற்கே ஏற்றவை என்றும் நடைமுறையில் பயன்படுத்தக் கூடியவை தான் இப்பொழுது ஏற்றவை என்றும் அவருடைய அபிப்ராயம். கோட்டைகளுக்கு கண்ணி வைத்து தகர்ப்பது, சஸ்திரங்களை வெகுதூரம் போகச் செய்வது இவற்றிலெல்லாம் பல புதுமைகளைப் பற்றி

இருவரும் ஆராய்ந்தார்கள். சிலவற்றை நடைமுறையில் கையாளவும் திட்டம் போட்டார்கள்.

இதெல்லாம், நம்ப முடியாத இந்த கருத்துகள், கண்டுபிடிப்புகள், எல்லையில்லாத கற்பனை வளங்கள் எல்லாம் - இளவரசரைப் பரவசப்படுத்தி விட்டன. அன்று மாலை முழுவதும் நானும் மகிழ்ச்சியோடு எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டே இருந்தேன். எனக்கே ஒரே பிரமிப்பாகி விட்டது.

இளவரசர் ஏன் இவ்வளவு மரியாதையாக, உபசாரமாக சமஸ்தானம் கொடுத்து பர்னார்டோவைப் போற்றினார் என்று இப்பொழுதுதான் எனக்குப் புரிகிறது. பர்னார்டோவின் புலமை, இயற்கை ஆராய்ச்சி, நம்ப முடியாத பேரறிவு, கலைத்திறமை எல்லாவற்றிலும் அவர் கொண்ட சிரத்தையும் எனக்குப் புரிகிறது.

இளவரசர் பெரிய மனிதர்தான். நேற்றிரவு நான் ஒரு பயங்கரக் கனவு கண்டேன். பர்னார்டோ தன் நரைத்த மயிரும், வீர நெற்றியும் மின்ன ஒரு உயர்ந்த மலை மீது நின்று கொண்டிருந்தார். ஆனால் அவர் தலையைச் சுற்றி சாண்டாகுரோஸிச் சித்திரங்களில் நான் பார்த்த ராட்சஸப் பிராணிகள் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தன. தன் எஜமானைச் சுற்றித் திரியும் குட்டிப் பேய்களைப் போல திரிந்தன அவை. உடும்பு, தவளை முகங்கள். ஆனால் அவர் முகம் வழக்கம்போல் கம்பீரமாக பெருமிதம் கொண்டு விளங்கிற்று. ஆனால் சற்றுக் கழித்து சிறிது சிறிதாக மாறிக்கொண்டு வந்தது. சுருங்கி விகார வடிவம் கொண்டது. பக்கவாட்டிலிருந்து சிதைந்து சிறகுகள் முளைத்தன. முகத்தின் கம்பீரம் மாறாவிட்டாலும் அவர் சிறகடித்து திடீரென்று பறந்து இந்த விகாரப் பிராணிகளுடன் இரவின் இருளில் மறைந்தார். எனக்கு சொப்பனங்களைப் பற்றி கவலை கிடையாது. அவைகளுக்கு அர்த்தமே இல்லை. எல்லாம் பொய்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? பர்னார்டோவே விகார வடிவம் கொண்டவராக இருக்க வேண்டும். வெகுநாள் முன்னமே இந்த முடிவுக்கு நான் வந்து விட்டேன்.

## 15

பொக்கரோஸா நாலாயிரம் துருப்புகளுடன் எல்லையைக் கடந்து விட்டாராம். எல்லையிலிருந்து பனிரெண்டு மைல் போய்விட்டார். இல்டோரோ இந்த திடீர் தாக்குதலிலிருந்து நிமிரவே முடியவில்லையாம்.

இந்த பயங்கரச் செய்தி நகர மக்களை இடியைப் போல எழுப்பி விட்டது.

தளபதி தன் போர் வீரர்களை யாரும் புகமுடியாத தென்மேற்கு எல்லை மலைப்பகுதியில் சேகரித்து பிரமாதமான தந்திரத்துடன் இந்த வெற்றிகரமான படை எடுப்புக்குத் தயார் செய்திருக்கிறார். எங்களுக்குக்கூட இதெல்லாம் தெரியாது. இந்தப் பெரிய தாக்குதல் திட்டத்தின் மூலகர்த்தரான இளவசரருக்குத் தான் தெரியும். நம்பவே முடியவில்லை.

சரி, மொண்டான்ஸாஸ் காலம் மலையேறிக் கொண்டிருக்கிறது. அதேபோல தன் மக்களாலேயே வெறுக்கப்படும் லொடோவிகோவும் மண்ணைக் கவ்வி தன் வெட்கம் கெட்ட கூட்டத்தின் கதையை முடிக்கப் போகிறார். அவன் கண்ணில் இவர்கள் மண்ணைத் தூவிய விதமே ஒரு அதிசயம். இளவரசர் தன்னைத் தாக்கத் திட்டமிடுகிறார் என்று அவன் சந்தேகப்பட்டது என்னவோ உண்மைதான். ஆனால் இங்கு படைகள் ஒன்றும் திரட்டப்படாததால் பயமில்லை என்று ஏமாந்து விட்டான். நடக்க முடியாத தரை நிறைந்த ஒரு பகுதியில் இந்தத் தாக்குதல் நடக்குமென்று அவன் எதிர்பார்த்திருக்கவே மாட்டான். அங்கு அவனுக்கு எல்லைக் கோட்டைகள் கூடக் கிடையாது.

இங்கு நகரத்திலுள்ள நிலைமையை வர்ணிக்கவே முடியாது. மக்கள் கூட்டம் கூட்டமாக தெருக்களில் கூடிப் பேசுகிறார்கள். இல்லாவிடில் துருப்புகள் செல்வதை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவை எல்லாம் இளவரசரின் துருப்புகள். இத்தனை நாளாக எங்கு இருந்தன. எங்கிருந்து வந்தன என்று யாருக்குமே தெரியவில்லை. ஈசல் கிளம்புவது போல எங்கிருந்தோ கிளம்பி விட்டன. ஆனால் எல்லாம் ஜாக்கிரதையாக, இரகசியமாகத் தயாரிக்கப்பட்ட திட்டம் என்று தெரிகிறது. எங்கும் மணி ஓசை ஒலிக்கிறது. ஆலயங்களில் நெருக்கடி தாளவில்லை. போரை உத்தேசித்து மதக்குருக்கள் ஆர்வத்துடன் பூஜை நடத்துகிறார்கள். ஆக ஆலயத்தின் அனுக்கிரகமும் இந்த யுத்தத்திற்கு உண்டென்றே தோன்றுகிறது. வேறு எப்படி இருக்க முடியும்? இது கட்டாயம் மகத்தான யுத்தமாகத்தான் விளங்கப் போகிறது.

மக்களுக்கெல்லாம் ஒரே குதூகலம். அரண்மனையிலோ இளவரசருக்கு வரும் பாராட்டுகளுக்கும் ஆதரவுக்கும் எல்லையே இல்லை.

நம்முடைய சொந்த துருப்புகள் இன்னொரு பகுதியை நோக்கிச் செல்கின்றன. கிழக்கே, அகன்ற நதிப்பள்ளத்தாக்கில் நம் நாட்டு எல்லையைக் கடக்கும் அவை. இங்கு தான் வழக்கமாக தாக்குதல்கள் நடக்கும். ஒருநாள் பிரயாணம் தான். அங்கு பூமி சமனானது. எத்தனையோ வீரர்களின் இரத்தம் சுவைத்த மண் அது. அந்த இடத்தில் கூலிக்கார தளபதியின் படையோடு நம் துருப்புகள் சேர்ந்து கொள்ளும். இதுதான் திட்டம். எனக்குப் புரிந்து விட்டது. நிச்சயமாகத் தெரியாவிட்டாலும் பல விஷயங்களை ஒட்டுப் போட்டு இந்த முடிவிற்கு வந்திருப்பேன். சாவி ஓட்டைகள் வழியாகப் பார்ப்பது, அலமாரிகளுக்கும், திரைகளுக்குப் பின்னால் ஒளிந்து ஒற்றுக் கேட்பது. இப்படி பலமுறைகளால் போர்ச் செய்திகளை எல்லாம் அறிந்து கொண்டிருக்கிறேன். தாக்குதல் திட்டம் முதல் தர திட்டம். வெற்றி பெற்றால் மிகவும் நல்லது. எல்லையிலுள்ள கோட்டைகள் விழுந்து விடும். எதிர்ப்பது அறிவீனம் என்று சரண் அடைந்து விடும். நம்மை ஒன்றுமே நிறுத்த முடியாது. நம்முடைய முதல் தாக்குதல் எதிர்பாராமல் நடந்ததால் நம் முன்னேற்றத்தை தடையே செய்ய முடியாது.

இளவரசர் தான் எப்பேர்ப்பட்ட தந்திரசாலி. எவ்வளவு தீர்க்க தரிசனம். இப்பேர்ப்பட்ட இளவரசரின் குள்ளனாக இருப்பதே என் உள்ளத்தைப் பூரிக்கச் செய்கிறது. எனக்கு சதா ஒரே ஞாபகம் தான். நான் எப்படி யுத்தத்திற்குப் போவது? நான் கட்டாயம் போக வேண்டும். என் கனவுகள் எப்படிப் பலிக்கும். ஒரு இராணுவ ஆபிசருக்கோ, சாதாரண படைவீரனுக்கோ வேண்டிய யுத்தப் பயிற்சி எனக்குக் கிடையாது. ஆனால் ஆண்மையுடன் எனக்கு ஆயுதங்கள் எய்தி யுத்தம் செய்ய முடியும். யார் கத்திக்கும் குறைந்ததில்லை என் கத்தி. மற்றவர்களுடையது போல அவ்வளவு நீளமில்லாமல் இருக்கலாம். ஆனால் ஒரு குட்டைக் கத்தி என்பதற்காக சக்தி இல்லாமல் இருக்குமா என்ன? பகைவர்களுக்கு நிச்சயமான இதன் சக்தி தெரியத்தான் போகிறது.

இப்படி யோசித்து எனக்கு உடம்பு கூட சொஸ்தமில்லாமல் போய் விட்டது. இந்த ஊரிலேயே பெண்களோடும் குழந்தைகளோடும் என்னை விட்டு விட்டுப் போய் விடுவார்களோ என்று பயம். ஒரு நல்ல சந்தர்ப்பம் வரும் பொழுது எனக்கும் போக அனுமதி கிடைக்க வேண்டுமே, நானும் இந்த இரத்த களரியில் திளைக்க வேண்டுமே.

நானும் போகிறேன். அவர்களோடு நானும் புறப்படப் போகிறேன். இன்று காலை தைரியத்தை தருவித்துக் கொண்டு சண்டைக்குப் போக என் அடங்காத ஆசையை இளவரசரிடம் சொன்னேன். நான் சொன்ன ஆர்வமும், துடிப்பும் அவரை அசைத்துவிட்டது. நான் போன சமயம் அவர் மனநிலையும் சரியாக இருந்தது. தலைமயிருக்குள் கையை விட்டுக் கோதிக் கொண்டிருந்தார். அவர் மனநிலை சரியாக இருக்கிறது என்பதற்கு இதுதான் அடையாளம். அவருடைய கருவிழிகள் என்னைப் பார்த்தபோது பளிச்சிட்டன.

நீயும் வர வேண்டியதுதானே என்றார் அவர். நான் போகும் பொழுது உன்னையும் கட்டாயமாக அழைத்துத் தான் போவேன். குள்ளன் இல்லாமல் ஒரு இளவரசன் இருக்க முடியுமோ? வேறு யார் எனக்கு மது ஊற்றுவார்கள் என்று ஒரு புன்சிரிப்புடன் என்னைப் பார்த்தார்.

நானும் அவர்களுடன் போகத்தான் போகிறேன்.

## 16

தற்பொழுது பைன் மரங்கள் வளர்ந்த ஒரு குன்றின் மேல் கூடாரத்தில் இருக்கிறேன் நான். அடிவாரத்திலுள்ள சம தரையில் தங்கியுள்ள பகைவர்களை நன்றாகப் பார்க்க முடிகிறது. கூடாரத்திற்கு சிவப்பு மஞ்சள் கோடிட்ட துணிகள். இளவரசரின் நிறங்கள் இவை. அது படபடக்கும் பொழுது யுத்த முரசைக் கேட்கும் எழுச்சி கொள்கிறது மனம். இளவரசரைப் போல நானும் கவசம், தலைமுடி, வாள் எல்லாம் தரித்து ஆயுதபாணியாக நிற்கிறேன். சூரியன் மலைவாயில் விழும் சமயம், இங்கு என்னைத் தவிர வேறு யாரும் இல்லை. நாளைக் காலைக்கான தாக்குதல் திட்டத்தைப் பற்றி பேசும்

குரல்கள் கேட்கின்றன. தொலைவில் போர் வீரர்களின் கோலாகலமான இனிய இசை கேட்கிறது. இல்டோரோவில் கருப்பும் வெள்ளையும் கலந்த கூடாரம் தெரிகிறது. இங்கிருந்து பார்க்கும் போது அதைச் சுற்றியுள்ள மனிதர்கள் சின்னச் சின்னதாகத் தெரிகிறார்கள். அந்த அளவைப் பார்க்கும் பொழுது இவர்களால் என்ன செய்ய முடியும் என்று தோன்றுகிறது. இடது பக்கத்தில் ஆயுதமில்லாத வீரர்கள் வெறும் உடம்புடன் குதிரைகளுக்குத் தண்ணீர் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் களம் புகுந்து ஒரு வாரமாகிறது. அதற்குள் பெரும் பெரும் சம்பவங்கள் நடந்து விட்டன. நான் எதிர்பார்த்தது போலவேதான் யுத்தம் நடந்து கொண்டிருந்தது. பர்னார்டோவின் பீரங்கிகளைக் கொண்டு தாக்கி எல்லைக் கோட்டைகளைத் தகர்த்தோம். இந்த பீரங்கி முழக்கத்தில் திகைத்துப் போன படை பணிந்து விட்டது. பொக்கரோஸாவின் முன்னேற்றத்தை தடுப்பதற்காக அனுப்பப்பட்ட படையின் ஒரு பகுதியை திருப்பி அழைத்து இல்டோரோ எங்களுக்கு எதிராக அனுப்பினான். இந்தப் படைகளும், நாங்களும் பயங்கரமாகக் கைகலந்தோம். ஆனால் எங்களை விட போர்த்திறம் குன்றியவை அவை. வெற்றி எங்களுக்குத்தான் கிடைத்திருக்கிறது. இதற்குள் பொக்கரோஸாவின் படை, வரவர பலம் குறையும் எதிரிகளை நசுக்கிக் கொண்டே பள்ளத்தாக்கில் முன்னேறி எங்கு பார்த்தாலும் சூறையாடி, தீ வைத்து எங்களுடன் சேர்வதற்காக முயன்று கொண்டிருந்தது. இந்தப் பிரதானமான நோக்கம் நேற்று பகல் பொழுதில் தான் நிறைவேறிற்று. இப்பொழுது நாங்கள் பள்ளத்தாக்கிற்கும், மலைகளுக்கும் இடையே சேர்ந்து நிற்கிறோம். மொத்தம் 15000 பேர்கள். இதில் 2000 குதிரை வீரர்கள்.

இளவரசரும் பொக்கரோஸாவும் சந்தித்த பொழுது நான் இருந்தேன். மறக்க முடியாத சரித்திரப் பிரசித்தி பெற்ற காட்சிகள். சிறிது காலமாக புது இளமை பெற்று விளங்கும் இளவரசர் வெள்ளிப்பூச்சிட்ட கவசம் அணிந்து கம்பீரமாக விளங்கினார். சகோதர வீரர்களை வணங்கும்பொழுது அவர் முடியில் சிலிர்த்த மஞ்சள் சிவப்பு இறகுகள் எவ்வளவு அழகாக வளைந்து நிமிர்ந்தன. ஒரு தடவை அவருடைய வெளுத்த ராஜ முகத்தில் நிறம் ஏறிற்று. மெல்லிய உதடுகளில் நட்பின் புன்னகை தவழ்ந்தது. ஆனால் அதில் எச்சரிக்கையும் அழுத்தமும் இல்லாமல் இல்லை. அவருக்கு எதிரே பிரம்மாண்டமான சரீரத்துடன் பலமே வடிவாக நின்றான் பொக்கரோஸா. அவனை இதற்கு முன் பார்த்ததே இல்லை போன்ற ஒரு வினோத உணர்ச்சி என்னுள் எழுந்தது. போர்க்களத்திலிருந்து நேராக வந்திருந்தான் அவன். இளவரசரின் கவசங்களைப் போல ஆடம்பரமாக இல்லை அவன் கவசம். அவன் அணிந்த சின்னமோ வாயைப் பிளந்து நாக்கை நீட்டும் சிம்மத்தின் கோப முகம் தான். முடியில் சின்னங்களோ அணிகளோ இல்லை. இவ்வளவு பயங்கரமான தலையை நான் பார்த்ததே இல்லை. அம்மைவடு மூஞ்சி. அச்சத்தை ஊட்ட அந்தத் தாடைகளே போதும். கருஞ்சிவப்பான அந்த தடித்த உதடுகள் பிரிக்கவே முடியாதது போல் சேர்ந்திருந்தன. பார்த்த மாத்திரத்திலேயே எதிரிகளை மண்டியிடச் செய்யும் சக்தி அதற்கு இருந்தது. அவனைப் பார்ப்பதே ஒரு பயங்கரக் காட்சியாக இருந்தது. ஆனால் நான்

இதுவரையில் இவ்வளவு ஆண்மையுள்ள ஒருவனைப் பார்த்ததில்லை. ஏதோ ஒன்று, இன்னதென்று தெரியாத ஒன்று அவனுடைய ஆகிருதியில் வெளிப்படுவது போல் இருந்தது. மந்திரத்தால் கட்டுண்டது போல் என் பார்வை அவன் மீது நட்டிருந்தது. கல்ப கோடிகாலம் உறைந்த என் குள்ளனின் கண்களால் அவனைப் பார்த்து பிரமித்து நின்றேன். அவன் பேசவே இல்லை. மற்றவர்கள் தான் பேசினார்கள். ஒரே ஒரு தடவை இளவரசர் ஏதோ சொல்வதைக் கேட்டு புன்முறுவல் பூத்தான் அவன். அதை ஏன் புன்முறுவல் என்று சொல்கிறேனென்று தெரியவில்லை. இன்னொரு முகத்தில் அந்தப் பாவனையைப் பார்த்தால் புன்சிரிப்பு என்று தான் சொல்வோம். என்னைப் போல அவனும் புன்சிரிப்பு தெரியாதவன் என்று தான் தோன்றுகிறது. மற்றவர்களைப் போல வழவழவென்று முகம் இல்லை அவனுக்கு. அவன் பச்சைக் குழந்தையல்ல; புராதனமான இனத்தைச் சார்ந்தவன். ஆனால் என் இனத்தின் பழமை அதற்கு இருக்க முடியாது. அவனுக்குப் பக்கத்தில் இளவரசர் தோற்றம் எடுக்கவில்லை. என் எஜமானரிடம் எனக்குப் பெருமிதம் எவ்வளவோ இருந்தாலும் இதைச் சொல்லாமல் இருக்க முடியுமோ?

இவன் சண்டை போடும் பொழுது பார்க்க வேண்டுமென்று ஆசை எனக்கு.

முக்கியமான சண்டை நாளைக் காலைதான். எங்கள் இரண்டு சேனைகளும் ஒன்று சேர்ந்தவுடனேயே தாக்கியிருக்க வேண்டுமென்று இளவரசரிடம் நான் சொன்னேன். லொடோவிகோ இளைப்பாறி தன் இறைந்த சேனைகளை திரட்டிக் கொள்ள சந்தர்ப்பம் கொடுக்கக் கூடாது என்று என் அபிப்ராயம் (லொடோவிகோவிற்கு இந்த சந்தர்ப்பம் இப்பொழுது கிடைத்துவிட்டது) ஆனால் இளவரசர் சேனைகளுக்கு ஓய்வு வேண்டு மென்று சொல்லிவிட்டார். ஆனால் அதுமட்டுமில்லை. எதிரிகளுடன் கூட சுத்த வீரத்துடன் நடந்து கொள்ள வேண்டுமாம். இவ்வளவு முக்கியமான சண்டையைத் தொடங்குமுன் அணிவகுத்து நிற்க எதிரிகளுக்கு நேரம் தர வேண்டுமாம். இப்படிச் செய்வது சரியல்ல நியாயமல்ல என்றெல்லாம் நான் சொன்னேன். சரியோ, இல்லையோ நான் சுத்த வீரன். அப்படித்தான் நடக்க வேண்டும். உனக்கு இந்த அவசியம் கிடையாது என்று சொல்லி விட்டார். நான் தலையை அசைத்தேன். ஒரு அலாதியான பிரகிருதியை எப்பொழுதுமே புரிந்து கொள்ள முடியவில்லை. இதைப் பற்றி பொக்கரோஸா என்ன நினைக்கிறானோ?

இல்டோரோ இந்த ஓய்வை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டுவிட்டான் என்பதற்கு சந்தேகமே இல்லை. இங்கிருந்து எல்லாவற்றையும் நாங்கள் பார்க்க முடிந்தது. உபரியான படைகள் கூட அவனுக்குப் பலமாக வந்துவிட்டன. ஆனால் வெற்றி என்னமோ எங்களுக்குத் தான். அவன் எத்தனை ஆட்களைத்தான் சேர்க்கட்டுமே. சேர்க்கச் சேர்க்க எங்கள் கத்திகளுக்கு இரையும் குவியும். பகைவர்கள் பலம் பெறப்பெற வெற்றியும் பெரிதாக ஆகும். எப்படியும் தோற்கடிக்கப்பட்டு விடுவோம் என்று

உணர்ந்திருந்தால் இவ்வளவு ஆட்களை திரட்டியிருக்க மாட்டான் அவன். ஆனால் அவனுக்கு அனாவசிய நம்பிக்கை அதிகமாக இருக்கிறது. கழுதையைப் போல பிடிவாதமும் அதிகம்.

இதனால் ஆபத்து ஒன்றும் கிடையாது என்று நினைப்பதும் தவறு. தந்திரமும் வஞ்சகமும் நிறைந்தவன். இரக்கமில்லாதவன். முதல்தர தளபதி. போர் இவனை திடீரென்று திகைக்க வைக்காமல் இருந்திருந்தால் அவன் மிகவும் பயங்கரமான எதிரியாகத்தான் இருந்திருப்பான். என்னுடைய திடீர் தாக்குதலின் எதிர்ப்புகள் இந்த யுத்தம் முழுவதும் எங்களுக்கு ஞாபகமில்லாமல் போகாது இது.

நாளை தாக்குதல் திட்டத்தின் விவரம் பூராவும் எனக்குத் தெரியும். இளவரசரின் படைகள் எதிரிகளின் மையத்திலும் பொக்கரோஸாவின் படை இடது பார் சுவத்திலோ தாக்கப் படுகின்றன. எங்களுக்கு இரண்டு படைகள் இருப்பதால் இரண்டு போர் முனைகள் அமைத்துக் கொள்வது இயல்பு தான். பகைவர்கள் இரண்டு முனைகளிலும் போரிட்டாக வேண்டும். அதனால் அவர்களுக்கு கஷ்டங்களும் அதிகம். எங்களுக்கு இல்லை. விளைவைப் பற்றி ஐயமென்ன? இருந்தாலும் சில நஷ்டங்களுக்கு தயாராகத்தான் இருக்கவேண்டும். இரத்தக் களறி அதிகமாகத் தான் இருக்கும். ஆனால் தியாகமின்றி எதை சாதிக்க முடியும்? இந்தச் சண்டை மிகவும் முக்கியமானது. போர் இனிப் போகிற போக்கு இதன் விளைவைப் பொறுத்துத் தான் இருக்கிறது. இத்தகைய நிலையில் ஒரு அளவுக்கு அதிகமாகவே தியாகம் செய்வது நல்லது தான்.

போர் இரக[illegible]யிட்ட புத்தகம் போல மர்மமாக இருந்தன. [illegible]பொழுது எனக்கு [illegible]வர்ச்சி ஏற்பட்டு விட்டது. போர்க்களத்தில் காணும் வாழ்க்கையின் மேடு பள்ளங்கள் என்னை பிரமாதமாக ஊக்குவிக்கின்றன. வாழ்க்கை எவ்வளவு வியப்புகள் நிறைந்தது. யுத்தத்தில் கலந்து கொள்ளும்போது உடலும், ஆன்மாவும் சுயேச்சையில் குதூகலிக்கின்றன. மனிதன், மனிதனே புதியவனாக ஆகிவிடுகிறான். இத்தகைய ஆனந்தமும் சுயேச்சையும் எனக்கு உண்டானதே இல்லை. என் உடலே காற்றைப் போல இலேசாகி விட்டிருக்கிறது.

நாளைக்கு! நாளைக்கு! குழந்தையைப் போல சண்டையை நினைக்கும்போதே ஒரு தனி ஆனந்தம் உண்டாகிறது.

அவசர அவசரமாக ஏதோ கிறுக்குகிறேன். அசாதாரணமான வெற்றி எங்களுக்கு கிடைத்துவிட்டது. எதிரிகள் தாறுமாறாக ஓடுகிறார்கள். சிதைந்த துருப்புகளை மீண்டும் கூட்ட பயனில்லாமல் முயலுகிறார்கள். நாங்களும் துரத்திக் கொண்டு ஓடுகிறோம். இதுவரையில் வெல்லப்படாத மொன்டான்ஸா நகருக்குச் செல்லும் பாதை எங்கள்முன் திறந்து கிடக்கிறது. நேரம் கிடைக்கும் பொழுது இந்த அதிசயமான சண்டையைப் பற்றி விவரமாகச் சொல்கிறேன். சம்பவங்கள் தானே பேசும் பொழுது வார்த்தைகளுக்கு பொருள் ஏது?

# 17

இப்பொழுதுதான் எனக்கு எழுத ஓய்வு கிடைத்திருக்கிறது. பலநாட்களாக சண்டையிலேயே முனைந்திருந்ததால் வேறு எதையும் பற்றி நினைக்கவே முடியவில்லை. இரவில் கூடாரம் அடிக்கக் கூட நேரமில்லாமல் திராக்ஷைத் தோட்டங்களுக்கும், ஆலிவ் தோட்டங்களுக்கும் இடையில் வெட்ட வெளியிலேயே தங்கி கற்களைத் தலையணையாக வைத்து போர்வைகளை இழுத்துப் போர்த்திக் கொண்டு இரவுகளைக் கழிக்க வேண்டியிருந்தது. விந்தையான வாழ்க்கை. இப்பொழுது கொஞ்சம் நிம்மதி கிடைத்திருக்கிறது. இளவரசர் சற்று ஓய்வு கிடைத்தால் தேவலை என்கிறார். அதுவும் சரிதான். வெறும் வெற்றிகளே கிடைத்துக் கொண்டிருந்தால் நாளடைவில் அதுவும் சோர்வு தந்தாலும் தரலாம்.

நகரம் இன்னும் மூன்று மைல் தான் இருக்கிறது. கோபுரங்களும், கோட்டைகளும், மாதா கோயில்களும், மணிமண்டபங்களும் தெரிகின்றன. மொன்டான்ஸாவின் புராதன அரண்மனை நடுவில் சிறு வீடுகளுக்கு இடையே உயர்ந்து காட்சியளிக்கிறது. எல்லாவற்றையும் சுற்றி ஒரு பெரிய மதில், கொள்ளைக்காரர்களின் கூட்டைப்போல இருக்கிறது பார்த்தால். மாதா கோயில்களின் மணியோசை கேட்கிறது. பாதுகாக்கும்படி கடவுளை அழைக்கின்றனவோ என்னவோ? இந்த முறையீட்டைக் கேட்டு அவர் சாதகமாக எதுவும் செய்ய முடியாமல் நாங்கள் பார்த்துக் கொண்டு விடுவோம். இல்டோரோ எங்களுக்கும் நகரத்துக்கும் இடையே தன் படைகளின் மிச்சங்களை கொண்டு வைத்திருக்கிறான். கையில் கிடைத்த ஆட்களை திரட்டி விட்டான் அவன். ஆனால் போதவில்லை. அவன் அடைந்த சேதமோ ஏராளம். மீண்டும் விளைவு பற்றி சந்தேகமில்லை. இவனைப் போன்ற ஒரு பெரிய படைத்தலைவன் தன் நிலைமை மோசமாய் இருப்பதை உணரத்தான் வேண்டும். ஆனால் விதியை ஏமாற்ற தன் பலம் எல்லாவற்றையும் திரட்டி முடிந்த வரையில் பார்த்து விடலாம் என்று அவன் எண்ணம் போல் இருக்கிறது. நகரத்தைக் காக்க இதுதான் அவனுடைய கடைசி முயற்சி. வீண்முயற்சி. ஒரு வாரம் முன்னாலேயே மொன்டான்ஸாவின் விதி தீர்மானிக்கப்பட்டு விட்டது. செய்து முடிக்க வேண்டியது தான் மிச்சம். விவரமாக அந்த ஈடில்லாத சண்டையைப் பற்றி சற்று சொல்லட்டுமா?

நான் சொன்னது போலவே எங்கள் இரண்டு சைன்யங்களும் சேர்ந்து தாக்குதலை ஆரம்பித்தன. சரிவிலிருந்து பார்க்கும் பொழுது இது கண்கொள்ளாத காட்சியாக இருந்தது. எல்லா புலன்களுக்கும் விருந்திட்டது. போர் இசை முழங்க கொடிகள் அவிழ்ந்து காற்றில் அலை பாய்ந்து ஆடின. வெள்ளிக் கொம்பு அந்த நாட்டுப்புற வெளி முழுவதும் எதிரொலித்தது. காலாட்படை சரிவில் இரக்கத்தில் சலசலவென்று பாய்ந்தது. எதிரிகள் படை பயங்கரமாக, நெருக்கமாக அணி செய்து காத்திருந்தது. அதன் இரு மருங்கிலும் எங்கள் சைன்யங்களும் அடைந்து நெருக்கின. தொடங்கிய முதலே ஒரே இரத்தப் பிரவாகமாகத் தொடங்கிற்று. இரு சார்பிலும் சேதங்கள் இருந்தன. காயம் பட்டவர்கள் ஊர்ந்து அப்பால் போக முயலும் போது

குத்துண்டும், மிதியுண்டும் மரணக் குரல் கொடுத்து மாண்டனர். சண்டை இங்கும் அங்குமாக ஊசலாடிற்று. சில சமயம் எங்களுக்கு ஏற்றம். சில சமயம் பகைவர்களுக்கு ஏற்றம். ஆரம்பத்தில் பொக்கரோஸா எங்கள் வரிசையிலேயே வருவது போல் பாசாங்கு செய்தான். ஆனால் மெள்ள மெள்ள அவன் படைகள் பெரிய வளைவாக அகன்று எதிரிகளின் மீது பாய்ந்தன. இந்த எதிர்பாராத தந்திரம் அவர்களை தற்காப்பு செய்து கொள்ளக் கூட முடியாமல் திணற அடித்தது. வெற்றி கையெட்டில் இருப்பது போல் இருந்தது. நேரமும் அதிகமாகி சூரியன் உச்சிக்குப் போய் விட்டான். திடீரென்று ஒரு பயங்கரம் நடந்தது. ஆற்றுக்கு அருகேயிருந்த எங்கள் வீரர்கள் சோர்ந்தார்கள். இல்டோரோவின் வலது அணி அவர்களை நெருக்கிற்று. அவர்கள் எதிர்த்து நிற்க முடியாமல் பின் தள்ளப்பட்டார்கள். யுத்த உணர்ச்சியையே இழந்தது போல, சாவதைத் தவிர வேறு எதற்குமே தயாராக இருப்பது போல பின் வாங்கிச் சென்றார்கள். என் கண்களை நம்பவே முடியவில்லை எனக்கு. எதிரிகளைப் போல நாங்கள் இரு மடங்கு இருந்ததால் அங்கு என்ன நடக்கிறது என்று எனக்குச் சரியாகப் புரிந்து கொள்ளக்கூட முடியவில்லை. என் கோழைத்தனத்தைக் கண்டு என் இரத்தம் கொதித்தது. கூச்சல் போட்டேன். கத்தினேன். காலால் பூமியை ஓங்கி அடித்தேன். கையாலாகாத கோபத்தில் கைகளை மூடி குத்துவது போல பயமுறுத்தினேன். வாயில் வந்தபடி திட்டினேன். வெறுப்பையும் கோபத்தையும் தொண்டை கிழியக் கத்தினேன். ஆனால் என்ன பயன். அவர்கள் காதில் விழவில்லை. பின் வாங்கிக் கொண்டே இருந்தார்கள். பைத்தியம் பிடித்து விடும் போல இருந்தது எனக்கு. அவர்களுக்கு உதவவும் யாரும் வருவதாகக் காணோம். அவர்களுடைய அவதியை யாரும் கவனித்ததாகவே தெரியவில்லை.

திடீரென்று மையப் படைகளை நடத்திக் கொண்டிருந்த இளவரசர் பின்னாலிருந்த துருப்புகளுக்கு சைகை செய்வது தெரிந்தது. உடனே ஆற்றை நோக்கி ஒரு சாய்வாக அவர்கள் பாய ஆரம்பித்தனர். கொஞ்சம் கொஞ்சமாக எதிரிகளின் படையைப் பிளந்து கடைசியில் சந்தோஷ முழக்கத்துடன் ஆற்றின் கரையை அடைந்தார்கள். எதிரிகள் பின்வாங்கி ஓடவும் முடியவில்லை. சுமார் 700 எதிரி வீரர்கள் முற்றிலும் வளைக்கப்பட்டு தப்பிக்க முடியாமல் திணறினர்.

எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. இந்த மாதிரி ஒரு சம்பவம் நடக்கப் போகிறது என்று சந்தேகப்படவில்லை. என் ஹிருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. ஆனந்தத்தில் மார்பு விம்மிற்று. அப்பாடா என்று விடுதலைப் பெருமூச்சுவிட்டேன். எங்கள் துருப்புகள் எல்லாப் பக்கங்களிலிருந்தும் எதிரிகளை நெருக்கின. மாட்டிக் கொண்ட படை ஆற்றங்கரைக்கும், முன்னணிக்கும் இடையே அங்குமிங்கும் ஓடி தவித்தது. ஆனால் கடைசியில் நாங்கள் நெருக்கிய நெருக்கில் நகரக்கூட முடியாமல் ஸ்தம்பித்துப் போய்விட்டார்கள். நாங்களும் அழிக்க ஆரம்பித்தோம். இத்தகைய படுகொலையை நான் பார்த்ததே இல்லை. ஆற்றை நோக்கி விரட்டப்பட்ட அத்தனை பேரும் எலிகளைப் போல முழுகடிக்கப்பட்டனர். ஓடும் நீரில் கையை அடித்தும், உயர்த்தியும் குய்யோ முறையோ என்று

கத்திக் கொண்டு அருமை உயிரைக் காக்கத் துடித்தார்கள். வீரர்கள் நடந்து கொள்வது போலக் கூட இல்லை. யாருக்கும் நீந்தவும் தெரியவில்லை. அதற்கு முன் தண்ணீரே பார்த்ததில்லை போல் இருந்தது. கரைக்கு வந்தவர்களை வெட்டிச் சாய்த்தோம். அக்கரை போக முயன்றவர்களை நீரின் வேகம் அடித்துக் கொண்டு போய் விட்டது. ஒரு ஆள் கூட உயிரோடு தப்பவில்லை.

எங்கள் அவமானம் ஒரு பெரும் வெற்றியாக மாறிவிட்டது, சூட்டோடு சூடாக எங்கள் மையப் படை எதிரிகளைத் தாக்க இடது படையும் பின் தொடர, வலது பக்கத்தில் பொக்கரோஸாவின் படைகள் புதிய சக்தியுடன் எதிரிகளை சீவித் தள்ளின. போதும் போதாததற்கு குதிரைப் படைகள் ஈட்டி ஏந்தி குன்றின் மேலிருந்து இந்த களேபரத்தில் சேர்ந்து கொண்டன. அவை வந்ததுமே இல்டோரோவின் சோர்ந்த படை அப்படியே இடுப்பு ஒடிந்தாற் போல ஆடிற்று. விரைவில் ஒழுங்கில்லாத சண்டையாக அவர்கள் முயற்சி மாறிற்று. நாங்களும் விடாமல் குதிரைப் படைகளுடன் அவர்களை துரத்தி அடித்தோம். இணையற்ற இந்த வெற்றியை கடைசித் துளியைக் கூட விட்டு விடாமல் பிழிந்து குடிக்க வேண்டுமென்று வெறி கொண்டிருந்தோம் நாங்கள். இளவரசர் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் விடாமல் பயன்படுத்திக் கொண்டு விடுவது என்று தீர்மானமாக இருந்தார். அவருடைய படையில் ஒரு பகுதி வேறு திசையில் அனுப்பப்பட்டது, பின்வாங்கி ஓடும் எதிரிகளை முந்திக்கொண்டு மடக்க வேண்டுமென்று விரைந்தது அது. மலைகள் அதை மறைத்ததால் பிறகு என்ன நடந்தது என்று எங்களுக்குத் தெரியவில்லை. போர் நடந்த சமதரைக்கு அந்தண்டைப் பக்கத்தில் திராக்ஷைக் கொடிகள் போர்த்திய குன்றுகளுக்கு அப்பால் மறைந்துவிட்டது அது.

எங்கள் பாசறையில் பரபரப்புத் தொடங்கி விட்டது. குதிரைகளை வண்டிகளில் பூட்டினார்கள். சாமான்களையும், ஆயுதங்களையும் வைத்து அடைத்து அங்குமிங்கும் எல்லோரும் ஓடினார்கள். இளவரசரின் கூடாரம் வைத்திருந்த வண்டியின் பின்னால் நான் உட்கார்ந்திருந்தேன். சரிவில் வண்டிகள் இறங்கிப் போர்க்களத்தில் இறங்கின. களம் சூன்யமாக இருந்தது. செத்தவர்களும், காயம் பட்டவர்களும் நெருக்கமாக விழுந்து கிடந்தார்கள். சில சமயம் வண்டிகள் அவர் மீது ஏறியே செல்ல வேண்டியிருந்தது. செத்துக் கொண்டிருந்தவர்கள் ஓயாமல் முனகுவதும் பெருமூச்சு விடுவதும் கேட்டது. அவர்களில் எங்கள் படையைச் சேர்ந்தவர்கள் தங்களையும் அழைத்துப் போகுமாறு குரல் கொடுத்தார்கள். ஆனால் அது சாத்தியமில்லை. சேனைகளைப் போய் நாங்கள் பிடிக்க வேண்டியிருந்தது. போர் வந்தாலே உள்ளம் மரத்து விடுகிறது. கல்லாங்காய்ப் பட்டு விடுகிறது. இதயம் கல்லாகி விடுகிறது. இந்தப் பிணக்குவியல்களுக்கிடையே சில குதிரைகளும் கிடந்தன. ஒரு குதிரை வயிறு பிளந்து அதன் குடல்கள் வெளியே மண்ணில் விழுந்து கிடந்தன. இந்தக் கண்றாவியைக் கண்டதும் எனக்கு வயிறு குமட்டிற்று. உடம்பெல்லாம் என்னமோ செய்தது. வேகமாக ஓட்டும்படி வண்டி ஓட்டுபவரிடம் கத்தினேன். சாட்டையை சொடுக்கினான் அவன்.

வேடிக்கையாக இருக்கிறது. சில சமயங்களில் நான் மிகமிக உணர்ச்சி வசப்பட்டு விடுகிறேன். சிலவற்றை என்னால் சகித்துக் கொள்ளவே முடிவதில்லை. பிரான்ஸிஸ்கோவின் குடலை நினைக்கும் பொழுது இந்த உணர்ச்சி தான் உண்டாகிறது. மிகமிக இயற்கையான சில விஷயங்கள் உண்மையில் சகிக்க முடியாத குமட்டலை உண்டு பண்ணுகின்றன.

பொழுது சாய்ந்து கொண்டிருந்தது. இந்த மாதிரியான ஒரு நாளுக்குக் கூட முடிவு உண்டு. சூரியன் மேற்கு குன்றுகளுக்கு இடையே இறங்கிக் கொண்டிருந்தது. இவ்வளவு வீரமும் புகழும் தோல்வியும் கண்ட போர்க்களத்தின் மீது அதன் கடைசிக் கிரணங்கள் விழுந்தன. ஆய்ச்சலில் ஆடி ஆடிச் சென்று கொண்டிருந்தது வண்டி. அந்தி மங்கல் விழுந்து விட்டது.

போர்க்களம் இருளில் முடங்கிற்று. அங்கு நடந்த இரத்தமயமான நாடகம் அதற்குள் சரித்திரத்தின் ஒரு பகுதியாக ஆகிவிட்டது.

## 18

**எ**ழுதுவதற்கு எனக்கு நிறைய நேரம் இருக்கிறது. ஓயாமல் மழை பெய்கிறது. வானமே பொத்துக் கொண்டார் போல் நாள்கணக்கில் கொட்டிக் கொண்டிருக்கிறது.

இதுவும் அலுப்பாகத்தான் இருக்கிறது. பாசறையில் எங்கு பார்த்தாலும் அழுக்கு சேறு. கூடாரத்துக்கு இடையேயுள்ள போக்குப் பாதைகளில் முழங்கால் சேறு. இந்தச் சேற்றில் குதிரை, மனித மலங்கள் மிதக்கின்றன. எதைத் தொட்டாலும் ஈரம், நாற்றம். வெளியில் சற்று போனாலே தொப்பலாக நனைந்துவிடுகிறது. கூடார மேல் பக்கமெல்லாம் ஒரே ஒழுக்கு, உள்பக்க மெல்லாம் ஒரே பாகுபோல் இருக்கிறது. மனதுகூட இதைக் கண்டு ஓய்ந்து விடுகிறது. ஒவ்வொரு நாளும் நாளைக்கு சரியாகி விடும், நாளைக்கு சரியாகிவிடும் என்ற நம்பிக்கையிலேயே போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் காலையில் கண்ணைத் திறந்து கொண்டதுமே கூடாரத்தின் மேல் படபடவென்று ஓசை கேட்கிறது.

என்னத்துக்கு இந்த ஓயாத மழை. போருக்கு இது பெரிய தடை. அதுவும் வெற்றியின் பலன்களை எல்லாம் திரட்டுகிற இந்த வேளையில்....

படைவீரர்கள் கூட உற்சாகமாக இல்லை. பகல் முழுவதும் தூங்குகிறார்கள். சொக்கட்டான் ஆடுகிறார்கள். இந்த மாதிரி காலத்தில் போர் உணர்ச்சி எங்கு இருக்கப்போகிறது? இல்டோரோ இந்த சமயத்தில் தன் படைகளை பலப்படுத்திக் கொண்டிருப்பான். ஆனால் நாங்களோ... இதனால் கவலை ஒன்றும் இல்லை. இருந்தாலும் எரிச்சலாகத் தான் இருக்கிறது.

மழையைப் போல ஒரு படையின் வீரத்திற்கு பகை வேறு இருக்கவே முடியாது. போரின் எழுச்சி, மின்னல், ஊக்கம் எல்லாம் தொலைந்து

விடுகின்றன. ஆனால் ஓய்வில்லாத இந்த இரத்தத் திருவிழாவிற்கு ஒரு எதிர்விளைவும் இருக்கத்தானே வேண்டும். போர் ஒரு பொழுதுபோக்கு அல்ல. சாவு, தோல்வி, அழிவு போர் வாழ்க்கை யாருக்கும் ஒத்துக் கொள்ளாது. நம்முடைய எதிரி எப்பொழுதுமே நம்மைவிடப் பலக் குறைவாக இருக்கமாட்டான். கஷ்டங்கள், துயரங்கள், பலவகை இன்னல்கள் எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ள ஒருவன் பயிலவேண்டும். இது மிக மிக அவசியம்.

இந்த மன ஓய்ச்சல் துருப்புகளிடையே பரவினால் மிகவும் ஆபத்தை விளைவிக்கும். கடைசி வெற்றி வரும் வரையில் எவ்வளவோ செய்ய வேண்டியிருக்கிறது. எதிரிகள் முற்றிலும் முறியடிக்கப்படவில்லை. ஆற்றங்கரை தோல்விக்குப் பிறகு மிகத் திறமையுடன் பின்வாங்கி நாங்கள் அவர்களைப் பிடிக்காமல் தடுத்து விட்டார்கள். இப்பொழுது புதிய பலம் கூடத் திரட்டியிருப்பார்கள். பழைய யுத்த ஆர்வமெல்லாம் மீண்டும் எங்களுக்குத் திரும்பி வந்தால்தான் எங்களை நசுக்க முடியும்.

ஆனால் இளவரசர் சிறிதுகூட சளைக்கவில்லை. போரை எந்த வகையிலும் விரும்புகிறவர் அவர். அவருடைய தன்னம்பிக்கையும், நிதானமும், சுறுசுறுப்பும், பெருமிதமும் மாறவே இல்லை. எப்பொழுதும் தைரியம். எப்பொழுதும் வெற்றியில் நிச்சயம். ஆச்சரியமான போர்வீரர் அவர். யுத்த களத்தில் நானும் அவரும் ஒத்தே இருக்கிறோம்.

ஒரே ஒரு குறைதான் அவர் மேல் எனக்கு. சண்டையில் என்னை கலந்து கொள்ள விடவில்லை அவர். ஏன் மறுக்கிறார், ஏன் தடுக்கிறார் என்றே புரியவில்லை. ஒவ்வொரு சண்டைக்கும் முன்னால் அவரிடம் கெஞ்சி மன்றாடி இருக்கிறேன். ஒரு தடவை மண்டியிட்டு அவர் கால்களைக் கண்ணீரால் நனைத்தேன். ஆனால் அவர் கேட்காதது போல் இருந்து விடுவார். அல்லது புன்சிரிப்புடன் நான் உன்னை இழக்க முடியுமோ? நீ மிகவும் அரிய ஆள் இல்லையா என்று சொல்லி விடுவார். எனக்கு என்ன நேர்ந்தாலும் நான் தான் கவலைப்படவில்லையே. மற்ற யாவரையும் விட சண்டை, சண்டை என்று தாபத்துடன் துடிப்பதை அவர் புரிந்து கொள்ளவில்லை. போர் எனக்கு விளையாட்டல்ல. உண்மை. போரிட்டு கொல்லத் துடிக்கிறேன் நான். புகழில் ஆசையில்லை. ஆனால் யுத்தம் என்ற செயலில் தான் ஆசை. ஆனால் என்னைச் சுற்றி மனிதர்கள் வீழ்ந்து சாவும் அழிவும் மண்டுவதைப் பார்க்க ஆசை அவர்களுக்கு. என்னைப் பற்றி அவருக்கு என்ன தெரியும்? மது ஊற்றத் தான் எனக்குத் தெரியும் என்று அவருக்கு எண்ணம். என் துடிப்பு அவருக்குத் தெரியவில்லை. எல்லோரும் வீரச் செயல்கள் புரியும் போது நான் மாத்திரம் தனியாக நிற்க வேண்டுமாம். எனக்கு அவமானமாக இருக்கிறது. ஒரு ஆளைக் கூட நான் கொல்லவில்லை. நான் படுகிற வேதனை அவருக்கா தெரியும்?

ஆகவே நான் சந்தோஷமாக இருக்கிறேன் என்று சொன்னால் அவ்வளவும் உண்மை இல்லை.

இளவரசரைத் தவிர மற்றவர்கள் என்னுடைய வீரத்தைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கும் அது எவ்வளவு வேரூன்றி இருக்கிறது என்று தெரியாது. நான் கத்தியும் கபடாவும் ஏந்திப் போவதைப் பார்க்கிறாரே தவிர நான் போரில் கலந்தால் என்ன செய்வேன் என்று அவர்களுக்குத் தெரியாது.

இங்கு பலரை எனக்குத் தெரியும். பிரபுக்கள், வீர வமிசத்தவர்கள், போர் அதிகாரிகள் இப்படி. எல்லோரும் அசல் வீரர்கள்.

டான்ரிகார்டோ இந்த சண்டையில் பண்ணுகிற ஜம்பம்தான் எனக்கு எரிச்சலை உண்டுபண்ணுகிறது. அவன் இல்லாத இடம் கிடையாது. அதுவும் இளவரசர் காது கேட்கும் படியாகத் தற்பெருமை அடித்துக் கொள்வதும் நடைபோடுவதும் மட்டமான ஹாஸ்யங்களைச் சொல்லி சகாக்களை சிரிக்க வைப்பதும் சகிக்கவில்லை. அவனைப் பார்த்தாலே முட்டாள் மாதிரி இருக்கிறது. குடியானவன் மாதிரி சிவப்பு மூஞ்சி. அவனுடைய வெள்ளைப் பற்கள் எதைப் பார்த்தாலும் சிரிக்கும். அவன் தலையை ஒரு பக்கமாகச் சாய்ப்பதும் கறுப்பு தாடியின் சுருளை விரலால் முறுக்குவதும் யாரும் பொறுக்க முடியாத செய்கை. இளவரசர் எப்படித்தான் இவனை சகித்துக் கொள்கிறாரோ?

அதைவிட சுவையில்லாத இந்த முரடனிடம் இளவரசி சொக்கிக் கிடக்கிறாளே, அதைச் சொல்லுங்கள். நல்ல குலமாக இருந்தாலும் நல்ல ருசி இல்லாதவன். ஆனால் இதெல்லாம் எனக்கென்ன? அவனை யாராவது தைரியசாலி என்று சொன்னால் எதைச் சொல்கிறார்கள் என்று புரியத்தான் இல்லை எனக்கு. ஆற்றங்கரையில் அவனும் சண்டை போட்டான். ஆனால் பிரமாதமாக ஒன்றையும் காணோம். நான் அவனைப் பார்க்கக் கூட இல்லை. ஆனால் எல்லோரிடமும் தான் எவ்வளவு வீரமாக சண்டையிட்டான் என்று பீற்றிக் கொண்டிருந்தான். அவன் வாயைத் திறந்தால் தான் எல்லோரும் நம்பி விடுகிறார்கள். அவன் வீரனென்று நான் நம்பவில்லை. சகிக்க முடியாத வாயாடி. இவன் வீரனாம். நினைத்தாலே சிரிப்பு வருகிறது.

ஆனால் இளவரசர் மகாவீரர். எப்பொழுதும் யுத்த களத்திலேயே இருப்பார். தூரத்திலிருந்தே அவருடைய வெள்ளைக் குதிரையையும் தனியாகத் திரிகிற முடியின் சிறகையும் நன்கு பார்க்கலாம். பகைவர்கள் கூட அவரை நன்றாகப் பார்க்க முடியும். எப்பொழுதும் சாவுக்குத் துணிந்து நிற்பார். கைகலப்பு யுத்தத்தில் அவருக்கு மிகவும் பிரியம். பொக்கரோஸாவும் பெரிய வீரன் தான். ஆனால் அவன் சண்டையிடும் வியப்பை வர்ணிக்க இந்த வார்த்தை போதாது. அவனுடைய தந்திரங்கள் எப்பேர்ப்பட்ட வீரனையும் கலக்கி விடுமாம். இதில் ஆச்சரியம் என்னவென்றால் போர்க்களம் அவனுக்கு வெறியையோ கலவரத்தையோ ஊட்டுவதில்லை. உதட்டைக் கடித்துக் கொண்டு நிதானமாக முறையாக கொலைத் தொழிலை செய்து கொண்டே வருவான். அடிக்கடி கீழேயே நின்று சண்டை போடுவானாம். அப்பொழுதுதான் சீவுவதற்கு சௌகரியம். இரத்தக் களறியைக் கண்டால் அவனுக்கு ஆனந்தம். மனித உடலை இரண்டு துண்டாக வெட்டுவதில்

களி கொண்டு திளைக்கிறான் அவன். அவனோடு ஒப்பிடும் போது இளவரசரும் மற்றவர்களும் போடுகிற சண்டை பச்சைப் பிள்ளை விளையாட்டைப் போலத்தான் இருக்கும். இதெல்லாம் நான் சொல்லக் கேட்டதுதான். நான்தான் சண்டை நடக்கிற இடத்திலிருந்து வெகுதூரத்தில் இருக்கிறேனே. இத்தனை சந்தர்ப்பங்கள் தவறிப் போய் விட்டதை நினைத்தால் என் துயரம் பொங்கிக் கொண்டு வருகிறது. இளவரசரையும் பொக்கரோஸாவையும் சொன்ன வாயால் டான்ரிகார்டோவை சொல்ல முடியுமா?.... என்ன கேவலம்.

பொக்கரோஸாவும் அவன் படைகளும் போகிற வழியிலெல்லாம் தீ வைத்து சூறையாடிக் கொண்டே போகிறார்கள். அவசியம் என்று இளவரசர் நினைப்பதை விட சற்று அதிகமாகவே இதெல்லாம் நடக்கிறது. கொள்ளை யுத்தத்தின் ஒரு அங்கம் என்று அவரும் புரிந்து கொண்டிருக்கிறார். அவர்கள் கால் வைத்த இடத்தில் உயிரோடு ஒன்றையுமே விட்டு வைப்பதில்லை. இளவரசருக்கு இது அவ்வளவு சம்மதமில்லை என்றுகூட நான் கேள்விப் பட்டேன். ஆனால் எனக்கென்னவோ பொக்கரோஸாவின் கொள்கைதான் பிடிக்கிறது. எதிரி நாடு எதிரி நாடு தான். அதை அப்படியேதான் நடத்த வேண்டும். இது யுத்த தருமம். கொடுமையாக இருக்கலாம். ஆனால் யுத்தமும் கொடுமையும் சேர்ந்தேதான் செல்லுகின்றன. நாம் யாரோடு போரிடுகிறோமோ அவர்களை அழித்தே விட வேண்டும். அந்த நாடு தலை தூக்காதவாறு நாசமாக்க வேண்டும். பின்னணியில் எதிர்ப்பை மிஞ்சும்படியாக விட்டுவிடக்கூடாது. பொக்கரோஸா செய்வதுதான் சரி.

சில சமயங்களில் இளவரசர் எதிரியின் நடுவில் தான் இருக்கிறோம் என்பதையே மறந்து விடுகிறார். அவர் ஜனங்களை நடத்துவதைக் கண்டால் அதை யாருமே அங்கீகரிக்க மாட்டார்கள். ஒரு தடவை ஒரு மலைக் கிராமத்துக்கு வந்தபோது கிராமத்தாரின் நாட்டுப்புற விருந்தை பார்க்கவும், அவர்களுடைய குரல் இசை கேட்கவும் தங்கி விட்டார். அவர்களுடைய இசையில் என்ன கண்டாரோ தெரியவில்லை. அவர்களுடன் பேசக்கூடத் தொடங்கி விட்டார். அறுவடை காலத்து விழா ஏதோ கொண்டாடிக் கொண்டிருந்தார்களாம். அவர் உழுத பூமியில் ஒரு கர்ப்பிணி மதுவையும், ஆலிவ் எண்ணெயையும் ஊற்றினாள். அதைச் சுற்றி எல்லோரும் வட்டமாக உட்கார்ந்தார்கள். ரொட்டியும், மதுவும், ஆட்டுப் பால் ஆடையும் அருந்தினார்கள்.

இளவரசரும் அவ்ர்களோடு உட்கார்ந்து சாப்பிட்டார். அவர்கள் கொடுத்த அழுக்குப் பாலாடையை பிரமாதமாகப் புகழ்ந்தார். அந்த அழுக்கு மண் கோப்பையின் மதுவைக் கொடுத்ததும் உதட்டில் வைத்து சூப்பிக் குடித்தார். இந்தக் கண்றாவியைப் பார்க்கவே முடியவில்லை. இந்த மாதிரி எல்லாம் அவர் நடந்து கொண்டதே இல்லை. இப்படி நடந்து கொள்வார் என்று நான் எதிர்பார்க்கவுமில்லை. ஏதாவது ஒருவகையில் வியப்பில் ஆழ்த்த தவறுவதே இல்லை அவர்.

ஏன் இந்தப் பெண் முதலில் அப்படிச் செய்தாள் என்று அவர்களைக் கேட்டார் அவர். உடனே அவர்கள் மென்று மென்று விழுங்கினார்கள். பதில் சொல்ல விரும்பவில்லை. நாட்டுப்புற சிரிப்பு சிரித்தார்கள். கடைசியில் ஒருவாறாக சொல்லி முடித்தார்கள். மறு வருடம் திராட்சையும் ஆலிவும் நிறையப் பெருக வேண்டுமென்பதற்காக அப்படிச் செய்ய வேண்டியது அவசியமாம். சொல்லும் போதே சிரிப்பு வருகிறது. இதெல்லாம் பூமிக்குத் தெரியப் போகிறதா? தாடியில் மதுத் துளிகள் மின்ன ஒரு கிழவன் இளவரசர் முன் வந்து அவரை நன்றாகப் பார்த்துக் கொண்டே "எங்கள் அப்பன், பாட்டன் எல்லோரும் இப்படித்தான் செய்தார்கள். நாங்களும் செய்கிறோம்" என்றான்.

அதன் பின்பு எல்லோரும் எழுந்து நடனமாட ஆரம்பித்தார்கள். சின்னது, பெரியது, கிழம் எல்லாம் தொம் தொம்மென்று கூத்தாடின. காடு வா, வா என்று அழைக்கிற அந்தக் கிழவன் கூட ஆடினான். தாங்களே செய்த குழலில் சிலர் பாட்டு வாசித்தார்கள். கலை வாசனையே இல்லாத இந்தப் பாட்டை எப்படித்தான் இளவரசர் ரசித்தாரோ? அவரும் டான்ரிகார்டோவும் (இவன் இல்லாத இடம் ஏது) ஒரு யுத்தம் நடக்கிறது, எதிரிகளின் இடையே இருக்கிறோம் என்ற நினைவே இன்றி வெகுநேரம் அங்கு தங்கியிருந்தார்கள். ஒப்பாரி வைப்பது போல அவர்கள் பாட ஆரம்பித்ததும், அப்பொழுதும் எழுந்திராமல் அந்தி மயங்கி, போக வேண்டிய நிர்பந்தம் வந்த பிறகு தான் எழுந்தார்கள். இருட்டிய பிறகும் அங்கு தங்கி இருப்பது ஆபத்து விளைவிக்குமென்று தோன்றிவிட்டார் போல் இருக்கிறது.

பாசறைக்கு வந்ததும் இருவரும் மாலையின் அழகை புகழ்ந்தார்கள். எல்லாம் தெரிந்த டான்ரிகார்டோ உடனே ஆஹா, ஓஹோ என்று ஆரம்பித்து விட்டான். நடு நடுவே அழுக்கு வீடுகள் நிறைந்த மலைக்கிராமத்திலிருந்து வரும் குழல், பாட்டு ஓசைகளை கேட்டு மயங்குவது போல அடிக்கடி நின்றான். ஆனால் அப்படி ஒன்றும் அந்த மாலைக்காட்சி அழகாக இல்லை.

அன்று இரவே இளவரசரின் கூடாரத்திற்கு இரண்டு விபசாரிகளை அழைத்து வந்து விட்டான் அவன். பட்டணத்திலிருந்து வந்தவர்கள் அவர்கள். எப்படியோ பாசறைக்குள் வந்துவிட்டார்கள். பெண் வாடை அதிகமாக இல்லாத இந்த இடத்தில் கொஞ்சம் நல்ல காசு கிடைக்குமென்று எண்ணம். அது மட்டுமில்லை. எதிரிகளோடு படுத்துக் கொள்வது தான் பொருத்தமாம். அவர்கள் இதைச் சொன்ன பொழுது இளவரசர் சற்று அதிர்ச்சி அடைந்தார். கோபம் வந்து அவர்களைத் துரத்தி விட்டு அந்த அசட்டுத்தனம் செய்ததற்காக டான்ரிகார்டோவை தண்டிப்பார் என்று நினைத்தேன். ஆனால் என்ன ஆச்சரியம். அவர் கடகடவென்று சிரித்தார். ஒருத்தியை மடிமேல் எடுத்து வைத்துக் கொண்டார். முதல் தர மதுவாகக் கொண்டு வா என்று கத்தினார். அன்று இரவு நான் பார்க்க நேர்ந்தவற்றை நினைக்க நினைக்க இன்னும் எனக்கு வியப்பு தாங்கவில்லை. இந்த மோசமான நினைவுகளிலிருந்து தப்பித்துக் கொள்ள நான் எத்தனை வேண்டுமானாலும் கொடுக்க தயார். இவர்கள் எப்படி இங்கு வந்தார்கள். ஆனால் பெண்கள்

அதுவும் இதுபோன்ற பெண்கள் எலிகளைப்போல எப்பேர்ப்பட்ட தடைகளையும் பிராண்டி நகர்த்திவிட்டு வந்து விடுவார்கள். அந்த இடத்தை விட்டுக் கிளம்பி வேலைக்காரர்கள் விடுதியில் படுத்துக் கொள்வதற்காக நான் புறப்பட்டபோது இங்கேயே இரு என்று உத்தரவு வந்தது. இளவரசர், டான்ரிகார்டோ அவர்களோடு வெனிஸ் வாசனைத் தைலமும் கதகதவென்ற பெண்தசை வாடையும் வீசுகிற இந்த வெள்ளையடித்த விபசாரிகள் - எல்லோருக்கும் பணிபுரிய நேரிட்டது. எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை.

டான்ரிகார்டோ அவர்கள் அழகை வர்ணித்துக் கொண்டிருந்தான், கண்கள், தலைமயிர், கால்கள் எல்லாவற்றையும். ஒருத்தியின் காலைப் பிடித்து தூக்கிக்கூட இளவரசருக்கு காண்பித்தான். வேண்டாம். வேண்டாம் என்று அவள் கூச்சப்பட்டாள். இன்னொருத்தி வருத்தப்படப் போகிறாளே என்று அவளையும் புகழ ஆரம்பித்தானாம் அவன். “எல்லாப் பெண்களும் அழகுதான். வாழ்க்கையின் இனிமைக்கெல்லாம் பிறப்பிடம் அவர்கள். ஆனால் காதலுக்காகவே வாழ்க்கையை அர்ப்பணித்து அதை எந்தக் காலமும் கைவிடாத தேவடியாளைப் போல யாரும் இனிமையாக இருக்க முடியாது” என்று உரக்கச் சொன்னான். இந்த மடத்தனமான ருசியில்லாத பேச்சைக் கேட்டு எனக்கே ஆச்சரியமாக இருந்தது. இத்தனை கோமாளித்தனம் எங்கே கற்றுக் கொண்டான் என்று எனக்கே புரியவில்லை.

மொந்தை மொந்தையாக அவர்கள் குடித்தார்கள். போதை தலைக்கு ஏறி டான்ரிகார்டோ காதல் பாட்டுகள் பாட ஆரம்பித்து விட்டான். பெண்களின் கண்ணில் ஜலம் கூட வந்து விட்டது. அவனும் இளவரசரும் அவ்விருவர் மடியிலும் தலையை வைத்துப் படுத்துக் கொண்டார்கள். அவர்களும் அவர்கள் தலைமயிரைக் கோதிக் கொண்டே டான் ரிகார்டோவின் ஸ்தோத்திரங்களைக் கேட்டு இனிமையாகப் பெருமூச்சு விட்டார்கள். ரிகார்டோ அழகாக இருந்தவளை தனக்கு எடுத்துக் கொண்டுவிட்டான். இளவரசர் அவன் பேச்சைக் கண்டு அந்தப் பெண்கள் மயங்கும் போது அவனை ஏதோ ஒருமாதிரியாக பார்த்துக் கொண்டே இருந்தார். பெண்கள் எப்பொழுதுமே முட்டாள்களிடத்திலும், அனாமதேய மிடத்திலும் மோகம் கொள்கிறார்கள். ஏனெனில் இந்த மனிதர்கள் அவர்களைப் போலவே இருக்கிறார்கள் அல்லவா? திடீரென்று இளவரசர் பாட்டு போதும், குடித்து மகிழ்வோம் என்று எழுந்தார். அவ்வளவுதான். குடியும், கூத்தும், சிரிப்பும் சேஷ்டைகளும் மட்டரகக் கதைகளும் தொடங்கி விட்டன. இந்தக் களியாட்டம் உச்சநிலையில் இருக்கும் பொழுது இளவரசர் தன் மதுக் கோப்பையை உயர்த்தி நீதான் நாளைச் சண்டையில் கொடியைத் தாங்கி நிற்க வேண்டும் என்று ரிகார்டோவிடம் சொன்னார். இந்த எதிர்பாராத கௌரவத்தை நினைத்து மகிழ்ந்து “ஆபத்துகளெல்லாம் இருக்குமென்று தான் ஆவலுடன் நம்புகிறேன்” என்றான் ரிகார்டோ. அதுவும் பெண்களுக்கு முன் இவன் வீரத்தைக் கேட்பானேன். இளவரசரின் கையை நன்றியுடன் முத்தமிட்டான் அவன்.

பொதுமகள் இருவரும் இதைப் பார்த்து மிகவும் பிரமித்துப் போனார்கள். ஆனால் கொடி பிடிக்கப் போகிறவன் மேல்தான் அவர்கள் கண் விழுந்தது.

களியாட்டம் வர வர மோசமாக வெட்கத்தை விட்டு வெறியாகிவிட்டது. எனக்கு குமட்டலும் குழப்பமும் ஏற்பட்டன. முகம் சிவக்க ஒருவருக்கொருவர் முத்தமிட்டுத் தழுவிக்கொண்டார்கள். நல்ல கண்றாவி! காமத்தின் சூட்டில் அவர்களுக்கு இரைத்தது. ஆடைகளை அவிழ்க்க முயன்றபோது, பெண்கள் தடுக்கிறாற் போல பாசாங்கு செய்தனர். கடைசியில் மார்பகங்கள் திறந்து கிடந்தன. அழகாயிருந்தவளின் ஸ்தனக் காம்பு ரோஜா நிறம். அதன் பக்கத்தில் ஒரு மச்சம். பெரிதாக இல்லாவிட்டாலும் கண்ணில் படத்தான் பட்டது. அவருக்கு மது கொடுப்பதற்காக அருகே போனபோது அவள் உடலிலிருந்து ஒரு வேகம் வீசிற்று. இளவரசி காலையில் படுத்திருக்கும் போது வரும் வாசனைதான். ஆனால் அவளிடம் இவ்வளவு நெருங்கிப் போனதில்லை நான். ரிக்கார்டோ அவள் ஸ்தனங்களைப் பற்றின போது எனக்கு அப்படியே அவன் மென்னியைப் பிடித்து கத்தியால் குத்தி இனிமேல் எந்தப் பெண்ணையும் தழுவ முடியாமல் கொன்றுவிட வேண்டும் போல் என் கை துடித்தது. அருவருப்பு மிஞ்சி மனிதவர்க்கத்தின் நயமில்லாத தன்மையைக் கண்டு சிந்தனையில் ஆழ்ந்து நின்றேன். இந்தப் பிராணிகளெல்லாம் நரகத்துக்கு விழ!

டான்ரிகார்டோவிற்கு திடீரென்று என்னமோ தோன்றிற்று. அழகாக இருந்தவளுடனே இத்தனை நேரம் கழித்து விட்டான் அவன். அவளும் அவனை விட்டால் தானே? சீட்டுப் போட்டு யார் அவளை அடைவது என்று பார்த்துவிடுவது என்று யோசனை சொன்னான். இளவரசர் உள்பட எல்லோருமே இதை ஆமோதித்தார்கள். அந்தப் பெண் தனக்கு ஏற்பட்ட இந்தப் போட்டியை நினைத்து உரக்கச் சிரித்து தன் வெறும் மார்பைக் குலுக்கினாள். அவளைக் கண்டாலே எனக்கு அருவருப்பாக இருந்தது. இந்தத் தரித்திரத்திற்கா அவ்வளவு போட்டி. அவள் மயிர் பொன்னிறம். தோலும் வெளுப்பு. நீலக் கண்கள். கமுக்கட்டில் கொத்து கொத்தாக மயிர். எனக்கு வேதனை பிடுங்கித் தின்றது. கமுக்கட்டில் ஏன் மயிர் இருக்க வேண்டும் என்று எனக்குப் புரிவதில்லை. அதைப் பார்க்கும் பொழுதே எனக்கு என்னவோ போலிருந்தது. அதுவும் ஈரமாக இருந்தால் கேட்கவே வேண்டாம். குள்ளர்களாகிய எங்களுக்கு இதெல்லாம் கிடையாது.

தலையைத் தவிர அல்லது வேண்டிய இடத்தைத் தவிர வேறு எங்கு மயிர் இருந்தாலும் எனக்கு வேதனைதான் மிஞ்சுகிறது.

காயைக் கொண்டு வந்தேன். முதலில் அவர் வீசி எறிந்த பொழுது ஆறும், ஒன்றும் வந்தன. ஐம்பது முதலில் கிடைப்பவரிடம்தான் அவள் போக வேண்டுமாம். இந்த பந்தயம் நடக்கும் பொழுது அந்தப் பெண்கள் இருவரும் மாறி மாறி இருவர் தோளையும் கட்டிக் கொண்டு நின்றார்கள். கடைசியில் இளவரசர் ஜெயித்து விட்டார். உடனே இருவரும் தங்கள் தங்கள் பெண்ணின் மேல் பாய்ந்து ஆடைகளை இழுத்து மிகமிக மோசமான விதத்தில் நடந்து கொண்டார்கள். நான் வெளியே ஓடினேன். என் சருமம் ஜில்லிட்டு, முள்ளிட்டு நின்றது. என் உடல் குலுங்கிற்று. சமையல்காரனுக்கும், குதிரைக்காரனுக்கும் நடுவே வைக்கோலில் படுத்தேன்.

மனிதர்கள் வரவர ஒருவருக்கொருவர் உணரும் நேசத்தை எனக்குப் புரிந்து கொள்ள முடியவில்லை. அதைப் பார்த்தாலே எனக்கு அருவருப்புத்தான் வருகிறது, நேற்று பார்த்ததைப் போல.

நான் வேறு இனத்தைச் சார்ந்து இருப்பதால் தான் அப்படி இருக்கிறதோ என்னவோ? எங்கள் இனத்தின் ருசி இன்னும் நயம் நிறைந்தது. ஆனால் தான் மற்றவர்களைப் பாதிக்காதது எல்லாம் எங்களைப் பாதிக்கிறதோ என்னவோ. அவர்கள் காதல் என்று அழைக்கிற அனுபவங்கள் எனக்கு இல்லை. முயன்று பார்க்கவும் எனக்கு இஷ்டமில்லை. ஒரு தடவை ஒரு குள்ளச்சியை என்னிடம் கொடுத்தார்கள். அழகான பெண், என்னைப் போன்ற ஊடுருவும் சிறு கண்கள். என்னைப் போலவே சுருக்கம் விழுந்த உடல். ஆனால் எனக்கு அவளைக் கண்டு எந்த உணர்ச்சியும் ஏற்படவில்லை. ஒரு வேளை இளவரசி கொடுத்ததனால் தான் பிடிக்கவில்லையோ என்னவோ. தாய்க் கிழவி மாதிரி எங்கள் இருவரையும் சேர்க்கப் பார்த்தாள். ஒரு குள்ளக் குழந்தை எங்களுக்கு பிறக்க வேண்டுமென்று அவளுக்கு ஆசை. ஏஞ்சலிகா பிறப்பதற்கு முன் இது நடந்தது. ஆனால் எனக்கு அவள் இஷ்டத்திற்கு ஆட விருப்பமில்லை. இந்த வெட்கமில்லாத யோசனைக்குப் பணிந்து என் இனத்தையே இழிவுபடுத்த எனக்கு விருப்பமில்லை.

இன்னொன்று சொல்ல வேண்டும். எங்களுக்கு குழந்தை பிறக்க வேண்டுமென்றே அவள் நினைப்பது தப்பு. குள்ளர்களுக்கு குழந்தைகளே பிறப்பதில்லை. இயல்பாகவே நாங்கள் மலடிகள். உயிரை அழியாப் பொருளாகச் செய்யும் பணியில் எங்களுக்கு எந்தவித சம்பந்தமும் கிடையாது. விருப்பமும் கிடையாது. இனப்பெருக்கம் செய்ய வேண்டிய தேவையும் கிடையாது. மனித இனமே தங்களுக்கு வேண்டிய குள்ளர்களை படைத்துக் கொள்கிறது. மனித இனத்தின் மூலமாகத் தான் நாங்களும் இந்த உலகத்தில் வரவேண்டும். அவர்கள் மூலமாகத்தான் எங்கள் இனமும் அழியாமல் நீடிக்கிறது. நாங்கள் மலடாக இருப்பதற்குக் காரணம் இதுதான். நாங்கள் அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள்தான். ஆனால் அதே சமயம் அதற்கு அப்பால் நிற்கிறோம். ஏதோ விருந்தினர்களைப் போல, ஆயிரக்கணக்கான வருஷங்களாக இருந்து தங்கிய புராதன விருந்தினர்கள்.

ஆனால் இதெல்லாம் எழுதுவதாகவே நான் இல்லை. எங்கோ ஆரம்பித்து எங்கோ போய்விட்டது.

மறுநாள் காலை டான்ரிகார்டோ தான் இளவரசரின் கொடியை ஏந்தினான். இதைப்பற்றியும் இன்னும் பல சந்தர்ப்பங்களைப் பற்றியும் பல பேச்சுகள் நடக்கின்றன. எனக்கென்று சொந்தமான சில அபிப்ராயங்கள் உண்டு. ரிகார்டோவின் உயிருக்கு உலை வைக்கத்தான் இந்த மாதிரி ஒரு உத்தரவைக் கொடுத்தார் இளவரசர் என்று சிலர் சொல்கிறார்கள். ரிகார்டோ பிரமாதமாகச் சண்டை போட்டானாம். ஆனால் சண்டை ஆபத்தான நிலையை அடைந்த பொழுது இளவரசர் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தாராம். அப்படிப் பாயும் போது அவர் குதிரை விலாவில் ஏதோ ஒரு ஈட்டியால் குத்தப்பட்டு கீழே விழுந்தது. இளவரசரும் கீழே விழுந்துவிட்டார். ரிகார்டோ

உடனே தன்னைச் சூழ்ந்துள்ள படைகளைத் திமிறிக் கொண்டு இளவரசருக்கு ஒன்றும் நேரிடாதபடி பகைவர்களைக் கொன்று தடுத்தானாம். அவனுக்கு ஏகப்பட்ட காயம். இளவரசர் தன்னை அழிக்க நினைத்தால் கூட அவன் அவரை காப்பாற்றி வஞ்சம் தீர்த்துக் கொண்டு விட்டானாம். இந்தப் பேச்சை நான் நம்பவில்லை. டான்ரிகார்டோவை எனக்கு நன்றாகத் தெரியும். அவன் அந்த மாதிரி ஆளில்லை. அவன் பீற்றிக் கொள்வதைக் கேட்டுக் கேட்டு அவன் ஏதோ ஈரமே வடிவென்றும் அவன் செய்கைகளெல்லாம் கம்பீரமானவை என்றும் ஒரு கதை பரவிவிட்டது. தன்னைப் பெரிதாகக் காட்டிக் கொள்வதிலும், பிறரைக் கவர்வதிலும் அசகாயசூரன் அவன். போர்க்களத்தில் கூட இந்த அபத்தத் தற்பெருமை அவனுக்குப் போவதில்லை. கண்மூடித்தனமாக அவன் சண்டை போடுவது கூட அவனுடைய முட்டாள்தனத்தின் ஒரு அம்சம்தான். ஜனங்கள் என்னவோ கண்மூடித்தனத்தையும், ஈரத்தையும் ஒன்றாக நினைக்கிறார்கள்.

நான் கேட்கிறேன். இவ்வளவு வீரனாக இருப்பவன் ஏன் போர்க்களத்தில் சாகக் கூடாது. மேலெல்லாம் காயமாம் அவனுக்கு. இதிலும் எனக்கு சந்தேகம் தான். எங்கேயாவது நாலைந்து இடத்தில் சிராய்த்திருக்கும்.

இளவரசியின் சின்னங்களை அணிந்து கொண்டு போனானே அவன். எவ்வளவு திமிர் இருக்கும். நாங்கள் கிளம்புவதற்கு முன் அவள் தான் இந்தச் சின்னங்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தாளாம். அவன் போரிட்டது இளவரசருக்காகவா, அல்லது தன் காதலிக்காகவா? இளவரசரின் உயிரைக் காப்பாற்றிய போது கூட அவளுக்காகத்தான் சண்டையிட்டான் அவன். அதற்கு முன்னால் வேறு பெண்ணொருத்தியின் புஜங்களில் கிடந்து விட்டு நேராகப் படுக்கையிலிருந்து எழுந்தபடியே போர்க்களத்திற்கு வந்து விட்டான்.

ஒரே பெண்ணிடம் கட்டுண்ட இந்த இருவருக்கும் உள்ள தொடர்பு என்ன? இரகசியமாக ஏதாவது ஒப்பந்தம் இருக்கிறதா? சில சமயம் பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது. டான்ரிகார்டோ உண்மையாகவே இளவரசனின் உயிரையா காப்பாற்றினான். தனக்கு தீங்கு இழைத்தவனுக்கு நல்லது செய்தே வஞ்சம் தீர்க்க வேண்டுமென்று நினைத்திருப்பான். இளவரசரும் ரிகார்டோவைக் காப்பாற்றவா போனார் அந்த சமயம். அதுவும் தெரியவில்லை. ஒரே சமயம் ஒருவரை நேசிப்பது, வெறுப்பது இரண்டும் சாத்தியமாகுமா?

அன்று இரவு அவர் முகத்தில் மரணக்களை படர்ந்திருந்தது. படுத்தபடியே டான்ரிகார்டோ காதலைப் பற்றி சொல்லிக் கொண்டிருந்தது. எல்லாவற்றையும் கனவு காணும் கண்களுடன் அவர் கேட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். காதல் என்பது ஒன்றுமே இல்லாத, ஒன்றும் தெளிவாக இல்லாத ஒரு அழகிய கவிதைதானா?

அந்த இரவு இளவரசர் அந்தப் பொதுமகளுடன் நடந்து கொண்டதை நினைத்ததும் எனக்கு வியப்பாக இருந்தது. இதற்கெல்லாம் மேம்பட்டவர் அவர் என்றுதான் நான் எண்ணியிருந்தேன். இது பெரிய விஷயமில்லை.

அவர் திடீர் திடீர் என்று மாறுவதெல்லாம் எனக்குப் பழக்கம்தான். உக்கிராணக்காரனிடம் மறுநாளைக்கு இதைப் பற்றி ஜாடையாகப் பேச்செடுத்த பொழுது என்னைப் போல அவன் ஆச்சரியப்படவில்லை. இளவரசருக்கு எப்பொழுதுமே வைப்புகள் உண்டாம். அரண்மனையைச் சேர்ந்தவர்களாகவோ அல்லது ஊரில் வேறு யாராவது இருப்பது உண்டாம். சில சமயம் பெரிய தாசிகள் கூட இருப்பது வழக்கமாம். இப்பொழுது இளவரசியின் தோழியான பியாமெட்டாதான் அபிமானமாம். ரகத்தில் பிரியம் கொண்டவர் என்று புரியாத எனக்கு விளக்கிக் கொண்டே சிரித்தான் அவன். இதெல்லாம் என் பார்வையிலிருந்து எப்படித் தப்பிற்று என்று எனக்குத் தெரியவில்லை. கண்மூடித்தனமாக எனக்கு இருந்த பக்தி எல்லாவற்றையும் மறைத்து விட்டதோ என்னவோ. இளவரசிக்கு அவர் துரோகம் செய்தாரா, இல்லையா, என்பதைப் பற்றி நான் கவலை கொள்ளவில்லை. நான்தான் அவளை வெறுக்கிறேனே. அவளுக்கு துரோகம் செய்வது கூட எனக்கு சந்தோஷம்தான். மேலும் அவள் டான்ரிகார்டோவின் மீது மோகம் கொண்டிருக்கிறாள். கொழுந்து விட்டெரியும் அவளுடைய கடிதங்களெல்லாம் அவனுக்குத்தான். நான்தான் அவற்றை எடுத்துச் செல்கிற வழக்கம். இந்தப் பயல் ஒரு நாளைக்கு கொல்லப்பட வேண்டுமென்றுதான் எனக்கு ஆசை.

## 19

மழை ஒருபாடாக நின்றிருக்கிறது. வெய்யில் நன்றாக அடிக்கிறது. சுற்றிலும் மலைகளின் விளிம்பு நன்றாகத் தெரிகிறது. ஈரம் மட்டும் போகவில்லை. சின்னச் சின்ன அருவிகள், இதுவரையில் காணாத அருவிகள் இப்பொழுது எங்கும் ஓடுகின்றன. வானம் தெளிவாக இருக்கிறது. மொண்டான்ஸா நகரம் மலையின்மீது இப்பொழுது நன்றாகத் தெரிகிறது. அதன் தோற்றமே இடைக்காலத்தில் மறைந்திருந்தது எங்களுக்கு. ஆனால் இப்பொழுது ஒவ்வொரு வீடும் சுவரும் ஆலயங்களின் மீதுள்ள முலாம் பூசிய சிறுசிறு சிலுவைகளும் தெளிவாகத் தெரிகின்றன. சீக்கிரம் இந்த ஊர் கைப்பற்றப்பட்டு பூமியின் பரப்பிலிருந்தே அழிந்துவிடும்.

வெளியே வர முடிந்ததைப் பற்றி எல்லாருக்குமே சந்தோஷம். போர்த் துடிப்பு மீண்டு விட்டது. அதைரியம், அவநம்பிக்கை எல்லாம் மறைந்து விட்டன. மழை வந்து படையின் உற்சாகத்தைக் குறைத்துவிடும் என்று நான் நினைத்தது தவறு. அது ஏற்படுத்திய மயக்கம் அதன் கடைசித் தூற்றலோடு போய்விட்டது. கூடாரங்களுக்கு இடையேயுள்ள நடைகளில் உயிரும் நடமாட்டமும் கலகலக்கின்றன. வீரர்கள் சிரித்துக்கொண்டே ஆயுதங்களைத் தேய்த்துக் கொண்டிருக்கிறார்கள். கவசங்களைப் பளபளக்கிற வரையில் தேய்க்கிறார்கள். மலைச்சரிவுகளுக்கு கீழ் உள்ள சலசலக்கும் ஓடைகளில் குதிரைகளைக் கொண்டு போய் தண்ணீர் காட்டுகிறார்கள். சண்டைக்கு ஆயத்தம் முனைப்பாகத் தொடங்கி விட்டது. பாசறை களை

கட்டி விட்டது. சூரிய ஒளியில் எல்லாம் மின்னுகின்றன - வீரர்களின் உடை, கவசங்கள் குதிரைகளுக்குப் பூட்டிய வெள்ளி ஜானங்கள் எல்லாம்.

எங்கள் சண்டைக்கு இலக்கான நகரத்தை நன்றாக நான் பார்த்துவிட்டேன். பலமான, தகர்க்க முடியாத கோட்டை கொத்தளங்கள் கொண்ட நகரம் போல் காட்சியளித்தது. ஆனால் அதைப் பிடிக்கத்தான் போகிறோம். பர்னார்டோவின் உதவி இருக்கிறவரையில் வெற்றிக்கு என்ன குறை? அவருடைய புது இயந்திரங்களையும், இணையற்ற பீரங்கிகளையும் எந்தக் கோட்டைதான் எதிர்க்க முடியும்? எல்லாவற்றையும் தூள் செய்து கொண்டு புகுந்து விடுவது, சுரங்கப்பாதைகள் கூட. நமக்கு இந்த மகா மேதை சிருஷ்டித்த ஆயுதங்களின் உதவியால் அழிவையும், மரணத்தையும் நினைத்துக் கொண்டே முன்னேறுவோம். நகரத்தை எரித்து, கொள்ளையிட்டு இருந்த இடம் தெரியாமல் அழிப்போம். கொள்ளைக்காரர்களும், வழி பறிப்பவர்களும் கொண்ட அதன் மக்கள் உரிய தண்டனை அடைவார்கள். அழித்தோ, கைதிகளாக ஆக்கியோ இந்தத் தண்டனையை அவர்களுக்கு அளிப்போம் நாங்கள். மொண்டான்ஸாவின் பழைய சக்தியும் பலமும் இருந்த இடத்தில் புகையும், இடிபாடும்தான் தெரியப்போகின்றன. பரம்பரையான இந்தப் பகைவர்களை இளவரசர் நசுக்கி விடுவார் என்று நிச்சயம். பொக்கரோஸாவின் ஆட்கள் என்னென்ன எல்லாம் செய்வார்கள் என்று நினைக்கும்பொழுதே பயமாக இருக்கிறது. இது எங்களுடைய கடைசி, நிச்சயமான வெற்றி.

ஆனால் முதன் முதலாக நகரத்துக்கும் எங்களுக்கும் இடையே படைகளை அழிக்க வேண்டும். நான் நினைத்தது போலவே அவற்றின் எண்ணிக்கை பெருகி விட்டது. எங்கள் இரண்டு படைகளையும் போன்ற பெரிய படையென்று சிலர் சொல்கிறார்கள். அதெல்லாம் வெறும் மிகை. அது அடைத்துக் கொண்டு நிற்கிற இடம் என்னவோ முன்னைவிடப் பெரிதாக இருக்கிறது. ஆனால் பிரும்மாண்டம் என்று சொல்லும்படியாக ஒன்றுமில்லை. அதை முதல் முதலில் பார்த்தபொழுது இளவரசரின் முகம் சற்று இருண்டது. ஆனால் உடனேயே மாறிவிட்டது. வீரத்திற்கு ஏற்படப் போகும் சோதனையை நினைத்து ஒரு ஆனந்தமும், பெருமையும் தாண்டவமாடத் தொடங்கி விட்டன. முடிவில் வெற்றி எங்களுக்குத் தான் என்பதைப் பற்றி அவருக்கோ தளகர்த்தருக்கோ எந்தவித சந்தேகமும் இல்லை. ஒரு நகரத்தைத் தகர்ப்பதில் பங்கு கொள்வது பெரிய ஆனந்தம். அத்தகைய வாய்ப்பு இதுவரை எனக்குக் கிடைத்ததில்லை.

## 20

குள்ளர்களின் அறையில் தான் நான் இருக்கிறேன். எனக்கேற்ற மேஜை, நாற்காலிகளெல்லாம் போடப்பட்டது. எழுதுவதற்கு சௌகரியமாக இருக்கிறது - என்னைச்சுற்றி நடந்துள்ள நிகழ்ச்சிகளை நான் மீண்டும் ஆரம்பிக்கிறேன்.

போரில் நாங்கள் வென்றோம். இது முன்னமேயே தெரிந்ததுதான். ஏகப்பட்ட சேதம் ஏற்பட்டது. விரோதிகளுக்கு நஷ்டம் அதிகம். இனிமேல் அவர்களால் திறமுடன் எதிர்த்து நிற்க முடியாது. எங்கள் சார்பிலும் பலர் இறந்து காயம் பட்டனர். இரண்டாவது நாள் யுத்தம் மிகமிக கோரமாக இருந்தது. ஆனால் வீரர்கள் எதற்காக இருக்கிறார்கள்? சண்டையில் சாவதற்குத் தானே!

நாங்கள் இங்கு இருப்பதன் காரணம் இதுதான். போரை வெற்றிகரமாக முடிப்பதற்கு இளவரசர் மீண்டும் சொந்த ஊருக்குத் திரும்பி இருக்கிற படைகளை எல்லாம் திரட்டிக் கொண்டு வரவேண்டும். அதற்கான பணத்தையும் திரட்டியாக வேண்டும். இத்தகைய முயற்சிக்கு எத்தனை பணம் வேண்டும். வெனிஸ் நகரத்து பிரபுக்களோடு இளவரசர் பேச்சுவார்த்தை நடததுகிறாராம். அவர்கள் வியாபாரிகள், தேவைக்கு மேல் பணம் வைத்திருப்பவர்கள். ஆகவே காரியம் சீக்கிரம் முடிந்து விடும். அதன் பிறகு மறுபடியும் போர்க்களத்தில் இறங்க வேண்டியது தான்.

பொக்கரோஸாவும் அவர் படைகளும் இன்னும் கூலி அதிகமாகக் கேட்டிருக்கிறார்கள். பழைய பாக்கியே அவர்களுக்கு வரவேண்டியிருக் கிறதாம். இதன் காரணமாக அவர்கள் தொல்லை கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். போரின் இந்த அம்சத்திற்கு இவ்வளவு முக்கியத்துவம் அளிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அவ்வளவு வீரத்துடன் சண்டை செய்கிறவர் வீரத்திற்காகவே வீரத்தை விரும்புகிறவர்கள் என்று நான் நினைத்தேன். ஆனால் தன்னலமற்ற தன்மையை எவ்வளவு தான் ஒருவரிடம் எதிர்பார்க்க முடியும்? கூலிபெற விரும்புவதும் இயற்கைதான். சரி. பணம் எங்கே ஓடிப்போகும்.

•அவர்களுக்கும் இளவரசருக்கும் உறவு சரியாக இல்லை என்று பேச்சு உலவுகிறது. ஒரு படை சேதங்கள் அடைந்தால் சிறிது அதிருப்தி இருக்கத்தான் இருக்கும். இங்கும் அப்படித்தான் இருக்கிறது. ஒருவருக்கொருவர் குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பொக்கரோஸாவின் மனிதர்கள் சண்டையில் ஆர்வமுள்ளவர்கள்தான். ஆனால் இளவரசரின் திட்டங்களை நிறைவேற்றும் ஆசை மட்டுமா அதற்குக் காரணம். அதைப்பற்றி அவர்கள் நினைக்கக்கூட மாட்டார்கள்..... ஆனால் இதெல்லாம் தற்காலிகமான சங்கடங்கள் தான். எனக்கு போரின் பொருளாதார சிறுமைகளைப் பற்றிச் சிரத்தை கிடையாது. எனக்கு இந்த விஷயத்தைப் பற்றி எழுதவும் விருப்பமில்லை. எல்லாம் சீக்கிரம் சரியாகிவிடும்.

மீண்டும் ஊரில் வந்து இருப்பது மிகவும் அலுப்பாக இருக்கிறது. அதுவும் போர்க்களத்திலிருந்து நேராக வந்தவுடன் வாழ்க்கையே அர்த்தமற்றதாகத் தோன்றுகிறது. பொழுது போகவில்லை. செய்யவும் ஒன்றுமில்லை. நம் சக்திகளே ஸ்தம்பித்து விட்டார் போலத் தோன்றுகிறது. ஆனால் இதெல்லாம் சிறிது காலம் தானே. மீண்டும் வெளியே கிளம்பத் தானே போகிறோம்.

இங்குள்ள ஜனங்களைப் பார்த்தாலே வேடிக்கையாக இருக்கிறது. வேலைக்காரர்களையும், போருக்குப் போகாதவர்களையும் தான் சொல்லுகிறேன். நாடு யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறது என்ற நினைப்பே அவர்களுக்கு இல்லை. கவசத்தை அணிந்து கொண்டு நான் அங்குமிங்கும் போவதே அவர்களுக்கு வியப்பாக இருக்கிறது. போர்முனையில் இதுதான் பழக்கமென்று அவர்களுக்கு எப்படித் தெரியும்? கவசம் இல்லாமல் இருப்பது மரணத்தை வலுவில் அணைத்துக் கொள்வது போல. இங்கு ஒன்றும் ஆபத்தில்லையென்றாலும் யுத்தம் நடந்து கொண்டுதான் இருக்கிறது. விரைவில் நான் போர்முனைக்கு திரும்பத்தான் வேண்டும். எந்தக் கணமும் இளவரசரின் உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டே இருக்கிறேன். நான் ஆயுதபாணியாக எப்பொழுதுமே இருப்பது அதனால் தான். அவர்களுக்கு இது புரியவில்லை.

போரைப் பற்றி அவர்களுக்கு கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. ஏதாவது விவரமாகச் சொன்னால் நம்பாமல் விழிக்கிறார்கள். சில சமயம் மனதிலுள்ள பொறாமையை வெளிப்படையாகக் காட்டினார்கள். நான் நேராக எதிலும் பங்கு கொள்ளவில்லை என்று சொல்ல முயல்கிறார்கள். இதற்குக் காரணம் பொறாமையில்லாமல் வேறு என்ன என்று சொல்வது? உறையிலுள்ள என் கத்தி போன சண்டையில் ஏற்பட்ட இரத்தக்கரை உலராமல் இருப்பதோ எங்களுக்குத் தெரியாது. நான் அதை எடுத்துக் காண்பிப்பதில்லை. டான்ரிகார்டோ மாதிரியான ஜம்பமெல்லாம் எனக்குப் பிடிக்காது. நான் பாட்டுக்கு வாளின் பிடியைப் பற்றிக் கொண்டு அமைதியாகப் போய்க் கொண்டிருக்கிறேன்.

அந்த இரண்டு நாள் சண்டையின் பொழுது எங்கள் வலது படைக்கும், நகரத்துக்கும் நடுவிலுள்ள ஒரு குன்றைப் பிடித்துக் கொள்ளும் நிர்பந்தம் எங்களுக்கு ஏற்பட்டது. இதனால் செலவு அதிகம். ஆனால் எங்கள் நிலமையில் அபிவிருத்தி ஏற்பட்டது. குன்றின் மேலிருந்து நோட்டம் விடுவதற்காக இளவரசர் போனபொழுது நானும் கூடச் சென்றேன். குன்றின் உச்சியில் லொடோவிகோவிற்கு சொந்தமான ஒரு உல்லாச விடுதி இருந்தது. சுற்றிலும் ஸைப்ரஸ், பீச் மரங்கள். விடுதி அமைந்துள்ள இடமே அழகு. சில வீரர்களும் நானும் யாராவது ஒளிந்திருந்து இளவரசர் மீது பாய்ந்து விடப்போகிறார்களோ என்று பார்ப்பதற்காக அந்த விடுதி முழுவதும் தேடினோம். ஆனால் நாங்கள் கண்டது இரண்டு கிழ ஆட்கள் தான். அவர்களும் சோனிகளாக இருந்ததால் விட்டு விட்டுப் போய்விட்டார்களாம். இளவரசர் அவர்களை ஒன்றும் செய்யக் கூடாதென்று உத்தரவு இட்டுவிட்டார். இருந்தாலும் கீழேயுள்ள ஓர் அறையைத் தேடுவதற்காக நான் போனேன். அங்கு யாராவது ஒளிந்திருந்தால்? என்ன ஆச்சரியம். அங்கு ஒரு குள்ளனைக் கண்டேன் நான். லொடோவிகோவின் ஆஸ்தானத்தைச் சேர்ந்தவன் போல் இருக்கிறது. என்ன காரணத்தினாலோ இவனையும் விட்டு விட்டுப் போய் விட்டார்கள். என்னைக் கண்டதும் அவன் அரண்டு போய் வெளியே ஓடினான். நில் என்று கத்திக் கொண்டே நான் துரத்தினேன். அவன் நிற்கவில்லை. மனசாட்சி சரியாக இருந்தால்

இப்படி ஓடுவானேன்? அவனிடம் ஆயுதங்கள் இருந்தனவோ என்னவோ? எனக்குத் தெரியவில்லை. ஆனால் குறுகலும் வளைவுமாக இருந்த பாதைகள் வழியாக அவனைத் துரத்தினேன். கடைசியில் ஒரு அறைக்குள் பாய்ந்தான் அவன். வெளியே போக அங்கு ஒரு திறப்பு இருந்தது. ஆனால் அதன் வழியாக அவன் தப்புவதற்குள் நான் அவனைப் பிடித்துவிட்டேன். கூ, கூ என்று அழுதான் அவன். சுவர் ஓரமாக எலியைப் போல் ஓடின அவனை வேட்டையாடி கடைசியில் மூலையில் நெருக்கி கத்தியை எடுத்து அவன் உடலில் பாய்ச்சினேன். அவன் உடலில் கவசமோ, வேறு எந்தவித ஆயுதமோ இல்லை. கழுத்தைச் சுற்றி ஜாலர்கள் போட்ட ஒரு நீல வெல்வெட் சட்டையைப் போட்டிருந்தான் அவன். அவனைக் கீழேயே கிடத்திவிட்டு திரும்பி சூரிய ஒளியையும் யுத்தத்தையும் நோக்கி வந்தேன் நான்.

இதை யாரிடமும் நான் சொல்வதில்லை. இது என்ன பெரிய விஷயம். யுத்த காலத்தில் சாதாரணமாக நடக்கக் கூடியதுதான். பெருமைப்பட என்ன இருக்கிறது? நான் செய்தது எல்லாம் போர்வீரன் என்ற முறையில் ஒரு கடமை. இதைப்பற்றி இளவரசருக்கோ, வேறு யாருக்குமோ ஒன்றும் தெரியாது. என் கத்தி இரத்தம் குடித்திருக்கிறது, இந்தப் போரில். என் பங்கின் சின்னமாக அது எக்காலும் இருக்கும் என்பதெல்லாம் யாருக்குத் தெரியப் போகிறது?

ஒரு குள்ளனைப்போய் கொன்றேனே என்று சில சமயம் எனக்கு கஷ்டமாகத்தான் இருக்கிறது. நான் வெறுக்கிற மனித இனத்தில் ஒருவனாக இருக்கக் கூடாதோ அது. அந்த சண்டை இன்னும் சுவாரஸ்யமாக இருந்திருக்கும். ஆனால் என் இனத்தாரைத்தான் நான் வெறுக்கிறேன். அந்தக் குள்ளனை கொல்வதற்காகக் கத்தியை ஓங்கிய பொழுது ஏதோ ஒரு மதச் சடங்கைச் செய்வது போல எனக்கு ஒரு உணர்ச்சி உண்டாயிற்று. ஜகோஷபாட்டைக் கொன்ற பொழுதும் அதே உணர்ச்சி தான் எனக்குத் தோன்றிய ஞாபகம். என் இனத்தாரையே அழித்து விடவேண்டும் என்ற ஒரு தீராத ஆசை. ஏன் என்று எனக்கே தெரியவில்லை. புரியவும் இல்லை. என் இனத்தையே அழிப்பது தான் என் விதியா?

இங்குள்ள மற்ற குள்ளர்களைப் போல அவன் குரலும் கீச் கீச் சென்று இருந்தது. அதைக் கேட்கிற பொழுதே எனக்கு எரிச்சல் வந்தது. என் குரல் ஆழமும் வளமும் நிறைந்தது.

இந்த இனமே வெறுக்கத்தக்க இழிவுபட்ட இனம். ஏன் அவர்கள் என்னைப் போல இல்லை?

## 21

**இன்று** இளவரசி என்னிடம் காதலைப் பற்றி சர்ச்சை செய்ய முயன்றாள். உணர்ச்சி வசப்பட்டு ஏக புலம்பல். காரணம் தெரியவில்லை. ஆனால் அவளுக்குக் காரணம் இருக்கும். திடீரென்று வழக்கம்போல அதைப் பற்றி

வேடிக்கையாகப் பேச ஆரம்பித்தாள். இந்த மாதிரி மாறுவது அவள் இயற்கை. ஏன் என்று காரணம் தெரியவில்லை. கண்ணாடிக்கு முன்னால் உட்கார்ந்து தலைவாரிக் கொண்டே பேச ஆரம்பித்தாள் அவள். வேடிக்கைப் பேச்சு மறுபடியும் சாதாரணமாக மாறிற்று. மனதில் தோன்றியதெல்லாம் பேசிக் கொண்டிருந்தாள் அவள். அதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. நீ ஒன்றுமே சொல்ல மாட்டேன் என்கிறாயே என்று கேட்டதற்கு, நான் பிடிகொடுத்து பதில் சொல்லவில்லை. அவள் வற்புறுத்தத் தொடங்கினாள். நீ எப்பொழுதுமே காதலித்தது இல்லையா என்று அவள் கேட்டதும் கோபத்துடன் நான் இல்லை என்றேன். அவள் நம்பவில்லை. வியப்புடன் என்னைப் பார்த்து மேலும் மேலும் என்னைக் கிண்ட ஆரம்பித்தாள். கடைசியில் பேச்சையே முடிக்கிற வகையில் நான் இனிமேல் யாரையாவது காதலிப்பதாக இருந்தால் அது ஒரு ஆணாகத்தான் இருக்கவேண்டும். அவ்வளவுதான். அவள் உடனே கலகலவென்று சிரிக்க ஆரம்பித்தாள். தோழிக்கும் சிரிப்பு வந்தது. ஆணா! ஆண் என்றா சொன்னாய்! எந்த ஆண். ஒருவேளை பொக்கரோஸாவாக இருக்குமோ என்று சொல்லிக்கொண்டே படீர் என்று மறுபடியும் சிரித்தார்கள். என் முகம் சிவந்தது. நான் அவனைப் பற்றியே தான் நினைத்துக் கொண்டிருந்தேன். என் வெட்கத்தைக் கண்டு அவர்கள் சிரிப்பு இன்னும் அதிகமாயிற்று.

சிரிப்பிற்கு என்ன இருக்கிறது. வெறுப்புடன் முறைத்து அவர்களைப் பார்த்தேன். சிரிப்பென்பது அழகில்லாதது, ஆளைக் கோரப்படுத்துகிறது. திடீரென்று அவர்கள் வாய் திறந்து சிவப்பு ஈறு தெரியும் பொழுது எனக்கு என்னவோ செய்கிறது. பொக்கரோஸாவிடம் எனக்குத் தனி பிரமை இருக்கத்தான் இருக்கிறது. நான் என்ன செய்ய? என் கண்களில் அவன் உண்மையான ஆணாக இருக்கிறான்.

ஆனால் அந்தத் தோழி இருக்கிறாளே. அந்த நாடுமாறி சிரித்த பொழுது தான் எனக்கு எரிச்சலாக வந்தது. இளவரசி என்னைப் பார்த்துக் கேலி செய்வதை நான் பொறுத்துக் கொள்ள முடியும். அவள் கேள்விகளை, முக்கியமாக இந்தக் கேள்வியை விளையாட்டாக நினைக்காமல் என் அபிப்ராயம் என்னவென்று பயங்கரமான விடைகளெல்லாம் நான் சொல்லுவேன். அவள் எஜமானி. அரச இரத்தம் ஓடுகிறவள். ஆனால் இந்த நாற்றக் கழுதை என்னைப் பார்த்து சிரிப்பதாவது. என்னைக் கண்டாலே இவளுக்கு இளப்பம். நான் சில கதவுகளைத் திறக்க முடியாததைப் பார்த்து இந்த தட்டுவாணி பல தடவை சிரிக்கிற வழக்கம். இந்த வாய்த்துடுக்கு குடியானச்சியை சவுக்கால் நாலு கொடுக்க வேண்டும்.

பொக்கரோஸாவை நான் பாராட்டுவதில் என்ன தப்பு. நான் யுத்தப் பிரியன்.

நாட்கள் ஓடுகின்றன. செய்வது தெரியாமல் உட்கார்ந்திருக்கிறோம். பர்னார்டோவிற்கு ஒரு செய்தி கொண்டு போகுமாறு சாண்டாகுரோஸிற்கு என்னை அனுப்பினார் இளவரசர். கடைசி விருந்து என்ற அந்த ஓவியம் இன்னும் முடிவு பெறவில்லை. தான் உருவாக்கிய போர் இயந்திரங்கள்

இயங்குவதை நேரில் காணும் அவர் ஏன் போர்க்களம் செல்லவில்லை என்று நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். அங்கு போனால் அனுப்புவதற்கு எவ்வளவோ சவங்கள் கிடைக்கும். அவரும் விஞ்ஞானத்தில் எவ்வளவோ முன்னேறி இருப்பார்.

சிந்தனையில் ஆழ்ந்திருந்த பர்னார்டோ என்னைப் பார்க்கவில்லை. கடைசியில் நிமிர்ந்த பொழுது எங்கோ தொலைவில் பார்த்தன அவர் கண்கள். என் இராணுவ முஸ்தீபுகளை அவன் பார்த்ததாகவே தெரியவில்லை. பார்த்தார். ஆனால் சிரத்தையோ வியப்போ காட்டவில்லை. "ஓ, குட்டிப் பிசாசா, எங்கே வந்தே" என்று சுமுகமாகக் கேட்டான். அவன் அழைத்தது பிடிக்காவிட்டாலும், சமாசாரத்தைச் சொல்லி விட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தேன். போகும் பொழுது படத்தை ஒருமுறை பார்த்தேன். முன்னால் பார்த்த நிலையை விட்டு துளிக்கூட முன்னேறவில்லை. அவன் ஒன்றையுமே முடிப்பதில்லை. என்னதான் யோசனை செய்து கொண்டிருக்கிறானோ?

போரைப் பற்றியும் ஒன்றுமே சொல்லவில்லை - அவன். போர்க்களத்திலிருந்து நான் நேராக வந்திருக்கிறேன் என்று அவனுக்குத் தெரிந்திருந்தும் கூட, போரை இலட்சியமே செய்யவில்லையா என்றுதான் தோன்றுகிறது.

வெனிஸ் பிரபு பணம் கொடுக்க மறுத்து விட்டான். அங்கிருந்து வந்த தூதன் கடன் கிடையாது என்று கையை விரித்து விட்டான். நம்பவே முடியவில்லை. புரியவும் இல்லை. யுத்தம் சரியாக நடக்கவில்லை என்று அவர்கள் எண்ணம். என்ன அதிகப் பிரசங்கித்தனம். இதுவரையில் நாங்கள் கண்டது வெற்றியைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை. எதிரி நாட்டில் வெகு தூரம் புகுந்து தலைநகரையே நெருங்கிவிட்டோமே. இப்பொழுது நாங்கள் அதைக் கைப்பற்றி வெற்றியின் பலன்களைச் சுவைக்கிற சமயம் பார்த்து கட்டை போடுகிறான். இது பெரிய அட்டூழியம், நம்ப முடியாத செய்தி. வெற்றிக்கும் எங்களுக்கும் இடையே இந்தத் தரித்திரம் பிடித்த வியாபாரிகள் வழிமறித்து நின்றால் ஆகிவிடுமா? இது நடக்கக்கூடாது. மகா வெட்கக் கேடு.

இளவரசர் எப்படியாவது இதைச் சமாளித்து விடுவார். பணம் என்ற ஒரு பைத்தியக்காரப் பிரச்னையால் பெரிய யுத்தம் ஒன்று தடைப்பட்டு விடுமா என்ன?

அயல்நாட்டு தூதர்கள், குதிரைகளுக்குப் பயிற்சி கொடுக்கிறவர்கள், மந்திராலோசகர்கள், தளபதிகள் இவர்களெல்லோரும் அரண்மனையில் குழுமி இருக்கிறார்கள். போர்முனைக்கும், இளவரசருக்கும் போய் வரும் தூதர்களுக்கு ஓய்ச்சல் ஒழிவு இல்லை.

எனக்கும் எழுச்சி தாங்கவில்லை. வெறிகொண்டு துடிக்கிறேன்.

# 22

பொக்கரோஸாவின் கூலிப்படைகள் போரிட மறுக்கிறார்கள். சம்பள பாக்கியை கீழே வைக்க வேண்டுமாம். பின்பு நடக்கப் போகிற சண்டைக்கு இரட்டைப்படி வேண்டுமாம். இதெல்லாம் வந்தால் ஒழிய ஆயுதத்தைத் தொடமாட்டார்களாம். இளவரசருக்குப் பணம் கிடைக்கவில்லை. எவ்வளவோ தாஜா செய்கிறார். நகரத்தைப் பிடித்து உங்கள் மனதார சூறையாடிக் கொள்ளுங்கள் என்கிறார். அதற்கு அவர்கள் நகரம் எப்பொழுது பிடிபடப் போகிறதோ யார் கண்டார்கள் என்று பதில் சொல்லுகிறார்கள். இந்த நகரத்தை யாரும் இதுவரையில் பிடித்ததில்லையாம். இல்டோரோவின் படையை முதலில் முறியடித்து விட்டு பின்பு நகரத்தை முற்றுகையிட வேண்டும். முற்றுகை என்றால் அவர்களுக்குப் பிடிக்காது. அவர்களுக்குப் பொறுமை கிடையாது. அவர்களுக்கு முற்றுகை காலத்தில் சூறையாடும் வாய்ப்பும் கிடைக்காது. மேலும் எதிர்பார்த்ததைவிட அவர்களுக்கு நஷ்டம் அதிகமாம். கொல்லுவதை விரும்பினாலும் கொல்லப்பட அவர்கள் விரும்பவில்லை. அதுவும் இந்தப் பொறுக்கி சம்பாதித்தது. அதுவும் இந்தப் பொறுக்கி சம்பளத்திற்கு உயிரை விடத் தயாராக இல்லையாம் அவர்கள். அவர்கள் பேச்சிலேயே மரியாதையோ இராஜதந்திர நயமோ கிடையாது.

இந்த நிலையில் என்ன ஆகப் போகிறதோ எனக்குத் தெரியவில்லை.

இளவரசர் கட்டாயம் இதை சமாளிக்கத்தான் போகிறார். அவருடைய மேதை பிரும்மாண்டமானது. தோல்விகளைக் கூட ஓரளவுக்கு விரும்புகிறவர்கள் அவர்கள். ஏனெனில், என் பெருமையைக் காண்பிக்க அதனால் சந்தர்ப்பம் ஏற்படும். இன்றும் ஒரே ஒரு விஷயத்தை மறக்க முடியாது. வெல்ல முடியாத எங்கள் படை மொண்டான்ஸாவின் மதில்களுக்கு வெளியே இன்னும் போர்க்கோலம் கொண்டு நிற்கிறது.

போர் முடிந்து கொண்டிருக்கிறதாம்! எல்லையிலிருந்து துருப்புகள் பின்வாங்கித் திரும்பப் போகின்றனவாம்! எல்லாம் தீர்ந்து விட்டது!

நான் கனவு காண்கிறேனா? ஏதாவது கெட்ட கனவா? இருக்க முடியாது. நான் விழித்துக்கொண்டு இது கனவு என்பதை உணர வேண்டும்.

இல்லை, இல்லை. உண்மைதான்ாம்! நம்ப முடியாத கசக்கும் உண்மை. இதை ஏற்றுக் கொள்ளவே நெஞ்சு மறுக்கிறது.

பேராசை, துராசை, துரோகம், மனிதனின் கீழ்த்தரமான அற்பத்தனம் எல்லாம் சேர்ந்து எங்கள் வீரப்படைகளை முறியடித்து ஆயுதங்களைப் பிடுங்கிக் கொண்டு விட்டன. எங்கள் பெரிய படைகள், வெல்ல முடியாத படைகள் எதிரிகளின் வாயிலில் நின்று பயமுறுத்திவிட்டு ஒரு அடி கூடக் கொடுக்காமல் பின்வாங்குகின்றனவாம். துரோகம் செய்யப்பட்டு, கைது செய்யப்பட்டு எல்லாம் நாடு திரும்புகின்றன. அவர்களுடைய ஆசை என்னவோ வெற்றி அல்லது மரணம் என்பதுதான். ஆனால் இந்த அக்கிரமம்

நடந்துவிட்டது. இது மகத்தான குற்றம் நிறைந்த சோக நாடகம். சரித்திரத்திலேயே மகத்தான இந்தப் பெரிய போருக்கு இத்தகைய முடிவா?

துயரமும், கோபமும் என்னை ஸ்தம்பிக்கச் செய்து விட்டன. என்னுடைய வாழ்க்கையிலேயே இவ்வளவு கலவரமும், வெட்கமும் நான் அடைந்ததில்லை. கசப்பு, வேதனை, சீற்றம் எல்லாம் உள்ளே குமுறுகின்றன. ஆனால் செயலோய்ந்து விட்டேன். ஒன்றும் செய்ய முடியவில்லை. சம்பவங்கள் போகிற இந்த வெட்கக்கேடான போக்கை எப்படி நான் மாற்றப் போகிறேன். இந்த சோக நாடகத்தை எப்படி நான் நிறுத்தப் போகிறேன்? ஒன்றும் செய்ய முடியாது.

எல்லாம் தீர்ந்து விட்டது. தீர்ந்தே விட்டது. செய்தியைக் கேட்டு அதன் பொருளை மனதில் வாங்கிக் கொண்டதும் குள்ளர்களின் அறையை நோக்கி ஓடினேன், தனிமையை நாடி. உணர்ச்சி வசப்பட்டு மனதை அடக்க முடியாமல் போய்விடப் போகிறதோ என்று பயம். உள்ளே நுழைந்ததுதான் தாமதம். விக்கி விக்கி அழுதேன். சொன்னால் என்ன? என்னால் அடக்க முடியவில்லை. கைகளை மூடி கண்களைப் பொத்திக்கொண்டு கையாலாகாத கோபத்தில் அழுது கொட்டினேன். ஆமாம், நானே அழுதேன்.

## 23

இளவரசர் அறையைவிட்டு வெளியே வருவதில்லை. யாரையும் உள்ளே அனுமதிப்பதும் இல்லை. தனியாகவே சாப்பிடுகிறார். நானும் சாப்பாடு கொண்டு வருகிற வேலைக்காரனும்தான் அவரைப் பார்க்கிறோம். அவர் கலவரப்படுவதாகவே தெரியவில்லை. ஆனால் இந்த அமைதிக்குப் பின் என்னவெல்லாம் இருக்கிறதோ! முகம் சுண்ணாம்பைப் போல் வெளுப்பாக இருக்கிறது. சூன்யத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கிறேன். வெறித்த பார்வை. நான் இருப்பதைக்கூட அவர் கவனிப்பது இல்லை. ஒரு வார்த்தை பேசுவதில்லை; வேலைக்காரன் அவரைக் கண்டு நடுங்குகிறான். அவனும் மகா கோழை.

வெனிஷிய வியாபாரிகள், அந்தப் பாழாய்ப்போன கடைக்காரர்களின் குடியரசு உதவி மறுத்து விட்டார்கள் என்று கேட்டதுமே அவருக்குச் சீற்றம் பொங்கிக்கொண்டு வந்தது. நான் இதுவரை பார்த்தே இராத கோபம். கோபத்தில் வாய் நுரைத்தது. பயங்கரமாக இருந்தது அதைப் பார்த்தால். வெறியில் கத்தியை எடுத்து மேஜையில் பாய்ச்சினார். பிடி வரையில் அது போய்விட்டது. வியாபாரிகள் மாத்திரம் அதைப் பார்த்திருந்தால் அந்தக் கணமே பணத்தை மேஜைமீது வைத்திருப்பார்கள்.

வேதனையை அதிகமாக்கியது இன்னொரு விஷயம். பர்னார்டோவின் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்த உண்மையான வாய்ப்பே கிடைக்கவில்லை அவருக்கு. அவற்றைப் பயன்படுத்தினால் நகரத்தைக் கைப்பற்றி வெற்றி அடையலாம் என்ற நிச்சயம் அவருக்கு. ஏன் அவன் வெற்றி பெறவில்லை?

அந்த வெறியைக் காண்பதே ஒரு இன்பமாக இருந்தது. அவ்வளவு திடம் இல்லாதவரோ என்று கூட நினைத்தேன். எதற்காக அவர் பிறரை நம்பிக் கொண்டிருக்கிறார். பணம் என்ற கீழ்த்தரமான இந்த இழிவை எதற்காக நம்புகிறார். எங்கள் வெல்ல முடியாத சேனையை அந்நகரத்தின் மேலேறி நசுக்குவதற்கு என்ன?

நான் யுத்த தந்திரி இல்லை. யுத்தக் கலை எனக்குப் புரியவில்லையோ என்னவோ? ஆனால் புரிந்து கொள்ள முடியாத எங்கள் விதியை நினைத்து வியப்பிலும், துன்பத்திலும் என் ஆத்மா தவிக்கிறது. கவசத்தைக் களைந்து விட்டேன். என் குள்ளர்களின் அறையின் ஒரு மூலையில் கையாலாகாமல் அது தொங்கிக் கொண்டிருக்கிறது. அவமானத்தையும் இழிவையும் உண்டு தூங்குகிறது.

சமாதானம் வந்து ஒரு மாதமாகி விட்டது. அரண்மனை நாடு நகரம் எல்லாம் உற்சாகம் இழந்து கிடக்கின்றன. இவ்வளவு தளர்ச்சியும், துயரமும் நீண்ட அமைதியின் அம்சங்கள். சூழ்நிலையே நிராசை நிறைந்திருக்கிறது. திரும்பிவரும் வீரர்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு எதுவும் ஒத்து வரவில்லை. இங்கேயே தங்கி இருப்பவர்கள் அந்த வீரர்களைக் கண்டு எரிச்சல் அடைகிறார்கள். போர் எதிர்பார்த்தபடி முடியாததினாலோ என்னவோ, அன்றாட வாழ்க்கை நோக்கமின்றி, பயனின்றி சோம்பிச் சோம்பி ஊர்கிறது. போரில் ஏற்பட்ட உற்சாகமும், நம்பிக்கையும் மலையேறி விட்டன.

ஆஸ்தானத்தில் சாவின் அமைதி நிலவுகிறது. பெரிய வாசல் வழியாக இங்கேயே வசிக்கிற எங்களைத் தவிர யாரும் போவதில்லை. நாங்களே வேறு வாசல்களில் ஒன்றைத்தான் உபயோகப் படுத்துகிறோம். வெளிநாட்டுக்காரர்கள் யாரும் வருவதில்லை. விருந்தினர்களையும் காணோம். அப்படி யாரையும் அழைப்பதுமில்லை. அரண்மனைக் கூடங்களெல்லாம் வெறிச்சோடி இருக்கின்றன. ஆஸ்தானத்தில் தொடர்புள்ளவர்கள் கூட ஒதுங்கி நிற்கிறார்கள். நடைகளிலோ, மாடிப்படிகளிலோ யாரையும் பார்க்க முடிவதில்லை. நம் காலடியின் எதிரொலிதான் கேட்கிறது. ஏதோ பாழடைந்த அரண்மனை போல, பேய் உலவும் வீடு போல் தோன்றுகிறது. உள்ளே தன் அறையில் தன்னந்தனியாக இளவரசர் அங்குமிங்கும் உலாவுகிறார். அல்லது சிந்தனையில் ஆழ்ந்து மேஜையின்மீது அமர்ந்திருக்கிறார். மேஜையின்மீது கத்தியைப் பாய்ச்ச விழுந்த கோடு திறந்த காயத்தைப் போல வாய் பிளந்து தெரிகிறது. யோசித்துக் கொண்டே உட்கார்ந்திருக்கிறார் அவர். என்ன யோசனையோ? கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

எனக்கும் என் அனுபவங்களையும், சிந்தனைகளையும் எழுத தேவைக்குமேல் நேரமிருக்கிறது. ஆனால் சக்தி இல்லை. ஜன்னலிலேயே பெரும்பாலும் உடகார்ந்து அரண்மனை மதில் ஓரமாக ஓடும் சாம்பலும் மஞ்சள் நிறமும் கலந்த ஆற்றைப் பார்த்துகொண்டே உட்கார்ந்திருக்கிறேன். இல்டோரோவின் நாட்டில் ஒரு காலத்தில் நாங்கள் கடந்த வெற்றியிலெல்லாம் கண்ணால் கடந்த நதி இது.

# 24

இல்லை, இல்லை. இது பெரிய அக்கிரமம். இந்தப் பயங்கரமான காலத்தில் நடந்த நிகழ்ச்சிகள் இதைவிட மோசமாக ஒன்றையும் சொல்ல முடியாது. பூமியே காலின் கீழ் ஆடுகிறார் போல் தோன்றுகிறது. உலகத்திலுள்ள எதிலும் எனக்கு நம்பிக்கையே போய்விட்டது. இளவரசரும் மொண்டான்ஸா ஆளும் வம்சத்தாரும் நட்பு செய்துகொண்டு, இனி போர் தொடுப்பதில்லை என்று ஒப்பந்தம் செய்து கொள்ளப் போகிறார்களாம். இந்த ஓயாத சண்டையை முடித்து சாசுவதமான சமாதானத்தைக் கடைபிடிப்பதாக ஒப்பந்தம் செய்து கொள்ளப் போகிறார்களாம். இல்டோரோ முதலில் மறுத்து விட்டானாம். சமீபத்தில் தானே தாக்கப்பட்டவன் என்ற கோபம் அவருக்கு இருக்கும். ஆனால் இளவரசர் தன் கருத்தை வற்புறுத்தி சொல்லிக் கொண்டே இருந்தாராம். எதற்காக இந்த இருவரும் பரஸ்பர அழிவில் ஈடுபட வேண்டும்? இந்த அர்த்தமில்லாத போர்களால் என்ன பயன்? இரண்டு நூற்றாண்டுகளாக விட்டு விட்டு நடந்த இந்தப் போர்களில் எந்தக் கட்சியும் ஜயிக்கவில்லை. நஷ்டம் தான் இருவரும் கண்டது. பஞ்சமும் துன்பமும் தான் மிச்சம். அந்நியோன்யமாக அமைதியாக வாழ்ந்தால் எவ்வளவு நல்லதாக இருக்கும். இரண்டு நாடுகளும் வளமும் சந்தோஷமும் அடையும். இளவரசரின் இந்த யோசனைக்கு லொடோவிகோ செவிசாய்த்திருப்பதாகத் தெரிகிறது. தன் அபிப்ராயமும் அதே தான் என்று சொல்லி நாங்கள் நிரந்தர சமாதானத்திற்கான உடன்படிக்கையில் கையெழுத்திட வருமாறு விடுத்த அழைப்பை ஏற்றுக் கொண்டு விட்டான்.

இந்த உலகமே பைத்தியம் பிடித்து அலைகிறதா? நிரந்தர சமாதானமாமே! இனிமேல் போரே கிடையாதாம்! என்ன அபத்தம்! என்ன குழந்தைத்தனம்! பிரபஞ்ச ஒழுங்கையே மாற்றி விடமுடியும் என்று நினைக்கிறார்களா இவர்கள்? என்ன அகம்பாவம்! பழைமையிடமும், மரபின் பாலும் இவ்வளவு துரோகமா பாராட்டுவார்கள்! போரே கிடையாதாமே! யுத்தத்தின் புகழும், கௌரவமும் இனிமேல் கிடையவே கிடையாதா? கொம்புகள் இனிமேல் ஊதவே ஊதாதா? வீர மரணமே கிடையாதா? மனித வர்க்கத்திற்கும், இந்த அகம்பாவத்திற்கும் முட்டாள்தனத்திற்கும் எல்லையே இல்லையோ! மக்களின் மீது ஆட்சி செலுத்தும் சக்தி எது என்பதை காண்பிக்க இனி ஒரு பொக்கரோஸாவும் வரமாட்டானா? வாழ்க்கையின் அடிப்படை எல்லாம் குலைக்கப் போகிறார்களா?

சமரசமாம்! இதைப்போல வெட்கக்கேடு இருக்க முடியாது! அதுவும் யாரோடு? தீராத பகைவர்களோடு! நம் சேனைக்கும், உயிர் நீத்த வீரர்களுக்கும் இதைவிட வேறு அவமானம் ஏது? போர்க்களத்தில் மாண்ட நம் வீரர்களின் தியாகத்திற்கு இதுதானா கைம்மாறு!

இந்த சிந்தனைதானா இளவரசருக்கு.... இப்பொழுது அவர் மனநிலை சரியாகி விட்டது. முன்போல் பேசுகிறார். கலகலவென்று இருக்கிறார்.

யாருக்குமே வராத மகத்தான ஒரு எண்ணம் தோன்றிவிட்டதாக அவருக்கு நினைப்பு.

என் வெறுப்பை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை. இளவரசரிடம் நான் வைத்திருந்த ஒரு பெரிய நம்பிக்கைக்கு அதிர்ச்சி. அதிலிருந்து மீளவே முடியாது போலிருக்கிறது. இவ்வளவு கேவலமான நிலமைக்கா போய் விட்டார் அவர். நிரந்தர சமாதானமாம்! நிரந்தர போர் நிறுத்தமாம்! இப்பேர்ப்பட்ட ஒரு எஜமானனிடம் யார் தான் குள்ளனாக சேவகம் பண்ண முடியும்?

அரண்மனை முழுவதும் தலைகீழாக மாறி விட்டது. எங்கு பார்த்தாலும் விளக்குமாறுகள், வாளிகள், குப்பல் குப்பலாக குப்பை. நெஞ்செல்லாம் கமறுகிறது. மேல்மாடி அறையிலிருந்த புராதன திரைகள் எல்லாவற்றையும் எடுத்து அரண்மனை எங்கும் விரித்து விட்டார்கள். அதில் எழுதியுள்ள காதல் காட்சிகளை மிதித்துக் கொண்டே போகவேண்டியிருக்கிறது. இந்த வெட்கங்கெட்ட சமரச சமாதான விருந்திற்காக அவற்றை சுவர்கள் மீது தொங்கவிடப் போகிறார்கள். வருஷக்கணக்கில் திரும்பிப் பார்க்காத அறைகளையெல்லாம் பழுது பார்க்கிறார்கள். பைத்தியம் போல வேலைக்காரர்கள் அங்குமிங்கும் ஓடுகிறார்கள். இளவரசரின் இந்த ஏற்பாட்டினால் அவர்களுக்குத் திருப்தியே இல்லை. வேலை வேறு அதிகமாகி விட்டது. கரால்டி அரண்மனை அருகில் சுத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். லொடோவிகோவின் பரிவாரம் இங்குதான் தங்கப் போகிறதாம். பொக்கரோஸா தங்கி விட்டுப் போன பிறகு பன்றிக் கொட்டிலாக ஆகிவிட்டது அது.

சமையலறை அலமாரிகள் எல்லாம் இறைச்சியும், உணவுமாக அடைந்து கிடக்கிறது. ஜனங்களைக் கசக்கி நூற்றுக்கணக்கில் ஆடு, மாடு கன்றுகளை வாங்கி அறுத்து நிரப்பி விட்டான் உக்கிராண அதிகாரி. தானியமும், வைக்கோலும் ஏகத்தாறாக வாங்கி இருக்கிறான் அவன். ஜனங்களுக்கு இதனால் மிகவும் அதிருப்தி. முடிந்தால் இளவரசருக்கு எதிராக கலகமே செய்வார்கள் அவர்கள். எங்கு பார்த்தாலும் மான்வேட்டை, பறவை வேட்டை, முயல் வேட்டை, காட்டுப் பன்றி வேட்டை. சமையல் அறையில் கொக்கு, புறா, மடையான் எல்லாம் அறுபட்ட வண்ணமாக இருக்கின்றன. கூடையிலுள்ள காயடித்த சேவல்கள் கொழுப்பு நிறைய இருக்கிறதா என்று சோதிக்கப்படுகின்றன. ஒரு பெரிய விருந்திற்காக ஆண் மயில்களைப் பொறுக்கி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இளவரசருக்கும், இளவரசிக்கும், ஊரிலுள்ள பெரிய மனிதர்களுக்கும் தையற்காரர்கள் ஆடைகள் தைத்துக் கொண்டிருக்கிறார்கள். வெனிஸிலிருந்து வந்த அபூர்வமான உயர்ந்த துணிகள் எதையும் சண்டைக்குக் கொடுக்கத் தயாராக இல்லையாம் வெனிஸ்காரர்கள். இந்தத் துணிகளை மட்டும் பிறகு பணம் வாங்கிக் கொள்வதாகத் தந்திருக்கிறார்கள். லொடோவிகோவும் அவன் பரிவாரமும் போகும் வீதிகளிலெல்லாம் வளைவுகள் நிறுவப்பட்டுள்ளன. அரண்மனை வாசலிலும் உள்மண்டபங்களிலும் உயர்ந்த துணிகளால் விதானம் கட்டி

விட்டார்கள். ஜன்னலில் தொங்கவிடும் திரைகளைத் தட்டித் துடைக்கிறார்கள். சங்கீதக்காரர்களின் ஒத்திகையைக் கேட்டுக் கேட்டு பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறது. அரசவைக் கவிஞர்கள் இந்தச் சந்தர்ப்பத்திற்கான பாட்டுகளை எழுதிக் கொண்டிருக்கின்றனர். பெரிய சபா மண்டபத்தில் இவற்றை வாசிக்கப் போகிறார்களாம். இந்த அறிவுகெட்ட விழாவிற்கான ஏற்பாடுகள் தான் எங்கு பார்த்தாலும். பேச்சும் இதே பேச்சுதான். ஒரே குழப்பம். ஒரே ரகளை. எங்கு திரும்பினாலும் மனிதர்கள் மீதோ, பொருள்கள் மீதோ முட்டிக் கொள்ள வேண்டும்.

எனக்கு வருகிற கோபத்தில் வெடித்து விடும் போலிருக்கிறது.

## 25

எதிரிகள் விமரிசையாக எங்கள் தலைநகருக்குள் புகுந்து விட்டார்கள். நகர் முழுவதும் இதுவரையில் காணாத அலங்காரம். லொடோவிகோவும், அவன் அதிகப்பிரசங்கி மகன் கியோவானியும் தெருக்கள் வழியாக சவாரி சென்றார்கள். முன்னால் கொம்பும், குழலும் ஊதிக் கொண்டு, முன்னால் முப்பதுபேர் பச்சை உடையும், கறுப்பு உடையும் அணிந்த குதிரை வீரர்கள் சூழ்ந்து சென்றார்கள். இதோடு வீரர்களும் பிரபுக்களும் வேறு. கடைசியில் 200 வில்லாளிகள் குதிரை மீது வந்தார்கள். வெள்ளி ஜரிகை போட்ட பச்சை வெல்வெட் போர்த்திய கறுப்பு குதிரை மேல் லொடோவிகோ வந்தான். ஜனங்கள் எங்கு பார்த்தாலும் அவனுக்கு ஜே போட்டார்கள். அவர்களுக்கு யாராய் இருந்தால் என்ன. இப்பொழுது நிரந்தர சமாதானம் வரப் போகிறதென்று அவர்களுக்கு சந்தோஷம். அல்லது சந்தோஷப் படுவதாகப் பாவனை. அவனை எதிர்கொண்டு அழைக்க மூன்று தூதர்களை அனுப்பினார் இளவரசர். அவன் வருகையையும், வரும் காரணத்தையும் அவர்கள் முக்கியமான இடங்களில் நின்று அறிவித்தார்கள். கோயில் மணிகள் ஒலித்தன. எங்கள் இழிவிற்கு இதைவிட மகத்தான ஒரு ஆரம்ப விழா இருக்க முடியுமோ? உள்ளே வரும் விருந்தினர்களுக்கு வணக்கம் செலுத்தும் முறையில் அகழியின் மேலிருந்து குண்டுகள் வானை நோக்கி முழங்கின. இதெல்லாவற்றையும் அவர்கள் மீதே போட்டிருக்கக் கூடாதோ. இந்தச் சத்தங்களைக் கேட்டு கியோபானின் குதிரை மிரண்டு விட்டது. ஆனால் அவன் விழாமல் சமாளித்துக் கொண்டான். முகம் மட்டும் சிவந்து விட்டது. அவனுக்கு 17 வயது தான் இருக்கும். பச்சைப் பிள்ளை மாதிரி இருந்தான். ஒரு அசந்தர்ப்பம் தவிர்க்கப்பட்டு விட்டாலும் ஜனங்கள் என்னவோ கெட்ட சகுனமோ என்று அஞ்சினார்கள். இந்த மாதிரி சமயங்களில் சகுனம் பார்க்கும் சபலம் இல்லாமல் போகுமோ? இந்தச் சம்பவம் ஒன்றுதான் அவர்கள் அறிவுக்கும் வேலை கொடுத்தது.

லொடோவிகோ குதிரையிலிருந்து இறங்கியதும் அரண்மனை வாசலில் இளவரசர் ஆடம்பரமான சொற்களுடன் அவனை வரவேற்றார். கட்டை குட்டையாக இருந்தான் அவன். வழவழவென்று கதுப்புக் கன்னங்கள்.

இரத்தம் தெரியும் சிவப்புக் கன்னங்கள். கட்டையான எருதுக் கழுத்து. தாடியும், கன்னத்தின் அடியில் தான் துளி வளர்ந்திருந்தது. இந்தத் தாடி இல்லாவிட்டால் அந்த முகம் அழகாகவே இருக்கும். சாம்பல் நிறக்கண்கள். அவற்றில் நட்பு தெரிந்தது. ஆனால் இதெல்லாம் நம்ப முடியாது. சுத்தக் கயவாளிப் பயல் அவன். கோபக்காரனாகவும் தெரிந்தது. எந்த நிமிஷத்திலும் இதோ என்று காத்திருக்கும் கோபம்.

நாள் முழுவதும் வரவேற்புகள், சாப்பாடுகள், உடன்படிக்கைப் பற்றிய பேச்சுவார்த்தைகள், அதன் வாசகங்களைப் பற்றி விவாதங்கள், சாயங்காலம் ஒரு அழுது வடியும் லாடின் நாடகம். இந்த நாடகம் யாருக்குமே புரியவில்லை. பிறகு ஒரு ஹாஸ்ய நாடகம் போட்டார்கள். அன்றாடப் பேச்சில் அமைந்திருந்தது அது. எல்லோரும் புகழ்ந்தார்கள். ருசி பிசகாகவும் பிதற்றல் நிறைந்தும் இருந்த அதைக் கண்டு எல்லோருக்கும் தாங்க முடியாத ஆனந்தம்.

நாள் முடிந்து விட்டது. நான் என் அறையில் தனியாக உட்கார்ந்திருக்கிறேன். இந்த தனிமைக்காக நன்றி செலுத்தத்தான் வேண்டும். இதில் எனக்கு பரம திருப்தி. இது குள்ளர்களின் அறையானதால் மேல்பக்கம் மிகத் தாழ்வு. இல்லாவிட்டால் இங்கும் நாலைந்து விருந்தினர்களை இறக்கியிருப்பார்கள்.

கியோபானி அழகு என்றே சொல்கிறார்கள். ஆனால் இந்த அழகு அவன் தந்தையிடமிருந்து வந்திருக்காது. அவன் குதிரையில் ஏறி வரும் பொழுது எல்லோரும் அழகாக இருக்கிறான் என்றுதான் சொன்னார்கள். ஆனால் மென்மை அவனிடம் அதிகமாகவே காணப்பட்டது. மானைப் போன்ற கண்கள். ஆணவமே இல்லை. நீளக் கறுப்பு மயிர். மிகவும் மெல்லிய தோல். திடீர் திடீரென்று சிவக்கும் தோல். இந்தத் தோற்றம் எனக்குப் பிடிக்கவில்லை. ஆண் என்றால் ஆணாக இருக்கவேண்டும். புகழ்பெற்ற அழகியான தன் அம்மாவின் ஜாடையாக இருக்கிறானாம் அவன். அவள் இப்பொழுது உயிரோடு இல்லை.

இன்று மாலை ரோஜாத் தோட்டத்திலே அவன் ஏஞ்சலிகாவுடன் உலவிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். சற்றுக் கழித்து அவர்கள் ஆற்றங்கரைக்கு நடந்து போனார்கள். அன்னங்களுக்கு ரொட்டித் துண்டு போட்டார்கள். இருவரும் பேசினார்கள் இந்த அசட்டுப் பெண்ணிடம் என்னதான் பேச இருக்கிறதோ? அவனும் அவளைப் போலவே மண்டுதான் போலிருக்கிறது.

டான்ரிகார்டோ எல்லா சடங்குகளிலும் கலந்து கொள்கிறான். எதிலும் முந்தி முந்தி நிற்கிறான். அவன் காயங்கள் ஆறிவிட்டன. காயம்பட்ட சுவடே இல்லை. ஒரே ஒரு புஜம் மட்டும் சரியாக மடக்க முடியவில்லையாம். என்ன வீரம்!

எதிரிகள் வந்து இன்று மூன்றாவது நாள். விருந்துகள் இன்னும் ஓயவில்லை. யாருக்கும் ஒரு நிமிஷ அமைதிகூடக் கிடையாது. நேற்றிரவு எனக்கு மிகவும் களைப்பு. எழுதக் கூட முடியவில்லை. இளவரசர்கள்

இருவரும் விடியும் முன்னமே அரண்மனையை விட்டுப் புறப்பட்டு நகருக்கு மேற்கேயுள்ள மைதானத்திற்குப் போனார்கள். லொடோவிகோவிற்கு விளையாட்டு என்றால் மிகவும் ஆசையாம். இளவரசரிடமும் பிரான்ஸ் மன்னர் பரிசளித்த அழகிய பறவைகளும், பருந்துகளும் உண்டு. அவற்றின் சக்திகளைக் காண்பிக்கப் போனார் அவர். பிறகு இருவரும் மணிக்கணக்காகச் சாப்பிட்டார்கள். பிறகு ஒரு பாட்டுக் கச்சேரி. தலையெழுத்தே என்று நாங்களும் இதைக் கேட்டோம். சங்கீதத்தைப் போல மோசமானது வேறு எதுவும் இல்லை. மூர்களின் நடனமும், பாட்டும் செப்பிடு வித்தைகளும் நடந்தன. இவைதான் பார்க்கும்படியாக இருந்தன. இது முடிந்ததோ இல்லையோ மீண்டும் சாப்பிட ஆரம்பித்தார்கள். இரவு வரையில் சாப்பிட்டார்கள். பிறகு ஒரு வெட்கம் கெட்ட நாடகம். அதில் வந்த நடிகர்களும், நடிகைகளும் உடம்போடு இறுக ஒட்டினாற் போல ஆடை அணிந்திருந்தார்கள். நிர்வாணமாக இருப்பது போலவே இருந்தது. எங்களுக்கு நல்ல போதை. நிகழ்ச்சிகள் முடிந்ததும் படுக்கையில் படுத்து அடித்துப் போட்டாற் போல தூங்கினேன்.

இளவரசர் உல்லாசமாக இருக்கிறார். முன்னைவிட சுமுகமாக சல்லோ, பில்லோ என்று இருக்கிறார். லொடோவிகோவிடம் ஏதோ என்னால் முடிந்தது என்று சொல்லிச் சொல்லி இளிக்கிறார். எனக்கு அருவருப்பாக இருக்கிறது. இருவரும் நெருங்கிய நண்பர்கள் மாதிரி பழகுகிறார்கள். இளவரசர் என்னவோ மனப்பூர்வமாகத் தான் பழகுகிற வழக்கம். லொடோவிகோ முதலில் சந்தேகப்படுவதுபோல இருந்தது. ஆனால் இப்பொழுது சாதாரணமாக ஆகிவிட்டான். நிரந்தர சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட நூற்றுக்கணக்கான வீரர்களையும், மெய்க்காவலர்களையுமா அழைத்துவர வேண்டும்? அதுதான் சம்பிரதாயமாம். பெரிய பரிவாரம் இல்லாமல் ஒரு அயல்நாட்டு அரசவைக்கு ஒரு இளவரசன் போக முடியாது. எனக்கு இந்தப் பழக்கங்களெல்லாம் தலைகீழ்ப்பாடம். ஆனால் சுற்றிலும் இத்தனை எதிரிகளைப் பார்க்கப் பார்க்க என்னவோ செய்கிறது.

எஜமானரின் நடத்தை எனக்குப் புரியவில்லை. தன் எதிரிகளிடம் ஏன் இவ்வளவு இழிவாக நடந்து கொள்ள வேண்டும்? இந்த மனிதனைத்தான் எனக்குப் புரிந்து கொள்ளமுடியவில்லை. சும்மா அதைப்பற்றி பேசி என்ன? அவர் மீது எல்லையில்லாத வெறுப்பு ஏற்பட்டு விட்டது எனக்கு.

நேற்று மீண்டும் கியோவானியையும், ஏஞ்சலிகாவையும் சேர்த்துப் பார்த்தேன். அந்தி மங்கலில் ஆற்றோரமாக உட்கார்ந்திருந்தார்கள். ஆனால் அன்னங்களுக்கு தீனி போடவோ, பேசவோ இல்லை . ஆனால் அதற்குள் அவர்களுக்கு அலுத்து விட்டார் போலிருக்கிறது. ஓடும் நீரைப் பார்த்துக்கொண்டே பக்கத்தில் பக்கத்தில் உட்கார்ந்திருந்தார்கள். பேச என்ன இருக்கிறது?

எனக்கும் கூட எழுத ஒன்றுமில்லை. இன்று ஒப்பந்தம் கையெழுத்தாகப் போகிறது. பிறகு சாப்பாடு, வேடிக்கை எல்லாம் விடிய விடிய. எனக்கு ஒரே அலுப்பாக இருக்கிறது. ஒன்றும் பிடிக்கவில்லை.

இளவரசர் என்னிடம் இரகசியமாக ஒரு சமாசாரத்தைச் சொல்லியிருக்கிறார். ஆச்சரியமான விஷயம். நினைக்கிற போதே தலை சுற்றுகிறது. வேறு யாரிடமும் இதைப்பற்றி நான் மூச்சு விடக்கூடாதோ எங்கள் இருவருக்கும் மாத்திரம் தெரிந்த இரகசியம். அவருக்கும் எனக்கும் இவ்வளவு நெருக்கம் இருக்கிறது என்று எனக்கு இதுவரை தெரியவே இல்லை. ஒன்றே ஒன்று மட்டும் சொல்லுவேன். எனக்கு மிகவும் ஆனந்தமாக இருக்கிறது.

விருந்து இன்று ஆறு மணிக்கு ஆரம்பம். கொண்டாட்டங்களின் சிகரம் இது. இவ்வளவு விமரிசையாக ஏற்பாடுகள் செய்திருக்கும் பொழுது வெற்றிக்கு என்ன குறை. நானே வெடித்து விடுவேன் போலிருக்கிறது. இளவரசர் பெரிய மனிதர்தான்.

## 26

அந்த விருந்தைப் பற்றிதான் இப்பொழுது சொல்லப்போகிறேன். முதலில் ஆஸ்தான மண்டபத்தில் கூடினோம். இரண்டு நாடுகளுக்கிடையே நிலவப்போகும் நிரந்தர சமாதான உடன்படிக்கை உரக்க வாசிக்கப்பட்டது. பெரிய பெரிய வார்த்தைகள் போட்டு எழுதிய வாசகம். இனி எல்லைக் கோட்டைகளே கிடையாதாம். இரு மக்களுக்குமிடையே சுயேச்சையான வியாபாரம். இதற்கு உதவியாக வேறு பல ஒப்பந்தங்கள். எல்லாம் படித்து முடிந்ததும் இளவரசர்கள் இருவரும் பிரதானிகள் பின்வர கையெழுத்திட்டார்கள். அந்த கணமே 60 பேர்கள் தாரை ஊதினர். சுவரோரமாக நின்றிருந்தார்கள் அவர்கள். எல்லோரும் ஒருவர் மாற்றி ஒருவர் இரண்டு தேச சின்னங்களையும் அணிந்திருந்தார்கள். பின்பு இந்த சந்தர்ப்பத்திற்காக பிரத்யேகமாக ஏற்பட்ட பாடல்கள் முழங்க விருந்து மண்டபத்திற்கு வந்தார்கள். பிரம்மாண்டமான 50 வெள்ளி அடுக்கு தீபங்களும் மண்டபத்தில் ஒளியை வீசின. டவாலி அணிந்த சேவகர்கள் வேறு 200 தீபங்களை ஏந்தி நின்றார்கள். அவர்களில் பலர் வீதியிலிருந்து இழுத்து வரப்பட்டவர்கள். நாற்றம் பிடுங்கும் கந்தலாகக் கட்டிக் கொண்டிருந்தார்கள். மண்டபத்தில் ஐந்து பெரிய மேஜைகள் போட்டிருந்தன. அவற்றின் மேல் வெள்ளிப் பாத்திரங்களும், இத்தாலி நாட்டு சிங்காரப் பாத்திரங்களும் ஏராளமாக வைக்கப்பட்டிருந்தன. பெரிய பெரிய தட்டுகளில் இறைச்சி குவிந்திருந்தது. எத்தனையோ நிறங்களில் பழங்கள். பாத்திரங்களெல்லாம் ஒரே தங்க மயம். தட்டுகள், மதுக்கிண்ணங்கள், பழப் பேலாக்கள் எல்லாம் தங்கம். இந்தத் தங்க சாமான்கள் நடுமேஜை மேல் இருந்தன. இளவரசர் இருவரும் இங்குதான் உட்கார்ந்திருந்தார்கள். எதிர் நாட்டுப் பிரமுகர்களும் பக்கத்தில்தான் உட்கார்ந்திருந்தார்கள். லொடோவிகோவிற்கு எதிரே இளவரசர் அமர்ந்திருந்தார். பக்கத்தில் இளவரசி. ஒரு சிவப்பு க்வுன் அணிந்திருந்தாள் அவள். கவுனின் கைகளில் ஒரே ஜரிகை. சதைப்பற்றான அவள் மார்பகத்தின் மீது சட்டையில் நெருக்கமாக ஜரிகை வேலைப்பாடு செய்திருந்தது. தலையில் வைரங்கள்

பொதித்த வெள்ளி வலை அணிந்திருந்தாள். அவள் தலைமயிர் பார்க்க நன்றாக இராது. மணிக்கணக்கில் முகத்திற்கு சாயமெல்லாம் போட்டு அலங்காரம் பண்ணிக் கொண்டு வந்திருக்கிறாள். சதை விழுந்த அவள் முகம் ஒரு காலத்தில் அழகாகவே இருந்திருக்க வேண்டும். தனக்கே சொந்தமான பிரத்யேகப் புன்முறுவல் அவள் முகத்தில் தவழ்ந்து கொண்டே வந்தது. இளவரசர் கறுப்பு வெல்வெட்டில் பிடிப்பாகச் சட்டையும், கால் சட்டையும் அணிந்திருந்தார். ஒல்லியாக இளமை ததும்பும் அவர் உடல் கத்திபோல் வளைந்து கொடுத்தது. அதிகமாகப் பேசவில்லை அவர். ஆனால் உற்சாகமாக இருந்தார். தாடியைத் தடவும் பொழுதே அது தெரிந்தது. லொடோவிகோ குட்டையாக அகலத் தோள்கொண்ட பச்சைக் கோட் அணிந்திருந்தான். உள்ளே ஊதாவும், சிவப்பும் கலந்த சட்டை. அதன் கழுத்துப் பட்டையிலிருந்து தங்கச் சங்கிலிகள் கனமாகத் தொங்கிக் கொண்டிருந்தன. இந்தச் சட்டையில் அவருடைய ஆகிருதி இன்னும் குள்ளமாகச் செய்தது. அவருடைய எருதுக் கழுத்து, சுற்றியுள்ள உரோமச் சட்டைக்குமேல் முரட்டுத்தனமாக பிதுங்கித் தெரிந்தது. பார்த்தால் இனிமையே வடிவெடுத்தாற்போல இருக்கிறது. ஆனால் முகத்தைப் பார்த்து ஒரு ஆளைக் கண்டுபிடிக்க முடியுமோ? அவன் மிருகமா இல்லையா என்று காட்டுவது அவன் உடலல்லவா?

டான்ரிகார்டோ வழக்கம் போல் அவர்கள் அருகிலேயே உட்கார்ந்திருந்தான். நியாயப்படி பார்த்தால் அவன் வேறு எங்கேயாவது இருக்க வேண்டும். அவன்தான் எங்கு வந்தாலும் எல்லோரையும் தள்ளிவிட்டு முந்திக்கொண்டு வந்து விடுகிறானா! இளவரசர் அவன் இல்லாமல் எப்படி இருக்க முடியும்? இளவரசி வேறு - கேட்க வேண்டுமா? ஆரம்பத்திலிருந்தே பேசிப்பேசி தன் பிரதாபங்களைப் பீற்ற ஆரம்பித்து விட்டான் அவன். அவனை உறைய வைத்துவிடுவது போல் ஒரு பார்வை பார்த்தேன். அதன் பொருள் எனக்குத்தான் தெரியும்.... அதைப்பற்றி இப்பொழுது என்ன?

சற்றுத் தள்ளினாற்போல கியோவானியும் ஏஞ்சலிகாகவும் பக்கத்தில் பக்கத்தில் உட்கார்ந்திருந்தார்கள். ஒரே வயது. அரச வம்சம். சேர்த்துத்தானே வைப்பார்கள். அவனாவது அரச இரத்தம் ஓடுகிறவன் என்பது நிச்சயம். இவளாவது கீழ் மகனுக்குப் பிறந்தவளாக இருக்கலாம். நூற்றுக்கணக்கான இழிந்தவர்களுக்கிடையே இந்த இருவர் தான் இளைஞர்களாக இருந்தார்கள். தப்பித் தவறி வந்து விட்டார்களா என்று தோன்றும்படியாகத் தான் இருந்தது. ஏஞ்சலிகா இப்பொழுதுதான் உலகத்தில் பழகுகிறாள். வெள்ளை ஸாட்டீன் கவுன் அணிந்திருந்தாள். கவுனின் கையில் ஜரிகை வேலை செய்திருந்தது. அழகில்லாத அவளுடைய தலைமயிரில் முத்துக்களும் மெல்லிய ஜரிகைகளும் நெளிந்து ஓடின. அவளைப் பார்த்தால் நன்றாகவே இல்லை. அவளை சாதாரண எளிய உடையில் பார்த்துப் பழக்கப்பட்டவர்களுக்கு இந்த அலங்காரம் பகல் வேஷம் போட்டாற்போல இருந்தது. வாய் திறந்திருந்தது. நாணத்தால் அந்தக் குழந்தைக் கன்னம் சிவந்திருந்தது. இத்தனை மெழுகுவர்த்திகளை இதுவரை பார்த்தே இல்லாதது போல அந்த

நீலக் கண்கள் அகன்று வியந்தன. கியோவானி கூச்சத்தில் குன்றுவது போல இருந்தது. ஆனால் அந்தக் கூச்சம் அவனுக்கு இயல்பான குணம் போல் தோன்றிற்று. ஜரிகை காலர் போட்ட நீல வெல்வெட் சட்டை போட்டிருந்தான் அவன். கழுத்தில் ஒரு சங்கிலி. அதன் நடு மணியில் முட்டை வடிவில் ஒரு சிறிய தங்கச் சம்புடம். அதில் அவன் அம்மாவின் படம் இருக்கிறதாம். அவள் சுவர்க்கத்தில் இருக்கிறாளாம். யார் கண்டார்கள். நரகத்தில்தான் துடிக்கிறாளோ என்னவோ? இந்தப் பையனை அழகென்று எல்லோரும் சொல்லிக் கொள்கிறார்கள். அழகு என்பது பற்றி வேடிக்கையான கருத்துகள்தான் இருக்க வேண்டும் அவர்களுக்கு. எனக்கென்னவோ பையன் அவ்வளவு சுவாரஸ்யமாகப் படவில்லை. ஆண் என்றால் ஆணாக இருக்க வேண்டும். மொண்டான்ஸா இளவரசன் என்று யாராவது இவனைப் பார்த்துச் சொல்ல முடியுமோ? இந்தப் பூஞ்சைக்கு ஒரு மக்களை ஆளவோ அரியணை மீது அமரவோ ஆற்றல் உண்டா என்ன? இந்த மாதிரி ஒரு வாய்ப்பு அவனுக்கு கிடைக்குமா என்றே எனக்குச் சந்தேகமாயிருக்கிறது.

இளைஞர்கள் இருவரும் பேச்சில் கலந்து கொள்ளவில்லை. யாராவது பார்த்தால் அவர்கள் உடல் குன்றிற்று. தங்களுக்குள்ளும் அதிகமாகப் பேசிக் கொள்ளவில்லை. ஆனால் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். கண்கள் சந்திக்கும்பொழுது இரகசியமாக புன்னகையும் தவழ்ந்தது. இந்தப் பெண் புன்முறுவல் பூத்தே பார்க்காத எனக்கு அவள் உதட்டில் நெளியும் புன்னகையைக் கண்டு வியப்பாக இருந்தது. மிகவும் ஜாக்கிரதையான புன்முறுவல். அது அழகாக இல்லை என்று அவளுக்கே தெரிந்திருந்ததோ என்னவோ. என்னைக் கேட்டால் புன்னகை செய்யும் பொழுது மனித வர்க்கத்தைச் சேர்ந்த யாருமே அழகாக இல்லை என்றுதான் சொல்லுவேன்.

அவர்கள் நடந்து கொள்வதை உற்றுப் பார்க்கப் பார்க்க எனக்கும் வியப்பாகத்தான் இருந்தது. இருவரும் சாப்பாட்டைத் தொடவில்லை. சில சமயம் தட்டை வெறித்துப் பார்த்து உட்கார்ந்திருந்தார்கள். மேஜைக்குக் கீழ் அவர்கள் கை கோத்துக் கொள்கிறார் போல் எனக்குத் தோன்றிற்று. எதிரேயுள்ள யாராவது ஒருவர் பக்கத்தில் இருப்பவர் பக்கம் சாய்ந்து ஏதாவது மெதுவாகப் பேசினால் அவர்கள் முகம் சிவக்க திகைத்துப் பேச்சை சாதாரணக் குரலுக்கு மாற்றிக் கொண்டார்கள். நேரம் செல்லச் செல்ல எனக்குத் தெரிந்தது, காதல் முளைத்து விட்டது என்று. இதைக் கண்டுபிடித்தது முதல் எனக்கு என்னவோ போல் இருந்தது. இந்த விஷயம் ஏன் இப்படி என்னைக் கலவரத்துக்கு உள்ளாக்க வேண்டும் என்று தெரியவில்லை. எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை.

காதல் எப்பொழுதும் அருவருப்பானது. ஆனால் இந்தப் பேதைக் குழந்தைகளுக்கு இடையேயுள்ள காதலானது எல்லாவற்றையும் விட அதிக அருவருப்பை ஊட்டிற்று. பார்க்கும் பொழுதே சீற்றமும், சினமும் பொங்கி வந்தன... சரி. இதைப்பற்றி இப்பொழுது என்ன? இந்தக் குழந்தைகளா நமக்கு முக்கியம். விருந்தில் பெரும் புள்ளிகள் இருக்கிறார்களே, அவர்களைப் பார்ப்போம்.

விருந்தினர்கள் மேஜையின் மீது அளவில்லாமல் வைத்திருந்த குளிர்ந்த இறைச்சிகளைத் தின்று முடித்ததும், ஒரு இராணுவ அதிகாரி வந்து கதவண்டை ஒரு வெள்ளைக் குதிரையின் மீது உட்கார்ந்தவாறே பின்னால் வரும் பன்னிரெண்டு பக்ஷணங்களைப் பற்றி ஒரு அறிவிப்புக் கொடுத்தான். தாரைகள் முழங்க ஆட்கள் பக்ஷணங்களைத் தூக்கி வந்தார்கள். ஆவி வீசும் அந்தத் தட்டுகளிலிருந்து இறைச்சி, கொழுப்பு, பச்சடிகள் இவற்றின் மணம் கிளம்பி, அறை முழுவதும் நிறைந்தது. சாப்பாட்டு வாசனையே சகிக்காத எனக்கு வயிறு குமட்டி வாந்தி வந்து விடும்போல் இருந்தது. மணியக்காரன் சேவலைப் போல பெரிய மனிதன் நடைபோட்டு இளவரசர் மேஜையிடம் போய் அங்கிருந்த வாத்து, கோழி, வதக்கின இறைச்சிகள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக நறுக்கினான். அவன் இடதுகை விரலிலிருந்து கொழுப்பு சொட்டிற்று. அவன் உடம்பு வளைகிற வளைவைப் பார்த்தால் ஏதோ மகா சூரனான வாள்வீரன் ஆபத்து நிறைந்த தன் அரும் கலையை ஜனங்களுக்கு செய்து காண்பிப்பது போல் இருந்தது. விருந்தினர்கள் தங்கள் உடலில் உணவைப் போட்டு திணித்தார்கள். அதைப் பார்க்கப் பார்க்க எனக்கு வேதனையாக இருந்தது. வயிற்றைப் புரட்டிற்று. யாராவது சாப்பிடுவதைப் பார்த்தாலே இப்படித்தான் இருக்கும் எனக்கு. அதுவும் இந்த மாதிரி பகாசுரத் தீனி தின்பவர்களைப் பார்த்தால்? மாமிசக் கவளமோ பெரிது பெரிதாக இருந்தது. அதை உள்ளே தள்ளுவதற்கு வாயை நன்றாக அகட்டிக்கொள்ள வேண்டியிருந்தது. தாடைகள் ஓயாமல் அசைந்து அசைந்து அரைத்தன. நாக்கால் வேறு ஓரங்களில் இருந்த செதில்களைத் தடவிக்கொண்டே இருந்தார்கள். லொடோவிகோ தான் காணாததைக் கண்ட பட்டிக்காட்டான் மாதிரி தின்றான் அவன். எது வந்தாலும் அகோரப் பசியுடன் தின்றான். அவன் நாக்கு பெரியதாக நீளமாக மாட்டு நாக்கைப் போல் விகாரமாகப் பளபளத்தது. ஆனால் இளவரசர் இப்படியா தின்றார். வழக்கத்தைவிட அன்று அவர் தின்றது குறைவு. மதுவை தொடவில்லை என்றே சொல்லலாம். ஒரு தடவை கண்ணாடி கோப்பையை உதட்டண்டைக் கொண்டு போனவர் சிந்தனையில் ஆழ்ந்து அதைப் பார்த்துக் கொண்டே சமைந்து விட்டார். கூடியிருந்த மற்றவர்கள் மொந்தை மொந்தையாகக் குடித்தார்கள். கிண்ணங்களையும், ஜாடிகளையும் நிரப்பி, நிரப்பி வேலைக்காரர்களுக்கு மாளவில்லை. ஓடிக்கொண்டே இருந்தார்கள்.

சுறா, ஆற்று மீன் என்று பற்பல மச்சங்கள் பெரிய பெரிய தட்டுகளில் வந்தன. அது சமைத்திருக்கிற அழகைப் பார்த்து பாராட்டுகளாகக் குவிந்தன. மெழுகுகள் அலங்கரித்த, பக்குவப்படுத்திய இறைச்சிகள் வந்தன. என்ன இறைச்சி என்றே சொல்ல முடியாமல் அவ்வளவு அழகாக இருந்தன. மான் தலை, கன்றுகளின் தலை, முழுசாக வாட்டிய பன்றிக் குட்டிகள், சர்க்கரையில் வாசனைகள் போட்ட கோழி, கொக்கு, வாத்து, மடையான் இறைச்சிகளெல்லாம் வந்தன. வேடர்கள் போல வேடம் தாங்கிய இரண்டு அரண்மனை அதிகாரிகள் ஒரு பெரும் காட்டுப் பன்றியை வாட்டி முழுசாகத் தூக்கி வந்தார்கள். அதன் வாயிலிருந்து தீ பறந்தது, எதையோ அதன் வாய்க்குள் போட்டு எரிய விட்டிருக்கிறார்கள். அது ஒரே நாற்றமாக அடித்தது.

தேவதைகளைப் போல ஆடை அணிந்த பெண்கள், ஆடை அவிழ்த்த பெண்கள் உள்ளே ஓடி வந்தார்கள். வாசனைப் பொடிகளை எங்கு பார்த்தாலும் வீசி இறைத்தார்கள். மாமிசத்தின் துர்வாடைக்கு இது மாற்று. ஆனால் நாற்றம் இன்னும் அதிகமாகத்தான் ஆயிற்று. சிறிது நேரம் எனக்கு மூச்சே விட முடியவில்லை.

என்னவோ இதுவரையில் ஒன்றுமே தின்னாதது போல காட்டுப் பன்றியின் ஒரு பக்கத்தை வாங்கிக் கொண்டான் லொடோவிகோ. இன்னும் இரத்தம் சொட்டும் இந்தக் கரும் சிவப்பு இறைச்சியின் பெரிய பெரிய துண்டுகளாக மற்றவர்களும் எடுத்துக் கொண்டார்கள். இது மிகவும் நேர்த்தியான ஆகாரமோ? கடைவாய்கள் அரைக்கும் பொழுது பார்க்கவே பயங்கரமாக இருந்தது. மாமிசத்திலிருந்து கடித்த திரவங்கள் உதடு வழியாக வழிந்து தாடிகளில் ஓடிற்று. லஜ்ஜை கெட்ட ஏதோ ஒன்று இந்தக் காட்சியை அருவருப்புள்ளதாகச் செய்தது. இரண்டாம் பேர் முன்னிலையில் சாப்பிடும் வழக்கம் இல்லாத எனக்கு தேவைக்கு மேல் உயிரைக் காக்கப் போதுமானதற்கு மேல் சாப்பிடாத எனக்கு இந்த இராட்சஸர்களைக் கண்டு, கை காலெல்லாம் வயிறாகவே இருக்கும் இந்த இராட்சஸர்களைக் கண்டு வயிற்றை என்னவோ செய்தது. காட்டுப் பன்றியை மணியக்காரன் அறுத்து இரத்தக் களறியான துண்டுகளில் உள்ளே இருந்து எடுத்து எடுத்துப் போடப் போட பயங்கரமாக இருந்தது. கடைசியில் எலும்புக் கூடும், அங்குமிங்கும் சில செதில் மாமிசங்களும் தான் மிச்சம்.

டான்ரிகார்டோ இடது கையால் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவன் இறைச்சியை நறுக்க பிரத்யேகமான ஒரு ஆள். மொந்தை மொந்தையாகக் குடித்தான் அவன். முகம் முழுவதும் ஒரு பெரிய முட்டாள் புன்னகையாக படர்ந்திருந்தது. சுவாதீனமாக இருந்த கையினால் மதுக்கோப்பையை எடுத்துத் தீர்த்துக் கொண்டே இருந்தான். கரும் சிவப்பான அவனுடைய வெல்வெட் உடை அவனுடைய மோகத்தின் சின்னமாக இருந்தது. தன் காதலிக்காகத்தான் எப்பொழுதுமே உடுத்திக் கொள்வான் அவன். வழக்கத்திற்கு மாறாக அவன் கண்கள் வெறியும் ஒளியும் கொண்டு வீசின. அடிக்கடி கைகளை வீசி வீசி கவிதைகள் சொல்லிக் கொண்டிருந்தான் அவன். இளவரசியைத் தவிர, கவனித்துக் கேட்கும் யாரையும் பார்த்து பாடிக் கொண்டிருந்தான். மது அவன் தொண்டைக்குள் விழுந்த உடனேயே காதலைப் பற்றியும், வாழ்க்கை எனும் ஆனந்தத்தைப் பற்றியும் பெரிய பெரிய வார்த்தைகளாக அவன் வாயிலிருந்து வழிந்தன. இளவரசியின் கண் அவன் பார்க்கும் பொழுதெல்லாம் மின்னிற்று. மர்மமான தன் புன்னகை அவனைக் கண்டு வீசிக் கொண்டே இருந்தாள். மற்ற வேளைகளில் அங்கு இருப்பது போலவும் இல்லாதது போலவும் வழக்கம் போல உட்கார்ந்திருந்தாள். ஒருவரும் பார்க்கவில்லை என்று நினைக்கும் பொழுது இருவரும் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டார்கள். அப்பொழுது அவள் கண்கள் ஈரமான விகாரமான ஒளியுடன் மின்னின. நான் அதைப் பார்த்தேன். என் கண் பார்வையிலிருந்து அவர்கள் தப்பவில்லை. ஆனால் நான் பார்க்கிறேன் என்பதே அவர்களுக்குத் தெரியாது. என் அந்தரங்கத்தில்

என்னென்ன உருவாகிறது என்று அவர்களால் ஊகிக்கத்தான் முடியுமோ? என் அந்தரங்கத்தின் அண்டாத ஆழத்தில் என்ன என்னவெல்லாம் செய்கிறேன் என்று யாருக்குத் தெரியும். என் சுயரூபத்தை யார் காண முடியும்? முடியாது என்பதும் நல்லதுதான். ஏனென்றால் பார்க்க முடிந்தால் அப்படியே அரண்டு விடுவார்கள். அவர்கள் புன்னகையெல்லாம் மறைந்து உதடுகள் கருகி வாடிவிடும். பிறகு பீப்பாயாகக் கிடைத்தாலும் எந்த மதுவும் அவற்றை சிவக்கவோ, ஈரமாகச் செய்யவோ முடியாது.

தோழி பியாமிடாவும் இளவரசர் மேஜையில் உட்காராவிட்டாலும் தன் அந்தஸ்திற்கு அதிகமாகவே உள்ள ஒரு கௌரவமான இடத்தில் உட்கார்ந்திருந்தார். ஆஸ்தானத்திற்கு அவள் புதிது என்றுதான் சொல்ல வேண்டும். என்ன காரணமாகவோ நான் அவளை அதிகமாகக் கவனித்ததில்லை. உண்மையில் சற்று திகைக்க வைக்கக் கூடிய அழகுதான் அவள். நல்ல உயரம். நிமிர்ந்த தோற்றம். இளமை. ஆனால் அதே சமயம் உள்ளத்தில் முதிர்ச்சியும் இருந்தது. உலகப் பழக்கத்திற்குப் பக்குவமானவள்தான். முகம் சற்று இருண்டு கடுமையும், கர்வமும் நிறைந்திருந்தது. நிலக்கரியைப் போன்ற கருங்கண்கள். செதுக்கிய முகம். கண்களின் ஆழத்தில் ஒரு பளபளப்பு மின்னிற்று. சில சமயம் இளவரசர் சற்று கலவரத்துடன் அவளைப் பார்ப்பதைக் காணும்பொழுது அசைவற்ற அவள் முகத்தின் பின் என்ன எண்ணங்கள் ஓடுகின்றன என்று ஊகித்துக் கண்டுபிடிக்க முயலுவது போல் இருந்தன. அவள் அவரைப் பார்க்கவே இல்லை.

இப்பொழுது அநேகமாக மண்டபத்திலுள்ள எல்லா விளக்குகளும் அணைந்துவிட்டன. எழுச்சியூட்டும் இசை எங்கிருந்தோ வந்தது. பன்னிரண்டு மூர் நாட்டியக்காரர்கள் பல்லில் தீவட்டிகளைக் கவ்வியவண்ணம் இருளில் பாய்ந்து வந்து வெறி கொண்டாற் போல ஆடினார்கள். மூச்சே நின்று விடும்போல பயங்கரமான நடனம். கருந்தலையைச் சுற்றி தீ வளையம் சுழன்றது. தீவட்டிகளை உயரத் தூக்கி எறிந்து அது கீழே விழும்போது பற்களாலேயே அதைக் கவ்விப் பிடித்தனர். அவர்களுடைய பேய்த் தோற்றத்தைக் கண்டு பயம் கலந்த பிரமிப்புடன் எல்லோரும் அவர்களைப் பார்த்தார்கள். நெருப்போடு விளையாடிக் கொண்டே இளவரசர் இருக்கும் பக்கத்தில் வந்து மொய்த்தார்கள் அவர்கள். தீவட்டிகளை சுழற்றிய போது மேஜைமீது பொறிகள் தெறித்தன. பாதாளத்து பூதங்களைப் போல, பாதாளத்தின் இருப்பையே கொண்டு வந்தவர்கள் போல பயங்கரமும், வக்ரமும் நிறைந்த அம்முகங்கள் கோணின. நரகத்திலேயே தான் தீவட்டிகளை ஏற்றினார்கள் அவர்கள்? பேயிடமே நாட்டியத்தைக் கற்றுக் கொண்டது போல கூத்தாடிய இந்தப் பேய்க் கூத்தை இருளில் இருந்தவாறே பார்த்தேன் நான்.

பின்பு தீவட்டிகளை கீழே கொண்டுவந்து தரையில் தேய்த்து அவர்கள் அணைத்தார்கள். தங்கள் பிறப்பையும் எல்லோரும் ஒருநாள் போக வேண்டிய மரண ராஜ்யத்தையும் நினைவுறுத்துவதுபோல் இருந்தது அது. அணைத்து

விட்டு அவர்கள் மறைந்த வேகத்தைப் பார்த்தால் பூமியே வாயைப் பிளந்து அவர்களை விழுங்கி விட்டது போல் இருந்தது.

மீண்டும் விளக்குகள் எரிகிறவரையில் ஒருவித பயம் அங்கு பரவி இருந்தது. என் குள்ளக் கண்களால் (மனிதர்கள் கண்களைவிடப் பார்க்கும் சக்தி இவற்றிற்கு அதிகம்) விருந்தினர்களில் சிலர் எதற்கும் தயாராக இருப்பதுபோல வாள்பிடியைப் பற்றிய வண்ணம் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தேன். விருந்தினர்களை மகிழ்விக்க வெனிஸிலிருந்து இந்த நடனக் கோஷ்டியை தருவித்திருந்தார்கள் அவர்கள்.

மீண்டும் மண்டபம் ஒளி மண்டபமாகத் திகழ்ந்தது. வெள்ளைக் குதிரை மீதேறி மீண்டும் அந்த அதிகாரி வந்து. இசை முழங்க, விருந்தின் மிகமிக நேர்த்தியான பகுதி வருவதை அறிவித்தான். "மயில்கள்!"

அவ்வளவுதான். ஐம்பது ஆட்கள் நாலாபக்கங்களிலிருந்தும் வெள்ளித் தட்டுகளில் மயில்களைக் கொண்டு வந்தார்கள். பளபளவென்று மின்னிற்று இந்த இறைச்சி. மயில் இறகின் அழகிய வர்ணங்கள் இறைந்து கிடந்தன. அதைக் கண்டதுமே மூர்க்கத்தனமான ஆனந்தம் எல்லா முகத்திலும் துள்ளிற்று. கவிழ்ந்த தீவட்டிகளால் ஏற்பட்ட வேதனை எல்லாம் பறந்து போய்விட்டது. இவர்களெல்லாம் குழந்தைகள் மாதிரி. திடீரென்று இன்னொரு விளையாட்டு வந்தால் முதல் விளையாட்டை மறந்து விடுவார்கள். ஆனால் நான் அவர்களோடு விளையாடும் ஆட்டத்தை மாத்திரம் அவர்களால் மறக்கமுடியாது. கண்ணார இந்த ராட்சஸ சாப்பாட்டைப் பார்த்து விட்டுத் தின்ன ஆரம்பித்தார்கள் அவர்கள். இந்த மயில்கள் அசட்டு அகம்பாவம் பிடித்த பிராணிகள். அவற்றைக் கண்டால் எப்பொழுதுமே எனக்குப் பிடிக்காது. அவற்றைப் பார்க்கும்பொழுது மனிதர்களின் நினைவுதான் எனக்கு வரும். இதனால்தான் மனித வர்க்கம் இந்தப் பறவையைப் புகழ்ந்து உயர்ந்த பட்சியாக நினைக்கிறதோ என்னவோ. இந்த மயில்களை விழுங்கியதும் மீண்டும் வாத்து, கோழி போன்ற பல பட்சிகளும் மீன்களும், மான் இறைச்சியும் தட்டுத் தட்டாக வந்தன. என் அருவருப்பும் பெருகிக் கொண்டே வந்தது. அதன்பின்பு குன்று குன்றாக பர்பிகள், பப்பரமிட்டுகள், கஸ்தூரி நாற்றம் நாறும் இனிப்புகள் எல்லாம் வந்தன. என்னமோ ஆறு மாதம் பட்டினி கிடந்தாற்போல இவற்றையும் விழுங்கினார்கள். கடைசியில் கிரேக்க தெய்வங்களின் சிலைகளைப்போல் செய்த பக்ஷணங்கள் வந்தன. அரிய திறனுடன் செய்யப்பட்ட பொம்மைகள். இவற்றையும் நறுக்கி விழுங்கினார்கள் அவர்கள். கறைபடிந்த மேஜைகளைப் பார்க்கும் பொழுது காட்டுமிராண்டிகள் கூட்டம் கூட்டமாக வந்து அழித்ததுபோல் இருந்தது. இந்த அழிவையும் வேர்த்து ஊற்றி கதகதக்கும் இந்த மனிதப் பிராணிகளையும் பார்த்து எல்லையில்லாத அருவருப்பில் ஆழ்ந்தேன் நான்.

கொண்டாட்டத்தின் தலைவர் எழுந்து எல்லோரையும் மௌனமாக இருக்கும்படிக் கேட்டுக் கொண்டார். இளவரசரின் உத்தரவுப்படி விருந்தினர்களைக் களிப்பிக்க ஆஸ்தான கவிகள் செய்த மிக மிக அழகான

நீதிக்கதை ஒன்றை நடிக்கப் போவதாக அறிவித்தார். எலும்பும் தோலுமாக இருந்த அந்தக் கவிகள் இதைக் கேட்டதும் காதைத் தீட்டிக்கொண்டு தங்கள் மேதையின் சிருஷ்டியில் கேட்கத் தயாரானார்கள். இதன் ஆழ்ந்த நீதிக் கருத்து தான் விருந்தின் உச்சமாக விளங்கப் போகிறது.

மண்டபத்தின் ஒரு பக்கத்திலிருந்த அரங்கின் மீது வந்தார் செவ்வாய். இவர்தான் போர்க் கடவுள். அவர் அணிந்திருந்த கவசம் பளபளவென்று மின்னிற்று. செலபான் காலிக்டெஸ் ஆகிய இரு பலசாலிகளையும் குத்துச் சண்டை போட கட்டளை இட்டிருப்பதாக அவர் சொன்னார். இந்த சண்டை உலகப் பிரசித்தமாக விளங்கி அவர்கள் பெயர்களை அழியாப் பெயர்களாக செய்யப் போகிறதாம். எல்லாவற்றிற்கும் மேலாக யுத்த தேவனான தன் புகழையும் சக்தியையும் மனிதவர்க்கத்திற்கு எடுத்துக் காட்டுமாம் அது. அவர் விரலை அசைத்தால் இரத்தம் ஆறாகப் பெருகி வீரர்கள் மோதிக் கொள்வார்களாம். இந்த உலகத்தில் வீரமும் துணிவும் உள்ளவரை தன் கீழ் தான் அவை பணிபுரியும் என்று கடைசியாக கூறிவிட்டு அவர் அரங்கை விட்டு அகன்றார். பிறகு இரண்டு மல்லர்களும் வந்தார்கள். ஒருவருக்கொருவர் பார்த்தவுடனேயே வாள் இரண்டும் சுழன்று மின்னின. வெகுநேரம் சண்டை நடந்தது. விஷயம் தெரிந்தவர்கள் பிரமாதமாகப் புகழ்ந்தார்கள். இரண்டு வீரர்களுமே வாட் போரில் புகழ் பெற்றவர்கள். எனக்கு இந்தக் காட்சி மிகவும் இன்பமளித்தது. சண்டையின்போது படுகாயம் விளைவிப்பது போலவும் சோர்ந்து தள்ளாடி உயிரற்று விழுவது போலவும் பாசாங்கு செய்தார்கள்.

யுத்ததேவன் மறுபடியும் தோன்றி இந்த வீரமரணங்களுக்குக் காரணமான சண்டையையும் மனிதர்களின் புலன்கள் மீதுள்ள தன் எதிர்க்க முடியாத சக்தியையும், ஒலிம்பிக் தேவர்களின் வன்மை படைத்த தன்னையும் பற்றிப் பேசிவிட்டுப் போனார்.

அதன் பிறகு மெல்லிய இசை தவழ்ந்து வந்தது. தேவதை வீனஸ் பரிவாரங்களுடன் வந்தாள். வீரர்கள் இப்படி காயமுற்று இரத்த வெள்ளத்தில் கிடப்பதைப் பார்த்தாள். பரிவார தேவதைகள் அவர்கள் மீது குனிந்து இவ்வளவு அழகிய வீரர்கள் அனாவசியமாக இவ்வாறு நல்ல பருவத்தில் உயிர் நீத்ததை நினைத்து அழுதார்கள். அவர்கள் புலம்பும் பொழுது கொடிய அங்காரகன் தான் இந்த மூர்க்கமான சண்டையைத் தூண்டியிருக்க வேண்டும் என்றாள் வீனஸ். “ஆமாம்... ஆனால் நீங்கள் ஒரு காலத்தில் அவனுடைய காதலியாக இருந்தீர்கள். அவனை அணைத்தும் தழுவியும் இருக்கிறீர்கள்” என்று பதில் சொன்னார்கள். அதற்கு அவள் இது ஒரு பெரிய அவதூறு என்றும் காதல் தேவதை ஒருநாளும் - எல்லோராலும் வெறுக்கப்பட்ட சொந்தத் தந்தையான ஜுபிடராலேயே வெறுக்கப்பட்ட - இந்தக் காட்டுமிராண்டி தேவனை அன்புடன் பார்த்திருக்கவே முடியாது என்று விடை இறுத்தாள். பின்பு தன்னுடைய மந்திரக் கோலால் விழுந்து கிடந்த இருவரையும் அவள் தொட்ட பொழுது, இருவரும் திடகாத்திரர்களாக எழுந்து, இனிமேல் பகை ஏதுமின்றி நிரந்தர நட்புடன் வாழ்வதாக சபதம்

செய்து கொண்டார்கள். யுத்த தேவனின் கட்டளைக்குப் பணிந்து இரத்தப் போர் இடுவதில்லை என்றும் சபதம் செய்து கொண்டார்கள்.

பின்பு அன்பையும், காதலையும் பற்றி உருக்கமாகப் பேசினாள் வீனஸ். எல்லா சக்திகளிலும் பலமும், அதே சமயம் மென்மையும் கொண்டது அது. உலகத்தின் எல்லா பொருள்களுக்கும் பிறப்பிடம். மண்ணிலுள்ள உயிர்களுக்கு தெய்வீகமான விதிகளை அளிக்கிறது அது. உயிர் வாழும் எல்லாப் பிராணிகளும் இந்த விதிகளுக்குப் பணிந்துதான் ஆக வேண்டும். மனிதர்களின் முரட்டுப் புலன்களை மாற்றி பரிசுத்தமாக்குகிறது அது. மன்னர்கள், மக்கள் இவர்களின் செயல்களையும் பழக்கங்களையும் தூய்மைப் படுத்துகிறது. பாழும், ரத்தமும் மண்டிய உலகில் சகோதர அன்பையும் தர்மத்தையும் பரப்பி சேவையில் பெருமையையும் காணச் செய்கிறது இந்த அன்பு. யுத்தப் புகழும் ஆயுதப் பயிற்சியும் இந்த நற்பண்புகளை மனிதனுக்கு அளிக்காது. இவ்வாறு சொல்லி விட்டு தன் மந்திரக் கோலை உயர்த்தி, தன் தெய்வீக சக்தியால் இந்த உலகமானது அன்பும் அழியா அமைதியும் உறையும் இடமாக மாறப் போகிறது என்று அறிவித்தாள்.

இந்த முடிவுரையைக் கேட்டு என் முகத்திற்கு சிரிக்கும் சக்தி இருந்திருந்தால் சிரித்திருப்பேன், ஆனால் இந்த உணர்ச்சிப் பிரவாகத்தைக் கேட்டு எல்லோருமே பரவசமானார்கள். மரியாதையாக ஆழ்ந்த மௌனத்துடன் கேட்டார்கள். இந்த நாடகத்தை எழுதிய எழுத்தாளர்கள் இதைக் கண்டு உச்சி குளிர்ந்து விட்டனர். இந்த நிகழ்ச்சியின் வெற்றிக்குத் தாங்கள் தான் காரணம் என்று அவர்களுக்கு எண்ணம் போலிருக்கிறது. ஆனால் அங்குள்ள யாரும் அவர்களை லட்சியமே செய்யவில்லை. சமாதான உடன்படிக்கையைக் கொண்டாடும் இந்த விழாவில் தங்கள் நிகழ்ச்சி ஒன்றுதான் முக்கியமென்று இந்த எழுத்தாளர்கள் நினைத்திருக்க வேண்டும். ஆனால் என்னைக் கேட்டால் இதற்கெல்லாம் பிறகு நடந்ததை விடவா...

வழக்கம் போல நான் இளவரசரின் பின்னாலேயே நின்றிருந்தேன். வாயைத் திறந்து சொல்லு முன்னமே அவர் மனதில் ஓடும் எண்ணங்கள் என்னவென்று அறிந்து கொள்ளும் ஆழ்ந்த அனுபவம் எனக்கு உண்டு. சில சமயம் அவருக்கு தெரியுமுன்னமேயே எனக்குத் தெரிந்து விடுவதும் உண்டு. அதாவது நான் அவருடைய ஒரு அங்கம் போல. ஆகவே ஒருவருக்கும் தெரியாமல் அவர் சைகை செய்ததும் என்னிடம் மாத்திரம் உள்ள, எனக்கு மட்டும் செய்யத் தெரிந்த அரிய மதுவை லொடோவிகோவிற்கும், அவன் மகன், மற்றும் அவனைச் சேர்ந்த பிரமுகர்கள் முதலியவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று புரிந்து விட்டது. அந்த மதுவை எடுத்து வந்து லொடோவிகோவின் கிண்ணத்தில் ஊற்றினேன். குடித்து குடித்து வேர்வை ஊற்றியதால் உரோமக் கோட்டைக் கழற்றி விட்டிருந்தான் அவன். நீல ஆடைதான் இருந்தது. முகம் நெருப்பைப் போல சிவந்திருந்தது. அவன் மாட்டுக் கழுத்தைச் சுற்றிச் சிக்கியிருந்த சங்கிலிகள் சொடுக்கு விழுந்து விலங்கு மாட்டினாற்போல இருந்தது. அவன் கிண்ணத்தில் வழிய வழிய

ஊற்றினேன். அவன் உடலிலிருந்து வேர்வையும் ஏப்பங்களும் மதுவும் வாடை வீசின. இந்த மிருகத்திற்கு அருகில் நிற்க வேண்டியிருக்கிறதே என்று நினைக்கும்பொழுது எனக்கு வயிறு குமட்டிற்று. மனிதனைப் போல ஒரு நீசமான உயிர் இருக்க முடியுமா என்று எண்ணிக்கொண்டே தளபதிகள், பிரபுக்கள் முதலிய அவனைச் சேர்ந்த பிரமுகர்களுக்கும் இந்த மதுவை ஊற்றினேன். பின்பு கியோவானியின் தங்கக் கிண்ணத்தையும் நிரப்பினேன். நான் கிட்டே நெருங்கும் பொழுது அவன் கையை விட்டு விட்டு அந்த அகன்ற கண்களால் என்னை வியப்புடன் பார்த்தாள். அவர்களுக்கிடையே இருந்த இரகசியத்தை நான் கண்டு கொண்டு விட்டேனா என்று அஞ்சுவது போல அவள் முகம் வெளுத்து விட்டது. அந்த வளரும் அந்நியோன்யத்தைக் கண்டு எனக்கு அருவருப்பாகத்தான் இருந்தது. இருவரும் இரண்டு பகைக் குலத்தைச் சார்ந்தவர்கள். ஆனால் ஒன்றுமறியாத இந்தக் குழந்தைகள் காதல் என்னும் சேற்றில் தாங்கள் அறியாமல் இழுத்து விடப்பட்டார்கள். அவர்களுடைய நாணத்தையும் இரத்தத் துடிப்பினால் விளைந்த முகச் சுளிப்பையும் நான் கவனித்தேன். அவர்கள் புணரத்துடிக்கும் ஆசையையும் கண்டேன். இந்த ஆசை வெளிப்படுவதைப் பார்த்தாலே யாருக்குத்தான் குமட்டல் வராது. பேதமையையும் சரீர இச்சையும் இப்படி சேர்ந்திருப்பதைப் பார்த்தால் மனதுக்கு எத்தனை ஏமாற்றம் ஏற்படுகிறது. பாதி காலியாக இருந்த அவன் கிண்ணத்தை மகிழ்ச்சியுடன் நிரப்பினேன்.

கடைசியாக டான்ரிகார்டோவின் கிண்ணத்தையும் வழிய வழிய நிரப்பினேன். எனக்கு இட்ட கட்டளையில் இந்த ஆள் இல்லையானாலும் எனக்காக சில எண்ணங்கள் எப்பொழுதுமே உண்டு. நானே கட்டளைகள் இட்டுக் கொண்டு நிறைவேற்றுகிற வழக்கம். இளவரசர் என்னைப் பார்க்கும் பொழுது நானும் கம்பீரமான அமைதியுடன் அவரை ஏறிட்டுப் பார்த்தேன். ஏதோ வினோதமாகத்தான் அந்த கண்கள் தோன்றின. மனிதக் கண்கள் அப்படித் தோன்றுகிற வழக்கம்தான். ஆனால் குள்ளனின் கண்கள் ஒருக்காலும் இப்படித் தோன்றாது. அவர் ஆத்மாவிலுள்ள எல்லாமே மேல் பரப்பிற்கு வந்து என்னையும் என் செயல்களையும் பயமும், கவலையும், ஆசையும் கலந்த துடிப்புடன் பார்ப்பது போல் இருந்தது. வினோதப் பூதங்கள் அவர் உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழுந்து தங்கள் அழுக்கு உடல்களை வளைத்து முறித்துக் கொள்வதுபோல இருந்தது. இத்தகைய தோற்றங்களெல்லாம் புராதனமான என்னைப் போன்ற ஒரு உயிரிடம் காண முடியாது. அவர் கண்களை வெறித்துப் பார்த்தேன். என் கை உதறாமல் நிதானமாக இருப்பதை அவர் கவனித்தார் என்றே நினைக்கிறேன்.

அவர் விருப்பம் எனக்குத் தெரியும். ஆனால் அதே சமயம் அவர் வீரர். நான் ,வீரனின் குள்ளன். அவ்வளவுதான். அவர் சொல்லாமலேயே அவர் விருப்பங்களை நான் ஊகிக்க முடியும். அவர் அறியுமுன்னமேயே அவைகள் எனக்குப் புலனாகிவிடும். இப்படித்தான் செவியில் விழாத அவர் உத்தரவுகளை நான் நிறைவேற்றுகிறேன். இம்மாதிரி எல்லாவிதமான பணிகளும் புரியக்கூடிய ஒரு யமகாதகன் இருப்பது யாருக்குமே நல்லதுதான்.

டான்ரிகார்டோவின் கிண்ணத்தை நிரப்பியதும் அவன் வாய் நிறைய சிரித்துக் கொண்டே பின்னால் சாய்ந்தான். அவன் தாடி நேராக குத்திட்டு நின்றது. அகன்ற வெண்பற்கள் மின்ன வாய் எரிமலையைப் போல திறந்து கிடந்தது. அவன் தொண்டை வரையில் நான் பார்க்க முடிந்தது. சிரிக்கிறவர்களைக் கண்டால் எனக்குப் பிடிக்காது என்று முன்னமேயே சொல்லியிருக்கிறேன். ஆனால் வாழ்க்கையை நேசிப்பதாகவும் அதை வினோதப் பொருளாகவும் எண்ணி நாட்டுப்புறத்தானைப் போல உரக்கச் சிரிக்கும் இந்த முட்டாளைக் காணும் பொழுது என் எரிச்சல் அதிகப்படத்தான் செய்கிறது. அவன் ஈறு உதடு எல்லாம் ஈரமாக இருந்தன. கண் ஓரங்களிலிருந்த விகாரமான சிறு சுரப்பிகளின் வழியே கண்ணீர் ததும்பிற்று. இயற்கைக்கு மாறாக பளபளப்புள்ள கண்கள். கரும் பழுப்பான அந்தக் கண்கள் மீது சிவப்பு ஒளிக் கோடுகள் ஓரத்திலிருந்து மின்னின. சிரிக்கும் பொழுது அவன் தொண்டை கட்டையான கறுப்பு மயிர்களுக்குக் கீழ் குதித்தது. இடது கையில் ஒரு மரகத மோதிரம் அணிந்திருந்தான் அவன். இளவரசி கொடுத்தது அது. அவனுக்கு உடம்பு சரியாக இல்லாத பொழுது நான்தான் ஒரு நாசமாய் போன கடிதத்தில் அதை மடித்து சட்டைக்குள் வைத்துக் கொண்டு கொடுத்தேன். இந்த பயலிடம் எதைக் கண்டாலும் எனக்கு அருவருப்பாக இருக்கிறது.

எதைக் கண்டு அவன் சிரித்தானோ தெரியவில்லை. தெரியாவிட்டாலும் பாதகமில்லை. வேடிக்கையாக ஒன்றுமே இராது என்று தெரிந்ததுதானே. எப்படியோ, இந்தப் பயல் மறுபடியும் சிரிக்கவில்லை.

என் வேலை முடிந்து விட்டது. விபசாரி வேட்டையாடும் இந்த முட்டாளுக்கு அருகில் நின்று கொண்டு அவன் உடல் வாடையையும், காமத்தின் சின்னமாக அவன் அணிந்திருந்த ஒரு சிவப்பு ஆடையையும், சகித்துக் கொண்டே மேலே என்ன நடக்கப் போகிறது என்று காத்துக் கொண்டிருந்தேன்.

என் எஜமானர் சுற்றியிருந்த விருந்தினர்களையும், லொடோவிகோவையும் அவன் பரிவாரங்களையும் சுற்றிலும் ஒருமுறை பார்த்து புன்சிரிப்பு சிரித்து தன் பச்சை மதுக்கிண்ணத்தை உயர்த்தினார். அந்தப் புன்னகை நிறையக் கிடைத்தது எதிரேயிருந்த லொடோவிகோவிற்குத்தான். வெளுத்த அவர் முகம் இனிமையும் மரபின் உயர்வும் நிறைந்து மற்றவர்களின் அனல் தெறிக்கும் முகங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருந்தது. மென்மையும் உயிரும் நிறைந்த குரலில் இரண்டு நாடுகளுக்குமிடையே, அரசவம்சங்களுக்கு இடையே, மக்களுக்குமிடையே நிரந்தரமான சமாதானம் நிலவ வேண்டும் என்று, மது அருந்துமாறு சொன்னார் அவர். அர்த்தமில்லாத இந்த நெடுங்காலப் போருக்கு ஒரு முடிவு கண்டாயிற்று. இனிமேல் நம் எல்லோருக்கும் அமைதியும் வளமும் கொண்டு வரப்போகும் ஒரு புதிய யுகம் தொடங்கிவிட்டது. பூமி முழுவதிலும் சமாதானம் என்ற முதுமொழி நிறைவேறும் காலம் வந்து விட்டது. இவ்வாறு சொல்லிவிட்டு அவர் அருந்தவே, அந்த கம்பீரமான நிசப்தத்தில் மற்ற விருந்தினர்களும் தங்கள் பொற் கிண்ணங்களை உதட்டில் வைத்து காலி செய்தார்கள்.

அதன் பிறகு என் எஜமானர் கையில் கிண்ணத்துடன் உட்கார்ந்து கொண்டே இருந்தார். ஏதோ நினைவிலிருந்த அவர் பார்வை அந்தக் கிண்ணத்தின் மூலமாக உலகத்தையே ஆராய்வதுபோல் தோன்றிற்று.

மீண்டும் குரல்கள் கேட்டன. எத்தனை நேரம் பேசினார்கள் என்று தெரியவில்லை. கால உணர்ச்சியே சில சமயம் அற்று விடுகிறது. எனக்கு இருப்புக்கொள்ளவில்லை. நரம்புகள் கவலையில் முறுக்கேறியிருந்தன. சீற்றம் வேறு. ஏனெனில் கியோவானின் மதுவைத் தொடவே இல்லை. ஏஞ்சலிகா அந்தக் கிண்ணத்தை தன் பக்கமாக இழுத்துக் கொண்டாள். தான் அருந்துவதுபோல் அவள் பாசாங்கு செய்வதாகத் தோன்றிற்று. ஒருவருக்கொருவர் இருந்த மோகத்தில் ஒரே கிண்ணத்தில் இருந்தே குடிப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். ஆனால் இருவருமே அதைத் தொடவில்லை. அவள் நாசமாய்ப் போக, ஏதாவது சந்தேகப்பட்டு விட்டாளோ என்னவோ, அல்லது ஒருக்கால் காம நினைவுகளால் மதுவே தேவையாக இல்லையோ என்னவோ. கசப்பிலும் கோபத்திலும் நான் சீறினேன். அவர்கள் எதற்காக உயிர் வாழ வேண்டும். தொலைந்து போகட்டுமே.

டான்ரிகார்டோ ஒரே வாயில் அவ்வளவையும் விழுங்கி விட்டான். வழக்கம் போல தன் இதயநாயகியான இளவரசியை வணங்கி விட்டுத்தான் அந்தக் கடைசி கிண்ணத்தையும் அவன் காலி செய்தான். வேடிக்கை செய்யும் முயற்சி. சுவாதீனமில்லாத வலது கையை ஒருமுறை அசைத்துவிட்டு இடது கையால் இந்த அமிர்தரஸத்தை உயர்த்தி புன்சிரிப்பு சிரித்தான். அவளும் பதிலுக்கு புன்சிரிப்பு சிரித்தாள். முதலில் அந்தப் புன்னகையில் ஒரு குறும்பு தெரிந்தது. பின்பு மோகம் மின்னிற்று. எனக்கும் வழக்கம் போல குமட்டல் எடுத்தது.

திடீரென்று லொடோவிகோ பேய் பிடித்தாற் போல ஊளையிட்டான். இமை கொட்டாமல் கண்கள் ஒரு அசட்டுப் பளபளப்பு மின்ன வெறித்துப் பார்த்தான். அவன் பக்கத்தில் இருந்த இருவர் சட்டென்று அவன் அருகில் ஓடினர். ஆனால் இருவருமே சேர்ந்தாற் போல தள்ளாடி மேஜையின் ஓரத்தைப் பிடித்துக் கொண்டே நாற்காலியில் பொத்தென்று விழுந்தார்கள். விழுந்து புழுவாகத் துடித்தார்கள். விஷம் இட்டு விட்டதாக ஏதோ முனகினார்கள். பலருக்கு அது காதில் விழவில்லை. ஆனால் ஓரிருவர் அவ்வளவு பாதிக்கப் படாதவர்கள், மண்டபம் முழுவதும் கேட்கும்படியாக விஷம் இட்டு விட்டார்கள் என்று உரக்கக் கத்தினார்கள். உடனே எல்லோரும் எழுந்தனர். குழப்பம் ஏற்பட்டது. இல்டோரோவின் பரிவாரத்தைச் சேர்ந்த மற்றவர்கள் உறையிலிருந்து வாளை உருவி நடு மேஜையை நோக்கிப் பாய்ந்து எங்கள் மனிதர்களைத் தாக்கி இளவரசரிடம் வரமுயன்றனர். ஆனால் அதற்குள் எங்கள் ஆட்களும் எழுந்து தயாராகிவிட்டதால் கலவரம் பயங்கரமாக மூண்டு விட்டது. இரு தரப்பிலும் பலர் மாண்டனர். காயம் பட்டனர். இரத்தம் ஆறாக ஓடிற்று. அலங்கார மேஜைகளுக்கு இடையே போர்க்களம் தோன்றிவிட்டது. இதுவரையில்

பக்கத்தில் பக்கத்தில் அமர்ந்து குடித்த வீரர்கள் திடீரென்று உயிருக்குப் போராடினார்கள். எங்கு பார்த்தாலும் கூச்சல், மரணக் குரல்கள், காயம்பட்டோர் முனகல்கள், சாபங்கள் மூலைக்கு மூலை ஒலித்தன. நான் ஒரு நாற்காலி மீது ஏறிக்கொண்டேன், எல்லாவற்றையும் நன்றாகப் பார்ப்பதற்காக. எனக்கு எழுச்சி தாங்கவில்லை. நான் பரிமாறிய மதுவின் விளைவுதானே. இந்த ஈன ஜாதி இப்படித்தான் அழிய வேண்டும். வேறு எதற்கும் அது தகுதி இல்லை. என் வாள் இரக்கமில்லாமல் அழித்துக் கொண்டே பழியும் தண்டனையும் கோரி அங்குமிங்கும் வீசிற்று. நரகத்தில் இவர்கள் எரியட்டும். மனிதர்கள் என்று சொல்லிக் கொள்கிற இந்தப் பிராணிகள் இவ்வளவு அருவருப்பையும் குமட்டலையும் உண்டாக்கும் இந்த ஜந்துக்கள் அழியட்டும். இவர்கள் இருந்து என்ன ஆகப் போகிறது? எதற்காக இவர்கள் சிரித்து, காதலித்து, களியாட்டம் ஆடி உலகத்தைப் பாழாக்குகிறார்கள். இந்தப் பொய்யர்களும், டம்பர்களும் இருந்து என்ன? இந்த காம வெறியர்களின் பண்புகள் அவர்கள் பாபங்களைவிட மோசமானவை. ஒழியட்டும். சைத்தான் மாதிரியே நான் நின்றேன். அவனைச் சுற்றி இரவு நேரங்களில் நரகப் பேய்கள் கூடி நிற்குமாம். கோரப் பற்களால் இளித்துக் கொண்டு உயிர்களை மரண இராஜ்யத்திற்கு இழுத்துச் செல்லுமாம் அவை. இந்த அதிகாரத்தைப் பிரமாதமான களிப்புடன் நான் அனுபவித்துக் கொண்டிருந்தேன். வந்த சந்தோஷத்தில் எனக்கு மூர்ச்சைப் போட்டு விடும் போல் இருந்தது. என்னைச் சுற்றி ஒரே குழப்பம், நாசம். விருந்துக்கூடம் அழிவுக் கூடமாக ஆகிவிட்டது. இவ்வளவும் என் மூலமாகத்தான் நடக்கிறது. நான் கொடுத்த பானத்தில் இளவரசர்களும் பிரபுக்களும் மரணத்தைக் கொண்டு குருதியில் புரளுகிறார்கள். நான் கொடுத்த பானம். புன்னகைகளை விரட்டி சாவின் விளிப்பை கொண்டு வந்துவிட்டது. யாராலும் கிண்ணத்தை உயர்த்த முடியாது. காதல் பிதற்றல், வாழ்வில் இன்பம் எல்லாம் பறந்துவிட்டன. வாழ்வின் அதிசயமும், அழகும் மறந்து விட்டன. படலம் படர்ந்து கண்கள் பஞ்சடைந்து இருளாகக் காண்கின்றன. தீவட்டிகளைக் கீழே தள்ளி நான் அணைக்கிறேன்.

லொடோவிகோ அசைவற்று உட்கார்ந்திருந்தான். முகம் நீலம் பாய்ந்து விட்டது. சிறிது தாடியுள்ள அவன் முகவாய் எதையோ கடிக்கப் போவதுபோல கீழே தள்ளிக் கிடந்தது. மஞ்சளும் சிவப்புமாக அவன் கண்கள் வெளியே பிதுங்கியிருந்த அவன் தோற்றம், பயங்கரமாக இருந்தது. திடீரென்று கழுத்தைத் தனியே எடுக்க முயலுவதுபோல் ஒரு முறி முறித்தான். மறுகணம் தலை ஒரு பக்கமாய்ச் சாய்ந்தது. அதே சமயம் அவனுடைய கட்டை குட்டையான உடல் பின்பக்கம் வில்லாக வளைந்து யாரோ குத்திவிட்டாற்போல உலுங்கிற்று. அவ்வளவுதான். ஆள் தீர்ந்து விட்டான். இதற்குள் அவனுடைய மற்ற பரிவாரங்கள் மரணத் துடிப்பில் உதைத்துக் கொண்டு கிடந்தார்கள். ஆனால் சீக்கிரமே எல்லாம் அடங்கி விட்டது. ஆனால் டான்ரிகார்டோ என் மதுவை ரசிப்பது போல கண்ணை பாதி மூடிய வண்ணம் பின்னால் சாய்ந்திருந்தான். உண்மையிலேயே அவன் உயர்ந்த மதுவைக் குடித்தால் இப்படித்தான் அவன் அனுபவிக்கிற வழக்கம்.

திடீரென்று உலகத்தையே தழுவிக் கொள்ள விரும்புவது போல இரண்டு கைகளையும் முன்னால் நீட்டினான். பின்னால் விழுந்தான். தீர்ந்து விட்டான்.

இந்தச் சணடையிலும் குழப்பத்திலும் சாகிறவர்களை கவனிக்க யாருக்குமே நேரமில்லை. ஒவ்வொருவரும் தங்களால் முடிந்த வரையில் போராடிவிட்டு உயிர் நீத்தனர். கியோவானி இந்தப் பாழாய்ப் போன பெண்ணின் பேச்சைக் கேட்டு என் பானத்தைக் குடிக்காததால் தப்பி விட்டான். துடிக்கும் தன் தகப்பனைப் பார்த்து தான் என்னவோ சாதித்து விடுவதுபோல நின்றான். ஆனால் கருமானைப் போல பலமான மணிக்கட்டுகள் கொண்ட ஒருவன் ஓடிவந்து எல்லோரையும் தள்ளிக் கொண்டு பையனை இழுத்துக் கொண்டு மண்டபத்திற்கு வெளியேறினான். அந்தக் கோழைப் பயலும் கூடவே ஓடி தப்பிவிட்டான். நாசமாய்ப் போக!

மேஜைகள் கவிழ்ந்தன. மேலேயிருந்த சாமான்கள் இரத்த வெறியுடன் சண்டையிடும் ஆட்களின் காலின் கீழ் மிதிபட்டு நசுங்கின. பெண்கள் கூச்சலிட்டுக் கொண்டே ஓடிவிட்டார்கள். இந்த நாசத்திற்கு நடுவில் இளவரசி பொறி கலங்கி, செயலோய்ந்து நிற்பதைப் பார்த்தேன். அந்த நடு வயது முகத்திற் பூசியிருந்த வர்ணங்களுக்கும் அம்முகத்தில் படர்ந்த சவ வெளுப்பிற்கும் பொருத்தமில்லாத வேடிக்கையாக இருந்தது. வேலைக்காரர்கள் சிலர் அறையை விட்டு எப்படியோ அவளை அழைத்துச் சென்றனர். அவளும் பேசாமல் பின்சென்றாள். எங்கு போகிறோம், எங்கு அழைத்துப் போகிறார்கள் என்று தெரியாததுபோல இருந்தது அவள் முகத்தைப் பார்த்தால்.

எண்ணிக்கைக் குறைவாக இருந்தாலும் எதிரிகள் எப்படியோ சமாளித்துக்கொண்டு வெளியே போய் விட்டார்கள். மாடிப்படியில் சண்டை நடந்தது. சதுக்கத்திற்கு விரட்டிக் கொண்டு போனார்கள் எங்கள் ஆட்கள். திடீரென்று மொண்டான்ஸாவின் மெய்க்காவல் படை வந்ததால் இவர்கள் ஒருவாறு ஊரிலிருந்து தப்பிச் செல்ல முடிந்தது. இல்லாவிட்டால் ஒரு ஆள் மீதி இல்லாமல் சீவித் தள்ளியிருப்போம்.

சூன்யமாக இருந்த மண்டபத்தில் நான் தனியாக இருந்தேன். விளக்குகளெல்லாம் கீழே தள்ளப்பட்டு விட்டதால் பாதி இருளாக இருந்தது. வீதியிலிருந்து தீவட்டி பிடிப்பதற்காக இழுத்து வரப்பட்ட அரைப் பட்டினி சிறுவர்கள் தான் அங்கு இருந்தார்கள். தீவட்டியும் கையுமாக பிணங்களைத் தேடிக்கொண்டு கீழே கிடந்த உணவுத் துண்டங்களையும் அழுக்கேறிக் கிடந்த இனிப்புகளையும் அவசர அவசரமாக வாயில் போட்டு கொண்டார்கள். அங்கு இருந்த வெள்ளி சாமான்களையும் பிடுங்கி கந்தை ஆடைகளில் மறைத்துக் கொண்டார்கள். இனிமேல் அங்கு இருப்பது பத்திரமில்லை என்று தெரிந்ததும் தீவட்டிகளை வீசி எறிந்து விட்டு கையில் அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு வெளியே ஓடிவிட்டார்கள். நான் தனியாக நின்றேன். சுற்றிலும் கலங்காமல் பார்த்துக் கொண்டே சிந்தனையில் ஆழ்ந்தேன்.

அணையும் தீவட்டிகள் சுடர் மங்கி, அவற்றின் வெளிச்சம் விருந்தின் மிச்சங்களுக்கும் இரத்தக் கறை படிந்த துணிகளுக்கும் இடையே தரையில் உதிர வெள்ளத்தில் கிடக்கும் சவங்களின் மீது விழுந்தது. அவர்களுடைய சிங்கார உடைகள் கிழிந்து அழுக்கேறிக் கிடந்தன. வெளுத்த மூஞ்சிகள் முறுக்கி சீற்றம் படர்ந்து கோரமாகத் தெரிந்தன. வெறியுடன் சண்டையிட்டுச் செத்தவர்கள் அல்லவா? என்னுடைய புராதனக் கண்களால் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே நின்றேன்.

சகோதர அன்பு. நிரந்தர சமாதானம்.

இந்த அழகிய பெரிய வார்த்தைகளில் திளைத்து திளைத்து இந்தப் பிராணிகள் கண்ட ஆனந்தம்.

மறுநாள் காலையில் வழக்கம் போல் இளவரசியின் படுக்கையின் அருகில் நின்றேன் நான். சூன்யமான கண்களுடன் உதடுகள் வாட சோர்ந்து மல்லாந்து படுத்திருந்தாள் அவள். மூடியிருந்த அவள் வாய் திறக்கவே திறக்காதது போல் இருந்தது. நசுங்கின தலையணையின் மீது அவள் கூந்தல் அலங்கோலமாகக் கிடந்தது. கைகள் அசைவற்று துவண்டு விழுந்து கிடந்தன. அறையின் நடுவில் நின்று அவள் ஆணைக்கு நான் காத்திருந்தும் நான் நின்றதை அவள் கவனிக்கவே இல்லை. என் இஷ்டப்படி நன்றாக கவனித்துப் பார்த்தேன் அவளை. வர்ணம் பூசினது அப்படியே இருந்தது. உல்லாசத்தின் அடையாளமாக அது ஒன்றுதான் மிச்சம். தோல் உலர்ந்து நிறம் இழந்து கிடந்தது. உருண்டு திரண்ட அவள் கழுத்துச் சுருக்கங்களும் நிறையக் காணப்பட்டன. எந்த உணர்ச்சியும் காண்பிக்கக் கூடிய அவள் கண்கள் எல்லா சோபையும் இழந்து சூன்யமாக வெறித்துப் பார்த்தன. இவள் அழகாக இருந்திருப்பாள். காதலிக்கப்பட்டு தழுவி அணைக்கப்பட்டிருப்பாள் என்று நம்புவதே சிரமமாக இருந்தது. அந்த மாதிரி ஒரு சந்தர்ப்பத்தை நினைத்துப் பார்ப்பதுகூட அபத்தமாக தோன்றிற்று. படுக்கையில் படுத்துக் கிடந்த கோரமான பெண் அவள். அவ்வளவுதான்.

## 27

அரண்மனை தன் விதூஷகனுக்காகத் துக்கம் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. ஈமச்சடங்குகள் இன்றுதான் முடிந்தன. ராஜவம்சத்தினர், வீரர்கள், நகரப் பிரபுக்கள் அவனுக்கு கீழ் இருந்தவர்கள் எல்லோருமே ஊர்வலத்தில் கலந்து கொண்டோம். தெருக்களில் ஏகப்பட்ட கூட்டம். இந்த விதூஷகனின் அசட்டு வேடிக்கைகள் அவர்களுக்கு மிகவும் பிடிக்கும். இந்த மாதிரி ஜனங்களுக்கு இந்தக் கோமாளிகளைப் பிடிக்கிறதே அதுதான் விந்தை. தாங்கள் பட்டினி கிடக்கையில் பிறருடைய கவலை இல்லாத ஊதாரி வாழ்க்கையைப் பற்றி கேட்டு அனுமதிக்கிறார்கள். அவனைப் பற்றி கதைகளெல்லாம் அவனுக்குத் தெரியுமாம். அவன் அரண்மனையைச் சுற்றியுள்ள அழுக்குக் குளிகைகளில் உட்கார்ந்து அந்தக் கதை எல்லாம்

பேசிக் கொண்டிருப்பார்களாம். இப்பொழுது அவனுடைய ஈமச்சடங்கு ஆடம்பரமாக நடக்கிறது. இதுவும் அவர்களுக்கு ஒரு விருந்துதான்.

இளவரசர் துயரத்துடன் தலைகுனிந்து முன்னால் சென்றார். இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் மிகவும் போற்றத்தக்க வகையில் அவர் நடந்து கொள்வார். போற்றத்தக்க வகையில் என்று சொல்லுவது கூட பொருத்தம்தானா என்று எனக்குச் சந்தேகம். ஏனெனில் எல்லாவற்றையும் மறைத்துக் கொள்வதே அவருடைய இயல்பு.

யாரும் வாயைத் திறக்கக் குனியவில்லை. பிற்பாடு அரண்மனையிலோ, குடிசையிலோ அவர்கள் எதை வேண்டுமானாலும் சொல்லட்டும். பாதகமில்லை. ஏதோ தவறுதலாக நடந்து விட்டது என்றுதான் இந்தச் சம்பவம் அறிவிக்கப்பட்டது. மேன்மை தங்கிய விருந்தினர்களுக்காக வைக்கப்பட்ட நஞ்சிட்ட மதுவை டான்ரிகார்டோ அகஸ்மாத்தாக குடிக்க நேர்ந்து விட்டது. அவன் மடாக்குடியன். அடங்காத தாகம். ஆகவே அவனுக்கு நேர்ந்த முடிவு அவனே தருவித்துக் கொண்டது தான் என்று சொல்லிக் கொண்டனர். இதைத் தவிர ஒவ்வொருவரும் தங்கள் மனம் போனபடி சொல்லிக் கொள்கிறார்கள். பொதுவாக லொடோவிகோவும் அவன் பரிவாரங்களும் விஷம் இடப்பட்டதைப் பற்றி எல்லோருக்குமே சந்தோஷம் தான்.

இளவரசி ஈமச்சடங்கிற்கு வரவில்லை. இன்னும் அசைவற்று படுத்துக் கிடக்கிறாள். சாப்பிடவில்லை. அதாவது சாப்பாடு இறங்கவில்லை. அந்த அசட்டுத் தோழி கண் சிவக்க பரபரவென்று பெருமூச்சு விட்டுக்கொண்டு தன் எண்ணெய் வழியும் உப்பிய கன்னங்களிலிருந்து கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அங்குமிங்கும் ஓடுகிறாள்.

யாருக்கும் என் மேல் சந்தேகமில்லை. நான் யாரென்று யாருக்குத் தெரியும்?

## 28

இளவரசர் உண்மையாகவே அவனுக்காக துயரப்பட்டாலும் படலாம். இவரைப் போன்றவர்களுக்கு இது முடியாத காரியம் அல்ல. அவனுக்காகத் துயரம் கொண்டாடுவதைச் சற்று அனுபவித்தே செய்கிறார் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. சுயநலமில்லாத, பிறரைப் பாராட்டிக் கொண்டாடும் துயரம் மனதை உயர்த்துகிறது. மேலும் அவன் சாக வேண்டும் என்று விரும்பினால்கூட அவன் மேல் பிரியம் மட்டும் தனியாக இருந்தது அவருக்கு. அவன் போனதும் சற்று அதிகமாகவே துக்கம் பாராட்டுகிறார் அவ்வளவுதான். முன்னெல்லாம் தன் நண்பனை நினைக்கும்பொழுது அவர் மனதில் ஏதாவது நெருடலாம். இப்பொழுது அது இல்லை. தன் விருப்பம் நிறைவேறிவிட்டதால் முன்னைவிட அவன்மேல் பாசங்கொண்டு வருந்துகிறார்.

ஒவ்வொருவரும் டான்ரிகார்டோவைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவன் எப்படி இருந்தான், எப்படி வாழ்ந்தான், எப்படி செத்தான், என்ன சொன்னான், எந்தெந்த சமயங்களில் எப்படி எப்படி நடந்து கொண்டான், எப்பேர்ப்பட்ட சுத்த வீரன் அவன், எவ்வளவு உல்லாசி, தைரியசாலி - இதே பேச்சுத்தான். முன்னைவிட இப்பொழுது அவன் மிகவும் உயிரோடு இருப்பது போல் தோன்றிற்று. ஆனால் இது சகஜம் தானே. யாரும் மரணம் அடைந்தவுடன் இப்படித்தான் ஒரே முட்டாக பேசுகிற வழக்கம். சீக்கிரம் இது மறைந்து விடும். கடைசியாக எல்லாம் நிச்சயமாக மறதியின் இருளில் கரைந்துவிடும்.

ஆனால் அவனை மறக்கவே முடியாது என்று பேசிக் கொள்கிறார்கள். அவன் அசாதாரணமான அழகன் என்றெல்லாம் பொய்யாகச் சொல்லி அவன் புகழை சாசுவதமாக்கலாம் என்று நம்புகிறார்கள். மரணத்தைக் கண்டால் ஏன் இப்படி கசக்கிறது இவர்களுக்கு? அதுவும் தங்கள் மனிதர்கள் யாராவது போய்விட்டால் ஏன் இப்படி மாய்ந்து போகிறார்களோ? அவனைப் பற்றிக் கதைகள் புதிதாக உருவாகி வருகின்றன. இந்தக் காலிப் பயலை மகாமுட்டாளான இந்தக் கோமாளியைப் பற்றி உண்மை தெரிந்தவர்கள் இந்த சிருஷ்டிகளின் விளைவைக் கொண்டு பிரமித்துப் போய் விடுவார்கள். அடி முதல் நுனி வரை எல்லாம் பொய். அவர்களைச் சற்றேனும் பாதிக்கவில்லை. அவர்கள் மனதில் அவன் கவிதையின் அவதாரம்; களிப்பின் வடிவம். இன்னும் என்னென்னவோ. அவன் போனதிலிருந்து உலகமே மாறி விட்டது. இந்தக் குதிரைச் சிரிப்பை இனி கேட்க முடியாதல்லவா? அவன் இருந்த இடம் சூன்யமாகி விட்டது. அதை யார் நிரப்ப முடியும். இப்படியாக ரசித்து ரசித்து துக்கம் கொண்டாடினார்கள்.

இளவரசரும் தாராளமாக இந்த உணர்ச்சி விருந்தில் கலந்து கொள்கிறார். அவனைப் பற்றிய புகழ் உரைகளை ஆசையாகக் கேட்டார். இடை இடையே தானும் ஏதாவது சொல்லுவார். அவர் வாயிலிருந்து வரும்பொழுது அந்தச் சொற்கள் தனி அழகுடன் ஒளிரும். மற்றபடி சின்னக் கொலைகாரனான என் மேல் அவருக்கு மிகவும் திருப்தி. ஆனால் வெளிக்குக் காண்பித்துக் கொள்வதில்லை. அந்த விஷயத்தைப்பற்றி குறையாகவோ, புகழ்ந்தோ ஒரு வார்த்தைகூட என்னிடம் சொன்னதில்லை. ஒரு இளவரசர் தன் பணியாட்களைக் கவனிக்க வேண்டுமென்று என்ன முடை?

என்னைக் கண்டாலே ஒதுங்குகிறார் அவர். அந்தச் சம்பவத்திற்குப் பிறகு எப்பொழுதும் அப்படியே செய்து வருகிறார்.

இளவரசி தன் துயரத்தை அதிகமாகக் காண்பித்துக் கொள்ளவில்லை. இதன் அர்த்தம் என்னவென்று எனக்குப் புரியவில்லை. ஒரு சமயம் துயரத்தை அதிகமாகக் கொண்டாடுகிறாளோ என்னவோ. வெறித்துப் பார்த்த வண்ணம் படுத்திருக்கிறாள்.

அவள் துயரத்திற்கெல்லாம் நான் தான் காரணம். அவள் நிராசையுடன் இருப்பது எனக்காகத் தான். அவள் மாறி விட்டாள். இனிமேல் பழையபடி இருக்கவே மாட்டாள் என்றால் அதுவும் என்னால் தான். தன் தோற்றத்தைப்

பற்றிக் கவலைப்படாத குரூபியைப் போல அவள் படுத்திருப்பதும் என்னால் தான். அவள் மீது எனக்கு இவ்வளவு சக்தி உண்டு என்று நான் நம்பியிருக்கவே மாட்டேன்.

இந்தக் கொலைகள் இளவரசரை மிகவும் பிரசித்தமாகச் செய்து விட்டன. அவரை மிகவும் பெரியவர் என்று எல்லோருமே சொல்லுகிறார்கள். இதற்கு முன்னால் இவ்வளவு பெரிய வெற்றியையோ, புகழையோ அவர் அடைந்ததில்லை. அவரை எண்ணி நாங்கள் பெருமையடைகிறோம். அசாதாரணமான தந்திரத்துடனும் சக்தியுடனும் அவர் நடந்து கொண்டு விட்டார்.

இதனால் ஏதாவது நன்மை வருமா என்று சிலர் சந்தேகப்படுகிறார்கள். அபசகுனமான தோற்றங்கள் அவருக்கு உண்டாகின்றனவாம். இதெல்லாம் யாராவது ஒருவருக்கு எப்பொழுதும் வந்து கொண்டு தான் இருக்கிறது. பல பேருக்கு மொத்தத்தில் சந்தோஷந்தான். அவரைக் காணும் பொழுது உரக்க வாழ்த்துகிறார்கள். எதற்கும் பின்வாங்காத ஒரு இளவரசரைக் கண்டு மயங்காதவர்கள் யார்?

இனிமேல் அமைதியும் ஆனந்தமும் நிறைந்த யுகம் ஆரம்பித்து விடும் என்று மக்கள் நம்புகிறார்கள். இனிமேல் நம்முடைய சந்தோஷத்தைக் குலைக்காத வகைக்கு பக்கத்து நாட்டாரின் தலையை சீவி விட்டார் அல்லவா?

அவர் மனதில் இப்பொழுது என்ன திட்டங்கள் உருவாகின்றனவோ தெரியவில்லை. உடனே மீண்டும் எதிரிகளைத் தாக்கி அந்த நகரத்தின் நாட்டையும் கைப்பற்றி விடுவதாக யோசித்தாலும் யோசிக்கலாம். எதிரிகளின் முக்கியமான தலைவர்களும் பிரபுக்களும் தொலைந்து விட்டதால் இது சுலபமாக முடிந்துவிடும். கியோவானின் சின்னப் பையன். அவனால் தொந்தரவு இராது. ஏதாவது நடந்துவிட்டால் ஓடிப்போகிற கோழை. அவனைப் பிடித்து ஆண்பிள்ளையைப் போல நடந்துகொள்ள கற்றுக் கொடுத்தாலும் தேவலை.

இந்தக் கொலைகளின் லாபங்களை அனுபவிக்க முற்படாமல் இருக்கமாட்டார் இளவரசர். இல்லாவிட்டால் இவ்வளவு செய்தும் என்ன பயன்?

நிலைமையை இப்படியே விட்டுவிட்டு திருப்தி அடைய மாட்டார் அவர். முளைத்ததை விதைத்தவன் அனுபவிக்கத்தானே வேண்டும்.

மொண்டான்ஸா மக்கள் வெகுண்டு எழுந்து இந்தக் கொலைகளுக்கு பழிவாங்கப் போவதாக அசட்டு வதந்திகள் உலவுகின்றன. வெறும் பேச்சுத்தான். கோபம் உண்டாவது இயற்கை. கோபம் மூளவேண்டும் என்றுதானே எல்லாம் செய்யப்பட்டது. ஆனால் இப்பேர்ப்பட்ட ஒரு தலைவனுக்காக அவர்கள் ஆயுதம் ஏந்துகிறார்கள் என்பதைத்தான் நம்ப முடியவில்லை. ஏந்தினாலும் பாதகமில்லை. தலைவன் இல்லாத மக்கள் வெறும் ஆட்டு மந்தை.

# 29

கியோவானியின் சிற்றப்பன் ஒருவன் பழிவாங்குவதாக கிளம்பி இருக்கிறானாம். இது நம்பத்தக்க செய்தி. மக்கள் எதற்காகப் பழி வாங்க வேண்டும். யார் ஆண்டால் என்ன? அவர்கள் வாழ்க்கை மாறப் போகிறதா? நாசக்காரர்களில் ஒருவர் தொலைந்தால் அவர்களுக்குத் தானே சந்தோஷம்?

இந்த மனிதனும் லொடோவிகோவைப் போன்றவன் தானாம். ஆனால் இதுவரையில் முக்கியமான எதிலும் பங்கெடுத்துக் கொள்ள அனுமதிக்கப் படவில்லை. அவன் பெயர் எர்கோல் மொண்டான்ஸா. ஆபத்தான ஆளாம். ஆனால் சண்டை போடத் தெரியாதாம். நாட்டுக்கு வந்துள்ள ஆபத்தை விலக்குவதற்காக ஆட்சியை மேற்கொண்டு விட்டானாம். இளவரசனாக ஆவதற்குப் பையனுக்கு ஆற்றல் போதாது என்று அவனையும் ஒதுக்கப் பார்க்கிறானாம். தன் உடலில் உண்மையான மொண்டான்ஸா இரத்தம் ஓடுவதால், தானே ஆளத் தகுந்தவன் என்று அவன் நம்புகிறானாம். இந்தச் செய்தியும் நம்பத்தக்கதாகத்தான் தோன்றுகிறது. இந்த உலகத்தில் எத்தனையோ நிகழ்ச்சிகள் இப்படித்தானே இருக்கின்றன. என் ஜோஸியமும் பலித்தாலும் பலிக்கலாம். மான் கண்களுடன், மார்பில் தாழ்த்துத் தொங்குகிற இந்தப் பையன் ஒரு நாளும் அரியணை மீது உட்கார மாட்டான் என்பதுதான் என் ஜோஸ்யம்.

படைகள் ஏராளமாகத் திரட்டப்பட்டு இந்த வஞ்சகத்தைத் தீர்ப்பதற்காக ஆற்றின் மருங்கிலுள்ள பள்ளத்தாக்கின் வழியாக ஒரேயடியாக நாட்டிற்குள் குவிந்து கொண்டிருக்கின்றன. பொக்கரோஸா தலைமை தாங்கி நடத்துகிறானாம். இங்கே விட இரட்டை மடங்கு கூலியாம் அங்கு. ஆகவே எதிரிகளுக்காகச் சாகத் துணிந்து விட்டான். எரித்தும் சூறையாடியும் பிறர் சாவதற்கு உதவி செய்து கொண்டும் அந்தச் சைன்யம் வந்து கொண்டிருக்கிறது.

இந்த முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக நம் சேனாதிபதிகள் துருப்புகளைத் திரட்டியுள்ளார்கள். நகரத்தின் வீதிகளில் மீண்டும் சிப்பாய்களின் நடமாட்டம்.

வசதிகள் இப்பொழுது குறைவு. சென்ற யுத்தத்தில் பலபேர் கொல்லப்பட்டு விட்டார்கள். சண்டை போடத் தெரிந்த போதுமான ஆட்களைச் சேர்ப்பதே சிரமமாக இருக்கிறது. ஆனால் இருக்கிற மிச்சத்தைத் திரட்டியதன் பலனாக எதிரிகளுக்கு நிகரான சைன்யம் தயாராகி இருக்கிறது. அவர்களுக்கும் ஏகப்பட்ட உயிர் நஷ்டம். முன்னைப்போல இங்கும் அவ்வளவு ஆர்வம் இல்லை. இருப்பினும் வேறு வழியில்லை என்று எல்லோரும் பணிந்து விட்டார்கள். விதி விட்ட வழிபடிதான் நடக்கும், வாழ்க்கை இன்பத்திற்கு மட்டுமல்ல என்று அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும்.

நகரத்தை நோக்கி படைகள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. தடுப்பதெல்லாம் தற்காலிகம் தான். நீண்ட நேரம் எதிர்க்க முடியாமல் எப்பொழுதுமே நம் படைகள் பின்வாங்கி விடுகின்றன. போர்க்களத்திலிருந்து வரும் செய்திகள் மனதை ஓயச் செய்கின்றன. பின்வாங்கல், நஷ்டம், சேதம் இதே செய்திதான். எதிரிகள் வரும் இடங்கள் எல்லாவற்றையும் சூறையாடுகிறார்கள். கொள்ளையடித்து, எரித்து, கண்ணால் காண்பவைகளை எல்லாம் கொன்று போடுகிறார்கள். கால்நடைகளைக் களவாடி, அறுத்து இராணுவத் தீயிலேயே வாட்டித் தின்கிறார்கள். மிச்சத்தை வருங்கால உபயோகத்துக்காகப் போட்டுக் கொள்கிறார்கள். பயிர் வயல்கள் எரிகின்றன. பொக்கரோஸாவின் படைகள் மனம் போனபடி எல்லாம் எதையும் செய்து கொண்டு வருகின்றனர்.

அகதிகள் வண்டிகளில் பல ரக சாமான்களைப் போட்டுக் கொண்டு பக்கவாயில் வழியாக நகரத்திற்குள் வருகிறார்கள். பானைகள், தட்டுகள், படுக்கை விரிப்புகள், கந்தல்கள் இதனால் என்ன உபயோகம் என்று பார்த்து சிரிக்கக்கூடிய குப்பைகள் எல்லாம் வண்டிகளில் வருகின்றன. சிலர் ஒரு ஆட்டையோ, சாகக் கிடக்கிற ஒரு மாட்டையோ கொம்பால் பிடித்து இழுத்து வருகிறார்கள். முகங்களில் ஒரே கிலி. அவர்கள் இங்கு வருவதை யாரும் விரும்பவில்லை. ஏன் வருகிறார்கள் என்றும் தெரியவில்லை. தங்கள் மிருகங்களுடனேயே படுத்து நாற்சந்தியில் தூங்குகிறார்கள் அவர்கள். எங்கு பார்த்தாலும் ஒரே சாணி நாற்றம் அடிக்கும் கிராமம் மாதிரியே இருக்கும்.

எங்கள் துருப்புகளெல்லாம் பின்வாங்குவதைத் தவிர எதுவும் செய்யவில்லை. எதிரி அருகிலேயே இருக்கிறானாம். ஆனால் எங்கு, எந்த இடம் என்று தெரியவில்லை. வரும் செய்திகளும் மாறிக் கொண்டே வருகின்றன. ஆனால் எப்பொழுதும் எங்கள் ஆட்கள் எதிர்த்தார்கள் என்றும் ஆனால் இப்பொழுது பின்வாங்குகிறார்கள் என்ற ஒரே மாதிரி தகவல்தான். நகரத்திற்கு வரும் அகதிகளோ பெருகிக் கொண்டே வருகிறார்கள். அவர்களுடைய குப்பைகளும் ஆடுமாடுகளும் கந்தைகளும் பெருகி வருகின்றன. மிகவும் வேடிக்கையான யுத்தம்!

உண்மையில் இளவரசரின் அலட்சியமும், எல்லாப் பொறுப்புகளையும் தன் கீழ் உள்ளவர்கள் மீது விட்டிருப்பதும் எனக்குப் புரிகின்றன. தற்காப்புத் தந்திரங்களில் அவருக்குச் சிரத்தை இல்லை. என்னைப் போன்றவர் அவர். தானே முன்னால் தாக்க வேண்டும். தன்னையே தற்காப்பு செய்து கொள்வதில் மகிழ்ச்சியோ, எழுச்சியோ என்ன இருக்கப் போகிறது. அதன் பலன் தான் என்ன? மொத்தத்தில் இந்தப் போர் அலுப்பைத்தான் தருகிறது.

மொண்டான்ஸா - பொக்கரோஸா படைகளை நகர மதில் மீதிருந்து பார்க்க முடிகிறது. இன்று சாயங்காலம் சமவெளியில் இராணுவ முகாம்களில் எரியும் நெருப்புகளை என் அறையிலிருந்து பார்க்க முடிகிறது. இந்த இரவின் இருளில் கண்ணுக்கு இனிய காட்சியாக அது தோன்றுகிறது. நெருப்பைச் சுற்றி அமர்ந்து போலிப் பட்டாளங்கள் தத்தம் வீரச் செயல்களைப் பற்றிப் பேசுவதை என் மனக்கண் முன் சித்தரித்துப் பார்க்க முடிகிறது. ஆலிவ்

வேர்களை அவர்கள் நெருப்பில் போடுவதும், தீயானது குதித்து எரியும் சுடர் ஒளியில் வன்மை கொண்ட அவர்கள் முகங்களையும் காண முடிகிறது. தங்கள் விதியை தங்கள் கையிலேயே சுமக்கும் மனிதர்கள் இவர்கள். வருங்காலம் எப்படி என்று நிரந்தரமான கவலையுடன் வாழும் வாழ்வல்ல அது. இந்தத் தீயை எந்த நாட்டிலும் அவர்கள் மூட்டுவார்கள். எந்த மக்களால் தங்கள் ஜீவனம் நடக்கும் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. எந்த மன்னனுக்குப் பணி புரிந்தாலும், எல்லாம் அவர்களுக்கு ஒன்றுதான். உண்மையில் அவர்கள் செய்வது ஆத்ம சேவை ஒன்றுதான். சோர்வடைந்தால் இருளில் நீட்டிப் படுத்துவிடுவார்கள். மறுநாள் செய்யவேண்டிய கொலைகளுக்கு இந்த ஓய்வு அவசியம். நாடில்லாத மனிதர்கள் அவர்கள். உலகம் முழுவதும் அவர்களுடையதுதான்.

இரவு எழில் கொண்டு விளங்குகிறது. மலைகளிலிருந்து இலையுதிர்காலக் காற்று குளிர்ந்து வீசுகிறது. விண்மீன்கள் கூட மின்னிக் கொண்டு தான் இருக்கவேண்டும். இந்த இராணுவ நெருப்புகளைப் பார்த்துக் கொண்டே வெகு நேரமாக உட்கார்ந்திருக்கிறேன். இப்பொழுது நானும் போய்ப் படுத்துக் கொள்ள வேண்டியதுதான்.

இவ்வளவு தூரத்திலிருக்கும் நெருப்பைப் பார்க்க முடிகிற என் கண்களுக்கு நட்சத்திரம் தெரியாதது விந்தைதான். எப்பொழுதுமே எனக்கு அது முடிந்ததில்லை. மற்றவர்களைப் போல இல்லை என் கண்கள். இருந்தாலும் கோளாறு ஒன்றும் கிடையாது. ஏனெனில் பூமியில் உள்ள ஒவ்வொன்றையும் எனக்கு அடையாளம் கண்டு பிடிக்க முடியாது.

## 30

**பொக்கரோஸாவின்** நினைவு எனக்கு அடிக்கடி வருகிறது. பிரும்மாண்டமாக இராட்சஸ வடிவத்துடன், சொள்ளை மூஞ்சியும், மிருகத்தின் கடைவாயும், கண்களின் ஆழத்தில் மிருகத்தின் பார்வையுமாக அவன் நிற்கும் தோற்றம் என் கண் முன் வருகிறது. அவன் மார்புக் கவசத்தின் மீது நாக்கை நீட்டிக் கொண்டு வாய் பிளந்து நிற்கும் சிம்மத்தின் தோற்றமும் இருக்கிறது.

மதிலுக்கு வெளியே நடந்த சண்டைக்குப் பிறகு எங்க்ள் துருப்புகள் நகரத்திற்குள் திரும்பி ஓடோடி வந்து விட்டன. இந்தச் சண்டையில் பல நூற்றுக்கணக்கான உயிர்கள் எங்களுக்கு நஷ்டம். காயம்பட்ட பலர் நகர வாயில்கள் வழியாக ஊர்ந்து கொண்டே வந்தார்கள். போர்க்களத்தில் தங்கள் பிள்ளைகளையும், கணவர்களையும் தேடிச் சென்ற கண்மணிகள் காயம்பட்டவர்களை இழுத்து வந்தார்கள்.

இனிமேல் முடியாது என்று விட்டு விட்டு மதிலுக்குள் எங்கள் படைகள் பின்வாங்கிய பொழுது அவர்கள் நிலை பரிதாபகரமாக இருந்தது. அவர்கள் உள்ளே வந்தது முதல் நகரமெங்கும் ஒரே குழப்பம். ஜனத்தொகை பெருகி

ஊரே பிதுங்கிக் கொண்டிருந்தது. நாட்டுப் புறங்களிலிருந்து வந்த எண்ணற்ற அகதிகள், சிப்பாய்கள், காயம் பட்டவர்கள் பெரிய குழப்பமாக இருக்கிறது. இரவின் குளிரைக் கூடத் தாங்கிக் கொண்டு மக்கள் தெருக்களில் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். பகல் வேளைகளில் கூட சோர்வு தாங்காமல் உறங்குபவர்கள் மீதும் கவனிக்கப்படாத காயம் பட்டவர்கள் மீதும் இடறி விழ வேண்டியிருக்கிறது. எதிரி நகரத்தை முற்றிலும் சூழ்ந்து கொண்டதால் நிராசை தணியவும் இல்லை.

பொக்கரோஸாவைப் போன்ற யாரையாவது எதிர்க்க முடியுமோ? என்னைத் தனியாகக் கேட்டால் வெற்றி இந்தப் போரில் கிடைக்குமென்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் ஜனங்கள் பேசிக்கொள்வது என்ன? கடைசி இரத்தம் சிந்துகிறவரையில் போராடி நகரத்தைக் காக்கப் போகிறார்களாம். பலமாக காபந்து செய்திருக்கிறார்களாம். நீண்ட காலம் எதிர்த்து இருக்க முடியுமாம். தகர்க்கவே முடியாதாம். ஆனால் விழுகிற வரையில் எல்லா நகரங்களும் இப்படித்தான் இருக்க முடியும். இந்த நகரத்தை தகர்க்க முடியுமா, முடியாதா என்று எனக்கென்று ஒரு சொந்த அபிப்பிராயம் உண்டு. இளவரசர் விழித்துக்கொண்டு விட்டார். தற்காப்பு அவரே தலைமை தாங்கத் தொடங்கி விட்டார். ஜனங்களுக்கு அவரிடம் மதிப்பு இல்லை. அவர் வெளியே வரும்பொழுது யாரும் கோஷம் செய்வதில்லை. லொடோவிகோவையும் அவன் ஆட்களையும் கொலை செய்தது பைத்தியக்காரனின் நிலை என்றும் மேலும் மேலும் துன்பத்தையும் போரையும் தவிர வேறு ஒன்றும் விளையப் போவதில்லை என்றும் ஜனங்கள் கருதுகிறார்கள்.

இளவரசி இப்பொழுது எழுந்து நடமாடுகிறாள். கொஞ்சம் சாப்பிட ஆரம்பித்திருக்கிறாள். ஆனால் பழைய நிலைமைக்கு வரவே இல்லை. உடம்பு மிகவும் இளைத்து விட்டது. கதுப்புடன் இருந்த முகம் நிறம் இழந்து உலர்ந்து விட்டது. உண்மையில் முற்றிலுமே மாறிவிட்டன அவை. உடைகள் வேறு யாருக்கோ செய்ததைப் போட்டுக் கொண்டதைப் போல தொளதொள வென்று அவள்மேல் துவளுகின்றன. எப்பொழுதுமே கறுப்பு உடை. பேசும்பொழுது தீனமான விசுவிசுவென்ற குரல். வாயும் உலர்ந்திருக்கிறது. உடல் இளைத்ததால் முகத்தோற்றமும் மாறிவிட்டது. கண்கள் உள்ளே போய் கருவட்டம் கட்டி இருக்கிறது. கண்களில் இயற்கைக்குப் புறம்பான ஒரு ஜொலிப்பு. முழங்கால் வலிக்கிற வரையில், சிலுவை முன் மண்டியிட்டு மணிக்கணக்கில் தொழுகிறாள் அவள். அவள் எதற்காகத் தொழுகிறாள் என்று புரியவில்லை. முடிவில்லாமல் நடக்கிற இந்த தொழுகைகளுக்கு பதில் கிடைக்குமோ என்னமோ தெரியவில்லை. அறையை விட்டு வெளியே கிளம்புவதே இல்லை.

பர்னார்டோ நகரத்தைக் காப்பாற்றுவதற்காக புதிய புதிய ஏற்பாடுகளெல்லாம் கண்டுபிடித்து இளவரசருக்கு உதவிக் கொண்டிருக்கிறானாம். அசாத்தியமான கெடுபிடியுடன் இராப்பகலாக வேலை நடந்து கொண்டிருக்கிறது.

பர்னார்டோவின் திறமை, கலை இவற்றிலெல்லாம் எனக்கு மிகவும் நம்பிக்கை உண்டு. இருந்தாலும், பொக்கரோஸாவை எதிர்த்து அவர் என்ன செய்ய முடியும். அவர் பெரிய மேதாவிதான். இயற்கையை வென்று அதன் ஆற்றல்களை வசப்படுத்தி இருக்கிறார். அடிபணியச் செய்திருக்கிறார். ஆனால் பொக்கரோஸாவைப் பார்த்தாலோ அவனே இந்த அபார சக்திகளில் ஒருவன் என்றே தோன்றுகிறது. இயற்கையின் சக்திகள் இவனுக்கு மனதோடு பணிந்து ஏவல் செய்வது போல தோன்றுகிறது. இயற்கையிடம் அவனுக்கு இன்னும் நெருக்கம் அதிகம்.

பர்னார்டோவும் மாறித்தான் இருக்கிறார். அகம்பாவமும், கம்பீரமும் கொண்ட அவன் தோற்றம் என்னை சஞ்சலப் படுத்துகிறது. இது சமமான போராட்டமாக இருக்குமென்று தோன்றவில்லை. இருவரையும் சேர்த்து நிற்க வைத்துப் பார்த்தால், பர்னார்டோவின் வேதாந்தி முகத்தையும், பொக்கரோஸாவின் சிங்க முகவாயையும் சேர்த்து பார்க்கும் பொழுது யார் பலமுள்ளவன் என்று சந்தேகமில்லாமல் தெரிந்துவிடும்.

## 31

நகரத்தில் உணவு குறைந்துகொண்டே வருகிறது. அரண்மனையில் இது தெரியவில்லை. ஆனால் மக்கள் பட்டினி கிடக்கிறார்கள். வேலையில்லாமல் இத்தனை ஆட்கள் இருக்கும்பொழுது ஊர் எப்படி இருக்கும். வந்துள்ள அகதிகளை எல்லோருமே வெறுக்கிறார்கள். உணவு பற்றாக்குறைக்கு அவர்கள்தான் காரணமாம். இந்தக் குற்றச்சாட்டில் தவறு ஒன்றுமில்லை. நகர மக்களுக்கு அவர்கள் தரும் சுமை - அவர்கள் அழைத்து வந்த குழந்தைகள் தெருத் தெருவாகப் பிச்சை எடுக்கிறார்கள். சமயம் வந்த பொழுது திருடவும் திருடுகிறார்களாம். வாரம் இரண்டு தடவை இலவச சாப்பாடு போட்டாகிறது. ஆனால் அளவு கொஞ்சம். முற்றுகை எதிர்பார்த்து முன்னேற்பாடுகள் செய்யாததால் வரவர உணவு நிலமை மோசமாகிக் கொண்டே வருகிறது. சீக்கிரம் எல்லாம் தீர்ந்து விடப்போகிறது. பசுவோ, ஆடோ வைத்திருந்த அகதிகள், அதன் பாலைக் கறந்து சாப்பிட்டவர்கள், கடைசியில் எலும்பும் தோலுமாகப் போன அந்த மிருகங்களை அறுத்தே சாப்பிட்டு விட்டார்கள். மிச்சமிருந்த இறைச்சியைக் கொடுத்து மாவும் வேறு அவசியப் பண்டங்களும் வாங்கி சில நாள் காலம் தள்ளினார்கள். இப்பொழுது எல்லாம் தீர்ந்து விட்டது. ஆனால் நகர மக்களோ இறைச்சியை ஒளித்து வைத்திருக்கிறார்கள் என்றும் தங்களைவிட நல்ல நிலையிலேயே இருக்கிறார்கள் என்றும் சாதிக்கிறார்கள். எனக்கு என்னவோ நம்பிக்கை இல்லை. அகதிகளைப் பார்த்தால் அப்படித் தோன்றவில்லை. இளைத்து, மெலிந்து, பசித்து காணப்படுகிறார்கள். நான் இப்படிச் சொல்லும்பொழுது அவர்களிடம் ஏதோ அனுதாபமாக இருக்கிறேன் என்று நினைக்க வேண்டாம். அவர்கள் மீது நகர மக்களுக்குள்ள அருவருப்பு எனக்கும் உண்டு. பொதுவாக எல்லாக் குடியானவர்களையும்போல அவர்களும் புத்தி இல்லாதவர்கள் தான். இல்லாவிட்டால் எப்பொழுதும் இப்படி உட்கார்ந்து

வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பார்களா? வெளியார்களுடன் அவர்களுக்கு பழக்கமே கிடையாது. ஆகவே இந்த ஊர்க்காரர்கள், அந்த ஊர்க்காரர்கள் என்று கும்பல் கும்பலாகப் பிரிந்து வாழ்கிறார்கள். தங்கி இருக்கிற இடமெல்லாம் ஒரே அழுக்கு. சாயங்கால வேளைகளில் நெருப்பு மூட்டி சுற்றி உட்கார்ந்து அசட்டுப் பிசட்டென்று யாருக்கும் புரியாமல் ஏதோ பேசுகிறார்கள். அப்படி யாரும் கேட்கத் தகுதியான பேச்சும் இல்லை.

இவர்களிடமிருந்து வரும் நாற்றமும், நெடியும் சகிக்க முடியவில்லை. என் உடம்பைப் பற்றிய வரையில் நான் மிகமிக சுத்தமானவன். சுற்றுப்புறத்தில் துளி அழுக்கு இருந்தாலும் பொறுக்க முடியாது என்னால். ஆகவே இந்த நாற்றத்தை என்னால் சகிக்க முடியவில்லை. மனித உடலிலிருந்து வெளிப்படும் பொருட்களையும் அவற்றின் துர்கந்தத்தையும் நான் அளவு மீறி வெறுப்பதாகப் பலர் கருத்து. இந்த அகதிகள் புராதன காலத்து மனிதர்களோ என்னவோ? தம் கால்நடைகளைப் போலவே கண்ட இடத்தில் உட்கார்ந்து சௌசம் செய்து கொள்கிறார்கள். மகா பன்றிகள். சொல்லவே நாக் கூசுகிறது. எங்கும் ஒரே நாற்றம். வீதி, நாற்சந்தி எங்கு பார்த்தாலும் அசிங்கம். ஊருக்குள் போவதையே கூடிய வரையில் நான் தவிர்க்கிறேன். இளவரசியின் அசாதாரணமான மாறுதலாலும் டான்ரிகார்டோ உரிய சமயத்தில் இறந்ததாலும் தூது செல்கிற வேலை எனக்கு அவ்வளவாக இல்லை இப்பொழுது.

வீடில்லாத இந்த மக்கள் இரவில் திறந்த வெளியில் உறங்குகிறார்கள். வழக்கத்தைவிட கடுமையான குளிர் இந்த வருஷம். எப்படித்தான் இந்தக் கந்தல்களோடு இந்தக் குளிருடன் போராடுகிறார்களோ. குளிரில் சிலர் விறைத்து செத்துவிட்டார்களாம். காலையில் எல்லோரும் எழுந்தபோது குப்புறப் படுத்திருந்த ஒருவன் அப்படியே படுத்திருந்தானாம். நெருங்கிப் பார்த்தால் வெறும் உடல்தான் கிடந்ததாம். ஆனால் சாக அடித்தது, குளிரைவிட மனக் கஷ்டங்கள் தான் என்றே சொல்ல வேண்டும். தெம்பும் இயற்கையான வெதவெதப்பும் இல்லாத கிழவர்கள்தான் அதிகமாகச் சாகிறார்கள். அவர்கள் சாவதைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை. ஆனால் பிறருக்கு பாரமாகத் தானே இருக்கிறது அது. அதுவும் எத்தனை பேர்கள்.

பொக்கரோஸாவின் ஆட்களுக்கு ஒன்றுக்கும் குறைவில்லை. சூறையாட நாடு முழுவதும் அவர்கள் கையில் இருக்கிறது. வேண்டும்பொழுதெல்லாம் உட்புற கிராமங்களை நோக்கி கொள்ளையடிக்கிறார்கள். தேவையானதை எடுத்துக் கொண்ட் உடனே கிராமங்களுக்கு தீ வைத்து விடுகிறார்கள். அந்தத் தீயின் செம்மையை இரவில் வானில் தொலைவில் காண முடிகிறது. சுற்றிலுமாக பிரதேசம் முழுவதும் நாசமாகிவிட்டன.

வேடிக்கை என்னவெனில் நகரத்தைத் தகர்க்க அவர்கள் இன்னும் முயற்சி செய்யவில்லை. இதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஏனெனில் சுலபமாக இப்பொழுது இதைத் தகர்க்க முடியும். ஒரு சமயம் பட்டினி போட்டே கொன்று விடலாம் என்று நினைக்கிறார்கள் போல் இருக்கிறது. ஒரே சமயத்தில் சுற்றுப்புறத்தை அழிக்கவும், முற்றுகையிடவும் வசதியிருக்க என்ன கவலை?

# 32

ஏஞ்சலிகா ஒன்றிலும் புத்தி செல்லாமல் சோம்பித் திரிகிறாள். முன்பெல்லாம் தையலாவது போடுவது உண்டு. இப்பொழுது ஆற்றங்கரையில் உட்கார்ந்து அன்னங்களுக்கு தீனி இறைக்கிறாள். அல்லது அவை நீந்துவதைப் பார்த்துக் கொண்டே இருக்கிறாள். சில சமயம் மாலை முழுவதும் ஜன்னலிலேயே உட்கார்ந்து எதிரிகளின் கூடாரங்களையும் பாடி வீடுகளையும் சூறையாடின வெளியையும் வெறித்துப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருக்கிறாள். அவள் காதலனை நினைவூட்டுகிறதோ என்னவோ?

காதலுக்கு வசமான மக்கள் முட்டாள்கள் மாதிரி தோன்றுகிறார்கள். அதுவும் நிறைவேறாத காதலாக இருந்தால் இந்த அசட்டுத் தோற்றம் இன்னும் அதிகமாகி விடுகிறது. முகத்தோற்றத்தில் தனியான ஒரு அசடு வழிகிறது. எப்படி காதல் உள்ளவர்கள் முகம் அழகாக இருக்கிறது என்று சொல்லுகிறார்களோ புரியவில்லை. அவள் கண்கள் இப்பொழுது முன்னைவிட மந்தமும் சூன்யமும் பெருகிக் கிடக்கின்றன. கன்னம் இன்னும் வெளுத்திருக்கிறது. விருந்தின் பொழுது இருந்த மாதிரியாக இல்லை. ஆனால் வாய் இன்னும் பெரிதாகவும், உதடுகள் பூர்ணமாகவும் காணப்படுகிறது. இனி அவள் குழந்தை இல்லை என்று தெளிவாகத் தெரிகிறது.

ஒருக்கால் எனக்கு ஒருவனுக்குத்தான் அவளுடைய குற்றம் நிறைந்த இரகசியம் தெரிந்திருக்கிறதோ என்னவோ?

இன்று இளவரசி என்னைப் பார்த்து "கிறிஸ்து என்னை வெறுக்கிறாரா, இல்லையா" என்று ஒரு கேள்வி கேட்டாள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எனக்கு ஒன்றும் தெரியாது என்று பதில் சொன்னேன். ஜொலிக்கும் கண்களுடன் அவள் என்னைப் பார்த்த பொழுது துன்பப்படுவது போல் இருந்தது. ஆனால் அவர் அவளை வெறுக்கத்தான் வேண்டும். அவளை அமைதியாகவே எந்தக் காலத்திலும் வைத்ததில்லை அவர். அவள் செய்த பாவங்கள்தான் கொஞ்சமா? இந்த எண்ணம் தோன்றியதும் வாயை விட்டுச் சொல்லியும் விட்டேன். தன் கருத்தை நானும் பகிர்ந்து கொண்டிருக்கிறேன் என்ற நினைப்பு அவளுக்கு அமைதி தருவது போல் தோன்றிற்று. நாற்காலியில் துவண்டு ஆழ்ந்த பெருமூச்செறிந்தாள். நான் எதற்காக நின்றேன் என்றே புரியவில்லை. ஏனெனில் வழக்கம்போல வேலையில்லை. ஒரு கணத்திற்குப் பிறகு நான் போகலாமா என்று கேட்டபொழுது நான் யார் அதைச் சொல்ல என்று பதில் சொன்னாள். ஆனால் அவள் குழைந்து பார்த்த பார்வையோ உதவி உதவி என்று என்னைக் கெஞ்சுவது போல் இருந்தது. ஆனால் எனக்கு முள்மேல் நிற்பதுபோல் இருந்தது. அந்த இடத்தை விட்டு அகன்று விட்டேன். ஆனால் நான் கதவருகில் வருவதற்குள் திடீரென்று சிலுவைமுன் மண்டியிட்டு தன் தொழுகைகளைச் சொல்ல ஆரம்பித்தாள். மெல்லிய விரல்கள் ஜபமணிகளில் இறுகப் பற்றிக் கொண்டிருந்தன.

இந்தக் காட்சி என் மனதில் பதிந்து விட்டது. இந்தக் கிழத்திற்கு என்ன வந்து விட்டது இப்பொழுது.

கடவுள் அவரை வெறுக்கிறார் என்று அவள் உண்மையாகவே நினைப்பதாகத் தோன்றுகிறது. இன்று மறுபடியும் அதே பேச்சு எடுத்தாள். அவள் வேண்டிக்கொண்டதெல்லாம் பலனில்லையாம். "என்னைக் கடவுள் இன்னும் மன்னிக்க மறுக்கிறார். நான் ஒருத்தி இருப்பதையே அவர் சட்டை செய்வதில்லை. ஆனால் ஒரு கண அமைதியும் தரவில்லை அவர். இதை என்னால் சகிக்கவே முடியவில்லை" என்றாள் அவள். அதற்கு நான் "உங்களிடம் பாப விண்ணப்பம் வாங்கிக் கொள்ளும் பாதிரியிடம் நீங்கள் சொல்லவேண்டும். உங்களுடைய ஆத்மீகக் கஷ்டங்களை எப்பொழுதும் புரிந்து கொண்டு அனுதாபமே காட்டியிருக்கிறாரே அவர்" என்றேன் நான். ஆனால் அவள் அதையெல்லாம் முயன்று பார்த்தாகி விட்டதாம். அவரிடமிருந்து எந்த உதவியும் கிடைக்கவில்லையாம். முன்னால் அவளைப் புரிந்து கொள்ள வேண்டுமே. அதுவே அவரால் முடியவில்லை. அவள் பாபமே இல்லாதவள் என்று அவர் நினைக்கிறாராம். பாதிரியின் இந்தப் பேச்சைக் கேட்டு எனக்குச் சிரிப்பு வந்தது.

"நீ என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" என்று திடீரென்று கேட்டாள் அவள்.

"உங்களையா? காமப்பித்து தலைக்கு ஏறிய பெண்மணி நீங்கள். நரகத்தின் தீயில் எக்காலும் எரியும்படி சபிக்கப்பட்ட நபர்களில் சேர்க்கப்பட வேண்டியவர்" என்றேன் நான். இதைக் கேட்டவுடனே அவள் என்முன் மண்டியிட்டு கை வெளுக்கிறவரையில் பிசைந்து கொண்டாள். முனகலும், பெருமூச்சும் எழுந்தன. "என் துன்பத்திலிருந்து என்னை விடுவித்து விடேன். என் மீது இரக்கம் காட்டேன்" என்று கெஞ்சினாள். எனக்கு அவளுக்கு எந்த உதவியும் செய்யும்படியான வசதி கிடையாது. அவள் துன்பப்படுவதும் சரிதான் என்ற எண்ணம் வேறு. என் காலடியில் அவள் குழையும்படியாகவே விட்டுவிட்டேன். என் கையைப் பற்றி கண்ணீரால் நனைத்தாள் அவள். அதை முத்தமிடக் கூட முயன்றாள். ஆனால் நான் கையை இழுத்துக் கொண்டு விட்டேன். இதனால் அவள் முனகலும், வேதனையும் அதிகமாயின. நிராசையும், கலவரமும் அவளை அறவே ஆட்கொண்டது போல் இருந்தது. உங்கள் பாபங்களை எல்லாம் ஒப்புக் கொள்ளுங்கள் என்றேன். என் முகம் மிகவும் கடுமையாக இருக்குமென்று எனக்குத் தெரியும். நான் சொன்னவுடனேயே தன் பாபங்களை எல்லாம் அடுக்க ஆரம்பித்தாள் அவள். காதல் நிறைந்த வாழ்க்கை, அனுமதிக்கப்படாத காதல் விவகாரங்களில் தான் ஈடுபட்டது, பேயின் வலையில் சிக்கினவுடன் அவள் பட்ட காம இன்ப உணர்வு எல்லாவற்றையும் சொன்னாள். இப்படி எல்லாம் சொன்னால் போதாது. விவரமாகச் சொல்ல வேண்டும். யார் யாருடன் எத்தகைய தொடர்பு என்றெல்லாம் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டதும் உடனே பணிந்து தன் அருவருக்கத்தக்க வாழ்க்கையைப் பயங்கரமாகச் சித்தரிக்க ஆரம்பித்தாள் அவள். டான்ரிகார்டோவை மட்டும்

குறிப்பிடவில்லை அவள். நான் அதை எடுத்துச் சொன்னதும் என்னை உற்றுப் பார்த்தாள் அர்த்தம் புரியாததுபோல. அது கூடவா பாபம் என்று அவள் கேட்டபோது அதுதான் மகா கோரமான பாபம் என்றேன் நான். வியப்பிலும் சந்தேகத்திலும் ஆழ்ந்த அவள் முகம் யோசனை செய்தது. இந்தக் கருத்து அவளுக்கு ஏற்பட்டதே இல்லை போலிருக்கிறது. நீங்கள் அவனை, எல்லோரையும்விட அதிகமாக நேசிக்கவில்லையா என்று கேட்டேன். ஆமாம் என்று தீனமாகச் சொல்லி அழ ஆரம்பித்து விட்டாள். இந்த அழுகை ஓய்கிற வழியாக இல்லை. நான் போக வேண்டும் என்று சொன்னபொழுது என்னை இறைஞ்சுவது போல நிராசையுடன் பார்த்தாள். எனக்கு ஆறுதலே அளிக்க முடியாதா என்று கெஞ்சினாள். கிறிஸ்து தன் மீது கருணை கொள்ள நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டாள். இது மிகவும் அடாவடியான கேள்வி. நீ செய்த பாபம் கொஞ்ச நஞ்சமல்ல. அதனால்தான் உன் வேண்டுகோளுக்கு அவர் செவிசாய்க்கவில்லை. உன் மாதிரி ஆட்கள் மீளுவதற்காக அவர் சிலுவையில் உயிர் நீக்கவில்லை என்றேன் நான். "ஆமாம் என்னை அவர் கவனிக்கும்படியாக நான் என்ன அவ்வளவு தகுதியுள்ளவளா? நான் தொழும்பொழுது என்னுடைய அந்தராத்மாவிற்கு இது தெரிகிறது என்று சொல்லிக் கொண்டே பெருமூச்சு விட்டாள் அவள். பின்பு சற்று அமைதி அடைந்தாள் போலிருந்தது. மனித வர்க்கத்திலேயே நான் மிகவும் நீசப்பட்டவள் என்றும் சொர்க்கத்தின் கருணையில் தனக்கு ஒரு பொழுதும் பங்கு கிடைக்காதென்றும் புலம்பினாள். "நான் எவ்வளவோ நேசித்திருக்கிறேன். கடவுளையும் அவர் புத்திரனையும் நான் நேசிக்கவில்லை. ஆகவே எனக்கு தண்டனை நியாயம் தான்."

பின்பு எனக்கு நன்றி கூறினாள் அவள். பாபங்களை ஒப்புக் கொண்டது அவளுக்கு ஆறுதலாக இருந்ததாம். விமோசனம் கிடைக்காவிட்டாலும் வாய்விட்டுச் சொன்னதே ஒரு ஆறுதல். அவள் வாய்விட்டு அழுதது கூட இதுதான் முதல் தடவையாம்.

அவள் கண்ணோரங்களில் செம்மை படர்ந்திருந்தது. சிதைந்த பறவைக் கூட்டைப் போல தலைமயிர் கலைந்திருந்தது.

## 33

இளவரசர் பியாமிடாவுடனேயே காலம் கழிக்கிறார். இரவு சாப்பாடு முடிந்ததும் இருவரும் தனியே உட்கார்ந்திருக்கிறார்கள். நான்தான் பணிபுரிய வேண்டியிருக்கிறது. இந்த மாதிரி இளவரசியுடன் ஒரு காலத்தில் இருந்தது உண்டு அவர். ஆனால் அடிக்கடி பியாமிடா முற்றிலும் வேறுபட்ட ரகம். உணர்ச்சி வசப்படாத கம்பீரமான, அடையக் கூடாத உண்மை அழகி. அவளுடைய மாநிற முகத்தில் உள்ள கடுமையை நான் எந்தப் பெண்ணிடமும் பார்த்ததில்லை. இந்த அழகு சற்று குறைந்திருந்தால் மென்மையே இல்லாத முகம் என்று தான் யாரும் நிச்சயித்திருப்பார்கள். ஒற்றைப் பொறியுடன்

ஒளிவீசும் அவள் நிலக்கரிக் கண்களில் எதிர்த்து நிற்க முடியாத ஒரு சக்தி மின்னுகிறது.

காதலில் அவள் மரத்துப்போன மாதிரி இருக்கிறது. ஆனால் பெரிய மனது பண்ணி தான் நேசிக்கிற யாரையும் முற்றிலும் தனக்குப் பணிய வேண்டுமென்று எதிர்பார்க்கிறாள். இளவரசருக்கு இது பிடிக்கிறாற் போலிருக்கிறது. அதனால்தான் இவ்வளவையும் சகித்துக் கொள்கிறார். எனக்குத் தெரிந்தவரையில் உற்சாகத்தைப் போல உணர்ச்சி இன்மையும் காதலில் இரசிக்கப்படுகிற விஷயம் என்றே தோன்றுகிறது.

என்னைப் பற்றிய வரையில் அவளுக்கு எதிராகச் சொல்ல ஒன்றுமில்லை என்னிடம். வேலைக்காரர்களை துச்சமாக நடத்துகிறாள் அவள். இந்த மாதிரி எஜமானிகளைத் தாங்கள் பார்த்ததில்லை என்றும் யாருக்கோ வைப்பாட்டிதானே என்றும் பேசிக் கொள்கிறார்கள். தனக்குச் சமமாகவே பாவிப்பதில்லை அவள். ஆனால் இது வறட்டு ராங்கியாகப் படவில்லை. உள்ளுக்குள்ளே சகஜமான ஒரு கர்வமாகத் தோன்றுகிறது. எல்லோருக்குமே அவள் மீது கோபம். ஆனால் அதைக் காண்பிக்க முடியவில்லை. ஏனெனில் இளவரசி இங்கு வராவிட்டால் பியாமிடாவே அவள் ஸ்தானத்தைப் பிடித்துக் கொண்டு விடுவாள் என்று சந்தேகம் எல்லோருக்கும்.

பெரிய இடத்து ஆசையினாலேயே கற்பைக் கெடுக்கும் படியாக அவளே அனுமதித்ததாகவும், எதற்கும் துணிந்தவள் என்றும் அரண்மனையில் அவளைப் பற்றிப் பேச்சு. இதன் அர்த்தம் எனக்குப் புரியவில்லை. இந்த மாதிரி எல்லாம் நடந்து கொள்கிற பெண்களிடம் அடக்கத்தைக் காணமுடியாது. ஆனால் இவளோ அப்படி இல்லை.

இளவரசருக்கு அவளிடம் அசாத்திய மோகம். அவள் அருகிலிருந்தால் அசாத்திய மரியாதையும், நகைச்சுவையும் அவரிடம் காணமுடியும். அவள் இல்லாவிட்டாலும் முள்மேல் இருப்பதுபோல் தவிப்பார், எரிந்து விழுவார். சரியாக காரியங்கள் கூடச் செய்யமாட்டார். வேலைக்காரர்களைக் கூட அடித்து விடுவார். ஏன், பிரமுகர்களிடம் கூட சிலசமயம் சள்ளென்று விழுந்து விடுகிறார். முன்னெல்லாம் அப்படி இருந்ததில்லை அவர். அவருக்கு ஜனங்களின் அதிருப்தியைப் பற்றி கவலை இல்லை. சம்பவங்கள் போகிற போக்கைக் கண்டுதான் அவர் தொல்லை அடைந்திருக்கிறார். ஜனங்கள் அவரிடம் முன்போல மதிப்புக் கொள்ளவில்லை. அரண்மனை ஜன்னலுக்குக் கீழ் பசிப்பட்டாளம் வந்து சோறு, சோறு என்று கூச்சல் போடும் பொழுது அவர் வெறுப்பு உச்ச நிலையை அடைகிறது.

ஜனக்கூட்டங்களின் எண்ணங்களுக்கும், சொற்களுக்கும் செவிசாய்ப்பது ஒரு இளவரசருக்குத் தகுதியான செயலில்லை என்று தான் என் துணிவு. அவர்கள் எப்பொழுதும் எதற்காவது கூச்சல் போட்டுக் கொண்டுதான் இருப்பார்கள். இதை எல்லாம் கேட்கிறது என்றால் இருக்கிற நேரம் போதாது.

ஜோஸ்யத்திலேயே ஜாம்பவானான ஆஸ்தான ஜோஸ்யர் நிகடமஸையும் மற்ற நீண்ட தாடிகளையும் இரகசியமாக அடி அடி என்று அடிக்கச் செய்து

விட்டாராம் இளவரசர். எல்லாம் சாதகமாகவே சொன்னதற்காக அவருக்குக் கோபம். இதுவும் நடந்திருக்கக் கூடியதுதான் என்றார் அவர். அவர் தகப்பனார் இப்படித்தான் செய்தார். ஆனால் அப்பொழுது விஷயம் வேறு. அவருக்குக் கோபம் வந்த காரணம் தன் விருப்பத்திற்கு விரோதமாக அவர்கள் ஜோஸ்யம் சொன்னதுதான். கிரக பலனை கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமல்ல. அதுவும் மனிதர்களுடைய சித்தப்படி சொல்வது இன்னும் கஷ்டம்.

நகரத்தில் நிலைமை மோசமாகிக் கொண்டே வருகிறது. பஞ்சமே வந்துவிட்டது. பசியாலும், குளிராலும் தினம் எத்தனையோ பேர் இறக்கிறார்கள். வீதிகளிலும், சதுக்கங்களிலும் பார்த்தால் சூழ்நிலையின் பிரக்ஞையே இல்லாமல் எழுந்து கொள்ளவும் முடியாமல் தவிக்கும் மக்களை ஏராளமாகக் காணமுடிகிறது. பசிக்கு ஏதாவது கிடைத்தால் போதுமென்று இளைத்த கூட்டங்கள் பல அலைகின்றன. பூனை, நாய், எலி என்று எதைக் கண்டாலும் வேட்டையாடுகிறார்கள். தின்று விடுவார்கள். முற்றுகை ஆரம்பித்த பொழுது அகதிகள் முகாமுக்கு அருகில் கிடந்த குப்பைமேடுகளுக்கு ஆசைப்பட்டு எலிகள் வந்தபொழுது அதைப் பெரிய ஆபத்தாகக் கருதினார்கள். ஆனால் இப்பொழுது அதை எல்லோரும் விரும்பி வேட்டையாடுகிறார்கள். சில நாட்களாக இந்த எலிகளுக்குக் கூடப் பஞ்சம் வந்துவிட்டது. ஏதோ நோய் வந்து எலிகள் மூலைக்கு மூலை செத்துக் கிடக்கின்றன. வேண்டும் என்கிற சமயத்தில் இப்படிச் செய்கிறதுகளே.

எனக்கென்னவோ ஆச்சரியமாக இல்லை. இந்த எலிகளுக்கு மனிதர்களோடு வாழ்வது பொறுக்க முடியவில்லை போலிருக்கிறது.

## 34

நம்ப முடியாத ஒன்று நடந்து விட்டது. அமைதியாக நிகழ்ச்சிகளின் முன்பின் வரிசை மாறாமல் சொல்ல முயலுகிறேன். நானே அதில் முக்கியமான பங்கு எடுத்துக் கொண்டதாலும், எனக்கு இன்னும் அந்தப் பரபரப்பு அடங்காததாலும் வரிசையாகச் சொல்லுவது அவ்வளவு எளிதல்ல. ஆனால் விளைவுகளைப் பற்றியும், நான் கொண்ட பங்கைப் பற்றியும் எனக்குப் பரம திருப்தி. ஆகவே அந்த சம்பவத்தை வர்ணிக்க இரவில் பாதியை நான் எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

நேற்றிரவு வெகுநேரம் வரையில் என் குள்ளர்களின் அறையில் ஜன்னலில் உட்கார்ந்து வழக்கம் போல பொக்கரோஸாவின் பாசறை நெருப்புகளைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். திடீரென்று ஆற்றோரமுள்ள மரங்களுக்கிடையே திருட்டுத்தனமாக ஒரு உருவம் அரண்மனையின் கிழக்குச் சரகை நோக்கி வருவது தெரிந்தது. இத்தனை நேரம் கழித்து யார் வரக் கூடும்? அரண்மனையைச் சேர்ந்தவர்களாக இருக்குமோ என்று நான் குழம்பினேன். நிலவு காய்ந்து கொண்டிருந்தது. பளிச்சென்று இல்லாததால் அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. மேலங்கி அணிந்திருந்தது அந்த

உருவம். சின்னக் கதவுகளில் ஒன்றின் வழியாக கிழக்குச் சரகுக்குள் புகுந்து மறைந்தது. இவ்வளவு நன்றாகத் தெரிந்து நடப்பவன் அரண்மனையைச் சேர்ந்தவனாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் அவன் நடையில் ஏதோ ஒன்று சந்தேகத்துக்கு இடமாக இருந்தது. இந்த மர்மத்தை விளக்கிவிட வேண்டும் என்று முடிவு கட்டிக் கொண்டு இரவின் இருளில் இறங்கி விரைந்தேன். அவன் நுழைந்த கடை வழியாகவே நுழைந்தேன். மாடிப்படியில் கும்மிருட்டு. ஆனால் பழக்கப் பட்டதால் எனக்குக் கஷ்டமாக இல்லை. ஏஞ்சலிகாவின் அறைக்குச் செல்லும் படிகள் அவை. அதுவும் இப்பொழுது வேறு அறைகள் உபயோகத்துக்கு இல்லாததால் அவள் அறைக்குதான் போக வேண்டும்.

ஏஞ்சலிகாவின் அறைக் கதவண்டை போய் நின்று உற்றுக் கேட்டேன். என் சந்தேகத்திற்கு ஏற்றாற் போல உள்ளிருந்து இரண்டு குரல்கள் கேட்டதும் எனக்கு வியப்பாக இருந்தது. ஒரு குரல் கியோவானியின் குரல்! அவர்கள் இரகசியமாகப் பேசினார்கள். ஆனால் கூர்மையுள்ள என் காதில் எல்லாம் தெளிவாக விழுந்தது. உள்ளத்தை உருக்கும் எல்லை இல்லாத ஒரு ஆனந்தத்தின் சாட்சியாக, கண்ணுக்குத் தெரியாத சாட்சியாக அன்பே என்று ஒரு குரல் சொன்னதற்கு இன்னொரு குரல் அன்பே, அன்பே என்று இரண்டு முறை விடை இறுத்தது. வேறு வார்த்தைகளே அதிகமாகக் காணோம். மூன்றாம் பேர் காதுக்கு சுவாரஸ்மான சம்பாஷணை அல்ல. ஆனால் இது ஒன்றும் பரிகசிக்கும்படியாக இல்லாததால் ஒரே சொல் இந்த மாதிரி திருப்பித் திருப்பி வருவதைக் கேட்பது அவ்வளவு சகிக்க முடியாததாக இல்லை. எள்ளளவும் சந்தேகமின்றி குழைந்து குழைந்து இந்தச் சொல்லை அவர்கள் சொன்னபோது என் உடல் பனிக்கட்டியைப் போல ஜில்லிட்டு விட்டது. அந்தச் சொல்லின் உள் அர்த்தத்தையும் அவர்களுடைய உதடுகளில் வரும்பொழுது அதற்கு என்ன அர்த்தம் என்று அவர்கள் யோசித்திருந்தால் பயத்தினால் ஸ்தம்பித்துப் போயிருப்பார்கள். அதன் பிறகு இந்த இரண்டு குற்றவாளிகளும் முத்தமிட்டுக் கொள்வது கேட்டது, பல தடவைகள். கூடவே குழந்தைகள் பேசுவதுபோல தட்டுத் தடுமாறி நான் உன்னை மறக்க மாட்டேன் என்றார். உறுதிகள் வேறு. என்னால் இதை சகிக்கவே முடியவில்லை. வேகமாக வெளியே வந்து விட்டேன். இளவரசரை எங்கு பார்க்கலாம்? ஒரு மணிக்கு முன்னால் பியாமிடாவுடன் சாப்பாட்டு அறையில் இருந்தார் அவர். வழக்கம்போல போ என்று சொல்கிற வரையில் அங்கு இருந்து விட்டுத்தான் வந்தேன் நான். உன் பணி இனித் தேவையில்லை என்று அவர் சொன்ன பிறகு தான் வந்தேன்.

என் பணி தேவையில்லை! மாடிப்படியில் அந்த இருளில் விரைந்து இறங்கும்போது இந்தச் சொற்கள் வேடிக்கையாகத் தோன்றின. குள்ளனின் பணி இல்லாமல் எப்படி இருக்க முடியும்.

பழைய சரகையும், புதிய சரகையும் இணைக்கும் வளைவை நோக்கி முற்றத்தில் ஓடினேன். இங்கும் படிக்கட்டுகளும், நடையும் கும்மிருட்டாக இருண்டு கிடந்தன. ஆனால் நான் பாட்டுக்குப் போய் பெரிய இரட்டைக் கதவின் முன் நின்று உற்றுக் கேட்டேன். கவனித்தேன். ஒன்றுமில்லை.

அவர்கள் அங்கு இருந்தாலும் இருக்கலாம். ஆனால் அந்தக் கதவின் தாழ்ப்பாள் எனக்கு எட்டாததால் இந்த சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்து கொள்ள முடியவில்லை. மறுபடியும் கேட்டுவிட்டு நிச்சயமில்லாமல் அப்பாற் போக வேண்டி இருந்தது.

அடுத்த மாடியிலுள்ள இளவரசரின் படுக்கை அறையை நோக்கிச் சென்றேன். அங்கும் எல்லாம் நிசப்தமாக இருந்தது. அங்கு இருக்கிறார் என்பதற்கு அடையாளம் ஒன்றும் இல்லை. தூங்கித்தான் போய் விட்டாரா? எழுப்பலாமா? இந்த மாதிரி ஒரு காரியம் செய்ய கனவில் கூட நான் துணியமாட்டேன். நான் சொல்ல வந்த விஷயமோ மிகவும் பெரியது. இதற்கு முன்னால் அவ்வளவு அவசரமான சமாசாரம் நான் கொண்டு போனதே இல்லை. தைரியத்தை வருவித்துக் கொண்டு கையைத் தட்டினேன். பதிலில்லை. கையை மூடி ஓங்கி தட்டினேன். பயனில்லை. அவர் அங்கு இல்லை என்றுதான் அர்த்தம். இப்படி அடித்துப் போட்டாற்போலத் தூங்குகிற வழக்கமே கிடையாது. ஏதோ பயம் என்னைப் பிடித்துக் கொண்டது. அவர் எங்கே இருக்கிறார்? எங்கே இருக்க முடியும். தொந்தரவில்லாத தனி இடமாகப் பார்த்து பியாமிடாவுடன் போய்விட்டாரோ? இந்த எண்ணம்தான் என் கடைசி நம்பிக்கை. இளவரசருடன் தனக்குள்ள தொடர்பை மறைப்பதற்காக பியாமிடா அரண்மனையின் இன்னொரு பகுதியில் வசிக்கிறாள். அங்கு போவதானால் பெரிய அந்த முற்றத்தைக் கடந்து போக வேண்டும்.

வலது வளைவு வழியாக உள்ளே வந்தேன். ஆனால் இந்தப் பகுதி அதிகப் பழக்கமில்லாததால் வழி கண்டு பிடிப்பது சிரமமாகி விட்டது. வேறு படிக்கட்டில் ஏறி விட்டுத் திரும்பி வர வேண்டியிருந்தது. நடையின் இருளில் அடையாளம் வைத்துக் கொள்ளவும் முடியவில்லை. ஏமாந்து ஏமாந்து போகவும் எரிச்சலாக வந்தது. வளைக்கு வளை சென்று தடுமாறும் எலியைப் போலத் தவித்துத் தண்ணீராக உருகினேன். ஆனால் என் கண்கள் இருளில் பார்ப்பதற்காகவே படைக்கப்பட்டது. அவள் ஜன்னல் உள்ள பக்கம் எனக்குத் தெரியும். ஆகவே எப்படியோ சமாளித்துக் கொண்டு பியாமிடாவின் அறைக் கதவை நோக்கி வந்து விட்டேன். உற்றுக் கவனித்தபொழுது உள்ளே யாரோ இருப்பதுபோல் இருந்தது. முதலில் கேட்டது பியாமிடாவின் வறண்ட சிரிப்புத்தான். அவள் சிரிப்பை முன்னால் நான் கேட்டிருக்கா விட்டாலும் இது அவள் சிரிப்புத்தான் என்று எனக்குத் தெரியும். உணர்ச்சியில்லாத சற்று செயற்கையான நம்பிக்கையை கிளறிவிட்டு ஏமாற்றும் சிரிப்பு. இளவரசர் சற்ற அடக்கமாக சுருக்கமாகச் சிரிப்பது கேட்டது. ஒருவழியாக மூச்சு வந்தது எனக்கு.

பின்பு அவர்கள் குரல்கள் நன்கு கேட்டது. ஆனால் என்ன சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் அறையின் கோடியில் இருந்தார்கள். ஆனால் ஒரே வார்த்தையில் திருப்பித் திருப்பிச் சொல்கிற சம்பாஷணை இல்லை அது. காதலைப் பற்றி அவர்கள் பேசினார்களோ என்னவோ தெரியாது. ஆனால் அந்த மாதிரி ஒலிக்கவில்லை அது. திடீரென்று ஒரு

நிசப்தம். காதை நன்றாகத் தீட்டிக் கொண்டு கேட்டேன். ஒன்றும் கேட்வில்லை. சற்றுக் கழித்து ஏதோ இரைகிறார்போல சத்தம் கேட்டது. சரி, அருவருக்கத்தக்க எதையோ செய்கிறார்கள் என்று உணர்ந்தேன். வயிறு இலேசாக குமட்டியது. ஆனாலும் நடையில் போய் இளவரசருக்காகக் காத்துக் கொண்டு நின்றேன். எங்கு நின்றால் அந்த ஓசைகள் காதில் விழாவோ, அவ்வளவு தூரத்தில் நின்று கொண்டேன். யுகயுகமாக அங்கு நிற்பது போன்ற ஒரு உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது.

மீண்டும் கதவண்டை வந்தபோது அவர்கள் படுத்தவாறே ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். இந்த எதிர்பாராத மாறுதல் எனக்கு ஆச்சரியமாகவும், திருப்தியாகவும் இருந்தது. வந்த காரியத்தையும் சீக்கிரம் சொல்லலாம். ஆனால் அவர்களோ அவசரப்படவில்லை. சாதாரண விஷயங்கள் பலவற்றைப்பற்றி படுத்தவாறே பேசிக் கொண்டிருந்தார்கள். அருமையான காலத்தை இப்படி வெட்டிப் பேச்சில் வீணாக்குவது எனக்கு எரிச்சலாக இருந்தது. ஆனால் நான் என்ன செய்ய முடியும்? இந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் முன் போய் சட்டென்று நிற்க எனக்குத் தைரியம் வரவில்லை. கடைசியில் இளவரசர் கருத்து வேற்றுமையுள்ள ஏதோ விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டே எழுந்தது தெரிந்தது. அவர் ஆடைகளை எடுத்து அணிந்து கொள்வதும் கேட்டது. கதவினின்று வெகுதூரம் போய் நின்று இருளில் காத்துக் கொண்டு நின்றேன். நான் நிற்பது தெரியாமலேயே அவர் என்னை நோக்கி வந்தார். மரியாதையாகச் சற்று ஒதுங்கி நின்று, அரசே என்று கூப்பிட்டேன். நான் தான் என்று தெரிந்ததும் கோபத்தில் காச்மூச்சென்று கத்த ஆரம்பித்தார் அவர். "என்னடா செய்கிறாய் இங்கே? உளவு பார்க்கிறாயா? அற்பப் பிணமே! பாம்பே இங்கேயாடா இருக்கிறாய். உன்னை நசுக்கி விடுகிறேன்" என்று இருளில் கையை நீட்டிக் கொண்டே வந்தார். ஆனால் இருளில் என்னைப் பிடிக்க முடியவில்லை. "நான் சொல்லுவதைக் கேளுங்கள். முன்னால் நான் விஷயம் என்னவென்று சொல்லி விடுகிறேன்" என்று நிதானமாகச் சொன்னேன். உண்மையில் எனக்கு நிதானம் இல்லை. கோபம் தான். எப்படியோ கடைசியில் நான் பேச அனுமதித்தார் அவர்.

உடனே நான் விஷயத்தை நேராகச் சொல்ல ஆரம்பித்துவிட்டேன். லொடோவிகோவின் பிள்ளை தன் தந்தையின் மரணத்திற்காக வஞ்சம் தீர்க்க வந்திருக்கிறான். அரண்மனையில் புகுந்து உங்கள் பெண்ணைக் கற்பழித்து அவளுக்கும் உங்கள் வமிசத்திற்குமே தீராத அவமானத்தைக் கொண்டு வர கிளம்பிவிட்டான். இதைக் கேட்டதும் பொய், பொய் என்று கத்தினார் அவர். "உனக்கென்ன பைத்தியமா? இதெல்லாம் என்ன கதை? வெறும் பொய்," என்று அவர் கத்தவே நான் தைரியமாக முன்வந்து "இல்லை, பொய்யில்லை. நிசம்தான். அவள் அறையில் தான் இருக்கிறான் அவன். இந்தக் குற்றத்திற்கு அவன் ஆயத்தம் செய்வதை இந்தக் காதுகளாலேயே நான் கேட்டேன். இப்பொழுது மிகவும் தாமதமாகி விட்டது. எல்லாம் முடிந்திருக்கும். ஒருசமயம் நீங்கள் போனால் அவனைப் பார்த்தாலும் பார்க்கலாம்" என்றேன். அவர் இடிந்து போய் இருக்காது, இருக்காது என்று சொல்லிக்கொண்டே வாயிலை நோக்கி விரைந்தார்.

"இருக்க முடியாது. ஊருக்குள் அவன் எப்படி நுழைய முடியும்? அதுவும் அரண்மனையில் எப்படி அவன் நுழைய முடியும், அதுவும் அந்தக் காவலை மீறிக்கொண்டு" என்று சொல்லிக் கொண்டே நடந்தார் அவர். நான் அவரோடு சேர்ந்து நடக்க ஓட்டோட்டமாக நடக்க வேண்டி இருந்தது. எனக்கும் தான் புரியவில்லை. எப்படி வந்திருக்க முடியும். ஆனால் ஆற்றோரமாக அவன் வருவதைப் பார்த்தேன் நான். கட்டைகளை இணைத்து அதன்மேல் அமர்ந்து தான் அவன் வந்திருக்க வேண்டும். இந்த மாதிரி சின்னப் பையன்கள் எதைத் தான் செய்ய மாட்டார்கள். அங்கிருந்து நேராக அரண்மனை முற்றத்திற்கு வந்திருப்பான் என்றேன் நான்.

"முடியாது, ஆற்றின் வழியாக யாரும் நக்ரத்திற்கு வர முடியாது. இருகரையிலும் உள்ள கோட்டைகளில் ஆயுதங்கள் ஏந்திய வீரர்கள் அல்லும், பகலும் காவல் காக்கிறார்கள். இதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது."

"ஆமாம். நினைத்துதான் பார்க்க முடியாது. ஆனால் அவன் உள்ளே நுழைந்திருக்கிறான். எப்படி வந்தான் என்று சொல்ல முடியாது. நான் கேட்டது அவன் குரல் தான்.'

நாங்கள் முற்றத்தை அடைந்து விட்டோம். பக்கத்து வாயிலில் நின்ற காவலனிடம் சென்று யாரும் தப்பித்துக் கொள்ளாத வகையில் ஜாக்கிரதையாக இருக்குமாறும், அதற்கான ஏற்பாடு செய்யுமாறும் சொல்லிவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தோம். அவருடைய முன்னெச்சரிக்கைகள் நியாயமாகத்தான் இருந்தன. ஆனால் குற்றவாளி முன்னமேயே தப்பி இருந்தால், முன்னமேயே ஓடி இருந்தால்! அல்லது இரண்டு பேருமே ஓடியிருந்தால்! இந்தப் பயங்கரமான சந்தேகம் தோன்றியதும் நான் வெகு வேகமாக மாடிப்படியில் ஓடி ஏஞ்சலிகாவின் கதவின் முன் நின்றேன்.

கதவில் காதை வைத்துக் கேட்டேன். உள்ளே சத்தமே கேட்கவில்லை. அவர்கள் ஓடிவிட்டார்களா? என் ஹிருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. உள்ளம் கலவரமடைந்தது. அந்த ஒலியே எனக்கு வேறு சத்தம் கேட்காமல் செய்திருக்கலாம். என்னையே சாந்தப்படுத்திக் கொண்டு இரைப்பு அடங்கியதும் உற்றுக் கவனித்தேன். ஆனால் சத்தமே கேட்கவில்லை. கோபம் கோபமாக வந்தது. பைத்தியம் பிடித்துவிடும் போல் இருந்தது. மதில் மேல் பூனையாக இருக்கும் இந்த நிலையைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் மெதுவாகக் கதவைத் திறந்துவிட்டேன். இடுக்கின் வழியாக உள்ளிருந்து வெளிச்சம் தெரிந்தது. ஆனால் யாரும் இருக்கிற சுவடையே காணோம். உள்ளே நழுவி தைரியத்தைத் தருவித்துக் கொண்டேன். எனக்கு வந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை. இருவரும் பக்கத்தில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். எண்ணெய் விளக்கு அருகில் எரிந்து கொண்டிருந்தது. அணைக்க மறந்துவிட்டார்கள் போல் இருக்கிறது. மிருக உணர்ச்சியுடன் முதல் பரிச்சயம் செய்துகொண்ட களைப்பில் அவர்கள் குழந்தைகளைப் போல உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

விளக்கை எடுத்து முன்னே சென்று ஒளியை அவர்மீது விழச் செய்தார். ஒருவருக்கொருவர் பார்த்தவாறு படுத்திருந்தனர். வாய் இலேசாக திறந்திருந்தது. முகம் சிவந்திருந்தது. செய்த பயங்கர குற்றத்தின் எழுச்சி இன்னும் மறையவில்லை. ஆனால் தூங்கும்பொழுது அவர்களுக்கு அந்த ஞாபகம் இல்லை போலிருக்கிறது. கண் இமைகள் ஈரமாக இருந்தன. மூக்கின் கீழ் வேர்வை முத்திட்டிருந்தது. யோசிக்காமல் ஆபத்தையோ வெளியுலகத்தையோ மறந்து அசட்டுத்தனமாகத் தூங்கிக் கொண்டிருக்கும் இந்தப் பேதைகளைப் பார்க்கும்பொழுது பேதமை என்றே தோன்றிற்று, இதைத்தான் மனிதர்கள் ஆனந்தம் என்று சொல்கிறார்களா?

கியோவானி முன்நெற்றியில் ஒரு சுருள் மயிர் வந்து விழ உதட்டில் ஒரு புன்னகைத் தவழ படுக்கையின் ஓரத்தில் படுத்திருந்தான், ஏதோ உன்னதமான, வெற்றிகரமான சாதனை ஒன்றைப் புரிந்து விட்டது போல. அவன் கழுத்தில், சொர்க்கத்திலிருக்கும் அவன் அன்னையின் படம் வைத்திருந்த பதக்கம் ஒரு மெல்லிய தங்கச் சங்கிலியில் தொங்கிக் கொண்டிருந்தது.

இளவரசரும் அவர் ஆட்களும் மாடிப்படி ஏறி வரும் ஓசை கேட்டது. இரண்டு காவலர்களுடன் உள்ளே வந்தார் அவர். ஒருவன் கையில் தீவட்டி எரிந்து கொண்டிருந்தது. அறை இன்னும் வெளிச்சமாயிற்று. ஆனால் இந்த ஜோடியின் தூக்கத்தைக் கலைக்க முடியவில்லை. தடுமாறி கொண்டே தனக்கு நேர்ந்த அவமானத்தை நேரில் கண்டார் இளவரசர். கோபக்கனல் பறக்க ஒரு காவலன் கையிலிருந்த உடைவாளைப் பிடுங்கி ஒரு வீச்சு வீசினார். கியோவானியின் தலை உடலிலிருந்து விண்டது. ஏஞ்சலிகா விழித்துக் கொண்டாள். இரத்தத்தில் நனைந்த தன் காதலனை ஆட்கள் இழுத்துப் போய் ஜன்னலுக்கு வெளியேயுள்ள குப்பை மேட்டில் தூக்கி எறிவதை கண் அகல வெறித்துப் பார்த்தாள். மறுகணம் மல்லாந்து மூர்ச்சை போட்டு விழுந்தாள். நாங்கள் அந்த அறையில் இருக்கும்வரை மூர்ச்சை தெளியவில்லை.

கச்சிதமாக இந்த வேலையை முடித்த பின்பு இளவரசர் கலவரத்தால் நடுங்கினார். அறையை விட்டு வெளியே செல்லும் பொழுது கதவைப் பற்றிக் கொண்டே நடந்தார். நானும் என் அறைக்குப் போய் சேர்ந்தேன். மெதுவாகத்தான் போனேன் நானும். இனிமேல் என்ன அவசரம். முற்றத்தில் தீவட்டியின் ஒளி வழிகாட்ட இளவரசர் போவதைப் பார்த்தேன். வளைவுக்குள் போனதும் அணைந்து விட்டாற்போல் தீவட்டி மறைந்து போயிற்று.

## 35

ஏஞ்சலிகாவிற்கு இன்னும் மூர்ச்சை தெளியவில்லை. காய்ச்சல் அடிக் கிறது. என்ன காய்ச்சல் என்று ஆஸ்தான வைத்தியருக்கு தெரியவில்லை. யாருக்கும் அவளிடம் அனுதாபமும் இல்லை. அவள் கற்பு ஆக்ரமிக்கப்படும்

பொழுது அவள் அதைக் காத்துக் கொள்ள எந்த முயற்சியும் செய்யவில்லை என்றே எல்லோரும் பேசிக்கொண்டார்கள். ஆகவே அவள் சீரழிந்தது ராஜ வமிசத்திற்கும், நாட்டிற்கும் நிகரில்லாத அவமானம் என்று எல்லோரும் கருதினார்கள். ஒரு கிழவிதான் அவளைப் பார்த்துக் கொள்கிறாள். அரண்மனையிலிருந்து அவளை யாரும் பார்க்கப் போவதில்லை.

அவளுடைய இழிந்த காதலனின் உடலை ஆற்றில் எறிந்து விட்டார்கள். அனாவசியமாக அரண்மனைக்கு வெளியே கிடப்பானேன். அந்த உடல் சுழலில் சிக்கி அமிழாமல் வெள்ளப் போக்கிலேயே கடலை நோக்கிப் போய்விட்டதாம்.

வினோதமான ஒரு வியாதி நகரத்தில் தோன்றி இருக்கிறது. தலைவலியும், உடம்பு வலியுமாக வருகிறதாம் அது. கண்ணும் நாக்கும் வீங்கிப் போய் பேச்சு ஓய்ந்து விடுகிறதாம். உடலெல்லாம் சிவந்து அசுத்த இரத்தம் தோலை வெடித்துக் கொண்டு வருகிறதாம். தண்ணீர் தண்ணீர் என்று நோயாளிகள் அரற்றுகிறார்களாம். உடலுக்குள்ளெல்லாம் அவர்களுக்கு எரிகிறதாம். வைத்தியர்களுக்கு என்ன செய்கிறதென்று தெரியவில்லை. என்று தான் அவர்களுக்குத் தெரிந்தது? நோய் வந்தவர்கள் எல்லோருமே இறந்துவிட்டதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். எத்தனை பேர் என்று தெரியவில்லை.

அரண்மனையில் ஒரு 'கேஸ்' கூட இல்லை. பசித்தவர்கள், ஏழைகள் முக்கியமாக அகதிகள் ஆகியோரிடம்தான் அதிகமாயிருக்கிறது. அளவில்லாத ஒரு அழுக்கு தான் காரணம். அவர்களைச் சுற்றியுள்ள அமேத்யமே அவர்களைச் சாகடித்தாலும் அடிக்கலாம். என்ன ஆச்சரியம்.

ஏஞ்சலிகாவுக்கு இந்த நோய் வராது. குழந்தையாக இருந்தபோது வந்த நோய்தான் அவளுக்கு இப்பொழுதும். எப்பொழுது, எந்தச் சமயத்தில் வந்தது என்று எனக்கு ஞாபகமில்லை. அவளுக்கு உடம்பில்லாத நாள் கிடையாது. மிகவும் சாதாரணமான காரணங்கள் கூட அவளுக்குப் போதும். ஆ... இப்பொழுது ஞாபகம் வருகிறது. அவள் பூனைக்குட்டியின் தலையை அறுத்தபோது தான் இதே மாதிரி காய்ச்சல் வந்தது.

நோய்ப் பரவிக் கொண்டே இருக்கிறது. ஏழைகளை மட்டுமின்றி மற்றவர்களையும் அணைய ஆரம்பித்திருக்கிறது. வீடுகளிலெல்லாம் முனகல். தெருக்கள், சதுக்கங்கள் எங்கும் முனகல். நோயாளிகள் வீதியிலேயே கந்தலில் புரண்டு கொண்டு ஐயோ, அப்பா என்று மரணக் கூச்சல் போடுவதை வீதியில் போகிறவர்கள் பார்க்கலாம். வலி அசாதாரணமாகத்தான் வருகிறது. வலியின் கடுமை தாங்காமல் சித்த சுவாதீனம் கூட இழந்து விடுகிறார்களாம். நகரத்தை ஒரு தடவை சுற்றி வந்தாலே நரகத்தைச் சுற்றி வருவது போல இருக்கிறது. நோய் வந்தவர்களிடமிருந்து சகிக்க முடியாத ஒரு வாடை. உடல் முழுவதும் ஒரே கொப்பளம். இதையெல்லாம் கேட்கும் பொழுது யாருக்குமே உடல் நலம் குன்றி விடும்.

இந்த பிளேக்கிற்கு அகதிகள் தான் காரணம் என்று எல்லோரும் சொல்கிறார்கள். ஆனால் சிலர் மனித வர்க்கத்தின் பாபங்களுக்கு தெய்வம் அனுப்பிய தண்டனை என்று கருதினர். கடவுள் இந்த பாபங்களைக் கழுவத்தான் இந்த மாதிரியான கஷ்டங்களைக் கொடுக்கிறார் என்றும் அவருடைய இஷ்டத்திற்கு பொறுமையாக பணிந்து தான் ஆகவேண்டும் என்றும் சொல்கிறார்கள். இதைத் தண்டனை என்று நான் ஏற்றுக் கொள்ளத் தயார். ஆனால் கடவுள் தான் இதற்குக் காரணமா? அல்லது வேறு யாராவது தீய சக்தியுள்ள பிசாசா?

## 36

இளவரசியின் வாழ்க்கை விநோதமாக இருக்கிறது. அறையை விட்டு வெளியே வருவதே இல்லை. அறையில் எப்பொழுதும் பாதி இருள். ஜன்னல்களை மறைத்து கனத்தத் திரைகள் தொங்குகின்றன. சூர்ய ஒளியை அனுபவிக்க நான் தகுதியற்றவன் என்று சொல்கிறாள் அவள். சுவர்களெல்லாம் சூன்யமாக இருக்கின்றன. நாற்காலியோ மேஜையோ கிடையாது. தொழும் பலகையும் ஒரு சிலுவையும் தவிர வேறு ஒன்றுமே அந்த ஒளியில் கிடையாது. பெண் துறவியின் அறை போல இருக்கிறது. படுக்கை இருக்கிறது. ஆனால் அதன் மீது படுப்பதில்லை அவள். தரையில் கிடக்கும் வைக்கோல் பத்தையின் மீது தான் கிடக்கிறார். மாற்றாத இந்த வைக்கோல், நாற்றம் எடுக்கிறது. இந்தக் காற்றை சுவாசிக்கவே முடியவில்லை அங்கு போனால். மூச்சு திணறுகிறது. உள்ளே முதல் முதலில் போனதும் ஒன்றுமே கண்ணுக்குத் தெரியாது. அந்தப் பாதி இருளில் சிறிது நேரம் சென்ற பிறகுதான் கண் பழக்கமாகும். பிறகு அவள் கண்ணில் படுவாள். பாதி உடுத்த ஆடை. சிடுக்கு விழுந்த மயிர். தன் உடல் தோற்றத்தைப் பற்றி அவளுக்கு கவலையே கிடையாது. கண்களில் ஜுரம் அடிக்கிறாற்போல் ஜிவு ஜிவு என்று ஒரு ஒளி. ஒட்டிக் குழிவிழுந்த கன்னங்கள். ஏனெனில் அவள் காயக்கிலேசம் செய்து பட்டினி கிடக்கிறாள். வேலைக்காரிக்கு மிகவும் குறை. அம்மா சாப்பிடவே இல்லை என்று சொல்லிக்கொண்டே திரிகிறாள். அந்தக் குட்டி அழாமல் இருப்பதற்காக இளவரசி எப்பொழுதாவது கொஞ்சம் கிள்ளி வாயில் போட்டுக் கொள்வாள். அந்தக் குட்டியோ மொழுமொழுவென்று இருக்கும். கையில் கிடைத்ததை வாயில் போட்டுக் கொண்டு விடும். அழுதுகொண்டும், முனகிக் கொண்டும் எஜமானி வேண்டாம் என்கிற அத்தனை தட்டையும் காலி செய்து விடும்.

பிராயச் சித்தத்திலேயே கண்ணாய் இருக்கிற இளவரசி பெரும்பாலும் சிலுவையின் முன்னேயே பொழுதை கழிக்கிறாள். அவளுடைய தொழுகைக்குப் பயனில்லை. அவளுக்கும் இது தெரியும் - அதனால் தான் தொடங்குவதற்கு முன்னால் ஐயனே நான் மீண்டும் உன்னிடம் வருவதற்காக மன்னிக்க வேண்டும் என்று பிரத்யேகமாக ஒரு முறையீட்டுடன் ஆரம்பிக்கிறாள். சில சமயம் ஜபமாலையை நிராசையுடன்

கீழே போட்டுவிட்டு சிலுவையை பார்த்துக் கொண்டே சொந்தமாக பிரார்த்தனைகளைப் புனைவாள். ஆனால் அவர் கேட்டால் தானே. ஆரம்பத்தில் இருந்தாற் போலத்தான் முடிவிலும் இருந்தாள் அவள். பெரும்பாலும் வேலைக்காரியின் உதவியில்லாமல் அவளால் எழுந்திருக்க முடிவதில்லை. சில வேளைகளில் களைப்புத் தாங்காமல் குப்புற விழுந்து கிடப்பாளாம். அந்தப் பெண் போய் அதைப் பார்த்துவிட்டு அவளை இழுத்து வைக்கோலில் போடுமாம்.

நமக்கு வந்த கஷ்ட காலத்திற்கெல்லாம் தான் தான் காரணம் என்று நம்புகிறாள். நாட்டில் பரவிய நோய், பஞ்சம் எல்லாவற்றிற்கும் தன்னுடைய பாபம் தான் காரணம் என்று ஒரு எண்ணம். சுற்றி என்ன நடக்கிறது என்று அவள் எவ்வளவு தூரம் உணர்கிறாள் என்றே எனக்குத் தெரியவில்லை. ஓர் அளவாவது தெரிந்திருக்கத்தான் வேண்டும். ஆனால் இந்த உலகம், அதில் நடப்பது இதை எல்லாம் பற்றி அவள் சிரத்தையே கொள்ளவில்லை என்றே நான் நினைக்கிறேன். தன்னுடைய சொந்தப் பிரச்னைகளும், துக்கங்களும் நிறைந்த ஓர் உலகிலேயே அவள் உறங்கிக் கிடக்கிறாள்.

தான் செய்த பெரிய பாபம் டான்ரிகார்டோவைக் காதலித்தது தான் என்பது அவள் எண்ணம். அதனால் தான் இந்தத் தவ வாழ்க்கையில் அவள் ஈடுபட்டுவிட்டாள். எல்லாவற்றையும் விட அவனைத் தான் மிகவும் நேசித்தாளாம் அவள். அவனைப் பற்றிய உணர்வு தான் அவள் உடல், மனம் எல்லாவற்றையும் வியாபித்து ஆனந்தப்படச் செய்கிறதாம். ஒரு மனிதனை இந்த மாதிரி நேசிப்பதைவிட கடவுளை நேசித்திருக்க வேண்டும் என்று அவளுக்கு ஒரு உணர்வு வந்து விட்டது.

இதற்கெல்லாம் காரணம் நான். என்று அவளுடைய பாப வாழ்க்கையையும், அவளுக்காக காத்திருக்கும் நரகத்தையும் இடித்துக் காட்டினேனே, அது காரணமாக இருக்கலாமோ. எனக்குத் தெரியவில்லை. பாபம் செய்தவர்கள் அனுபவிக்கும் கோரங்களை நான் விவரிக்கும் பொழுது அவள் பேசாமல் பணிந்து கேட்டுக் கொண்டிருந்தாள். கடைசியில் இந்த மாதிரி காயக்கிலேசம் செய்து கொள்ளத் தொடங்கி விட்டாள். நான் போகும்பொழுதெல்லாம் எனக்கு அவள் நன்றி செலுத்தாமல் இருப்பதில்லை. நானும் அங்கு அடிக்கடி செல்வதில்லை.

ஏஞ்சலிகாவின் நோய் குணமாகி விட்டது. அவள் எழுந்து நடமாடுகிறாள். ஆனால் சபைக்கோ, சாப்பாட்டிற்கோ வருவதில்லை அவள். ரோஜா தோட்டத்திலோ, ஆற்றங்கரையிலோ அமர்ந்து சூன்யத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கிறாள். கண்கள் முன்னைவிடப் பெரிதாகிவிட்டன. முன்னைவிட ஒரு பளபளப்பு. அந்தக் கண்களால் எதையும் அவள் பார்க்கவில்லை என்றுதான் தோன்றுகிறது.

கியோவானியின் இரத்தக் கறை படிந்த பதக்கத்தை அவள் அணிந்திருப்பதைக் கவனித்தேன். படுக்கையில் கண்டெடுத்த அதை அவனுடைய நினைவுச் சின்னமாகப் போற்றி வருகிறாள் போலிருக்கிறது. ஆனால் இந்த இரத்தக் கறையைக் கழுவி இருக்கக் கூடாதா?

இதைப் பற்றி நான் யோசித்துக் கொண்டுதான் இருக்கிறேன். அன்னை சொர்க்கத்தில் இருக்கிறாள். மைந்தனோ நரகத் தீயில் வாடுகிறான். சாகும் பொழுது யாரும் அவனுக்குப் பிரார்த்தனையோ, பிராயச்சித்தமோ செய்ய வரவில்லை. பாபம் செய்து துயிலும் பொழுது அவன் உயிர் விண்டு விடை பெற்று விட்டது. அந்த இருவரும் இனி சந்திக்க முடியாது. ஒருக்கால் ஏஞ்சலிகா அவன் ஆத்மாவிற்காகப் பிரார்த்தனை செய்கிறாளோ என்னவோ. ஆனால் நிச்சயமாகப் பயன் ஏற்படப் போவதில்லை.

அவள் என்ன நினைக்கிறாள் என்று யாருக்குமே தெரியவில்லை. அன்றிரவு கண் விழித்தது முதல் அவள் ஒரு வார்த்தை கூட பேசுவதில்லை. அதாவது தன் காதலனுடன் பேசிய கடைசி வார்த்தைக்குப் பிறகு நான் அந்தச் சம்பாஷணையைக் கேட்டிருந்ததால் அந்த வார்த்தை என்னவென்று என்னால் ஊகிக்கக்கூட முடியும்.

## 37

இந்தப் பெரும் நோயையும் கஷ்டங்களையும் கடவுள் இட்ட பெரிய தண்டனை என்றும் அதை நன்றியுடன் ஏற்க வேண்டுமென்றும் கருதுகிறவர்கள் தங்கள் நம்பிக்கைகளில் இப்பொழுது தெருவெல்லாம் முழக்கிக் கொண்டு போகிறார்கள். தங்கள் ஆத்மாக்களை மீட்க கடவுளுக்கு இடம் கொடுப்பதற்காக தங்களையே வருத்திக் கொண்டு போகிறார்கள். கோஷ்டியாகத் தான் அவர்கள் போகிற வழக்கம். குழிவிழுந்த கண்கள். மெலிந்த தோற்றம். இந்த உணர்ச்சியின் ஆவேசம் இல்லாவிட்டால் அவர்கள் நிமிர்ந்துகூட நிற்க முடியாது. மக்கள் எங்கும் அவர்களைத் தொடர்ந்து செல்கிறார்கள். மதத்தில் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறதாம். வீடு, குடும்பம், தொழில், ஏன் மரணாவஸ்தையில் கிடக்கும் உறவினர்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டு மக்கள் இந்த கோஷ்டியில் சேர்ந்து கொள்கிறார்கள். இந்தக் கூட்டம் போகும் பொழுது திடீரென்று வெறி பிடித்தாற் போல வெற்றிகரமான ஒரு கூச்சல் கேட்கும். யாரோ ஒருவன் கூட்டத்தில் முந்தியடித்துக்கொண்டு முன்னே வருவான். தன்னை அடித்துக் கொள்வான். கூடி இருப்பவர்கள் பெரிதாகக் கத்துவார்கள். உடனே எல்லோரும் கடவுளைப் புகழ்ந்து தெருவிலேயே மண்டியிடுவார்கள். உலக வாழ்க்கை அதன் பயங்கரங்கள் இவற்றை பற்றி அவர்களுக்கு சிரத்தையோ, மதிப்போ இல்லை. தங்கள் ஆத்மாவைப் பற்றித் தான் அவர்களுக்கு எண்ணம். அவர்கள் கவலை. இந்த வெறியர்களைக் கண்டு மதகுருக்களுக்கு சிறிது சந்தேகம். ஏனெனில் அவர்கள் கோயிலிலிருந்தும், சாம்பராணி, விக்ரகங்கள் இத்யாதிகளுடன் அவர்கள் நடத்தும் ஊர்வலங்களிலிருந்தும் ஜனங்களை இழுத்துப் போய் விடுகிறார்களாம், இந்த வெறியர்கள். இவர்கள் நம்பிக்கையற்றவர்கள். எல்லாவற்றையும் மிகைப்படுத்தி மதம் அளிக்கும் ஆறுதலைக்கூடப் புறக்கணிக்கிறார்கள். கடவுள் இதனை ஒப்பமாட்டார் என்று மதகுருக்கள் சொல்கிறார்கள். ஆனால் யாராவது உண்மையான

மதப்பற்றுள்ளவர்கள் என்று சொன்னால் இந்த மனிதர்களைத்தான் சொல்லவேண்டும். தங்கள் போதனைகளை இப்படி எழுத்துக்கு எழுத்து கடைப்பிடிப்பதைத் தான் மதகுருக்கள் விரும்பவில்லை.

இந்த நோயின் பயங்கரங்களும் கஷ்ட காலமும் வேறொரு விளைவையும் உண்டாக்கியுள்ளன. சிலர் முன்னைவிட வாழ்க்கையைப் பிரமாதமாக ரசிக்கத் தொடங்கி விட்டார்கள். மரண பயத்தினால் வாழ்க்கையை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். நகரில் சில முக்கிய மாளிகைகளில் களியாட்டங்கள் ஓயாமல் அல்லும் பகலும் நடக்கின்றன. இதைப் பார்த்து ஏழைகளும், வறிஞர்களும் தங்கள் ஸ்திதிக்கு தகுந்தவாறு இந்த மாதிரி களியாட்டங்களில் ஈடுபடுகிறார்கள். அவர்களுக்கும் உயிர் ஆசை அதிகம்தான். அரண்மனையின் பக்கத்து வாசலில் இலவச உணவு அளிக்கப்படும் பொழுது இவர்கள் அடித்துக் கொள்கிற அடியை பார்த்தாலல்லவா தெரியும்.

வேறு சிலர் மக்களுக்காக பெரிய தியாகங்கள் செய்கிறார்களாம். நோயாளிகளுக்கு பணிவிடை செய்கிறார்களாம். நோய் ஒட்டிக் கொள்ளுமே என்ற கவலை இல்லை அவர்களுக்கு. சாவைப் பற்றியும் மற்ற ஆபத்துக்களைப் பற்றியும் அவர்கள் கவலைப்படவில்லை. மதவெறி மாதிரி இது இன்னொரு வெறி. வேறு வடிவத்தில் வெளிப்படுகிறது. அவ்வளவுதான்.

ஊரிலிருந்து வரும் கதைகளை நம்பினால் மக்கள் எள்ளளவும் தங்கள் இயல்பையோ, வாழ்க்கையையோ மாற்றிக் கொள்ளவில்லை என்று தெரியும். ஆனால் வித்தியாசம் என்னவெனில் ஒரு மிகையான உணர்ச்சியை அதிகமாகக் காட்டும் வகையில் வாழ்கிறார்கள். கடவுளின் நோக்கிலிருந்து மொத்த விளைவு ஒன்றும் இல்லை. ஆகவே இந்த நோயையும், மற்ற சோதனைகளையும் அளித்தவர் கடவுள் தானா என்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது.

இன்று பியாமிடா என்னைக் கடந்து சென்றாள். வழக்கம் போல என்னைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அவள் இந்த மாதிரி தனித்து நிற்பதில் தான் எவ்வளவு மாசற்ற அழகு! சூழ்ந்துள்ள தீமைகளுக்கும் கலவரத்துக்கும் நடுவில் மெல்லிய தென்றல் போல காட்சி அளிக்கிறாள் அவள். அவளிடம் ஒரு தன்மை இருக்கிறது. அதுவும் அண்ட முடியாத அவளுடைய கர்வம் நிறைந்த தனிமையும் பிறர் மனதில் ஒரு அமைதியையும், பாதுகாப்பையும் உண்டாக்குகின்றன. உயிரின் பயங்கரங்கள் அவளைப் பாதிக்காது. அவளே அவற்றின்மீது ஆட்சி செலுத்துகிறாள். அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளக் கூட அவளுக்கு முடியும். அவள் இப்பொழுது மிக மிக கம்பீரமாக இளவரசியின் ஸ்தானத்தைப் பிடித்துக் கொண்டு விடுகிறாள். ஆனால் இது பிறர் கண்ணை உறுத்தாத வண்ணம், ஏதோ நடக்க வேண்டியது நடப்பது போல் இது நடந்து வருகிறது. மற்றவர்களும் இது விஷயமாக ஒன்றும் சொல்வதற்கில்லை என்று உணர்ந்து புதிய நிலைமைக்கு ஏற்றவாறு நடந்துகொள்ளப் பழகிக் கொள்கிறார்கள். அவளுடைய ஆற்றலை யாருக்கும் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.... இந்த மாதிரி யாராவது என்னைப்

பார்க்காமல் போயிருந்தால் சீற்றம் பொங்கி வரும். ஆனால் இவள் செய்தது மிகவும் இயற்கையாகவே எனக்குத் தோன்றுகிறது.

இளவரசருக்கு இவள் மீதுள்ள காதல் எனக்குப் புரிகிறது. எனக்கு அந்த அனுபவம் இல்லாமல் இருப்பது வேறு விஷயம். நான் உண்மையாக யாரையாவது காதலிக்க முடியுமோ? எனக்குத் தெரியவில்லை. அப்படி யாரையாவது நான் காதலித்தால் அது இளவரசியாகத் தான் இருக்கும். ஆனால் இப்பொழுதுதான் நான் அவளை வெறுக்கிறேனே.

இருந்தாலும் அவள் ஒருத்தியைத் தான் நான் காதலித்திருக்க முடியும் என்ற உணர்ச்சி எனக்கு அதிகமாகவே இருக்கிறது. ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. உண்மையாகவே காதல் என்பது யாருக்குமே புரியாத பொருள் தான்.

## 38

ஏஞ்சலிகா ஆற்றில் விழுந்து இறந்து விட்டாள். இது நேற்றிரவு தான் நடந்திருக்க வேண்டும். யாரும் அதைப் பார்க்கவில்லை. அவள் விட்டு விட்டுப்போன கடிதத்தைப் பார்த்தால் இது தற்கொலை என்பது சந்தேகமில்லை. பகல் முழுவதும் ஆற்று நீளம் முழுவதும் தேடினார்கள். கியோவானியின் உடலைப் போல இவள் உடலையும் அலைகள் அடித்துப் போயிருக்கும். அரண்மனை முழுவதும் ஒரே ரகளை. சகஜம் தான். யாருக்கும் அவள் செத்துப் போய் விட்டாள் என்று நம்பவே முடியவில்லை. அழுது புலம்புகிறார்கள். தங்களை நொந்து கொள்கிறார்கள். கடிதத்திலுள்ள விஷயங்களை அலசி அலசி பொருத்திப் பார்க்கிறார்கள். செய்தியைக் கேட்ட பொழுது இளவரசா் மிகவும் துன்புற்றது போல் இருந்தது. கடிதத்தை வாசிக்கும் பொழுது அந்த உருக்கமான சொற்களைக் கேட்டு கண்ணீர் துடைத்தது, ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. கடிதத்தில் அசாதாரணமான செய்தி ஒன்றும் இல்லை. செய்த குற்றத்தை, எல்லோரும் ஒரு மனதாகக் கண்டித்த அந்தக் குற்றத்தை அது மாற்றவும் இல்லை. கடிதத்தில் புதிதாக ஒன்றுமில்லை. திருப்பித் திருப்பி நான் அதைக் கேட்க வேண்டியிருந்தது. ஆகவே எனக்கு முழுவதும் நெட்டுருவாகி விட்டது.

கடிதத்தின் போக்கு இதுதான். “உங்களோடு இனி தங்கியிருக்க நான் விரும்பவில்லை. என்னிடம் மிகவும் அன்பாக நடந்து கொண்டால்கூட உங்களை எனக்குப் புரியவில்லை. வெகுதூரத்திலிருந்து வெளிநாட்டிலிருந்து காதல் என்று ஒன்று இருக்கிறது என்று எனக்குச் சொல்ல வந்த என் அருமைக் காதலனை, என்னிடமிருந்து பறித்துக் கொண்டு விட்டீர்கள். அந்த மாதிரி ஒன்று இருப்பது எனக்குத் தெரியாது. ஆனால் கியோவானியைப் பார்த்த க்ஷணமே காதல் ஒன்றுதான் இந்த உலகத்தில் ஒரே உண்மை என்றும் மற்றவை எல்லாம் ஒன்றுமில்லை என்றுமே எனக்குத் தெரிந்தது.

அதுவரையில் வாழ்க்கை ஏன் அவ்வளவு கஷ்டமாக இருந்தது? அவனைப் பார்த்தவுடன் தான் எனக்குப் புரிந்தது.

அவன் இல்லாத இங்கு நான் இருக்க விரும்பவில்லை. அவனையே தொடர்ந்து செல்லுகிறேன். கடவுளுக்கு நான் எவ்வளவோ வேண்டிக் கொண்டிருக்கிறேன். கியோவானியும் என்னையும் சந்திக்க விடுவதாக எனக்கு உறுதி அளித்திருக்கிறார். நாங்கள் இனிமேல் ஒன்றாகத்தான் இருப்போம். ஆனால் அவர் என்னை எங்கு அழைத்துப் போகிறேன் என்று சொல்லவில்லை. ஆற்றில் படுத்துக் கொண்டு விட்டால் போக வேண்டிய இடத்துக்கு எடுத்துச் சென்று விடுவார்.

நான் ஏதோ தற்கொலை செய்து கொண்டு விட்டேன் என்று நீங்கள் நினைக்கக் கூடாது. சொன்னபடி செய்கிறேன். நான் இறக்கவில்லை. என் காதலனோடு சேர்வதற்காகத்தான் போகிறேன்.

பதக்கம் எனக்குச் சொந்தமில்லாவிட்டாலும் அதை எடுத்துக் கொண்டு போகிறேன். அதுதான் உத்தரவு. நான் அதைத் திறந்து பார்த்தேன். அதன் உள்ளிருந்த படத்தை பார்த்தது முதல் இந்த உலகத்தை விட்டுப் போய் விட வேண்டும் என்ற ஏக்கம் என்னுள் இறங்கிவிட்டது. உங்களை எல்லாம் மன்னித்து விட்டதாக எனது தாய் சொல்லச் சொன்னாள். நானும் மனப்பூர்வமாக அவளை மன்னிக்கிறேன்.

**ஏஞ்சலிகா**

ஏஞ்சலிகாவின் மரணத்திற்குத் தான் தான் காரணம் என்று தாய் நினைக்கிறாள். தன் குழந்தையிடம் அவள் அக்கறை காட்டுவது இதுதான் முதல் தடவை. இந்தப் பாபத்திற்கு வேறு அவள் பிராயச்சித்தம் செய்து கொள்கிறாள். சோறே தின்பதில்லை. ஏசுவை மன்னிக்குமாறு வேண்டுகிறாள். ஏசு விடையிறுக்கவில்லை.

## 39

இன்று காலை சாண்டாகுரோஸியிலுள்ள பர்னார்டோவுக்கு என்னிடம் ஒரு கடிதம் கொடுத்து அனுப்பினார் அவர். பர்னார்டோ அரண்மனைக்கு வந்து வெகு நாளாய் விட்டது. சமீபகாலமாக அவர் நினைவே எனக்கு வரவில்லை. நான் நகரத்திற்குள் போனேன். என் விருப்பத்திற்கு மாறாகத் தான். சூரைநோய் தொடங்கியதிலிருந்து அந்தப் பக்கம் போகவே இல்லை. நோயைக் கண்டு எனக்குப் பயமில்லை. ஆனாலும் சில காட்சிகளை எனக்குப் பார்க்கப் பிடிப்பதில்லை. என்னுடைய இந்த எண்ணம் சரியாகவே ஆகிவிட்டது. நான் பார்க்க வேண்டி இருந்த காட்சிகள் மகா பயங்கரமாக இருந்தன. அதே சமயம் ஒரு ஆச்சரியமான அனுபவமாகவும் இருந்தது. ஒரு தினுசான காட்டுத்தனம் என்னை நிறைத்து விட்டது. இந்த உலகம் அநித்யம் என்று உணர்ச்சி ஏற்பட்டு விட்டது. ஒன்றினாலும் ஒன்றும் பயனில்லை என்ற ஓர் உணர்வு. நான் போகும் வழியிலெல்லாம் நோயாளிகள் இறந்து

கிடந்தார்கள். இறந்து போனவர்கள் ஈமச்சடங்கிற்கு ஏற்பாடு செய்யும் தொழிலாளர்கள் கறுப்புத் தலை உறை அணிந்து சேர்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இல்லாத இடம் இல்லை. அவர்கள் வரும் இடமெல்லாம் கல்லறையின் வாடை அடித்தது. இறந்தவர்களின் லோகத்தில் அலைவதுபோல் இருந்தது எனக்கு. நோய் தொற்றாதவர்களைக் கூட மரணம் தொடர்ந்து கொண்டிருந்தது. குழி விழுந்த கண்களுடன் எலும்பும் தோலுமாக அருவங்களைப் போல அலைந்து கொண்டிருந்தார்கள் அவர்கள். தூங்கும் பொழுதே நடப்பவர்களின் ஜாக்கிரதையோடு கீழே கிடந்த செத்த அல்லது சாகாத மூட்டைகளில் அவர்கள் மிதிக்காமல் நடந்தது கண்றாவியாக இருந்தது. இதெல்லாம் கண்ணால் பார்க்கவே முடியவில்லை. நோய்க்கு இரையான இவர்களை விட ஒரு துக்ககரமான காட்சியைப் பார்க்க முடியாது. குமட்டலை அடக்கிக் கொள்வதற்காக நான் அடிக்கடி வேறு பக்கம் திரும்ப வேண்டியிருந்தது. கந்தல் பொத்தல்களின் வழியே நீலம் பாய்ந்த தோலும் அதில் வெடித்த கொப்பளங்களும் தெரிந்தன. தாங்கள் இன்னும் உயிரோடு இருப்பதை அறிவிப்பது போல சிலர் ஒரேயடியாகக் கூச்சல் போட்டார்கள். இன்னும் சிலர் மூர்ச்சையாகக் கிடந்தனர். ஆனால் உடல் மட்டும் ஓயாமல் கோண இழுத்துக் கொண்டே இருந்தது. இந்த மாதிரி மனிதர்கள் படும் அல்லலை இதற்குமுன் நான் பார்த்ததே இல்லை. நோயாளிகளுக்கு கிணற்றிலிருந்து நீர் மொண்டு வருபவர்களை நோக்கி சிலர் பைத்திய வெறி ஜொலிக்கும் கண்களுடன் பாய்ந்து ஓடினார்கள். அவர்கள் அகப்பையை பிடுங்கின வேகத்தில் நீர் முக்கால்வாசி கீழே கொட்டிவிட்டது. இன்னும் சிலர் நீண்ட கால இலட்சியமான கிணறுகளை நோக்கி மிருகங்களைப் போல உட்கார்ந்தவாறே ஊர்ந்து கொண்டிருந்தார்கள். முற்றிலும் பயனற்றுப் போன உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியில் மனிதர்களைப்போல நடந்து கொள்ளவே மறந்துவிட்ட பிராணிகள் இவர்கள். மனிதனுக்கு கௌரவம் தரும் ரசங்கள், உணர்ச்சிகள் எல்லாவற்றையும் இழந்து விட்டவர்கள். இதெல்லாம் பற்றி சொல்லும் போது எனக்கு வயிற்றைப் புரட்டுகிறது. நாற்சந்திகளில் சொக்கப் பானைகள் எரிந்தன. அவற்றில் கட்டுக் கட்டாக சவங்கள் எரிந்தன. அந்த நாற்றம் ஊர் முழுவதும் வீசிற்று. ஊரெங்கிலும் மெல்லிய புகைப்படலம் தொங்கிக் கொண்டிருந்தது. ஆலயமணிகளும் இடைவிடாமல் சாவு மணிகளை ஒலித்துக் கொண்டிருந்தன.

வழக்கம்போல பர்னார்டோ தன் அப்பச் சடங்கு சித்திரத்தைப் பார்த்து சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். அந்தப் பாதி நரைத்த தலை சற்று குனிந்திருந்தது. மிகவும் வயதாகி விட்டவர் மாதிரி தோன்றிற்று. அவருடைய ஏசு, சாப்பாட்டு மேஜைமீது அமர்ந்து ரொட்டியைத் துண்டு போட்டு எல்லோருக்கும் வழங்கிக் கொண்டிருந்தார். தலையைச் சுற்றி ஒளி வட்டம். மெல்லிய வெள்ளைத் துணி போர்த்திய மதுக்கிண்ணம் கைக்கு கை மாறிக் கொண்டிருந்தது. பசித்தவர்களோ, தாகப்பட்டவர்களோ அங்கு இல்லை. ஆனால் இந்தக் கிழவனோ தன் தூரிகைகளுக்கு இடையே இதயம் கனக்கச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

இளவரசனிடமிருந்து கடிதம் கொண்டு வந்திருக்கிறேன் நான் என்று சொன்னபோது அவர் பதில் சொல்லவில்லை. எங்கேயாவது வை என்று சைகையால் சொன்னார். தன் உலகத்திலிருந்து தன்னை யாராவது பிடுங்கிப் போவதை அவர் அனுமதிக்க மாட்டார். அது என்ன உலகமோ. சாண்டாகுரோஸியை விட்டு கிளம்பும் போது நானும் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டேன்.

திரும்பிப் போகும் பொழுது அனைத்தினும் ஓங்கி நிற்கப் போகிற மணி மண்டபத்தைக் கடந்து சென்றேன். போரை முன்னிட்டு அந்த வேலை நின்று விட்டது. பிறகு அதை மறந்தும் விட்டார்கள். பாதி முடிந்த வண்ணம் நிற்கிறது கட்டடம். அதனால் மேலே இருக்கும் கல்வரிசை சமமாக இல்லை. ஏதோ பாழ் மண்டபம் மாதிரி தோன்றுகிறது. ஏசுநாதர் வாழ்க்கையின் காட்சிகளைச் சித்தரிக்கும் வெண்கலச் சுவர் சிற்பங்கள் முடிந்து விட்டன. வெற்றிகரமான சிற்பங்களே. எல்லாம் நான் சொன்ன படியே நடந்து விட்டது.

## 40

அரண்மனை முழுவதும் ஒரே கறுப்பு நிறம். சுவர், நாற்காலி, மேஜைகள் எல்லாம் கறுப்பு துணிகளால் மூடப்பட்டுள்ளன. எல்லோரும் மெதுவாக நடக்கிறார்கள். மெதுவாகப் பேசுகிறார்கள். கறுப்பு ஸாட்டீன் கவுன்களும், கறுப்பு வெல்வெட் கால்சட்டைகளுமே அணிந்திருக்கிறார்கள் எல்லோரும்.

இதற்கெல்லாம் காரணம் ஏஞ்சலிகாவின் மரணம். அவள் உயிரோடு இருந்த பொழுது ஒன்றும் நடக்கவில்லை. ஆனால் அங்குள்ள மக்கள் துக்கம் கொண்டாடுவதை உண்மையாகவே அனுபவிக்கிறாற் போலத்தான் தோன்றுகிறது. டான்ரிகார்டோவிற்குப் பிறகு ஏஞ்சலிகா. இப்பொழுது டான் உண்மையாகவே இறந்து விட்டான். ஆனால் இப்பொழுது இறந்தவளைப் பற்றி யாருமே பேசவில்லை. எல்லோரும் பேசக்கூடிய ஆள் அல்ல அவள். மேலும் அவள் உண்மையில் எப்படியிருந்தாள் என்று யாருக்கும் தெரியாது. சும்மா துக்கம் கொண்டாடுகிறார்கள், அவ்வளவுதான். ஏஞ்சலிகா அரசு குடும்பங்களிலேயே மிகவும் வெறுக்கப்பட்ட எதிரியைச் சேர்ந்த கியோவானி இருவரையுமே நினைத்துப் பெருமூச்சுகள் ஒலிக்கின்றன. சந்தேகமே இல்லாத அவர்கள் காதலுக்காகவும், அந்தக் காதலுக்காக அவர்கள் அடைந்த மரணத்திற்காகவும் பெருமூச்சுகள் ஒலிக்கின்றன. காதலும், சாவும் தான் இவர்களுக்கு மிகவும் பிடித்த விஷயம். அவற்றை நினைத்து அழுவதிலும் அவர்களுக்குத் தனி ஆனந்தம். அதுவும் இப்படி ஐக்கியமான காதலாக இருந்தால் கேட்பானேன்?

இளவரசர் தோற்றாற் போலக் காணப்படுகிறார். அதனால்தான் அவர் ஒதுங்கினாற் போலவும், ஒன்றும் பேசாமலும் இருக்கிறார் என்று தோன்றுகிறது. என்னோடு பழகுகிற வரையில் இப்படித்தான் தோன்றுகிறது. எத்தனையோ இரகசியங்களை அவர் என்னிடம் சொல்வது உண்டு. ஆனால்

அதெல்லாம் இப்பொழுது இல்லை. என்னிடமிருந்து விலகத்தான் பார்க்கிறார் அவர். முன்னைப் போல எனக்கு வேலைகளும் சொல்வதில்லை. உதாரணமாக பர்னார்டோவிற்கு எழுதிய கடிதம்கூட என்னிடம் நேரில் கொடுக்கவில்லை. யாரோ ஒரு பிரபுவின் மூலமாகத்தான் வந்தது. என்னைக் கண்டு பயப்படுகிறாரோ என்று சந்தேகமாகக்கூட இருந்தது.

இளவரசிக்கு வேலை செய்யும் அந்தக் குட்டிகூட நோய்ப்பட்டு விட்டாள். முகத்தின் தளதளப்பு, சிவப்பு இவைகள் குறைந்திருக்கின்றன. என்ன காரணமோ தெரியவில்லை. ஒரு சமயம் இந்த சூரை நோய்தானோ. ஆனால் என் சம்பந்தப்பட்ட வரையில் எனக்குப் பயமே இல்லை. என்னிடம் இந்த மாதிரி நோய் வராது. ஏன் வராது என்று கேட்டால் எனக்குத் தோன்றுகிறது அவ்வளவு தான். இதெல்லாம் மனிதர்களுக்கு வரும் நோயல்லவா? எனக்கு எப்படி வரும்.

இளவரசியின் நிலை மோசமாகிக் கொண்டே வருகிறது. அவள் தேய்ந்து வருவதைப் பார்ப்பதே பயங்கரமாக இருக்கிறது. அவள் ஊனும் உயிரும் மெல்ல மெல்ல உருகுகின்றன. அவள் இலட்சியமே செய்யவில்லை. சுற்றிலும் ஒரே அழுக்கு. அவளுடைய உயர் பிறப்பும், பழைய பெருமையும் பிடிவாதமாக அவள் தன் விதியை நிறைவேற்றும் துணிவிலும் மற்றவர்கள் அதில் தலையிடாமல் பார்த்துக் கொள்ளும் தனிமையிலும் தெரிகின்றன.

வேலைக்காரி உடம்பாகப் படுத்ததிலிருந்து யாருமே இளவரசியின் அறைப் பக்கம் போக முடியவில்லை. அறை இப்பொழுது இன்னும் மோசமாகி விட்டது. அவள் ஒன்றுமே சாப்பிடவில்லை இப்பொழுது. எப்படித்தான் உயிர் தரித்திருக்கிறதோ என்று ஆச்சரியமாக இருக்கிறது. நான் ஒருவன்தான் அங்கு போகிறேன். நான் கட்டாயம் வரவேண்டும், உதவி செய்ய வேண்டும், தன் பாபங்களை கேட்க வேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

என் மனம் கலவரம் அடைந்திருக்கிறது. நேராக அவளிடமிருந்துதான் வருகிறேன். மனித வர்க்கத்தின் மீது நான் செலுத்தும் ஆட்சி எனக்கே பயங்கரமாகத் தெரிகிறது. இன்று என்ன நடந்தது தெரியுமா?

வழக்கம்போல உள்ளே புகுந்ததும் ஒன்றும் கண்ணுக்குத் தெரியவில்லை. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக ஜன்னல்கள் தெரிந்தன. எங்கும் திரையிட்டிருந்தது. அவள் முடிவில்லாத தன் பிரார்த்தனையைச் சிலுவைக்கு முன் செய்து கொண்டிருந்தாள். நான் கதவைத் திறந்து வருவதைக்கூட கவனிக்கவில்லை.

அறையின் சூழ்நிலை மூச்சைத் திணற அடித்தது. எல்லாம் வயிற்றைப் புரட்டின. துர்கந்தம், பாதி வெளிச்சம், அவளுடைய சுருங்கிய உடல், மேலே திறந்த கிடந்த அவளது தோள்பட்டை, கழுத்தில் பட்டை பட்டையாகத் தெரிந்த மெலிந்த சதை, சிதைந்த பறவைக் கூட்டைப் போல சிடுக்கும், அழுக்கும் ஏறியிருந்த தலைமயிர் எல்லாம் தான். ஒரு காலத்தில் இவைகள் காதலுக்குப் பாத்திரமானது. எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. மனித வர்க்கத்தை நான் வெறுக்கலாம். ஆனால் இப்படி சீரழிவதை பார்க்க சகிக்காது

எனக்கு. திடீரென்று அந்த இருளில் தொண்டை கிழியக் கத்தினேன். நான் வந்ததைக் கூட அவள் அப்பொழுது பார்க்கவில்லை.

"நீ ஏன் தொழுகிறாய்? கூடாது என்று நான் சொல்லவில்லை. உன் பிரார்த்தனைகள் எனக்கு வேண்டாம் என்று நான் சொல்லவில்லையா?"

அவள் திரும்பிப் பார்த்தாள். பயத்தினால் அல்ல. ஆனால் அடிபட்ட நாயைப்போல முனகிக் கொண்டே திரும்பினாள். இதெல்லாம் ஒரு மனிதனின் கோபத்தை அடக்கிவிடுமோ?

இரக்கமில்லாமல் நான் கத்தினேன். "உன்னுடைய பிரார்த்தனைகளை அவர் கவனிக்கிறார் என்று நீ நினைக்கிறாயா? இந்த மாதிரி ஓயாமல் மண்டியிட்டு தொழுது பாபங்களை ஒப்புக் கொண்டால் மன்னித்து விடுவாரா அவர். பாபங்களை ஒப்புக் கொள்ளுதல் மிகவும் சுலபம். ஆனால் இப்படி எல்லாம் அவரை முட்டாளாக்கி விட முடியாது. உன் உள் மனதைப் பார்க்க முடியாதா என்ன அவருக்கு?

"நீ கடவுளை நேசிக்கவில்லை. டான்ரிகார்டோவைத் தான் நேசிக்கிறாய். எனக்குத் தெரியாதென்று நினைத்தாயா? இந்தப் பேய்த் தந்திரங்கள், இந்தத் தவங்கள், காமம் நிறைந்த இந்த உடலில் கிலேசம் செய்வது இதனாலெல்லாம் என்னை ஏமாற்றிவிட முடியாது. அதோ சுவரின் மேல் காணும் ஏசுவிற்காக ஏங்குகிறேன் என்று நீ சொல்லிக் கொண்டாலும் நீ உண்மையில் ஏங்குவது உன் காதலனுக்காகத்தான். நீ அவனைத்தான் இன்னும் நேசிக்கிறாய்."

என் முழக்கத்தைக் கேட்டு திகில் அடைந்து வெளுத்த அவள் உதடுகள் நடுங்கின. உடனே என் காலடியில் விழுந்து "உண்மைதான். என்னைக் காப்பாற்றி விடு காப்பாற்றி விடு" என்று புலம்பினாள் அவள்.

அவள் ஒப்புக் கொண்டதும் என்னைச் சற்று கலக்கி விட்டது.

"வெறிபிடித்த விபச்சாரி! ஏசுவை நேசிப்பதாகப் பாசாங்கு. ஆனால் மனத்திலோ வேறு ஒருவனிடம் இரகசியமான படுக்கை. கடவுள்தான் அவனை நரகத்தில் தள்ளிவிட்டாரே பேயே! அவன் தழுவலில் ஆனந்திக்கும் பொழுது வெளியே பக்தி வேஷமா? அவர் உன்னை வெறுக்கிறார்" என்றேன் நான்.

"ஆமாம், ஆமாம்" என்று முனகிக் கொண்டே காலில் மிதிபட்ட புழுவைப் போல என் காலடியில் துடித்தாள் அவள். இதைக் கண்டு எனக்கு எரிச்சல் தான் வந்தது. "என்னைத் தண்டித்து விடு. நீ தான் கடவுளின் சாட்டை" என்று கெஞ்சிக் கொண்டே கீழே கிடந்த சவுக்கை எடுத்து என் கையில் கொடுத்து என் எதிரில் நாயைப் போல முடங்கிக் கொண்டாள். நான் அதைப் பிடுங்கிக் கொண்டேன். பாதி கோபமும், பாதி குமட்டலுமாக அதை வீசினேன். உய் உய் என்று சத்தம் செய்து கொண்டு அவளுடைய அருவருக்கத்தக்க உடல் மீது விழுந்தது அது. "சிலுவையில் அறையப்பட்டவன் தான் இப்பொழுது உன்னை அடிக்கிறேன். நீ யாரை

நேசிப்பதாகப் பாசாங்கு செய்கிறாயோ அவன்தான் உன்னை அடிக்கிறான். அன்பு என்னவென்று உனக்குத் தெரியுமா? அவன் உன்னிடம் என்ன கோருகிறான் தெரியுமா? நான் உனக்காக கஷ்டப்பட்டு விட்டேன். ஆனால் நீ அதைப் பற்றி கவலைப் பட்டதே இல்லை. ஆனால் இப்பொழுது பார். கஷ்டம் என்னவென்று தெரியும்."

எனக்கு இருந்த கோபத்தில் என்ன செய்கிறேன் என்றே தெரியவில்லை. தெரியவில்லையா? நிச்சயமாகத் தெரியும். நான் பழிவாங்கிக் கொண்டிருந்தேன். நீதி வழங்கிக் கொண்டிருந்தேன். மனித வர்க்கத்தின் மீது எனக்குள்ள அபார சக்தியைச் செலுத்திக் கொண்டிருந்தேன். ஆனால் அப்படிச் செய்வதில் எனக்கு உண்மையான மகிழ்ச்சி ஒன்றுமில்லை.

நான் அடிக்கும் பொழுது அவள் குறையே சொல்லவில்லை. அமைதியாக, அசைவற்று இருந்தாள். எல்லாம் முடிந்ததும் நான் ஏதோ அவள் கலக்கத்தையும், துன்பத்தையும் நீக்கி விட்டது போல கீழே கிடந்தாள்.

"காதலின் பயங்கர பாபத்தில் மகிழ்ந்த உன் வயிற்றை நரகத்தின் தீ ஓயாமல் எரிக்கட்டும்" என்று தீர்ப்பளித்து விட்டு மூர்ச்சைப் போட்டாற் போல் அவள் கீழே கிடக்க, அறையை விட்டு நான் வெளியே வந்தேன். இதயம் அடித்துக் கொள்ள மாடிப்படி ஏறி அறைக்குள் புகுந்து கதவைச் சாத்திக் கொண்டேன். இதை எழுதும்போது என் கலவரம் தணிந்து விட்டது. எல்லை இல்லாத சூன்யமும், அலுப்பும் தான் என்னை ஆட்கொண்டுள்ளன. படபடப்பு அடங்கி விட்டது. என்முன் வெறித்துப் பார்க்கிறேன். என் முகத்தில் இருள் படர்ந்துள்ளது. மகிழ்ச்சி இல்லை.

கடவுளின் சாட்டை என்று அவள் என்னைச் சொன்னது உண்மைதானோ என்னவோ?

# 41

அன்று மாலைதான் கீழே தெரியும் நகரத்தைப் பார்த்துக் கொண்டே நான் உட்கார்ந்திருக்கிறேன். அந்தி மயங்கி விட்டது. மணிகள் ஓய்ந்து விட்டன. கோபுரங்களும், வீடுகளும் மறைந்து கொண்டிருக்கின்றன. இந்த அரை வெளிச்சத்தில் சிதைகளிலிருந்து எழும் புகை தெரிகிறது. துர்கந்தம் மூக்கைத் துளைக்கிறது. கனமான படலம் ஒன்று எல்லாவற்றையும் மறைக்கிறது. இன்னும் சிறிது நேரத்தில் நன்கு இருட்டி விடும்.

வாழ்க்கையாம், அதன் பொருள் என்ன? பயன் என்ன? ஏன் இப்படி இருண்டு சர்வ சூன்யமானதாய் இருக்கிறது அது. அதன் ஒளியைக் கவிழ்த்து இருண்ட பூமியின் மீது அணைக்கிறேன் நான். இருள் வந்து விட்டது.

இளவரசியின் வேலைக்காரப் பெண் இறந்து விட்டது. தளதளவென்று கன்னங்கள் இருந்து என்ன பயன்? சாவைத் தடுக்க முடிந்ததா? சூரைநோய் அவளைக் கொண்டுபோய் விட்டது. ஆனால் மற்றவர்களைப் போல் அவள்

துன்பப்படாததால் அந்த நோய் என்று வெகுநாள் வரை சொல்ல முடியவில்லை.

பியாமிடாவும் இறந்து விட்டாள். இன்று காலை அவளுக்கு நோய் கண்டதும் இரண்டே மணியில் உயிர் போய்விட்டது. ஈமச்சடங்கு, அருவங்கள் வந்து தூக்கிச் சென்ற பொழுது நான் பார்த்தேன். அவள் முகம் வீங்கி விகாரமாக இருந்தது. அழகெல்லாம் போய் கோரமான சவமாகத்தான் தோன்றினாள் அவள். அவள் மீது ஒரு துணியைப் போர்த்திக் கொண்டு போய் விட்டார்கள்.

நோயைக் கண்டு அரண்மனை அரண்டு கிடக்கிறது. இறந்தவர்களை உடனே அப்புறப்படுத்த விரும்புகிறார்கள். ஆனால் பியாமிடாவை விசேஷ கௌரவத்துடன் புதைக்க வேண்டுமென்று உத்தரவு வந்திருக்கிறது. எப்படியானால் என்ன? ஆள் போய் விட்ட பிறகு எல்லாம் ஒன்றுதான். யாரும் அவளுக்காகக் கண்ணீர் வடிக்கவில்லை.

ஒருக்கால் இளவரசர் அவளுக்காக துயரப்படுகிறாரோ என்னவோ. நிச்சயமாக படுகிறார். அல்லது நல்லவேளையாக விட்டது என்று நினைக்கிறாரோ. இரண்டும் இருக்கலாம். யாருக்குத் தெரியும், அவர் யாரிடமாவது பேசினால் தானே. வெளுத்து சோர்ந்து போய் திரிகிறார். நெற்றியில் சுருக்கம் விழுந்திருக்கிறது. உடலும் சற்றுக் கூனி இருக்கிறது. அவருடைய கருவிழிகள் என்னவோ போல் பளபளக்கின்றன, அங்கு அமைதி இல்லை. இன்று தான் அவரைப் பார்த்தேன் நான். வெகுநாளாக நான் அவரைப் பார்க்கவில்லை. அவருக்குப் பணிபுரிவதும் இல்லை.

அன்றைக்குப் பிறகு இளவரசியிடம் நான் போகவுமில்லை. நினைவிழந்து கிடக்கிறாளாம் அவள். பியாமிடா இறந்த பிறகு இளவரசர் அடிக்கடி அங்கு போய் அவர் படுக்கையில் உட்கார்ந்து அவளைப் பார்த்துக் கொண்டே இருக்கிறாராம். இந்த மனிதர்களே வினோதப் பிரகிருதிகள். அவர்கள் ஒருவருக்கொருவர் கொள்ளும் அன்பு எனக்குப் புரியவில்லை.

பகைவர்கள் முற்றுகையைக் கைவிட்டு ஓடி விட்டார்கள். காரணம் சூரை நோய் அங்கும் பரவி விட்டது. பொக்கரோஸாவின் போலிப் பட்டாளத்திற்கு இத்தகைய எதிரிகளோடு போரிட இஷ்டமில்லை. ஆகவே எதுவும் முடிக்க முடியாத போரை நோய் முடித்து விட்டது. இரண்டு நாடுகளும் கொள்ளைக்கு இரையாகி விட்டன. அதிகமாக அல்லல் பட்டது எங்கள் நாடு. இரண்டு நாட்டு ஜனங்களையும் இரண்டு யுத்தங்கள் சேர்ந்து முறித்துப் போட்டு விட்டன. மொண்டான்ஸாவுக்கு ஒரு இலாபமும் இல்லை. ஒரு சமயம் தங்கள் நாட்டிற்கு நோயைக் கொண்டு போவார்களோ என்னவோ அந்தத் துருப்புகள்.

அரண்மனையில் சாவுகள் பெருகிக் கொண்டே இருக்கின்றன. ஏஞ்சலிகாவிற்கு தொங்க விடப்பட்ட கறுப்புத் திரைகள் அப்படியே தான் இருக்கின்றன. அரண்மனையில் எனக்கு வேலையே இல்லை. யாரும் என்னைக் கூப்பிடுவதோ பேசுவதோ இல்லை. இளவரசர் என்னைக்

கவனிப்பதே இல்லை. நானும் அவரைப் பார்ப்பதே இல்லை. ஒவ்வொரு முகத்தையும் பார்க்கும்பொழுது ஏதோ முக்கியமாக நிகழும் போல் தோன்றுகிறது. என்னவென்று தெரியவில்லை.

யாராவது என்னைப் பற்றி பற்ற வைத்து விட்டானா?

நானும் இந்த குள்ளர் அறையை விட்டு வெளியே போகவில்லை. சாப்பிடக் கூடக் கீழே போவதில்லை. இங்கு இருக்கிற பழைய ரொட்டித் துண்டையே கிள்ளிக் கிள்ளி உயிர் வாழ்கிறேன். எனக்கு இது போதும். எப்பொழுதுமே நான் ஆசைப்பட்டதே இல்லை. இந்தத் தாழ்ந்த மேல் தளத்திற்குக் கீழே உட்கார்ந்து யோசனையில் ஆழ்ந்திருக்கிறேன் நான். இந்த ஆழ்ந்த தனிமை வர வர எனக்கு மிகவும் பிடிக்கிறது.

நான் எழுதி வெகுகாலமாகி விட்டது. காரணம் பல சம்பவங்கள் என் வாழ்க்கையைப் பாதித்து எழுத முடியாமல் செய்து விட்டன. பழைய குறிப்புகள் கூட என் கையில் இல்லை. இப்பொழுதுதான் அவைகள் என்னிடம் வந்திருக்கின்றன.

அரண்மனைச் சிறையில் விலங்கிடப்பட்டு உட்கார்ந்திருக்கிறேன் நான். சமீப காலம் வரை என் கைகளையும் விலங்கிட்டிருந்தனர். அது அனாவசியம். நான் தப்பித்துக் கொள்ளவே முடியாது. ஆனால் தண்டனையைக் கொடூரமாகச் செய்வதற்காக அதுவும் அளிக்கப்பட்டது. இப்பொழுது கைவிலங்குகள் போய் விட்டன. ஏன் என்று நான் கேட்கவில்லை. நான் ஒன்றையுமே கேட்பதில்லை. இப்பொழுது கொஞ்சம் பொறுக்கும் படியாக இருக்கிறது. ஆனால் என் நிலைமை மாறவில்லை. சிறைக் காவல்காரன் ஆன்ஸன்மோவை எனக்குப் பொழுதாவது போகட்டும் என்று என் குள்ளர் அறையிலிருந்து என்னுடைய காகிதம் பேனாக்களைக் கொண்டு வருமாறு சொன்னேன். இதனால் அவனுக்கு ஆபத்துக்கூட வரும். என் கை விலங்கை அறுத்து விட்டாலும் நான் இப்படி பொழுது போக்குவதை அவர்கள் விரும்புகிறாரோ என்னவோ. அவனே சொல்வது போல எனக்கு எதுவும் கொடுக்க உரிமை கிடையாதாம் அவனுக்கு.

ஆனால் அவன் நல்லவன். பிறருக்கு உதவி செய்யும் குணமுள்ளவன். ஆகவே இதை எல்லாம் கொண்டு வருமாறு நான்தான் ஒரு மாதிரியாக அவனைத் தூண்டினேன்.

ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சமாக நான் இதுவரையில் எழுதினதை எல்லாம் வாசித்தேன். என் பழைய வாழ்க்கையையும், மற்ற பேர் வாழ்க்கைகளையும் நினைத்துப் பார்ப்பதே திருப்தியாக இருக்கிறது. இப்பொழுது விட்ட இடத்தில் தொடருகிற இந்த அலுப்பு நிறைந்த வாழ்க்கைக்கு இது ஒரு மாற்றாக இருக்கும்.

நான் எத்தனை நாளாக இங்கு இருக்கிறேன் என்று தெரியவில்லை. சிறையில் முக்கியமாக ஒன்றும் நிகழ்வதில்லை. ஒரு நாளைப் பார்த்தாற்போலவே இன்னொரு நாளும். ஆகவே நாட்களை கணக்கு வைத்துக் கொள்வதையும் விட்டு விட்டேன். காலத்தின் போக்கில் எனக்குச்

சிரத்தை இல்லை. ஆனால் இந்தச் சிறையில் என்னைக் கொண்டு தள்ளியது எது?

ஒரு நாள் என் அறையில் அமைதியாக நான் உட்கார்ந்திருந்த பொழுது சித்திரவதைக்காரர்களில் ஒருவன் திடீரென்று என் அறையில் வந்து தன் பின்னால் வரும்படியாக உத்தரவிட்டான். ஏன் என்று சொல்லவில்லை. நானும் கேட்கவில்லை. அவனோடு பேசுவதே எனக்கு கௌரவக் குறைவாகத் தோன்றிற்று. சித்திரவதை அறையில் நுழைந்ததும் ராட்சஸன் மாதிரி வெறும் உடையுடன் கொலையாளி நின்றிருந்தான். வக்கீல் ஒருவரும் இருந்தார். நான் இளவரசியிடம் போகும் பொழுதெல்லாம் என்னென்ன நடந்தது என்பதை முற்றிலும் ஒப்புக் கொள்ள வேண்டுமென்று சித்திரவதைக் கருவிகளைக் காண்பித்து என்னை வற்புறுத்தினார்கள். அவளுடைய அவக்கேடான நிலைக்கு நான் அங்கு போனதுதான் காரணமாம். அதெல்லாம் ஒன்றும் நடக்காது என்று சொல்லிவிட்டேன். அவர் இரண்டு தடவை கேட்டும் பயனில்லை. உடனே கொலையாளி என்னை பிடித்து அந்தக் கருவிமீது ஏற்றினான். ஆனால் அது குள்ளர்களுக்குச் செய்யப்பட்டதல்ல. ஆகவே நான் கீழே இறங்கி அது என் அளவுக்கு ஏற்க மாற்றப்படும் வரையில் காக்க வேண்டியிருந்தது. அதுவரையில் மட்டமான பாஷையில் கேலிகள் செய்து கொண்டிருந்தார்கள் அவர்கள். என்னை உயரமான ஆளாக ஆக்கிவிடப் போகிறாராம். பின்பு என்னை வதைக் கருவியின் மீது ஏற்றி வைத்து சித்திரவதை செய்யத் தொடங்கினார்கள். எத்தனை வலித்தால் என்ன? நான் வாயைத் திறக்கவில்லை. வெறுப்புடன் அவர்களைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். சட்ட நிபுணர் என் மேல் குனிந்து கேள்விகள் கேட்டார். இரகசியங்களைப் பிடுங்கப் பார்த்தார். ஆனால் ஒரு வார்த்தை என் உதட்டிலிருந்து வெளியே வரவில்லை. நான் அவளைக் காண்பித்துக் கொடுக்கவே மாட்டேன். அவளுடைய கீழ்ப்பட்ட நிலையை அம்பலமாக்க நான் விரும்பவில்லை.

நான் இப்படி நடந்து கொண்ட காரணமும் எனக்குப் புரியவில்லை. எந்தத் துன்பப்பட்டாலும் அவளைக் காண்பித்துக் கொடுப்பதில்லை என்று உறுதி செய்து கொண்டு வாயைக் கடித்துக் கொண்டே அந்த நாச காலிக்காக எல்லாவற்றையும் சகித்துக் கொண்டேன். ஏன்? ஒரு சமயம் அவளுக்காகக் கஷ்டப்படுவதைக் கூட நான் விரும்புகிறேனோ?

கடைசியில் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. என்னை சபித்துக் கொண்டே கயிறுகளை தளர்த்தி விட்டார்கள். முன்னொரு தடவை அப்பச் சடங்கு செய்ததற்காக என்னைச் சிறையிலிட்டார்களே. எனக்காக ஒரு விலங்கு செய்தார்களே. அதை இப்பொழுது என் மேல் சுமத்தினார்கள். ஆனால் இது இன்னும் கோரமான சிறை. இரண்டு நாள் கழித்து மீண்டும் என்னை அழைத்துப் போய் பழையபடி சித்திரவதை செய்தார்கள். ஆனால் ஒன்றும் பயன்படவில்லை. என் வாய் திறந்தால் தானே?

சில நாட்களுக்குப் பிறகு சில நீதிபதிகள் என்னை விசாரித்தார்கள். பல குற்றங்கள் என் மீது சாட்டப்பட்டன. அவற்றில் ஒன்று இளவரசி இறப்பதற்கு

நான் காரணமாக இருந்தேனாம். அவள் இறந்து விட்டாள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அதைக் கேட்டவுடன் என் உணர்ச்சியைக் காட்டிக் கொள்ளாமல் சமாளித்துக் கொண்டு விட்டேன். நினைவுக்கு வராமலேயே அவள் இறந்துவிட்டாளாம்.

தற்காப்பாக நான் ஏதாவது சொல்லிக் கொள்ள வேண்டுமா என்று கேட்டார்கள். நான் பதிலே சொல்லவில்லை. தீர்ப்பு வந்தது. என்னுடைய தீயச் செயல்களுக்கும் பல துரதிருஷ்டங்களுக்கும் நான் காரணமாக இருந்ததற்காக கோட்டைக்கு கீழ் உள்ள மிக மிக இருண்ட நிலவறையில் நான் சாகும் வரை விலங்கில் கட்டப்பட்டிருக்க வேண்டுமாம். நான் ஏதோ பாம்பாம். இளவரசருக்கு துர்தேவதை மாதிரி வந்தவனாம். என்னால் ஒரு காலத்திலும் ஒருத்தியும் இங்கு வரக்கூடாது என்று அவர் விரும்பினாராம்.

துளியும் கலங்காமல் தண்டனையை நான் கேட்டேன். என்னுடைய புராதன குள்ள முகம் அலட்சியமாக, பரிகாசமாக இருந்ததைப் பார்த்து எல்லோருமே பயந்து விட்டார்கள். உடனே என்னை நீதிமன்றத்திலிருந்து அழைத்துக் கொண்டு போனார்கள். அதுமுதல் இந்த வெறுக்கத்தக்க பிராணிகளை நான் பார்த்ததில்லை. என் கண்ணில் படுகிறவன் ஜெய்லர் ஆன்ஸன்மோ ஒருவன் தான். ஆனால் இவனை ஒரு பொருட்டாகவே நான் மதிக்கவில்லை. அதனால் தான் என் வெறுப்புக்கும் ஆளாகவில்லை அவன்.

நான் பாம்பாம். நான் விஷத்தைக் கலந்தது உண்மை தான். ஆனால் யாருடைய உத்தரவின் பேரில்? டான்ரிகார்டோ இறந்ததற்கு நான் தான் காரணம். ஆனால் அவன் சாவதை விரும்பியது யார்? இளவரசியை நான் தான் சவுக்கால் அடித்தேன். ஆனால் அடி என்று என்னைக் கேட்டுக் கொண்டது யார்?

மனிதர்கள் மிகவும் பலமற்றவர்கள். மிகவும் கர்வம் கொண்டவர்கள். தங்கள் விதியைத் தாங்களே நிர்ணயிக்க முடியாத அளவுக்கு இந்த இரண்டு குணங்களும் அவரிடம் உண்டு.

நான் செய்த அட்டூழியங்களுக்கு தூக்கு தண்டனையல்லவா கொடுத்திருக்க வேண்டும் என்று பலர் நினைக்கலாம். ஆனால் இந்த மாதிரி ஆச்சரியம் விஷயம் தெரியாதவர்களுக்கும், என் எஜமானரைப் புரிந்து கொள்ளாதவர்களுக்கும் தான் ஏற்படும். எனக்கு அவரிடம் அந்த பயமெல்லாம் கிடையாது. என் மீது அவ்வளவு வல்லமையும் அவருக்கு இல்லை.

வல்லமை! நான் இந்த இருட்டு அறையில் இருந்தால் என்ன மோசம் போய் விட்டது. எனக்கு விலங்கிட்டு அவர்கள் என்ன பயனைக் கண்டார்கள். முன்னைப் போல் நான் இன்னும் அரண்மனையைச் சேர்ந்தவன் தான். இந்த சுவற்றிலேயே இந்த விலங்கை அவர்கள் மாட்டி இருக்கும் பொழுதே இது தெரியவில்லையா? நானும் அரண்மனையும் ஒரே உலகில் சேர்ந்து பார்க்கப் பட்டவர்கள். ஒருவருக்கொருவர் தப்பித்துக் கொள்ள முடியாது. என்னை சிறையிலிட்டால் அவரையும் சிறையிலிட்டாற் போலத்தான்.

நான் இந்தப் பொந்தில் எலி மாதிரி வாழ்ந்து கொண்டிருக்கிறேன். அவர் தன்னுடைய அழகிய அரண்மனையில் உலவுகிறார். அதுதான் வித்தியாசம். ஆனால் என் வாழ்க்கை அவர் கையில் இருக்கிறார்போல, அவருடைய கௌரவமும், பிரபுத்வமும் நிறைந்த வாழ்க்கை என் கையில் இருக்கிறது.

## 42

இதை எழுத எனக்கு வெகு நாளாயிற்று. எப்பொழுதாவது சூரிய கிரணம் குறுகிய இடுக்கின் வழியாக காகிதத்தின் மேல் விழும் குறுகிய நேரத்தில் தான் எழுத முடிகிறது. அந்த வாய்ப்பை விட்டால் முடியாது. அறையின் தரையில் ஒரு மணி நேரம் கிரணம் நகர்கிறது. சங்கிலி சுவரோடு இணைந்திருப்பதால் எனக்கு அந்த ஒளியோடு நகர முடியாது. ஆகவே எழுதியிருப்பதை வாசிப்பதற்கும் எனக்கு வெகு நேரமாகிறது. இதுவும் ஒரு சௌகரியம் தான். பொழுதாவது போகிறதல்லவா?

ஒளி போன பிறகு நான் நாள் முழுவதும் சும்மா உட்கார்ந்திருக்க வேண்டியதுதான். மூன்று மணிக்கே இருட்டி விடுகிறது. என் நேரம் பெரும்பாலும் முழு இருளிலே கழிகிறது. எலிகள் வந்து மின்னும் கண்களுடன் ஊர்கின்றன. எலிகளைப் போலவே எனக்கும் கூரிய கண்களாதலால் அவற்றை உடனேயே எனக்குப் பார்க்க முடியும். நானும் வரவர பூமியின் கீழ் வளரும் ஜந்துவாக ஆகிவிடுகிறேன். இந்த அழுக்கும் விகாரமும் நிறைந்த ஜந்துக்களைக் கண்டால் எனக்குப் பிடிக்கவில்லை. அவைகள் அருகில் வரும் வரையில் அசையாமல் உட்கார்ந்திருப்பேன். ஆனால் வந்த உடனே ஒரே மிதியாக மிதித்து நசுக்கி விடுவேன். என்னுள் மிஞ்சி இருக்கும் பலத்தின் சின்னம் இது. காலையில் ஆன்ஸர்மோவைக் கூப்பிட்டு அவற்றைத் தூக்கி வெளியே எறியச் செய்வேன். இந்த ஜந்துக்கள் எப்படி உள்ளே வருகின்றன என்று தெரியவில்லை. இந்த அறைக்கதவை சரியாகச் சாத்த முடியாது. அதன் வழியாகத்தான் வரவேண்டும் இவைகள்.

சுவற்றில் ஈரம் சொட்டுகிறது. அறை முழுவதும் மக்கிப் போன, தூசி நெடி. இந்த நெடியே என்னால் தாங்க முடியவில்லை. தரையோ மண்தரை. இங்கு வாழ்ந்தவர்கள் நடந்து நடந்து கெட்டிப்பட்டிருக்கிறது. என்னைப் போல அவர்கள் எல்லோருமே சுவரோடு பிணைக்கப்படவில்லை என்று நினைக்கிறேன். இல்லாவிட்டால் தரை இப்படி கருங்கல் தரை மாதிரி இருக்காது. நானும் அவளைப் போல ஒரு வைக்கோல் பத்தை மேல் தான் தூங்குகிறேன். ஆனால் அதைப் போல இது நாற்றம் வீசவில்லை. ஆன்ஸர்மோ வாரத்திற்கு ஒருமுறை இதை மாற்றி விடுகிறான். நான் பாபியோ, பிராயச்சித்தம் செய்துகொள்ள முடியவில்லை. நான் சுதந்திர மனிதன். என்னையே வருத்திக் கொள்ள மாட்டேன்.

என் சிறை வாழ்க்கை இதுதான். இங்கு உட்கார்ந்தவாறு வாயை இறுக மூடிக் கொண்டு வாழ்க்கையையும், மனிதர்களையும் பற்றி யோசித்துக் கொண்டே இருக்கிறேன். என்னிடம் ஒரு மாற்றமும் இல்லை.

என்னை அடக்க முடியும் என்று அவர்கள் நினைத்தால் அது பெரும் தவறு.

சிறைக் காவலனின் உதவியால் வெளி உலகத்துடன் எனக்குத் தொடர்பு இருந்து கொண்டுதான் இருக்கிறது. அவன் நல்ல சாது. எனக்குச் சாப்பாடு கொண்டு வரும் பொழுது வெளியே நடந்தவற்றை எல்லாம் கள்ளம் கபடம் இல்லாத முறையில் சொல்லிவிட்டு தன்னுடைய அபிப்ராயங்களையும் விரிவாகக் கூறுவான். எல்லாவற்றிலுமே அவனுக்கு ஊக்கம் அதிகம். தனக்கு துன்பம் அளித்த எண்ணங்களை வாய்விட்டுச் சொல்ல அவனுக்கு ஆசை. அவன் வாயில் எந்த விஷயமும் படு சூன்யமாக முட்டாள்தனமாகத்தான் வெளிப்படும். இவ்வளவு நடந்ததற்கும் கடவுள் என்ன காரணங்கள் சொல்லப் போகிறார் என்றுதான் அவனுக்கு வியப்பு. ஆனால் எனக்கு அறிவும், அனுபவமும் அதிகம். நடந்த சம்பவங்களைப் பற்றி பொதுவாக சரியாகவே எனக்குச் சொல்ல முடியாது. இளவரசி தேய்ந்து இறந்ததற்குக் காரணமான சந்தர்ப்பங்கள், நான் சிறைப்பட்டதுமே நடந்த சம்பவங்கள் எல்லாவற்றையும் எனக்குச் சொல்ல முடியும். இளவரசர் நாள் முழுவதும் அவள் படுக்கையில் உட்கார்ந்து அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தார். வரவர அவர் முகம் ஒளி பெற்றது. ஒரு தெய்வீகக் களையே அதில் தென்பட்டது என்று அரண்மனையில் எல்லோரும் பேசிக் கொண்டார்கள். தானே அவளைப்போய் பார்த்தது போல ஆன்ஸல்மோ. அவள் கன்னி மேதையைப் போலவே ஆகிவிட்டாள் என்று சொன்னான். அதில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்று அவளை நேரில் பார்த்த எனக்கு தெரியும். ஆனால் இளவரசர் அங்கு உட்கார்ந்து தன்னைவிட்டுப் பிரிய இருந்த மனைவியிடம் ஒருமுகமாக லயித்துவிட்டார் என்று எனக்கு நம்ப முடிகிறது. ஒருக்கால தன் யௌவனத்தையும், பழைய காதலையும் மீண்டும் வாழ்ந்தாரோ என்னவோ. அப்படி இருந்திருந்தால் ஒன்றியாகத் தான் அந்தப் பழைய வாழ்க்கையை வாழ்ந்திருக்க முடியும். ஏனெனில் அவள் இந்த மண்ணின் பந்தங்களிலிருந்து வெகுதூரம் போய்விட்டாள். அவளுடைய இந்த மண்ணுக்கு எட்டாத தன்மையிலும், தொலைவிலும் அவர் எதையோ மனதை உருக்கும் படியான ஒன்றைக் கண்டிருக்க வேண்டும். அதே சமயம் அவளுடைய மாற்றம் அவரை திடுக்கிடச் செய்திருக்க வேண்டும். ஏனெனில் அவருக்கு அதில் பங்கு இல்லை. ஒருக்கால் அவளை மீண்டும் இந்த வாழ்க்கைக்கு திருப்பி அழைக்க விரும்பினாரோ என்னவோ. ஆனால் அவளோ தெரியாமல், காரணம் சொல்லாமல் அவன் கையிலிருந்து நழுவிவிட்டாள். இதுதான் அவளுடைய காதலை அதிகப்படுத்தி இருக்க வேண்டும். அப்படித் தான் எனக்குத் தோன்றுகிறது. இந்த மனநிலையில் தான் அவர் என்னைச் சிறைப்படுத்தி சித்திரவதைக்கு ஆளாக்கி இருக்கவேண்டும். அடையமுடியாதவள் என்பதனால் தான் அவளைக் காதலித்தார் அவர். அதனாலேயே தான் என்னையும் இப்படிச் சித்திரவதை செய்தார். இதைக் கண்டு நான் வியப்புறவில்லை. ஆனால் நான் எதைப் பார்த்து தான் ஆச்சரியப்பட்டிருக்கிறேன்?

பர்னார்டோ வேறு சிலருடன் வந்து அவளைப் பார்த்தாராம். அவள் முகம் பார்க்க ஆச்சரியமாக இருக்கிறதென்று சொன்னாராம் அவர். அவளைச் சித்திரமாக அவர் வரைந்து ஏன் வெற்றி பெறவில்லை என்பதற்குக் காரணம் புரிந்து விட்டதாம். அது வெற்றிகரமான சித்திரமில்லை என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. கடைசி காலத்தில் அந்தச் சித்திரத்தின் முகத்தைப் போலவே இல்லை அவள் முகம். இந்த உணர்வுதான் அவரைச் சிந்தனையில் ஆழ்த்தி இருக்க வேண்டும்.

பின்பு மதகுருக்கள் வந்தார்கள். உள்ளேயும், வெளியேயும் ஓடினார்கள். அவள் அமரத்துவம் அடைந்த காட்சி அழகும், கம்பீரமும் நிறைந்திருந்ததாம். பார்ப்பவர்களை உத்தாரணம் செய்யும் தெய்வீகப் பண்பு கொண்டிருந்ததாம். அவள் பாபங்களைக் கேட்கும் மதகுருவும் அங்கிருந்திருக்க வேண்டும். பாபத்தினால் அவள் தீண்டப்படாதவள் என்று அவர் கட்டாயம் எல்லோரிடமும் சொல்லி இருப்பார். அவள் உயிர் பிரிவதற்கு முன் நாட்டின் தலைமை மதகுரு தன் கையாலேயே அவளுக்குப் பிராயச்சித்தம், இறுதிச் சடங்குகளும் செய்து வைத்தார். அறை முழுவதும் மதகுருக்களும், மதத்தலைவர்களும் யதோக்தமாக வந்திருந்தார்கள். ஆனால் அவள் இறந்தது முழுத் தனிமையில். யாரும் அங்கிருப்பதான நினைவே அவளுக்கு இல்லை.

அவள் இறந்த பின்பு கசங்கி அழுக்கு அடைந்த கடுதாசு ஒன்று அங்கிருந்ததாம். சூரை நோய்க்கு ஆளானவர்களின் சடலங்களைப் போல தன் சடலத்தை எரித்துவிட வேண்டும்; எல்லோரும் மிதிக்கும் படியாக இந்த சாம்பலை தெருவில் வாரி இறைத்துவிட வேண்டும் என்று அதில் எழுதியிருந்தது. மனப்பூர்வமாக இந்த வார்த்தைகள் எழுதப்பட்டிருப்பினும், சித்தம் சரியாக இல்லாத நிலையில் எழுந்தவை என்று, இந்தக் கடைசி விருப்பங்களை எல்லோருமே புறக்கணித்து விட்டார்கள். இரண்டும் செய்யாமல் ஒரு நடுத்தர முறையைக் கையாண்டனர். அவள் உடலை மருந்துகள் போட்டு அழியாமல் பத்திரப்படுத்தி ஒரு எளிய இரும்பு சவப் பெட்டியில் வைத்து, ஒரு அலங்காரமும் இன்றி பெரிய கோயிலில் உள்ள புதைக்கும் நிலவறைக்குக் கொண்டு சென்றார்கள். ஒரு இளவரசி என்று கருதும்போது ஊர்வலத்தில் கூட்டமே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். மிகவும் எளிய பொதுமக்கள் சிலர் பக்தியுடன் அதில் கலந்து கொண்டார்கள். பசிக்கு ஆளாகி உயிரோடு இருந்த சிலரும் கலந்து கொண்டனர். நோய் சூரையாடிய நகரின் வீதிகள் வழியே இந்த ஊர்வலம் போனது உள்ளத்தை கலக்கும் துக்கக் காட்சியாக இருந்ததென்று ஆன்ஸல்மோ சொன்னான். இருந்திருக்கத்தான் வேண்டும்.

மக்கள் எல்லோரும் இப்பொழுது அவளைப் பற்றியும், அவளுடைய கடைசி நாட்களைப் பற்றியும் தாங்கள் எல்லாம் அறிந்து கொண்டு விட்டதாகவே நம்பினார்கள். தங்களுக்கே உரித்தான சொத்து என்று அவளைக் கருதினார்கள் அவர்கள். வழக்கம் போல அவளைப் பற்றி கேட்ட செய்திகளை தங்கள் கற்பனைக்கு ஏற்றவாறு அங்கங்கு மாற்றிக் கொண்டார்கள். கை தேர்ந்த ராஜாங்க சிற்பிகளால் சலவைக் கல்லில்

செதுக்கப்பட்ட சவப்பெட்டிகளுக்கும் வெள்ளிச் சவப்பெட்டிகளுக்கும் இடையே இந்த எளிய விகாரமான பெட்டியைப் பார்த்து மக்களின் கற்பனை உந்திப் பறந்தது. தங்களுள் ஒருவராகவே அவளை மதித்தனர் எல்லோரும். வேலைக்கார குட்டி அவள் செய்த தவங்களையும், காயக்கிலேசங்களையும் இன்னார்தான் என்று இல்லாமல் எல்லோரிடமும் சொல்லிவிட்டாள். இதனால் வேறு அவளை தெய்வப் பதவியை அடைந்தவளாகவே அவர்கள் போற்றி வணங்கினார்கள். எத்தனையா பேர் சிலுவையில் மாண்டதுண்டு. பலர் தலைகீழாகவே அறையப் பட்டிருக்கிறார்கள். உயிரிழந்திருக்கிறார்கள். ஆனால் எல்லோரையும் விட மிகுந்த துன்பத்திற்கு ஆளானவன் கடவுளின் புதல்வனான ஏசுதானே. நாளாக நாளாக இளவரசி மகாத்மாவாகி விட்டாள். இந்த வாழ்க்கையை வெறுத்து தானாகவே சித்திரவதை செய்து, அதிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட மகாத்மா என்றே அவளை எல்லோரும் பூசித்தார்கள். இப்படியாக உண்மையால் தீண்டப்படாமல் கதை வளர்ந்து கொண்டே இருந்தது. தங்கள் விருப்பங்களுக்கு ஒத்து வரும் வரையில் கதையை எல்லோரும் தொடர்ந்து கட்டிக் கொண்டே போனார்கள். அவளுடைய இரும்பு சவப்பெட்டிக்கருகில் எத்தனையோ மாயங்கள் நிகழ்ந்ததாகக் கூட சொன்னாலும் சொல்வார்கள். கடவுளுக்குத் தான் வெளிச்சம். அதிசயங்கள் நிகழ்ந்ததாகவே ஆன்ஸல்மோவுக்கு நிச்சயமாக நம்பிக்கை. இரவில் அதைச் சுற்றி ஒரு ஜோதி தெரிந்ததாக அவன் சொன்னான். இருந்திருக்கலாம். இரவில் கோயில் மூடித்தானே இருக்கிறது, உண்மை அல்லது பொய் என்று யார் தான் உறுதியாகச் சொல்ல முடியும். உண்மை, பொய் இரண்டிற்குமிடையே தேர்ந்தெடுக்கச் சொன்னால் நம்புகிறவர்கள் உண்மையல்லாததைத் தான் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். உண்மையை விடப் பொய் அரிதானது. ஆடம்பரமானது. ஆகவே மக்கள் அதைத்தான் ஏற்றுக் கொள்கிற வழக்கம்.

இதை எல்லாம் கேட்ட பொழுது இந்த மகாத்மா, ஜோதிக் கதைகளின் ஸ்ருஷ்டிகர்த்தா நான்தான் என்று அல்லது அவற்றிற்கெல்லாம் பெரும்பாலும் நான்தான் காரணமென்று என்னையறியாமல் தோன்றிற்று எனக்கு. அதனால் தான் இந்த விலங்கும் எனக்குக் கிடைத்தது. இதை எல்லாம் பற்றி அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. தெரிந்தாலும் என் தியாகத்தில் அவர்கள் அக்கறையும் காட்டியிருக்க மாட்டார்கள். காட்ட வேண்டுமென்று நான் ஆசைப்படவும் இல்லை. ஆனால் மருந்துக்குக் கூட புண்ணிய வாடையே இல்லாத நானா இதற்கெல்லாம் காரணமாக இருந்திருக்கிறேன் என்று எண்ணிப் பார்க்கும் பொழுதுதான் வியப்பாக இருக்கிறது.

உரிய காலத்தில் ஆன்ஸல்மோ இளவரசியின் தோற்றங்களை ஆதாரமாகக் கொண்டு பர்னார்டோ கன்னி மேரியின் ஓவியம் ஒன்றை வரைந்ததாகச் சொன்னான். இளவரசரும் மற்றவர்களும் அதில் லயித்து போய் விட்டார்களாம். அவளுடைய அந்தராத்மாவையே வரைந்து காட்டிவிட வேண்டுமென்று பர்னார்டோவின் விருப்பமாம். ஆனால் அவள் மரணப் படுக்கையில் கிடந்த பொழுது ஏதோ கொஞ்சம் தான் புலப்பட்டதாம். அவர் வெற்றி அடைந்தாரோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால்

அசாதாரணமாக கலைப் பொக்கிஷம் என்று எல்லோரும் அதைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள். அவர் என்ன செய்தாலும் இப்படித்தானே எல்லோரும் சொல்கிறார்கள். இதை மட்டும் முடித்து விட்டார் அவர். அப்பச் சடங்கு ஓவியத்தைப் போல இது முற்றுப்பெறாமல் நிற்கவில்லை. இந்த மாதிரி முடித்து விடுவதே எளிதென்று தோன்றுகிறது. பெரிய கோயிலில் நடு மண்டபத்திற்கு இடது பக்கம் ஒரு பீடத்திற்கு முன்பு தொங்கிக் கொண்டிருக்கிறது அது. ஆன்ஸல்மோ அதைப் பார்த்துப் பார்த்து குழந்தையைப்போல ஆச்சரியப்பட்டான். இதைப் போன்ற தேவ மாதாவின் சித்திரம் என்றுமே வரையப்பட்டதில்லை என்று எல்லோரும் சொல்லிக் கொள்கிறார்களாம். எல்லாவற்றையும் விடப் பரவசப்படுத்துவது அதன் உதட்டில் தவழ்ந்த மர்மப் புன்னகைதான். தெய்வீக சோபையும் மர்மமும் கொண்டு புரியாப் புதிராக எல்லோரையும் மெய்சிலிர்க்க வைத்தது அது. இந்தப் புன்னகையை முந்தி எழுதியிருந்த சித்திரத்திலிருந்து கலைஞர் எடுத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று எனக்குப் புரிந்தது. அந்தப் படத்தில் அவள் விபசாரியைப்போல தோற்றமளித்தாள்.

இந்த முட்டாள் ஆன்ஸல்மோவின் வர்ணனைகளிலிருந்து சித்திரத்தைப் பற்றி ஒன்றும். தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் நான் புரிந்து கொண்ட வரையில் பக்தியுள்ளவர்கள் ரசிக்கும்படியான ஒன்றை ஸ்ருஷ்டிப்பதில் வெற்றி பெற்று விட்டார் பர்னார்டோ என்றுதான் சொல்ல வேண்டும். கன்னி மேரியிடம் அவருக்கு நம்பிக்கையுண்டோ என்னவோ. ஆனால் மனப்பூர்வமான ஒரு மத உணர்வை சித்திரத்தில் ஏற்றி விட்டார் அவர். அதைப் பார்க்கும் பொழுது யாருக்குமே பக்திப் பரவசம் உண்டாகும்படி செய்துவிட்டார். இந்தச் சித்திரத்தைப் பார்க்க கூட்டம் கூட்டமாக கூடிற்று. சீக்கிரம் எல்லோருமே கையில் மெழுகுவர்த்தி ஏற்றி மண்டியிட்டு அதன் முன் வணங்கத் தொடங்கி விட்டார்கள். மற்ற இடங்களில் விட அங்கு தான் தொழுவோர் கூட்டம் அதிகமாக இருந்தது. இறந்து போன இளவரசியின் முன்போ பல கிளை விளக்குகள் சுடர் விட்டு எரிந்தன. ஆகவே ஆலயத்தில் நுழைந்த உடனே கண்ணில் படுவது அந்த இடம் தான். முக்கியமாக இந்த கஷ்ட காலத்தில் இன்னல்பட்டு மகிழ்ச்சியடைந்த ஏழை மக்கள் அங்கு வந்து தொழுது ஆறுதல் பெற வந்தனர். அந்தச் சித்திரம் அவர்களுடைய கஷ்டங்களையும், துன்பங்களையும் கேட்டு உதவியும் ஆசுவாசமும் அளித்தது. ஆனால் எனக்குத் தெரிந்த வரையில் ஏழை மக்களை ஒருநாள் கூட அவள் கண்ணெடுத்துப் பார்த்ததில்லை. பர்னார்டோவின் கலைத் திறமை மக்களின் ஆழ்ந்த மத உணர்ச்சிகளை எழுப்பிவிட்டது. நானும் அதைத்தானே செய்கிறேன்.

இதை எல்லாம் சொல்லும்பொழுது உலகத்தின் போக்கு எவ்வளவு விந்தையானது என்று எண்ணாமல் இருக்க முடியவில்லை. இந்த ஸ்திரீ மக்களின் அன்பிற்கும், பூஜைக்கும் பாத்திரமாக, ஆறுதலளிக்கும் சாந்தமான கன்னி மேரியாக ஆலயத்தில் தொங்குவாள் என்று யார்தான் நம்பி இருப்பார்கள்? அவள் தூய்மைக்கும், அன்பிற்கும் எவ்வளவு எண்ணற்ற சுடர் விளக்குகள் எரியுமென்று யார் நம்பி இருப்பார்கள். அவளுடைய

இன்னொரு படம் அரண்மனையில் தொங்குகிறது. பர்னார்டோவிற்கு அந்தப் படத்தைப் பற்றி அவ்வளவு திருப்தி இல்லாவிட்டாலும் இளவரசர் அதை சட்டம் போட்டு தொங்கவிட்டிருக்கிறார். அந்தப் படத்தில் தான் அவள் விபச்சாரியாக தோற்றமளிக்கிறாள். ஆனால் வேற்றுமைகள் ஏராளமாக இருப்பினும் ஒவ்வொரு படமும் தனக்குரிய வழியில் உண்மையைச் சொல்லத்தான் சொல்கிறது. இரண்டிலும் இனம் தெரியாத அந்தப் புன்னகை தெரிகிறது. அந்தப் புன்னகையைத்தான் தெய்வீகப் புன்னகை என்று மக்கள் தொழுகிறார்கள்.

மாசு படிந்த கண்ணாடிகளில் தங்கள் நிழலைப் பார்க்க மக்களுக்கு எவ்வளவு ஆசை.

## 43

நான் சிறைப்பட்ட நாள் முதல் நடந்ததை எல்லாம் எழுதிவிட்டேன். இனி ஒன்றுமில்லை. ஆன்ஸல்மோ நகரத்திலும், அரண்மனையிலும் நடப்பதை இன்னும் சொல்லிக் கொண்டிருக்கிறான். விசேஷமான ஒன்றையும் காணோம். ஜனத்தொகையில் பெரும் பகுதியை விழுங்கி விட்ட சூரை நோய் அடங்கி விட்டது. வந்ததைப் போல தானாகவே மறைந்து விட்டது. சிறிது சிறிதாக பழைய வாழ்க்கை மீண்டது. நகரம் முன்போல் ஆகிவிட்டது. எரிந்து போன பண்ணைகளை நோக்கி விவசாயிகள் திரும்பி வந்து மீண்டும் அவற்றைப் புதுப்பித்தார்கள். நிலமும் உயிர் பெற்றது. ஆனால் சீர் பெற இன்னும் நாளாகும். யுத்தக் கடன்கள் சுமந்து நிற்கின்றன. அரசாங்க கஜானாக்கள் காலி. ஆகவே வரியைப் பெருவாரியாக உயர்த்தி விட்டார்களாம். இருந்தாலும் அமைதிக்குப் பங்கமில்லை என்றும், ஏதாவது நேர்ந்து விமோசனம் கிடைக்கும் என்றும் ஆன்ஸல்மோ சொன்னான். மக்கள் உற்சாகமாக இருக்கிறார்கள் என்று சொல்லும் பொழுது அவனுடைய அசட்டு முகத்தில் திருப்தி ஒளிவிட்டது.

அவன் பேசாத விஷயங்கள் கிடையாது. ஓயாமல் பேசுகிறான். எனக்கும் வேறு ஆள் இல்லாததால் கேட்டுத் தொலைக்கிறேன். சில சமயம் எனக்கு அலுப்பாகவும் இருக்கிறது. ஒரு நாள் வெனிஸுக்குக் கொடுக்க வேண்டிய கடனெல்லாம் கொடுத்தாகி விட்டது என்றும் ஒரு பாடாக இந்தப் பெரிய பளு இந்த நாட்டை விட்டு நீங்கி விட்டது என்றும் கூறினான். அவன். "நிலைமை அபிவிருத்தி அடைந்து கொண்டு வருகிறது. பெரிய சோதனைகளுக்குப் பிறகு நல்ல காலம் வந்து கொண்டிருக்கிறது. நாடெங்கும் இதைப் பார்க்க முடிகிறது. மணிமண்டப வேலை கூட இத்தனை வருஷங்களுக்குப் பிறகு மீண்டும் ஆரம்பித்து விட்டது. சீக்கிரம் முடிந்து விடும்'' என்ற தகவலையும் சொன்னான் அவன். இதை எதற்காக எழுதுகிறேன் என்றால் முக்கியமாக ஒன்றும் நடக்கவில்லை என்று சொல்லத்தான்.

ஏதோ கல்பகோடி காலம் காத்திருப்பது போல சூரிய ஒளிக்காக இந்த இருட்டறையில் காத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறேன். ஒளி வந்து

விட்டது. காகிதத்தின் மேல் விழுகிறது. ஆனால் எழுதத்தான் ஒன்றுமில்லை. பேனா என் கையில் வெறும் பேனாவாகக் கிடக்கிறது. அதை உபயோகப்படுத்த முடியவில்லை.

வரவர எழுதுவதே அலுப்பாக இருக்கிறது. ஏனெனில் என் வாழ்க்கை சம்பவங்கள் இல்லாத வெறும் பாறையாகி விட்டது.

நாளை மணி மண்டபத்திற்குத் திறப்பு விழா. முதன்முதலாக அதன் பெரிய மணிகள் ஒலிக்கும். பெரிய மணிகளில் ஒரு பகுதி வெள்ளியால் செய்யப்பட்டது. மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட பணம் இது. வெள்ளி சேர்த்தால் ஓசையும் இனிமையாகக் கேட்கும் என்று நம்புகிறார்கள். இந்த விழாவில் இளவரசரும், ஆஸ்தான பிரமுகரும் கலந்து கொள்ளப் போகிறார்கள்.

## 44

திறப்பு விழா முடிந்து விட்டது. போனவர்களிடம் தகவல் கேட்டு வந்த ஆன்ஸல்மோ எவ்வளவோ சொல்லத் தயாராக இருக்கிறான். மறக்க முடியாத நிகழ்ச்சியாம் அது. ஊர் மக்களெல்லாம் கலந்து கொண்டார்களாம். அரண்மனை பிரமுகர்கள் பின் வர இளவரசர் நகரின் வீதிகளில் நடந்தே சென்றாராம். தெருக்களின் இருமருங்கிலும் அவரைக் காண மக்கள் திரண்டு நின்று கொண்டிருந்தார்களாம். அவருடைய தோற்றத்தில் பழைய நிமிர்வும், குழைவும் வந்து விட்டன. இந்தப் பெருநாளன்று அவர் சந்தோஷமாகத்தான் இருந்திருக்க வேண்டும். கண்ணைப் பறிக்கும் உடைகளை அணிந்திருந்தார்களாம். அவரும் அவருடைய பரிவாரங்களும், முதல் முதலில் இளவரசியின் கல்லறை முன் மண்டியிட்டு வணங்கினாராம். பின்பு அவள் படம் தொங்கும் பீடத்தின் முன் வணங்கினாராம். அவரைப் போலவே கூட வந்தவர்களும் வணங்கி மரியாதை செய்தார்களாம். இந்தத் தொழுகை முடிந்ததும் வெளியே கோயிலின் பெரிய முற்றத்திற்கு வந்தார்களாம். அப்பொழுதுதான் மணிகள் ஒலிக்கத் தொடங்கின. அவற்றின் இனிய ஓசைகள் கேட்டு எல்லோருமே பரவசம் அடைந்தனர். சுவர்க்கத்திலிருந்து வரும் வர்ணிக்க முடியாத ஓசை போல் வந்த அந்த ஓசையை எல்லோரும் மௌனமாகக் கேட்டுக் கொண்டு நின்றார்களாம். நகரம் முழுவதும் அது எதிரொலித்தது, இந்த் ஆச்சரியமான அனுபவம் இதற்கு முன் ஏற்பட்டதில்லை என்று இளவரசியைச் சுற்றி நின்றவர்கள் நினைத்தார்கள். அப்படித்தான் ஆன்ஸல்மோ சொன்னான்.

ஆன்ஸல்மோவிற்கு பெரிய ஏமாற்றம். கைதிகளுக்கு சாப்பாடு போடும் நேரத்தில் விழா நடந்ததால் அவனுக்குப் போக முடியவில்லையாம். இங்கிருந்தே மணி ஓசையைக் கேட்டு அவன் திருப்தியடைய வேண்டியிருந்தது. மணி ஒலிக்க ஆரம்பித்ததுமே என்னிடம் ஓடிவந்து சொன்னான் அவன். வந்த அவசரத்தில் நான் கூடக் கேட்க வேண்டுமென்று கதவைத் திறந்துவிட்டான். அவன் கண்களிர் நீர் தளும்பியதைப் பார்த்தேன்.

மனிதக் காதுகள், இந்த மணி ஓசையைப் போல் கேட்டிருக்கவே முடியாது என்றான் அவன். உண்மையில் எல்லா மணிகளை போலத்தான் இருந்தன அவை. விசேஷமாக ஒன்றுமில்லை. கதவை மூடிக்கொண்டு அவன் என்னை அமைதியாக விட்டு விட்டுப் போனதுமே எனக்கு மகிழ்ச்சியாகத்தான் இருந்தது.

விலங்கில் கட்டுண்டு உட்கார்ந்திருக்கிறேன் நான். நாட்கள் ஓடுகி ன்றன. ஒரு சம்பவமும் நேரவில்லை. மகிழ்ச்சியில்லாத வெறும் சூன்ய வாழ்க்கை. ஆனால் குறை சொல்லாமல் நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். நல்ல காலம் நிச்சயம் பிறக்குமென்று எனக்கு நம்பிக்கை. இந்த மாதிரி நிரந்தரமாக உட்கார்ந்திருக்கவே நான் பிறக்கவில்லை. முன்னைப் போல பகலின் பரந்த ஒளியில் என் குறிப்புகளை நான் தொடர்ந்து எழுதும் வாய்ப்பு கட்டாயம் கிடைக்கத்தான் போகிறது. என் பணிகளுக்கும் தேவை ஏற்படத்தான் போகிறது. என் எஜமானரைத் தெரியாதா எனக்கு? தன் குள்ளன் இல்லாமல் எத்தனை நாள் தான் இருப்பார் அவர். இந்த இருட்டறையில் உட்கார்ந்து இதைப்பற்றித்தான் நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். மனம் சிறிது உல்லாசமாகக் கூட இருக்கிறது. என் விலங்கைத் தளர்த்தி என்னை விடுவிக்கும் நாளைப் பற்றி நினைத்துக் கொண்டுதான் இருக்கிறேன். இளவரசர் எனக்குச் சொல்லி அனுப்பி விட்டால் இந்த விலங்கு தளர்ந்து தானே ஆக வேண்டும்?





மின்நூலாக்கம்

சுபாஷ் சண்முகா

# குள்ளன்

நோபல் பரிசு பெற்ற
நாவலாசிரியர் நாவல்

## பேர் லாகர் குவிஸ்டு

தமிழில்

## தி.ஜானகிராமன்

